# சுவடிக்கூடம்

பகுதி-I

(பொத்துவில் வரலாற்றுப் பொக்கிஷம்)

எம். எஸ். முகம்மட் றிபாய் BA, PGDE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடிக்கூடம்

## பகுதி - I

(பொத்துவில் வரலாற்றுப் பொக்கிஷம்)

எம்.எஸ். முகம்மட் றிபாய் BA, PGDE

வெளியீடு
கலைவான் கழகம்
பொத்துவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | சுவடிக்கூடம் (பகுதி - I) |
| ஆசிரியர் | : | எம்.எஸ். முகம்மட் றிபாய். |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே. |
| வெளியீடு | : | கலைவான் கழகம், பொத்துவில். |
| அட்டைப்படம் | : | எம்.எச்.எம். பர்மிஸ் |
| பக்க வடிவமைப்பு | : | ஏ.எல். அபுல் கலாம். |
| முதற்பதிப்பு | : | 01.02.2015 |
| அச்சுப்பதிப்பு | : | எக்ஸ் ட்ரீம் சிஸ்டம், பொத்துவில் |
| பக்கங்கள் | : | VI - 236 |
| விலை | : | ரூபா 1000/- |

| | | |
|---|---|---|
| Title | : | Suvadikkoodam (Part - I) |
| Author | : | M.S. Mohammed Rifai |
| Copy Right | : | The Author |
| Published by | : | Kalaivan Kalaham, Pottuvil. |
| Cover Design | : | M.H.M. Farmiz |
| Type Setting | : | A.L. Abul Kalam |
| First Edition | : | 01.02.2015 |
| Printed by | : | X Treme System, Pottuvil. |
| Pages | : | VI - 236 |
| Price | : | Rs. 1000/- |
| ISBN | : | 978 - 955 - 42117 - 0 - 4 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொத்துவில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.இஸ்மாயில் ஆதம்லெப்பை அவர்களால் வழங்கப்பட்ட,

## அறிமுகவுரை



ஜனாப் எம்.எஸ்.முகம்மட் றிபாய் (BA,PGDE) ஆசிரியர் அவர்களால் ஆக்கப்பட்ட **'சுவடிக்கூடம்'** எனப் பெயரிடப்பட்டுள்ள பொத்துவில் பற்றிய தொகுப்பில் எனது அணிந்துரை இடம்பெற வேண்டும் என்பது நூலாசிரியரின் விருப்பம் ஆகும். ஆனால் அதற்குப் பதிலாக இவ்வாக்கம் பற்றிய அறிமுகவுரையை வழங்குவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

நம்மைப்பற்றி நாமறியாவிட்டால் பிறர் எவ்வாறு நம்மைப்பற்றி அறிய முடியும். எனவே தான் பரம்பரைபரம்பரையாக பொத்துவிலில் வாழும் நமது இருப்பையும் நமது வாழ்வுடன் தொடர்பபட்ட பல்வேறுபட்ட விடயங்களையும் நமக்கும் எடுத்துக்காட்டி நமது சந்ததியினரும் விளங்கிக் கொள்ளும் வகையில் இவ்வாக்கத்தை சமர்ப்பித்துள்ள ஆசிரியர் பாராட்டப்பட வேண்டியவர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் தொடக்கம் அந்திமம் வரையான காலப்பகுதியின் குறிப்பாக கடைசி ஐம்பது ஆண்டு கால பொத்துவில் பிரதேசத்தின் கட்டமைப்பு, கலை, கலாசார சமய அரசியல் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டு வந்த மாற்றங்களை தொட்டுக்காட்டும் வகையில் ஆவணங்களையும் அடிக் குறிப்புக்களையும் கொண்டதாக இத்தொகுப்பு அமைந்துள்ளது.

நமது வாழ்விடங்கள், வயல் நிலங்கள், பொது நிலையங்கள் பொருளாதார மையங்கள் பற்றிய ஆவணங்கள் பிரமுகர்களின், பதவி நிலையிலிருந்தவர்களின் கடிதங்கள், உறுதிகள், சமூக நிகழ்வுகளுடன் சம்பந்தப்பட்ட அழைப்பிதழ்கள், பத்திரிகைகளில் வெளியான செய்திக் குறிப்புகள், இலக்கியவாதிகளின் ஆக்கங்கள், ஊர்ப்பிரமுகர்களால் அவ்வப்போது வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் எனப் பல வகையான ஆவணங்கள் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் எமது பிரதேசத்தின் தனித்துவத்தையும் சிறப்பியல்பையும் வெளிப்படுத்தும் சான்றுகளாக இருக்கின்றன.

தொட்டாலும் விரல்பட்டாலும் சிதைந்துவிடக்கூடிய பழைய ஆவணங்களையும், ஒளிப்படங்களையும் சேகரித்து நவீன தொழிநுட்பத்தினால் அவற்றுக்கு உயிர் கொடுத்து குறித்த காலகட்டத்தினை நமது மக்களுக்கு ஞாபகப்படுத்தும் பணியினை ஆசிரியர் மேற்கொண்டுள்ளார். இதை விட பொத்துவில் கிராமத்திற்கு புகழ் தேடித்தந்த பிரமுகர்களின் சாதனைகளையும், ஆற்றல்களையும் பதிவு செய்த வாழ்க்கைக் குறிப்புக்களும் இவ்வாக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மனந்தளராது பொறுமையுடன் ஒரு மாமாங்க காலத்துக்கு மேலாக இந்நூலாசிரியர் மேற்கொண்ட முயற்சி நம் கைகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பொத்துவிலின் பூர்வீகம் பற்றிய பூரணமான ஆய்வொன்றை மேற்கொள்வதற்கு இது அடித்தளமாக அமையுமென்று நான் நம்புகின்றேன்.

**எம். இஸ்மாயில் ஆதம்லெப்பை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை



பொத்துவிலின் வரலாற்றினை நூலுருப்படுத்திட வேண்டும் எனப் புறப்பட்ட எனது ஆய்வுப் பயணம் இன்றைய நிலையில் பன்னிரண்டு வருடங்களையும் தாண்டிவிட்டது. இன்னுமா ஆய்வு! நூல் எப்போது தான் வரும்? என ஏராளமான கேள்விக்கணைகள் என்னைத் துளைத்தெடுத்த போது, எனது உள்ளத்தில் எழுந்த உதிப்பொன்றின் விளைவாக குறுகிய கால எல்லைக்குள் உருவாக்கப்பட்டதே இந்த **'சுவடிக்கூடம்'** எனும் பொத்துவில் வரலாற்றுப் பொக்கிஷமாகும்.

பொத்துவிலின் சரித்திரம் தனித்துவமானது, மிகுந்த சுவை கொண்டது, திடுக்கிடும் திருப்பங்களைக் கொண்டது இத்தகைய சிறப்புக்கள் கொண்ட ஊரினது வரலாற்றினை சிறப்புற விளங்கிக் கொள்வதற்கும் அதில் வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற முக்கிய பாத்திரங்களை மனக்கண் முன்னே கொண்டு வருவதற்கும் ஒரு முன்னோட்டமாக, வழிகாட்டியாக, உதவியாக அமைவதே இந்த சுவடிக்கூடம் ஆகும்.

ஒரு சமூகத்தினதும், பிரதேசத்தினதும் இருப்புக்கு, முக்கிய சாட்சியங்களாகத் திகழ்வது அவைகளின் படிமங்களை வெளிப்படுத்தும் சுவடிகளேயாகும். இத்தகைய சுவடிகளானது ஓலைகளாகவோ, பத்திரங்களாகவோ, கடிதங்களாகவோ, குறிப்பேடுகளாகவோ, துண்டுப் பிரசுரங்களாகவோ, நிழற்படங்களாகவோ இருக்கலாம். இருப்பினும் காலவோட்டத்தில் இவையாவும் சிதைந்தும், அழிந்தும் போகக் கூடியவை என்பதனால், எதிர்கால சந்ததியினருக்காக இவற்றினைப் பாதுகாப்பதற்கான, பொருத்தமான வழிவகைகளை, நுட்பங்களைத் தேடுவது இன்றைய தலைமுறையினரின் பொறுப்பாகவுமுள்ளது.

இந்த வகையில், கடந்த பன்னிரண்டு வருடங்களாக பொத்துவில் வரலாறு தொடர்பாக என்னால் சேகரிக்கப்பட்ட ஆவணங்களின் ஒரு பகுதியைத் தொகுத்து என்னால் முடியுமான அளவிலே, வழிமுறையிலே அதனை சுவடிக்கூடம் - பகுதி - I ஆக, நூல் வடிவிலே உங்கள் கரங்களில் தந்துள்ளேன். இந்த ஆவணப் பெட்டகம் இன்ஷா அல்லாஹ், வரலாற்று ஆர்வலர்களின் வரவேற்பினைப் பெறும் என நம்புகின்றேன்.

இத்தகையதொரு நூலினை உருவாக்குவதற்கு, எனக்கு தூண்டுதலாகவும், உதவியாகவும் அமைந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும், குறிப்பாக அரிய ஆவணங்களை வழங்கி உதவியோருக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூலாசிரியர்
எம்.எஸ். முகம்மட் றிபாய் *BA,PGDE*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்...


1. கி.பி. 1898 - பிரிட்டிஷ் காலத்து உறுதிப் பத்திரம் 1
2. கி.பி. 1904 - பொலிஸ் தலைமை (Police Headman) நியமனக் கடிதம். 4
3. கி.பி. 1934 - பொத்துவிலின் முதலாவது திருமண அழைப்பிதழ். 5
4. கி.பி. 1939 - பொத்துவில் ஐக்கிய கமத்தொழில் அபிவிருத்திச் சங்கம். 6
5. கி.பி. 1946 - உடையாரும் உறவினர்களும். 9
6. கி.பி. 1946 - உடையாரும் ஊர்ப் பிரமுகர்களும். 10
7. கி.பி. 1946 - பொத்துவில் சிங்கள வித்தியாலயம் ஆரம்பம். 12
8. கி.பி. 1946 - ACT OF APPOINTMENT OF ENUMERATOR. 13
9. கி.பி. 1950 - அப்துல் றஸாக் மௌலானாவின் கையெழுத்து. 14
10. கி.பி. 1950 - ஊர் பிரமுகர்கள் சிலர். 15
11. கி.பி. 1951 - பொத்துவில் மத்திய கல்லூரியின் இரண்டாவது மாணவர். 22
12. * * * * * - சிறப்புப் பக்கம். 23
13. கி.பி. 1953 - கத்னா அழைப்பிதழ். 24
14. கி.பி. 1954 - கத்னா அழைப்பிதழ். 25
15. கி.பி. 1954 - பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாயல் பரிபாலனசபை. 26
16. கி.பி. 1954 - பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாயல் நிர்மாணம் ஆரம்பமும் மாற்றங்களும். 30
17. கி.பி. 1954 - விவசாயமும் விருதும். 34
18. கி.பி. 1954 - வாழ்த்து மடல். 35
19. கி.பி. 1954 - பொத்துவில் இரண்டாம் குறிச்சி கிராம முன்னேற்றச் சங்கம். 36
20. கி.பி. 1954 - நீர்ப்பாய்ச்சல் கட்டளைச் சட்ட இடாப்பு. 40
21. கி.பி. 1955 - கிராமத் தலைமைக்காரர் நியமனம். 41
22. கி.பி. 1955 - பற்றுச் சீட்டுக்கள். 43
23. கி.பி. 1955 - திருமண அழைப்பிதழ். 44
24. கி.பி. 1955 - கவிஞர் யுவன். 45
25. கி.பி. 1957 - கப்புப் பனையடி உருவான கதை. 46
26. கி.பி. 1957 - பசுமைக் கவிஞனின் வெள்ளக்காவியம். 48
27. கி.பி. 1958 - கத்னா அழைப்பிதழ். 50
28. கி.பி. 1959 - அவதார விழாவும் வருடாந்த விழாவும். 51
29. கி.பி. 1960 - கத்னா அழைப்பிதழ். 54
30. கி.பி. 1956 - மட்டு நகரில் மாணவர்கள். 55
31. கி.பி. 1960 - அறுகம்பை பாலம். 56
32. கி.பி. 1960 - கவிதை. 67




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. கி.பி. 1962 - பொத்துவிலின் முதல் ஹஜ்ஜாஜிகள். 68
34. கி.பி. 1963 - கத்னா அழைப்பிதழ். 69
35. கி.பி. 1964 - மீலாதுந் நபி விழா நிகழ்வு. 70
36. கி.பி. 1965 - பொத்துவிலின் பிரதான இடங்கள். 71
37. கி.பி. 1966 - பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாயல் பரிபாலன சபை. 72
38. கி.பி. 1967 - ஜெளபர் மெளலானா வழங்கிய தொகுப்பாக்கம். 73
39. கி.பி. 1968 - மீராலெவ்வை வாத்தியாரின் மழைக்காவியம்.. 74
40. கி.பி. 1968 - குண்டுமடுவில் விளையாட்டு. 75
41. கி.பி. 1968 - முத்தான கவிதை. 76
42. கி.பி. 1968 - கவிதைகள். 77
43. கி.பி. 1968 - இக்பால் இளைஞர் இயக்கம். 78
44. கி.பி. 1969 - பொத்துவிலின் முதல் (கவிதை) நூல். 80
45. கி.பி. 1969 - புரட்சிகரமான அறிக்கை. 83
46. கி.பி. 1969 - பொத்துவில் யங்ஸ்டார் விளையாட்டுக்கழகம். 85
47. கி.பி. 1970 - சாதனையாளர் - எம்.அப்துல் மஜீத். 86
48. கி.பி. 1970 - பொத்துவில் பொது நூலகம் ஆரம்பம். 96
49. கி.பி. 1970 - பொத்துவில் கிராம பிதாவின் அறிக்கை. 100
50. கி.பி. 1970 - கலைத்துறையில் கலையன்பன். 104
51. * * * * * - மறைந்து போன மண் குடிசைகள். 109
52. கி.பி. 1970 - R. பிரேமதாசவின் முதல் வருகை. 110
53. கி.பி. 1971 - மைலன் தியேட்டர். 111
54. கி.பி. 1971 - பொத்துவிலின் முதல் என்ஜினியர். 112
55. கி.பி. 1971 - கலை விருந்து. 114
56. கி.பி. 1971 - குறிச்சி வாதத்தின் ஒரு பக்கம். 115
57. கி.பி. 1971 - குறிச்சி வாதத்தின் மறு பக்கம். 116
58. கி.பி. 1971 - பிளவுபடும் மரைக்காயர் சபை. 117
59. கி.பி. 1972 - கவிவாணர் எம்.ஏ. அஸீஸ். 118
60. கி.பி. 1972 - பொத்துவிலின் முதல் டொக்டர். 122
61. கி.பி. 1972 - சின்ன உல்லை அல் - அக்ஸா வித்தியாலயத்தின் தோற்றங்கள். 127
62. கி.பி. 1973 - திருமண அழைப்பிதழ். 130
63. கி.பி. 1974 - திருமண நிகழ்வுப் பாரம்பரியங்கள். 131
64. கி.பி. 1974 - தேசிய பாடப்புத்தகத்தில் பொத்துவில் கவிஞரின் பாடல். 132
65. கி.பி. 1974 - புரட்சிகரமான புத்தகம். 133
66. கி.பி. 1974 - மயில்வாகனம் ஓவசியர் குடும்பத்தினரின் திருமணம். 135
67. கி.பி. 1976 - உணர்வூட்டும் பிரசுரம். 137
68. கி.பி. 1976 - பொத்துவில் மக்கள் வழங்கிய கௌரவம். 138
69. கி.பி. 1977 - அரசியல் கவிதை. 139



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. கி.பி. 1980 - பொத்துவில் சந்தைப்பகுதியின்
(சின்ன மார்க்கட்) இரு வேறு தோற்றங்கள். 140
71. கி.பி. 1980 - கிழக்கு சிவாஜி - கலைஞர் முகைதீன். 141
72. கி.பி. 1981 - ஜலால்டீன் சதுக்கம் எனும் இருபது வீட்டுத்திட்டம். 145
73. கி.பி. 1981 - பொத்துவில் வித்தகர். 147
74. கி.பி. 1983 - மரத்திற்கு வித்தாக அமைந்த மண். 149
75. * * * * * - மனதை மயக்கும் மண் வாசனைக் காட்சிகள். 150
76. * * * * * - நாட்டுப்புறச் சுவைஞர். 151
77. * * * * * - அழிந்து போன அடையாளங்கள். 153
78. கி.பி. 1984 - பொத்துவில் கண்ட மற்றுமொரு பெருவெள்ளம். 154
79. கி.பி. 1989 - இஸ்லாமிய பொதுப்பணி இயக்கம். 155
80. கி.பி. 1988 - அபூர்வமான நிழற்படங்கள். 156
81. கி.பி. 1989 - பொத்துவில் கடற்கரை கொடியேற்று விழா. 157
82. கி.பி. 1989 - இஸ்லாமிய இளைஞர் பொதுப்பணி இயக்கம். 158
83. கி.பி. 1990 - மௌலூது ஓதுவோம் வாருங்கள். 159
84. கி.பி. 1989 - கனவான் அரசியல். 160
85. கி.பி. 1990 - யுவனின் கண்ணீர்க் கவிதை. 164
86. * * * * * - இளமையில் இவர்கள். 169
87. கி.பி. 1991 - லகுகலயில் முஸ்லிம்கள் படுகொலை. 170
88. கி.பி. 1991 - லகுகலயில் முஸ்லிம்கள் படுகொலை. 171
89. கி.பி. 1992 - பொத்துவில் யுவன் கலை, இலக்கிய சங்கமிப்பு. 172
90. கி.பி. 1992 - கோமாரியில் முஸ்லிம்கள் படுகொலை. 173
91. கி.பி. 1992 - குருதியில் முளைத்த கவிதை மலர் - I. 174
92. கி.பி. 1993 - குருதியில் முளைத்த கவிதை மலர் - II. 176
93. கி.பி. 1993 - கலைநிலா - எம்.எஸ்.எம். றிஸ்வி. 182
94. கி.பி. 1995 - பொத்துவிலின் முதல் தமிழ் இலக்கண நூல். 192
95. கி.பி. 1995 - இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின்
ஸ்தாபக உபவேந்தர். 194
96. கி.பி. 1998 - ஆளுமை மிக்க அரசியல் வாதி. 197
97. கி.பி. 1999 - சாஹித்திய விழா நிகழ்வுகள். 202
98. கி.பி. 2001 - முத்துக் கண்டியின் முக்கியத்துவம். 204
99. கி.பி. 2002 - செங்காமக்கிராமத்தின் சிற்பி. 205
100. கி.பி. 2004 - சீறி வந்த சுனாமி. 208
101. கி.பி. 2006 - இரத்த வெள்ளத்தில் இறத்தல் குளம். 221
102. கி.பி. 2011 - பொத்துவில் தவிசாளர். 224
103. கி.பி. 2011 - கோலாட்டக் கலையின் விற்பன்னர். 226
104. கி.பி. 2014 - பொத்துவிலில் வலயக் கல்வி அலுவலகம். 229
105. கி.பி. 2014 - பொத்துவில் வரலாற்றின் முதன்மை ரசிகன். 234


---



* * * * * - பரந்துபட்ட காலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கி.பி. 1898 - பிரிட்டிஷ் காலத்து உறுதிப் பத்திரம்.

12430

**WASTE LAND.]**

***VICTORIA**, by the Grace of GOD, of the United Kingdom of Great Britain and Ireland Queen, Defender of the Faith, &c.*

*I certify that the above signature, attached by means of a Stamp under the provisions of Ordinances No. 11 of 1884, and No. 30 of 1884, has been so attached in my presence.*

**TO ALL TO WHOM THESE PRESENTS SHALL COME,**

**GREETING.**

KNOW YE that for and in consideration of the sum of Six Rupees (Rs 6·00)

lawful money of Ceylon, to Us paid by Kalantar Marakkayar Mukkamatu Caiufa and Sileman Monterayu Medrakka Nayintai all of Pottuvil

(the receipt whereof is hereby acknowledged) We, of Our special grace, certain knowledge, and mere motion, have granted and assigned and by these Presents do



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

grant and assign, unto the said Kalantar Macakkayar Moukkamatu Kanifa and Sileman Monteram Marakka Nayintar their

Heirs and Assigns, the following premises, to wit:— An allotment of Land called Ulluntuvelikkadu situated in the village Pottuvil in Panama Pattu in the District of Batticaloa Eastern Province

Bounded on the North and East by Crown Land called Ulluntuvelikkadu. South by Land described in Plan No 179424. West by Reservation for a Lane

Containing in extent One Rood and Seven Perches (A. R. P. 0. 1. 7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

according to the annexed Survey and description thereof, authenticated by P. H. Grinlinton Esquire Surveyor General

bearing date the 5th December 1898 No. 179423.

To have and to hold the said premises, with their and every of their appurtenances, unto the said Kalantar Marakkayar Mukamatu Hanifa and Sileman Montiram Marakkra Nayintai their

Heirs and Assigns, in free and common soccage for ever, he and they yielding and paying yearly and every year to Our Governor of Our Island of Ceylon, on behalf of Us, Our Heirs, and Successors, a quit-rent of a Pepper-corn on the First day of January in each year, or so soon thereafter as the same shall be demanded, and subject to the several Provisos and Reservations hereinafter declared and contained concerning the same: that is to say, Provided always that the said Lands shall be liable to such Regulations as now exist, and as may hereafter be enacted, relative to landed property in general; and that it shall at all times be lawful for Us, Our Heirs and Successors, or for any person or persons acting in that behalf by Our or their authority, to resume and enter upon possession of any part of the said lands which it may at any time by Us, Our Heirs, and Successors, be deemed necessary to resume for making and constructing such Roads and Bridges as may be necessary for public purposes or for the benefit of the proprietors of other lands already purchased or to be hereafter purchased from Us, Our Heirs, and Successors, in and upon the said Lands hereby granted and assigned; and provided also that it shall at all times be lawful for Us, Our Heirs, and Successors, or for any person or persons acting in that behalf by Our or their authority, to cut, search, dig for, and take away all such indigenous Timber, Stones, Cabook, and other Materials, the produce of the said Lands, as may be necessary or requisite for making and keeping the said Roads and Bridges in repair, or for any other public works whatsoever.

AND We do hereby also save and reserve to Us, Our Heirs, and Successors, all right and title to the Mines, Minerals, Gold, Silver, Copper, Iron, Tin, Lead, and other Metals, and the Ores thereof, in or upon the said Lands, together with full power of entry for the same respectively, and all other powers and privileges necessary or requisite for the building or constructing such Roads or Bridges as aforesaid, or for the cutting, procuring, and carrying away the Timber, Stone, Cabook, and other Materials, for the purpose aforesaid; or for the discovering or working such Mines; or procuring, smelting, and carrying away the said Gold, Silver, Copper, Iron, Tin, Lead, and other Metals, or the Ores thereof, or any Minerals in or upon the said Lands.

And provided further, that the said description and admeasurement herein contained of the said premises hereinbefore mentioned to be granted and assigned shall be hereby taken to be correct; and in the event of any error or mistake hereafter appearing therein, that the said Kalantar Marakkayar Mukamatu Hanifa and Sileman Montiram Marakkra Nayintai their Heirs



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. கி.பி. 1904 - பொலிஸ் தலைமை (Police Headman) நியமனக் கடிதம்.



By Edward Francis Hopkins, Esq.

Government Agent for the Eastern Province

To Ibrahim Kandu K. Akamadu Levvai

By virtue of the powers vested in me by His Excellency the Governor, I do hereby nominate and appoint you to be a Police Headman

in and for the Pottuvil Division

in the Batticaloa of the Eastern Province,

to hold and exercise the said Office during the will and pleasure of Government

Witness my hand at B[illegible] this 26th day of May, 1904.

Regtd. [illegible]

E. Hopkins

Government Agent.

பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட, கி.பி. 1904-05-26ஆந் திகதியிடப்பட்ட பொத்துவில் முதலாம் குறிச்சி பொலிஸ் தலைமைக்கான நியமனக் கடிதம். நியமனம் பெறுபவர் இப்றாகீம் கண்டு அகமது லெவ்வை என்பவர். முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் M.B. அப்துல் அஸீஸ் அவர்களது பெரிய தந்தையான இவர் பொத்துவில் மக்களால் செல்லமாக **'வெள்ளக்குட்டி விதானை'** எனவும் அழைக்கப்பட்டவர்.

கண்டி இராச்சிய காலத்திலிருந்தே விதானையார் எனப்படும் கிராமத் தலைவர்கள் 'ஆராய்ச்சி' என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 19ஆம் நூற்றாண்டிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதி வரையிலும் இப் பதவிகாரர்கள் பொலிஸ் தலைமைகள் என அழைக்கப்படலாயினர். சுதந்திரத்தினை நெருங்கிய காலங்களிலிருந்து கிராமத் தலைமைக் காரர் என அழைக்கப்படலாயினர். பின்னர் வந்த காலகட்டங்களில் இப் பதவி காரர்கள் கிராம சேவையாளர் என்றும் தற்போது கிராம நிலதாரி என்றும் அழைக்கப்பட்டு வருகின்றனர். இருப்பினும் இன்றைய நிலைபோன்று அல்லாமல் ஆராய்ச்சி, பொலிஸ் தலைமை, கிராமத் தலைமைக் காரர் போன்ற பதவிகள் பொலிஸ் அதிகாரங்களுடன் கூடியதாகவும் இருந்திருக்கின்றது. பொத்துவிலில் பொலிஸ் தலைமைகளாக சாகிபு மரைக்காயர், இப்றாஹீம் கண்டு, அகமது லெவ்வை, தம்பி சாய்வுலெவ்வை, முகையதீன் பாவா, ஆதங்கண்டு என்போர்களும் கிராமத் தலைமைக் காரர்களாக அதிகாரம், மீராலெவ்வை, உதுமாலெவ்வை, வை எம் மற்றும் முகம்மது காசிம் என்போர்களும் கடமை புரிந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. கி.பி. 1934 - பொத்துவிலின் முதலாவது திருமண அழைப்பிதழ்



பிஸ்மில்லா, ஹிர்றஹ்மா ஹிர்றஹீம்.

முபஸ்மிலன், முகம்திலன், முஸல்லிமன், வமுஸல்லிமா.

விவாகோற்சவ விஞ்ஞாபனம்.

ம. றா. றா. ஸ்ரீ [illegible] அவர்களுக்கு
எப்பொருட்கும் மெய்ப்பொருளாகிய ஒப்பிலடங்கா றப்பில் ஆலமீனின் திருவருளை
முன்னிட்டு நிகழும் ஹிஜ்ரி 1353ம் ஹு றபீஉல் அவ்வல்மாதம் பிறை 23
வெள்ளிக்கிழமை இரவு (6-7-34)

| | |
|---|---|
| பாணமைப்பற்று உடையார் று. ம. இசப்புலெவ்வை அவர்களின் கனிஷ்ட புத்திரி சௌபாக்கியவதி கதிஷா நாச்சி என்பவளுக்கும் | முகம்மது அப்துல்காதர் மரக்காயர் அவர்களின் கனிஷ்ட புத்திரன் மு. அ. முகம்மது லெவ்வைக்கும் |

திருமணஞ் செய்யப் பெரியோர்களால் நிட்சயித்திருப்பதால் (6-7-34) வெள்ளிக் கிழமை இரவு 10 மணியளவில் மணமகள் இல்லத்தில் நடைபெறும் மவுலூதுக்கும் விருந்துக்கும் தாங்கள் தங்களிஷ்ட மித்திர குடும்ப சமேதராய்ச் சமுகம்கொடுத்து, விருந்தருந்தித் தம்பதிகளைச் சந்தோஷிப்பிக்கேகுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அஸ்ஸலாமு அலைக்கும்
று. ம. இசுப்புலெவ்வை உடையார்,
மு. அ. சாய்வுத்தம்பி.

பொத்துவில்
28 6 34

பொத்துவிலில் வெளிவந்த முதலாவது திருமண அழைப்பிதழ் இதுவேயாகும். தனது சொந்த மருமகனையே தனது புதல்விக்கு திருமணம் செய்துவைக்க வேண்டும் என்ற எண்ணத்தினை மனதில் கொண்டிருந்த பாணமைப்பற்று உடையார் றா.ம. யூசுப்லெவ்வை அவர்கள் புலியந்தீவுக்கு (மட்டக்களப்பு) அலுவலக வேலையாக சென்ற ஒரு சந்தர்ப்பத்தில் எவரிடமும் சொல்லாமலேயே திடீர் முடிவாக கையோடு திருமண அழைப்பிதழ்களையும் அச்சுப்பதித்து எடுத்து வந்துவிட்டார். உடையாரின் புதல்வி கதிஷா நாச்சி என்பவர் பொத்துவில் மெதடிஸ்ட் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் முதல் முஸ்லிம் மாணவி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

| பொத்துவில் நாட்டார் கவி - யூசுப்லெவ்வை (உடையார்) பாடியது. | |
|---|---|
| யூசுப்லெவ்வையும் அவரது சகோதரரும் சிங்கள நாட்டுக்குள் தாவளத்தில் உப்பினைக் கொண்டு சென்ற போது வானம் இருளாகி வந்த வேளையில் பிறந்த பாடல் இது. (1920க்கு முன்) | மழயே இருட்டாதே<br>மழ மேகமே சூழாதே<br>இந்த உப்பக் கொண்டு போய் வித்து<br>நாங்க ஊரு போய்ச் சேருமட்டும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. கி.பி. 1939 - பொத்துவில் ஜக்கிய கமத்தொழில் அபிவிருத்திச் சங்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருவாக சபையார்

6 பொக்கிஷதாரர் மீரா லெவ்வைப் போடி

கணக்கு பரிசோதகர்

7. ~~சவக்குச் செகிடு~~ அபூபக்கர்

8 சமது லெவ்வை மரைக்கார் முகம்மது இஸ்மாயில்

9 செய்யது முகம்மது லெவ்வை முகம்மது இஸ்மாயில் பியாரி

10 சி. இஸ்மாயில் அகமது

அங்கத்தவர்கள்

11 சமது லெவ்வை மரைக்கார் ஹாஜி லெவ்வை

12 அபூபக்கர்

13 மைக்கீர் செய்யது இஸ்மாயில்

14 ஆதம்லெப்பை மரைக்கார் மீரான் கனி

15 இபுறாலெவ்வை ஜெயினுல் ஆப்தீன்

16 சின்னத்தம்பி மீரா லெவ்வை

17 ம. ம. மீ. அகமது அப்துல் கரீம்

உ

1939–40 ஆண்டின்

வேளாண்மைச் செய்கைக்குத் தேவையான

கடன் உதவிப் பணம் ~~கடன்~~ கொடுக்க

காணிகள் திருத்த ...


[illegible]

1 [illegible]
2 [illegible]
3 [illegible]
4 [illegible]
5 [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. கி.பி. 1946 - உடையாரும் உறவினர்களும்.



இடமிருந்து வலம் (இரண்டாவது வரிசை) 1. செல்வன் எஸ்.ஏ. காதர் 2. ஜனாப் ஏ. சிக்கந்தர் (பிஸ்கால் உடையார்) 4. ஜனாப் ஆர்.எம். யூசுப் லெவ்வை (உடையார்) 5. உபதேசியார் 6. ஜனாப் வை.எம். முஸ்தபா (அக்கிராசனர்) 7. ஜனாப் எம்.ஏ.சி. முகம்மது லெவ்வை (APO)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கி.பி. 1946 - உடையாரும் ஊர்ப் பிரமுகர்களும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன் பக்க நிழற் படத்தில் உள்ளவர்கள் விபரம்.

றா.ம. யூசுப்லெவ்வை உடையார் அவர்கள் பாணமைப்பற்று உடையார் பதவியிலிருந்து 1946இல் ஓய்வு பெற்றதனை அடுத்து பாணமைப்பற்று DRO தலைமையில், பொத்துவில் ஊர்ப் பிரமுகர்கள் இணைந்து கிராமக் கோடு வளாகத்தில் வழங்கிய பிரியாவிடை நிகழ்வின் போது எடுக்கப்பட்ட நிழற்படம்.

இடமிருந்து வலம்: (முதலாவது பெரியோர் வரிசை)

1. ஜனாப் யூ.லெ. முகம்மது முஸ்தபா (PM)
2. திரு. ச. புஞ்சுமாத்துமை (வண்ணக்கர்)
5. திரு. கொர்ணேலிஸ் ஜயவிக்கிரம
6. திரு. மார்ட்டின்
9. ஜனாப் றா.ம. யூசுப்லெவ்வை (உடையார்)
10. உபதேசியார்
11. திரு. செ. கதிர்காமத்தம்பி (முதலாளி)
12. ஜனாப் செ.அ.ம. அப்துல் றஸாக் மௌலானா
13. திரு. வே. மயில்வாகனம் (ஓவசியர்)
14. ஜனாப் மு.அ.கா. முகம்மது லெவ்வை (APO)
15. திரு. பிரான்சிஸ் (கிளார்க்)
16. திரு. நாகமணி (விதானை)
17. ஜனாப் ஆ. மீராலெவ்வை (விதானை)

(இரண்டாவது பெரியோர் வரிசை)

3. ஜனாப் ஆ. முகம்மது காசிம் (கிளார்க்)
7. ஜனாப் அ.கா.ம. யாசீன் மௌலானா
12. திரு. ச. அதிகாரம் (விதானை)
14. ஜனாப் இ.லெ.போ. மீராசாஹிபு போடி (ராசாப் போடியார்)
15. ஜனாப் ம. மீராலெவ்வை
18. ஜனாப் ஆ.. சிக்கந்தர் (பிஸ்க்கால் உடையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. கி.பி. 1946 - பொத்துவில் சிங்கள வித்தியாலயம் ஆரம்பம்.



பொத்துவிலில் முதலாவது சிங்கள மொழிப்பாடசாலையானது ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வினை வெளிப்படுத்தும் நிழற்படம் இதுவாகும். இவ்வித்தியாலயம் திறக்கப்படும் வரை இங்கு சிங்கள மாணவர்களும் பொத்துவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் தமிழ் மொழியிலேயே கல்வி கற்று வந்தனர். பொத்துவில் பிரதான வீதியில் காணப்படும் அரச மரத்திற்கு சற்று அண்மித்ததாக அமைக்கப்பட்டிருந்த இப்பாடசாலையானது ஆரம்ப காலங்களில் பொத்துவில் அபிநவ சிங்கள கலவன் பாடசாலை என அழைக்கப்பட்டது. பின்னர் 1952ஆம் ஆண்டில் அது வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது. அதுவே தற்போது பொத்துவில் சிங்கள மகா வித்தியாலயம் என அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J. N. A 61829—30,000 (6/45). GOVT. PRESS, COLOMBO.
Census 13
(F 4) 6/45

## ACT OF APPOINTMENT OF ENUMERATOR.

**CENSUS OF CEYLON, 1946.**

Under the provisions of "The Census Ordinance, 1900," as amended by The Census (Amendment) Ordinance, No. 6 of 1945.

I hereby appoint Mr. M. M. Ibrahim, ......

as Enumerator of the following Division:—

* 18 Block No. in the V.H's division 2. Pottuvil.

Commissioner of Census.

Batticaloa District/Town.

This 25th day of January, 1946.

* Here insert the name of the village, town, or ward, and Block number of Block (or Blocks) assigned to the Enumerator.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. கி.பி. 1950 - அப்துல் றஸாக் மௌலானாவின் கையெழுத்து.

786
செ. அ. ம.
அப்துல் றஸாக் மௌலானா
ஜே. பி. காதி
பொத்துவில்

பொத்துவில் ஆஸ் முகிசின் மீராலெவ்வை. முகம்ம
துஷரீப். என்பவர். இவர் சிறந்த நாட்டுக்கவ
நான் நன்கறிவேன். இவர். உண்மையும். ந
ம்பிக்கையும். நேர்மையும். மிக்க நன்நடத்தையும்
உடையவர் உயர். முகம்மதிய மெய்ப்
தைத் தேர்ந்தவர். சாதிவித்தியாசமின்றி சக
லரோடும். நன்மதிக்கப்படுகிறார்!

இவர். பொது ஜனங்களிடை
யே செல்வாக்குடையவராயும். பண்புடை
யவராயும். விளங்குகிறார்!

டிவிசனல் கோட் மெம்பர்
பதவிக்கு. இவர் ஏற்ற கேள்விகாரரென. நான்
அறிவேன் அப்பதவிக்கு இவரையே நியமித்
தால். நன்மையாய். இருக்கும்.

செ. அ. ம. அப்துல்

பாணமைப்பற்றுக் காதி
J. P.
பாணமைப்பற்று ஆ. கி. பொ.
உப்பத்திலிருப்பு வசதிக்
உபதலைவர்.

19—10—50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. கி.பி. 1950, 60கள் - ஊர்ப் பிரமுகர்கள் சிலர்.



செ.அ.ம. அப்துல் றசாக் மௌலானா (பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாயல் மரைக்காயர் சபையின் ஆயுட்காலப் போஷகர், சமாதான நீதவான், குவாஸி)



யூ.லெ. முகம்மது முஸ்தபா -YM (பிரதம மரைக்காயர், தபால் அதிபர், சமாதான நீதவான், குவாஸி, பொத்துவில் கிராம சபை அக்கிராசனர், இன்னும் பல...)



ஆ. மீராலெவ்வை - விதானை (2ம் குறிச்சி பொலிஸ் தலைமை, கிராமத் தலைமைக்காரர், பிரதம மரைக்காயர், மரைக்காயர் சபை பொருளாளர்)



இ.லெ.போ. மீராசாஹிபு போடியார் - ராசாப்போடியார். (பொத்துவில் கிராமசபை அக்கிராசனர், உப அக்கிராசனர், பவளக்குடி மரைக்காயர்)



■ பிரமுகர்களின் பெயர்களுக்குப் பின்னால் வருகின்ற பதவிகள் அல்லது புனைப் பெயர்கள் சில, குறிப்பிட்ட காலகட்ட மக்களின் பேச்சு வழக்கின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மு.அ. முகம்மது லெவ்வை - **APO**
(சடுதி மரண விசாரணை அதிகாரி, பொத்துவில் கிராம சபை அக்கிராசனர், கிராமத் தலைமைக்காரர்)



ஆ. முகம்மது காசிம் - கிளா(ர்)க்கர்
(பொத்துவிலின் அரசாங்க நியமனம் பெற்ற முதல் இலிகிதர். பாணமை, பொத்துவில், திருக்கோவில், சாய்ந்தமருது கிராம சபைகளில் கடமை புரிந்தவர்)



இ.லெ. முகம்மது மீராலெவ்வை - வாத்தியார்
(பொத்துவிலின் முதல் வாத்தியார், பெரும் புலவர், பத்திரிகை நிருபர்)



ஆ. சிக்கந்தர்
(பிஸ்கால் உடையார், கிராம சபை உறுப்பினர், அல்லிப்பூ குடி மரைக்காயர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மீ.லெ. முகம்மது இப்றாஹீம்** - விதானை (2ம் குறிச்சி கிராமத் தலைமைக்காரர், பிறப்பு-இறப்பு பதிவாளர், கிராம சபை உறுப்பினர், R.W. உத்தியோகத்தர், Messenger, வெள்ளரசங் குடி மரைக்காயர், இன்னும் சில...)



மு.மீ. முகம்மது காசிம் - **விதானை** (1ம் குறிச்சி விதானை - கிராமத் தலைமைக்காரர்) சந்திராதி முதலி குடி மரைக்காயர்.



மு.ம. முகம்மது ஹனிபா - லெப்பை (பொத்துவில் ஜூம்ஆ பள்ளிவாயல் கதீப், பொத் கிராம சபை உதவி அக்கிராசனர், பிறப்பு-இறப்பு பதிவாளர், பொத் தப்லீக் ஜமாஅத் அமீர், ஹாஜியார்)



மு.மீ. முகம்மது இஸ்மாயில் - லெப்பை (விவாகப் பதிவாளர், பொத்.ஜும்ஆ பள்ளிவாயல் கதீப், பதில் கிராமத் தலைமைக்காரர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அ.லெ.ம. ஆதம் கண்டு** - தோம்புதர் (பிறப்பு-இறப்பு பதிவாளர், விவாகப் பதிவாளர், கிராம சபை உறுப்பினர், ஓடாவி குடி மரைக்காயர்)



**சா.லெ.ம. கலுங்கு றாவுத்தர்** - மனேஜர் (அல்லிப்பூ குடி மரைக்காயர்) பாணமைப்பற்று ஐக்கிய விளைபொருள் உற்பத்தி, விற்பனவுச் சங்கத்தின் ஆரம்ப முகாமையாளர்.



**சே.லெ. செயினுலாப்தீன்** -பெரிய ஆலிம் (பொத்துவிலின் முதல் மௌலவி, பொத்துவிலின் முதல் அரசாங்க நியமனம் பெற்ற (மௌலவி) ஆசிரியர்)



**மீ.மு. முகம்மது இஸ்மாயில்** - வட்டானை (வடக்கனா குடி மரைக்காயர்) குஞ்சானோடை, இலுக்குச்சேனை வட்ட விதானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மு.அ. சாஹிபுத்தம்பி** - வட்டானை (பிறைன் துறைக்கண்ட வட்ட விதானை, போடியார், பாங்கி நெயிந்த குடி மரைக்காயர்.)



1. **அ.லெ. சேகுதாவுது** (பைக்கீர் குடி மரைக்காயர், பா.வ. வட்ட விதானை)
2. **க.றா. கலந்தர் லெவ்வை** - சிறாப்பர் (பாலாந்தி வட்டை வட்ட விதானை, 2ம் குறிச்சி கி.மு.ச. தலைவர், வடக்கனா குடி மரைக்காயர்)



**ஆ. முகம்மது இஸ்மாயில்** - பணத்தார் (பொத்துவில் கிராம சபை உப அக்கிராசனர், பொத். 2ம் குறிச்சி ப.நோ.கூ.ச. உப தலைவர்) பொத்துவிலிருந்து 4வது நபராக ஹஜ்ஜுக் கிரிகையை நிறைவேற்றியவர்.



**ஆ. அப்துல் ஹமீது** - சட்டாம்பியார் (பொத்துவில் 1ம் குறிச்சி மத்திய குர்ஆன் மத்ரஸாவின் ஒஸ்தாது) 1950களிலிருந்து 90 காலப்பகுதி வரை மிக அதிகமான பொத்துவில் சிறார்களுக்கு ஓதக் கற்றுக் கொடுத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம. மீராலெவ்வை
(கிராம சபை உறுப்பினர், அல்லிப்பூ குடி மரைக்காயர், கள்ளியாப்பத்தை - இலுக்குச் சேனைக் கண்ட வட்ட விதானை)



மீ. முகம்மது இப்றாஹீம் - PM
(பொத்துவில் தபால் நிலைய தபால் அதிபர், ஆங்கில ஆசிரியர், மாந்தறா குடி மரைக்காயர், சமாதான நீதவான், குவாஸி, பொத். 2ம் குறிச்சி கி.மு.ச. செயலாளர்)



சு.மு. மீராசாஹிபு - சுல்தான் ஹாஜியார்
(பொத்துவிலிருந்து 3வது நபராக ஹஜ்ஜுக் கிரிகையை நிறைவேற்றியவர்.)



நெ.க.போ. மீராலெவ்வை - ஆராய்ச்சிப் போடியார்
(1907, 08ஆம் ஆண்டுகளில் பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாயல் கல் கட்டடமாக அமைக்கப்பட்ட போது அதற்குத் தேவையான காட்டு மரங்களை வழங்கியவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆ. முகம்மது அலியார் - மனேஜர்** (பொத்துவில் 2ஆம் குறிச்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர், அல்-நூரானியா பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர், 2ஆம் குறிச்சி கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர்.)



**ஆ. முகம்மது இஸ்மாயில் - மராட்டி சேமன்** (1950களின் பிற் பகுதியிலும் 1960களின் முற் பகுதியிலும் பொத்துவில் கிராம சபையின் அக்கிராசனராக பதவி வகித்தவர்.)



**இ.லெ. ஆதங்கண்டு - அதிகாரி** (பெரிய உல்லை-பசறடிச் சேனை கிராமத்தினை கட்டியெழுப்பிய முக்கியஸ்தர், RDS செயலாளர்)



**மு.கா. சீனி முகம்மது - ஹாஜியார்** (போடியாராகவும், பொத்துவிலிருந்து 5வது நபராக ஹஜ்ஜுக் கிரிகையை நிறைவேற்றியவராகவும் விளங்கியவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. கி.பி. 1951 - பொத்துவில் மத்திய கல்லூரியின் இரண்டாவது மாணவர்.


J. N. 86660
Education B 59
F* (12/37)

இலங்கை வித்தியா பகுதி.

மாணக்கர் பதிவுப் பத்திரம்.

Bt/ Pottuvil Govt. Junior

சேர்ந்த திகதி: 3. 5. 51

விலகிய காரணம்: To seek employment

சேர் விலக்கம்: 2

விலகிய திகதி: 3. 1. 53

ஆங்கிலம்: VIIIth std

According to syllabus

(ஆங்கிலம், சிங்களம், தமிழில் எடுத்த பாடங்கள் குறிக்கப்படல் வேண்டும்)

வகுப்புப் பாடங்களின் முன்னேற்றம்: Good

நடத்தை: Very satisfactory

திகதி: 1961 ம் ஆண்டு August மீ 21 ந உ.

தலைமை ஆசிரியர்.

இன்றைய பொத்துவில் மத்திய கல்லூரி 1951.05.03இல் அரசினர் கனிஷ்ட பாடசாலையாக உருவாக்கம் பெற்ற வேளை அதன் இரண்டாவது மாணவராக இணைந்து கொண்ட ம.ஃ.மூது அலாவுதீன் என்ற உதுமாலெப்பை என்பவரது மாணாக்கர் பதிவுப் பத்திரம் இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. சிறப்புப் பக்கம்.



பொத்துவில் வரலாற்றினை விரல் நுனியில் வைத்திருந்தவர் மர்ஹூம் 'பசுந்து' எனப்பட்ட PT சேகுதாவுது அவர்கள் இவரது மரணம் பொத்துவில் வரலாற்றினை நூலருப்படுத்த வேண்டும் என ஆவலோடு இருந்த என்னைப் போன்றவர்களுக்கு பெரும் இழப்பாக இருந்தாலும் அவரைப் பதிலீடு செய்பவர்களும் இருக்கின்றனர் என்பதற்கு ஒரு உதாரணமாகத் திகழ்பவரே ஆராய்ச்சிப் போடியாரின் புதல்வர் 'முகைதீன் பிச்சை ஹாஜியார்' அவர்கள். இவருக்கு அடுத்த நிலையில் எம்.எல்.எம். ஆரிபீன் (ஓய்வு பெற்ற இலிகிதர்), எம்.எம். இப்றாஹீம் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்) போன்ற விரல் விட்டு எண்ணக்கூடிய வரலாற்றுத் தகவலாளர்களும் இக்கட்டுரை எழுதும் வரை இம் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

தான் பிறந்த ஆண்டினைக் கூட வரலாற்று நிகழ்வோடு தொடர்பு படுத்தியே குறிப்பிடுகின்ற முகைதீன் பிச்சை அவர்கள் இறையருளால் தனது ஐந்து வயது தொடக்கம் தற்போது வரையிலும் பொத்துவிலில் தான் கண்ட, கேட்ட விடயங்களை, நிகழ்வுகளை விரிவாகவும், ஆய்வுத் தன்மையுடனும், துல்லியமாகவும் வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல் கொண்டவர். சிறந்த ஞாபக சக்தியினை பெற்றுள்ள இவர் பொத்துவிலின் வரலாற்றில் அரசியல், பொருளாதாரம், சமூக வாழ்வியல் என எந்தக் கோணத்தில் நின்றும் சிறப்பான முறையில் தகவல்களை தொகுத்து வழங்கக் கூடியவர்.

சேனைக் கண்டம் வெட்டப்பட்ட 1924ஆம் வருடத்தில் பிறந்த முகைதீன் பிச்சை அவர்கள் பொத்துவில் மெ.மி.த.க. பாடசாலையில் 05ஆம் தரம் வரை கற்றுக் கொண்ட நிலையில் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் வட்ட விதானையாக மாறிவிட்டவர். இருப்பினும் கல்வி மீது கொண்ட தாகம் இவருக்கு இன்று வரையிலும் தீர்ந்தபாடில்லை. தன்னால் மேற்கொண்டு இன்னும் கற்க முடியவில்லையே என ஆதங்கப்படும் இவரிடம் புதைந்துள்ள தமிழ் மொழி தொடர்பான ஆற்றலினை நேரில் சென்று அவரோடு உரையாடும் போதுதான் ஒருவரால் சரியாகக் கணித்துக் கொள்ளவும் முடியும். பொத்துவில் தொடர்பான வரலாற்றுத் தகவல்களை அயராமல் மிக ஆழமாக இவர் எனக்கு வழங்கியதையிட்டு, பொத்துவில் மக்கள் சார்பாக இன்றைய தருணத்தில் உளப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- நூலாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. கி.பி. 1953 - கத்னா அழைப்பிதழ்.

### விருத்த சேதன விஞ்ஞாபனம்.

.................................................................... அவர்கட்கு

**அன்புடையீர் !**

சர்வ ஜீவ தயாபரனுன அல்லாவின் திருவருளாலும் சத்திய சீலர் சற்குண நாத எம்பிரான் (சல்) அவர்களின் து ஆப் பேருலும் நிகழும் ஹிஜ்ரி 1372 வருஷம் துல் ஹஜ் ஜூ மாதம் பிறை 27க்கு சரியான 1953 ஷு புரட்டாசி மாதம் 7 ந் திகதி திங்கட்கிழமை 7-9-53.) 6 மணியளவில்

எனது புதல்வர்கள்,

முகம்மது அப்துல் காதர் — முகம்மத நலியார்

என்பவர்களுக்கு கத்னு வென்னும் சுன்னத்துச் செய்ய நிட்சயித்திருப்பதால் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட சகல வைபவங்களுக்கும் தாங்கள் தங்கள் இஷ்டமித்திரர் சமேதம் விஜயம் செய்து ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் அன்புள்ள

பொத்துவில்
18-8-53.

மு. அ. சாய்வுத்தம்பி.
பிறேரயின் கண்டம் வட்டவிதானையும்
பாரியாரும்.

தங்கள் வரவை எதிர்பார்க்கும் பந்துக்களும் நண்பர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. கி.பி. 1954 - கத்னா அழைப்பிதழ்.

# விருத்த சேதன விஞ்ஞாபனம்.

திரு ...[illegible]... அவர்கட்கு

அன்புடையீர் !

எல்லாம் வல்ல இறைவன் திருவருளை முன்னிட்டு நிகழும் ஹிஜ்ரி 1373 ம் முஹர்ரம் பிறை 11 க்கு சரியான 1954 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 9 ந் திகதி வியாழக் கிழமை பி. ப. 4–51 மணிக்கு எங்கள் அருமைப் புதல்வர்களான :—

**M. M. அப்துல் ஹபூர்**

**M. M. யூசுப்புலெவ்வை**

ஆகிய இருவர்களுக்கு விருத்த சேத்னம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் நிகழச்சி நிரலில் உள்ள விபரப்படி வைபவங்களில் தாங்களும் குடும்ப சமேதராய் சமூகமீந்து பங்குபற்றி, மகிழ்வுற்று ஆசீர்வதித்தேகுமாறு கோருகிறோம்.

### நிகழ்ச்சி நிரல்.

4-9-54 திகதி பி. ப. இரவு 9 மணிதொடக்கம் விருந்துபசாரம்.
5-9-54 ,, மருதோன்றிக் கலியாணம்.
6-9-54 ,, பி. ப. 3 மணியளவில் குஞ்சுமூசா அவுலியா அவர்கள் சியாரத்துக்கேகுதல்.
7-9-54 — 9-9-54 மு. ப. 12 மணி வரை ஊர்வலமேகுதல்.
9-9-54 திகதி பி. ப. 5-51 (கத்தனு) விருத்த சேதனம்.
10-9-54 — 12-9-54 தி. வரவேற்புகளும் பலவித கொண்டாட்டங்களும்.

இங்ஙனம்
நல்வரவை எதிர்பார்க்கும்
யூ. முகம்மது முஸ்தபா (Ex. S. P. M.)
சிப்மரைக்காயரும்
பாரியாரும்.

பொத்துவில்,
1–9–54,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. கி.பி. 1954 - பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாயல் பரிபாலன சபை.

786

# அன்பர்களுக்கு ஓர் அறிமுகம்

**பொத்துவில் முஸ்லீம் மக்களே!**

*நம் கிராமத்தின்கண்ணே ஓர் புதிய பள்ளிவாசல் அமைப்பதற்கும்; இப்பள்ளிவாசலையும் பொத்துவில் முஸ்லீம் மக்களையும் நம் இஸ்லாமிய கோட்பாடுகட்கேற்பச் செவ்வனே நடாத்திவருவதற்குமாகப்,* **"பொத்துவில் பள்ளிவாசல் பரிபாலன சபை"** *என்னும் ஓர் சபையை 4-3-54ல் நம் பாடசாலை மண்டபத்தில் கூடிய மாபெருங்கூட்டத்தில் ஸ்தாபித்திருக்கிறோம் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.*

**ஆதலால் அன்பர்களே!**

*நீங்கள் அனைவரும் ஒருமுகப்பட்டு உள்ளம் விரும்பி ஒத்துழைக்க முன்வரும்படி அன்பாய்க் கேட்டுக் கொள்கின்றோம். எனவே, நம் நம்பிக்கைக்கும், நன்மதிப்புக்கும் பாத்திரமான இச்சபை தன்கருமங்களைப் பூரணதிருப்தியுடன் நிறைவேற்ற எல்லாம்வல்ல இறைவன், அருள்பாலிப்பானாக!*

**"ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு — நம்முட்**
**ஒற்றுமைநீங்கில் அனைவர்க்கும் தாழ்வு"**

இங்ஙனம்

*செ. அ. ம. அப்துல் றசாக் மவுலானா J. P. காதி*
*ஆ. மீராலெவ்வை (Retd. V. H.) முதன் மரைக்காயர்*
*மு. மீ. முகம்மதுலெவ்வை மரைக்காயர்*
*மு. அ. முகம்மதுலெவ்வை (சடுதி மரண விசாரணைக்காரர்)*
*யூ. முகம்மதுமுஸ்தபா, முதன் மரைக்காயர் (Ex. S. P. M)*
*மீ. லெ. செய்யது முகையதீன்*
*கனிஷ்ட பாடசாலைத் தலைமையாசிரியர்*
*மு. அ. சாய்வுத்தம்பி வ. வி.*
*மீ. முகம்மதிப்றுகீம் ஆசிரியர்*
*மீ. லெ. முகம்மதிப்றுகீம், கி. த. 2ம் குறிச்சி*
*ஏனையோர்களும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொத்துவில் பள்ளிவாசல் பரிபாலன சபை

**ஆலோசனைச் சபை. (Advisory Board)**

1. செ. அ. ம. அப்துல் றசாக் மவுலானா J. P. காதி
2. ஆ. மீராலெவ்வை (Retd. V. H.) முதன் மரைக்காயர்
3. மு. மீ. முகம்மதுலெவ்வை முதன் மரைக்காயர்
4. மு. அ. முகம்மதுலெவ்வை (சடுதி மரண விசாரணைக்காரர்)
5. இ. லெ. மீராசாய்ப்புப் போடி கி. ச. தலைவர்
6. க. ரு. கலந்தர்லெவ்வை மரைக்காயர் (வ. வி.)
7. செ. அ. ம. ஐதுறூஸ் மவுலானா
8. சா. லெ. கலந்தர்லெவ்வை மரைக்காயர்
9. உ. கலந்தர்லெவ்வை மரைக்காயர்
10. இ. மு. மீராலெவ்வை ஆசிரியர்

**செயலாளர் சபை (Working Committee)**

**தலைவர்கள்:-**
1 யூ. முகம்மது முஸ்தபா முதன் மரைக்காயர் (Ex S. P. M)
2. மீ. செய்து முகையதீன் கனிஷ்ட பாடசாலைத் தலைமையாசிரியர்

**காரியதரிசிகள்:-**
1. மீ. முகம்மதிப்றுகீம் ஆசிரியர்
2. கா. முகம்மதிப்றுகீம் சாய்பு

**பொக்கிஷாதிபர்கள்:-**
1. மு. அ. சாய்புத்தம்பி வ. வி.
2. சே. லெ. செயினுலாப்தீன் மௌலவி

**கணக்குப் பரிசோதகர்:-**
1. மீ. லெ. முகம்மதிப்றுகீம் கி. த. 2ம் குறிச்சி
2. ஆ. சிக்கந்தர் பி. உ.

**நிருவாகசபை அங்கத்தவர்கள்:-**

| | | | |
|---|---|---|---|
| மு. மீ. முகம்மதுக்காசீம் கி. த. 1ம் குறிச்சி | | சா லெ. ம. சலங்குருவுத்தர் | மரைக்காயர் |
| க. மீராலெவ்வை | மரைக்காயர் | க முகம்மதிஸ்மாயில் | ,, |
| த. போ அகமதுலெவ்வை | ,, | இ. ப அகமதுலெவ்வை | ,, |
| மு. இஸ்மாலெப்பை | ,, | அ லெ ம. ஆதங்கண்டு | ,, |
| க. அகமதுலெவ்வை | ,, | உ. ம. ஆதம்லெவ்வை | ,, |
| க. அபூபக்கர் | ,, | மீ கு. அகமதுலெவ்வை | ,, |
| உ. ம. முகம்மதிஸ்மாயில் | ,, | இ. லெ. முகம்மதிஸ்மாயில் | ,, |
| மு. அ. அகமது முகையதீன் | ,, | அ. லெ. சேகுதாவூது | ,, |

ஆ. ம. சிக்கந்தர்

**பள்ளிவாசல் கடமைக்காரர்கள்**

கதீப். மு. மீ. முகம்மதிஸ்மாயில்லெவ்வை — கதீப். மு. ம. முகம்மதனிபாலெவ்வை
க. லெ. ஹயாத்துலெவ்வை முஅதீன் — அ. முகையதீன்வாவா அதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அங்கத்தவர்கள்.

அ லெ. முகம்மதுலெவ்வை ஆலிம்
மீ. லெ அப்துல் கபூர் ஆசிரியர்
ஆ. முகம்மதுக்காசீம் (V. C. க்ளாக்)
க. ப. மீராமுகையதீன் (V. C. மெம்பர்)
ஆ முகம்மதிஸ்மாயில் போடி
க. மு சிக்கந்தர்
S. M. D. அப்துல்லா சாகிப்
மீ. அலியார்
த. போ முகையதீன் வாவா
அ. ரூ. முகம்மதுக் காசீம்
ஆ. நெயினுக் கண்டு
ஆ. கலந்தர்
மீ. மீராசாகிபு
மு. செயினுலாப்தீன்
அ. யூசுப்புலெவ்வை
ஆ. கலந்தர்
க. லெ. நாகூர்
இ. நாகூர்
கா. அப்துல் மஜீத்
இ. போ. கலந்தர்லெவ்வை
மு. அ. கலந்தர் லெவ்வை
மீ. இப்றுகீம்
க. ரூ. அபூபக்கர்
இ. முகைதீன் கங்காணி
மு. அ. சரீபுத்தம்பி
சா. அகமதுலெவ்வை
மீ. முகைதீன்வாவா
அ. மு. முகம்மதுக்காசீம்
மு. கா. சீனிமுகம்மது
ஆ. முகம்மதிப்றுகீம்
ஆ. அப்துல் ஹமீது
ஆ. முகம்மதலியார்
அ. முகம்மதிப்றுகீம்
இ. லெ. ஆதங்கண்டு அதிகாரி
இ. கலந்தர் அதிகாரி
அ. ஆதம்வாவா
ச. ஆதங்கண்டு
சா. சுலைமாலெவ்வை
ப. கா. சுல்த்தான் கான்
சா. உமறுலெவ்வை
மு. கலந்தர் மேசன்
ஆ. அபூபக்கர் கங்காணி
மு. கா. முகம்மதிஸ்மாயில்
க. அபூபக்கர்
சா. முகம்மதிப்றுகீம்
செ. அ. ம. யாசீன்மௌலானு
இ. முகம்மதலியார்
மு. ஆதம்லெவ்வை
சி. மு. மீராலெவ்வை
ஆ இஸ்மான்குட்டி
அ. ஜமால்தீன்
மீ. லெ. நெயினுதைக்கண்டு
இ. முகம்மதலியார் ரெயிலர்
ஆ. இஸ்மாலெவ்வை
க. லெ. முகம்மதுலெவ்வை
மு. இ. மு. மக்கீம்
க. சேகிஸ்மாயீல்
அ. ம. கலந்தர்
இ. ப. சேகு முகைதீன் பரிகாரி
க. லெ. அப்துல்காதர்
அ. லெ. ஆதம்வாவா
மீ. அபூபக்கர்
சு. மு. மீராசாய்வு
சு. அகமது
ஆ. செயினுலாப்தீன்
அ. லெ. ம. நெயினுதைக்கண்டு
க. அபூபக்கர்
உ. சாகுல் ஹமீது ஓடாவி
மீ. முகம்மது சம்சுதீன்
சி. அப்துல்காதர்
மு. முகம்மதனிபா
மீ. அலியார்

மற்றும் ஏனைய பொத்துவில் முஸ்லீம் மக்கள் அனைவரும் இச் சபையோடு இணைக்கப்பட்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறவிடும் பணம் நெல் என்பவைகட்குப் பற்றுச்சீட்டு வழங்குவோர்.

| | | |
|---|---|---|
| 1. | ஆ. மீராலெவ்வை (Rtd. V. H.) முதன் மரைக்காயர் | கிராமத்துக்குள் |
| 2. | மு. அ. முகம்மதுலெவ்வை ([illegible] மரண விசாரணைகாரர்) | |
| 3. | மு. அ. சாய்வுத்தம்பி வ. வி. | விறேயின் துரைக் கண்டம் |
| 4. | சி. அ. ஆதம்வாவா | ஒறுட்டைக் ,, |
| 5. | க. ரு. கலந்தர்லெவ்வை வ வி. | பாலாந்தி வட்டை ,, |
| 6. | சா. லெ. ம. முகம்மதிஸ்மாயில் | செங்காமம் ,, ,, |
| 7. | அ. லெ. ஆதங்கண்டு வ. வி. | வட்டி ஆத்தமுனைக் ,, |
| 8. | மீ. முகம்மதிஸ்மாயில் வ. வி. | இலுக்குச் சேனைக் ,, |
| 9. | ம. மீராலெவ்வை வ. வி. | கள்ளியாப்பத்தை இலுக்குச்சேனைக் கண்டம் |
| 10. | க. முகைதீன்வாவா வ. வி. | நாவுலக் கண்டம் |
| 11. | அ. லெ. பக்கீர் முகைதீன் | கருங்கோவைக் கண்டம் |
| 12. | மீ. லெ. நெயிந்தக்கண்டு | வராகன் வெளிக்கண்டம் |
| 13. | இ. கு. யூசுபுலெவ்வை | கட்டன் குடாக் கண்டம் |

## விசேஷ குறிப்புகள்:-

1. 1954ம் ஆண்டு சித்திரைமாதம் தொடக்கம் பள்ளிவாசல் கட்டுவதற்காக வரி அறவிடுதல் ஆரம்பமாகும். வரிகொடுப்போர் இச்சபையாரால் அங்கீகாரம் பெற்று அச்சிடப்பட்டு வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்களைத் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு தங்களைப் பணிவாய்க் கேட்டுக்கொள்கின்றோம்.

2. ஒவ்வொருவருக்கும் எவ்வளவு வரி விதிக்கப்படவேண்டும் என்பதைப்பட்டு ஆலோசிக்க [illegible]-4-54 [illegible] பிற்பகல் 2 மணிக்கு பள்ளிவாசல் மண்டபத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்துக்குச் சமுகமளிக்கவும் அக்கூட்டத்தின்போது விதிக்கப்படும் வரிகளைக் கொடுக்கவும் தவறாதீர்கள்.

3. இச்சபை காலக்கிரமத்தில் சென்றகால வரவு செலவுக் கணக்குகளைப் பார்வையிடுவதில் ஈடுபடுவதோடு புரியும் ஒவ்வொருபணியும் பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும்.

**முஸ்லீம் சகோதர சகோதரிகளே!**

நமது நீண்ட நாட்கனவை நனவாக்க முன்வந்திருக்கும் இச்சபையினருக்குப் போதிய அன்பும் ஆதரவும் அளிப்பதுடன் உங்களாலானமட்டும் சரீர உதவியும் பணஉதவியும் புரிந்து ஒத்துழைக்க முன்வரும்படி அன்பாய் வேண்டுகின்றோம்.

**எழுமின்!** **விழிமின்!**

**கருதிய கருமம் கைகூடும்வரை உழைமின்!!**

**ஆமீன்**

**மீ. முகம்மது இப்ருகீம் ஆசிரியர்.**
காரியதரிசி.

அர்ச். செபஸ்தியார் அச்சியந்திரசாலை, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. கி.பி. 1954 - பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாயல் நிர்மாணம் ஆரம்பமும் மாற்றங்களும்.



1954, 55ஆம் ஆண்டுகளில் பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாயல் நிர்மாணிக்கப்பட்டு வரும் தோற்றம்.



1970ஆம் ஆண்டில் பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாயலின் முன் தோற்றம்.



1980களின் ஆரம்பங்களில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் மணமகன் பள்ளிவாயல் உண்டியலில் காணிக்கையை செலுத்திவிட்டு வலம் வரும் நிகழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990 களில் பள்ளிவாயலின் உட்புற, வெளிப் புறத் தோற்றங்கள்.



இஸ்லாமிய கட்டடக் கலையின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையிலான பள்ளிவாயல் மினாராக்களின் தோற்றம்.



இஸ்லாமிய கட்டடக் கலையின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையிலான பள்ளிவாயல் - முன் வாயல் தோற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிம்பர் - பிரசங்க மேடை



பேஷ்இமாம் தொழுவிக்கும் பகுதி

2002ஆம் ஆண்டில் பள்ளிவாயலின் முகப்புத் தோற்றம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014 பள்ளிவாயல் இடிக்கப் படலும் புதிய நிர்மாணமும்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. கி.பி. 1954 - விவசாயமும் விருதும்.


DEPARTMENT OF AGRICULTURE

AGRICULTURAL COMPETITIONS

This is to certify that

Mr.M.M.Ibrahim of Pottuvil has been awarded

the First Prize in the Paddy general competition held at

Pottuvil range in the Batticaloa district during Maha

19 53-54

Agricultural Officer, Eastern Division

Director of Agriculture.

Date: 3rd August, 1954.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. கி.பி. 1954 - வாழ்த்து மடல்.

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் நிகழும் ஹிஜ்ரி 1374 [illegible] பிறை 26ந் தாசவீ 1954ம் புரட்டாதி மாதம் 24ந் திகதி ஸ்ரீமான் செ.அ.ம. அப்துல்றசாக் மௌலானா காதி (J.P) அவர்களின் அருமைப் புதல்வர்களும் பேரர்களுமான

செ.அ.ம. அப்துல் காதர்—
செ.அ.ம. கலீல்...
ஷெ.மு. அப்துல் அசீசு—
ஷெ.மு. முகம்மது அக்கீல்
ஆ.லெ. முகம்மதுக்காசீம்

என்பாரின் மன்னாத்துக் கலியாண ஊர்வலத்தின் போது பொத்துவில் பிஸ்கால் உடையார் ஆதம் வாவா சிக்கந்தர் அவர்களின் சிரேஷ்ட புத்திரன் சி. அப்துல்காதர் - ஆசிரியர் - அவர்களால் அன்புடன் வாசித்தளித்த

# உபசாரப்பத்திரம்!

(வெண்பா)

பொன்னின் கதிராடும் 'பொத்துவில்' பேரூண்—
மண்ணின் பெருஞ் செல்வன் மௌலானா - அன்னவேயுஞ்
செல்வப் புதல்வரையுஞ் சேர்த்துப் புகழ்பாடும்
நல் வையவு மேற்ற நாள்! (தொடர்)

இலங்கா தேவியின் எழில்லா நகராய்
விளங்கும் மட்டக்களப்பின் தெற்கே
தூர எல்லையின் தொங்கும் ஆற்றுகள்
[illegible] மன்னவாய் இயற்றத்து [illegible]
நீரையும் வாத்தும் நறை மலர் [illegible]
தேறல் வெள்ளம் தெரு [illegible] பாயும்
ஊரின் மூலையில் இருவ[illegible] விளங்கும்
பொன்னின் பூமியாம் பொத்துவில் தாயின்
கண்ணின் மணிபோல் கதி[illegible]ஒளியேன்,
விண்ணின் மதிபோல் விளங்கும் காதியார்;
அண்ணலே! செய்யதலவி மௌலானா!!
வள்ளலே, எம்மூர் வளம் பெற வைத்த
தூய்மிய ஒளிசேர் அரு[illegible]வெள்ளியே!
பள்ளிவாயு[illegible]
அள்ளிவள[illegible] !!
கட்டித்தந்[illegible]
[illegible] சேவை[illegible] உயர்ந்து
சட்டம் [illegible] தவான்
பட்டம் பெற்ற ப[illegible] கோவே!
பசித்த மக்களும் புசித்து வாழக்
கமத்தொழிற் சங்கம் கருத்தோடமைத்து
உணவு விருத்திக்குதவிகள் செய்து
ஊரவாம் வாழ ஒப்பிலாச் சேவை
சீராய்ச் செய்தமை செப்பிடத் தரமோ; அத்தோடு
மார்க்கம் தழைக்க, மணவிழா கடவே,
ஆக்கம் வேண்டி ஆண்டவன் பள்ளி-
வாசலொன்றை வடிவாய்க் கட்ட—
சோராதுழைக்கும் சுந்தர வதன!
எங்கள் தலைவா! இஸ்லாம் மதத்தை
பேணுங் கொழும்புப் பெருங் கல்லூரியாம்
'சாஹிறா' வாழச் சந்தாக் கொடையை
வருடா வருடம் வாரி வழங்கும்
அருமைத் தலைவா! அல்லாவின் நாமம்
கணமும் மறவாக் கற்பக தருவே!
அன்று; ஊரில் உணவுக்கட்டுப்பாடு .......
போரின் கொடுமையால் போந்த போழ்து
கோர வறுமையில் குடிகளாக்காக்க ....
ஐக்கிய பண்டக சாலையை அமைக்கும்
முக்கிய சேவையில் முன்னின்று உழைத்த
முஸ்லிம் தலைவா! முதுபெருங் குரவா!!
உந்தன் சிந்தையெல்லாம் செல்வம் பொங்க
ஆயுள் கணத்து ஆல் போல் தழைத்து

அருகு வேரூன்றி ஆயிரங் காலம்
வாழ வேண்டி வாழ்த்துறேம். மேலும்
எங்கள் தலைவா! ஏற்றிய பெரும்
உங்கள் புத்திரர் உன்னத குறுவின்
சங்கைக்குரிய சமயச் சார்பிலே
'வாஜிபு' எடுக்கும் வளம் மிகு நாளிலே
அன்னவர் வாழ்வின் ஆக்கம் வேண்டி
சொன்ன வாசகம் இன்னமும் [illegible]
தங்கக் கிளிகாள்! தாமரைப் பூக்க[illegible]
மங்காப் பெருந்தகை மக்காள்!!! [illegible]
உங்கள் தந்தையின் உயர்ந்த ம[illegible]
பேரைப் புகழைப் பேணிக் கா[illegible]
ஊரைப் புகழின் உச்சியில் வை[illegible]
ஆரும் மதிக்கும் அருங் குலச்சுடர்க[illegible]
என்றவர் எத்தவம் இயற்றினர் என[illegible]
கண்டவரெல்லாம் கட்டுரை கூ[illegible]
கல்வி கேள்வியில் வைபாண்டித்தியம்
தோமயந்தியில் தேடிப் பெற்று...
வாழை ஈன்ற வன்ன அடிகளாய் .....
நாவொரு வண்ணமும் பொழுதொரு மேனியும்
ஆரும் மதிப்பும் அருங்கலைக் கதிப்பும்
வேகா ஞானமும் வேத மோதலும்..
இம்மியுங் குறை இல்லாதிய மக்களாய்
அம்மா ஈன்ற அன்றைய இன்பம்
என்றும் பெற்று இதயம் குளிர...
நன்றே புரிந்து நல்ல பேர் வாங்கி
இஸ்லாம் மதத்தின் இருபெரும் தூண்களாய்
ஈடிணை இல்லா இரத்தின மணிகளாய்
வீடு சிறக்கும் விளக்குச் சுடர்களாய்
நாடு மதிக்கும் நல் முஸ்லிம்களாய்
அண்டியோர் போற்றும் அன்புத் தாய்ப்[illegible]
கொண்டு உங்கள் குலப்புகழ் நாட்டி
கண்டவை கற்றுப் பண்டிதராகி......
தண்டம் புரியாய்த் தரும சீலராய்..
ஊழில் வாழி உயிரும் சதையுமாய்
வாழி, வாழி, வளம் பல பெற்றே...
அல்லா வாழ அருள்க தம்
சுபம்!
இங்ஙனம்
அன்பு நிறைந்த
[signature]

எஸ். ஏ. காதர்
(ஆசிரியன்)
பிஸ் கால் கந்தோர்
பொத்துவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. கி.பி. 1954 - பொத்துவில் இரண்டாம் குறிச்சி கிராம முன்னேற்றச் சங்கம்.

---

கிராம முன்னேற்றச் சங்கம்
2ம் குறிச்சி
பொத்துவில்.

......5....10....1954.

K. R. கலந்தர்லெவ்வை
கௌரவ தலைவர்.

M. M. இப்ருகிம்
கௌரவ காரியதரிசி.

### விளம்பரம்

1955ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் தொகுதிவாரியாக கிராம முன்னேற்றச் சங்கம் பண உதவி பெற்று, சமுதாயப் பணிகள் [illegible] கட்ட விரும்புவர்களிடமிருந்து விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அங்கத்தவர்கள் அல்லாதவர்களிடமிருந்தும், சங்கத்துக்கு சந்தாப்பணம் கட்டாதவர்களிடமிருந்தும் [illegible] விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கிணறுகள், கக்கூசுகள் கட்டுதற்கு பண உதவி கோரி அனுப்பப்படும் விண்ணப்பப் பத்திரங்கள் இம்மாதம் 15ந் திகதி (15.10.54)க்கு முன், 'கிராமமுன்னேற்றச் சங்கக் காரியதரிசி, இரண்டாம் குறிச்சி, பொத்துவில்' என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின் [illegible] விண்ணப்பப் பத்திரங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அன்றியும் மேற்படி சங்கக் [illegible] அங்கீகரிக்கப்பட்ட அங்கத்தவர்கட்கு மட்டுமே பண உதவி அளிக்கப்படும்.

Secy. R.D.S. 2nd

கி.பி. 1946 இல் DRO நிருவாக முறைமை ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஒவ்வொரு DRO பிரதேசமும் ஒரு RDO (கிராம முன்னேற்ற அலுவலர்) வைக் கொண்டிருந்தது. பொத்துவில் DRO பிரதேசமானது 1ம், 2ம், 3ம் குறிச்சிப் பகுதிகளுக்கு தலா ஒவ்வொரு RDS (கிராம முன்னேற்ற சங்கம்) இனைக் கொண்டிருந்தது. இவை தத்தமது பகுதிகளில் கிணறுகள், வாசிகசாலை வசதிகள், கூட்ட மண்டபங்கள் போன்ற மக்களது அத்தியவசிய தேவைகளை நிறைவேற்றும் பணிகளைக் கொண்டிருந்தன. இந்த வகையில் முதலாம் குறிச்சி RDS தலைவராக YM. முஸ்தபா (அக்கிராசனர்) அவர்களும், 2ம் குறிச்சி RDS தலைவராக KR கலந்தர் லெவ்வை மரைக்காயர் அவர்களும், 3ம் குறிச்சி RDS தலைவராக AI தனபால சிங்கம் அவர்களும் இக்காலப்பகுதியில் பதவிவகித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொத்துவில் [illegible] கிராம முன்னேற்றச் சங்கம்.

இலங்கை கிராமாபிவிருத்தி இயக்க அதிபதி திரு. D. J. டயரத்ன, அவர்கள் மேற்படி சங்க ஸ்தாபனத்தைத் தரிசித்த போது நடந்த பொதுக் கூட்டத்தில் வாசித்த சங்க அறிக்கைப் பத்திரம்.

கௌரவ தலைவர் அவர்களே, கிராமாபிவிருத்தி அதிபதி அவர்களே, ஏனைய பிரமுகர்களே வணக்கம்.

எங்கள் ஏழைக் கிராமத்தின் நல்லபிவிருத்தியை முன்னிட்டு எங்கள் சங்கத்தைத் தரிசிக்க கிராமாபிவிருத்தி இயக்க அதிபதியவர்களே, ஏனைய பெரியோர்களே, உங்களை நல் வரவேற்கிறோம். உங்கள் வரவு நல்வரவாகுக. எங்கள் கிராமத்தின் பெயரில் நல்லெண்ணம் கொண்டு இவ்விடம் தங்களை வாழ்த்தி நன்றி கூறுகின்றோம்.

1949ம் ஆண்டு வைகாசி மாதம் 27ந் திகதி இச்சங்கம் ஆரம்பமாகி 4½ வருடங்களாக நடந்து வருகிறது. ஆரம்பத்தில் இச்சங்கத்தின் கௌரவ தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாப் மு.மு. அலாந்தர் லெவ்வை மரைக்கார் அவர்களே இன்றும் தலைவராக இருந்து வருகிறார்கள். அவ்வேளை ஆரம்பத்தில் ஜனாப் மு.ம. மொஹம்மது இஸ்மாயில் லெவ்வை அவர்கள் கௌரவ காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

-- ல் ஜனாப் சா.ம.மெ கிறாஸ் மொஹம்மது அவர்கள் கௌரவ காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். ... ல் இக்கிராமத்திலுள்ள இவ்வூர் அரசினர் ஆண்பாடசாலை ஆங்கில ஆசிரியரும், உதவியாளருமான ஜனாப் ஏ.எம். இப்றாகீம் அவர்கள் கௌரவ காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். இக்கிராம முன்னேற்றச் சங்கத்தின் வளர்ச்சிக்கு இப் பல இடையூறுகள் நேர்ந்து வந்திருப்பினும் அங்கத்தவர்கள் மிக மிகத் திறமையுடன் கொண்டிருந்து கிராமாபிவிருத்தி வேலைகளைத் தங்களால் இயன்றளவு திருப்தியாகச் செய்து வெற்றியுடன் நடந்து வருகிறது என்பதைக் கூறிப் பெருமைப்படுகின்றோம். இச்சங்கத்தின் சார்பில் ஓர் பஞ்சாயத்தார் சபையும், ஓர் கிராமத் தொண்டர் படையும் ஏற்படுத்தப் பெற்று இயங்கி வருவது சிறப்பாக உதவக்கூடியதாகக் கடமையாற்றி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்க விஷயங்களாகும்.

கௌரவ காரிய தரிசி ஜனாப் இப்றாகீம் அவர்களின் பெருமுயற்சியினால் சங்கத்தின் அங்கத்தவர் தொகை கூடியுள்ளதைத் தெரிவிப்பதும் ஓர் சிறு ஆசையாகும். இச்சங்கம் சுகாதாரம், கல்வி, கமவளர்ச்சி, கைத்தொழில், விவசாயம், கூட்டுறவு, வீட்டுத் தோட்டம், தொழிற்பண்ணை என்பவற்றில் நன்கு உதவக் கூடிய கிராமாபிவிருத்தி வேலைகளில் ஓரளவு திருப்தியடைந்திருக்கிறது என்பதை அறிவிக்க மகிழ்வாகிறது.

கிராமத்தவர்களின் நன்முயற்சியினால் அரசினர் கலவன் பாடசாலையும் அரசினர் ஆண்கள் பாடசாலையும் வகுப்புக்களும் மரியாதையாகச் செய்து கல்வி முன்னேற்ற பல வழிவகைகளைச் செய்திருக்கின்றது.

சுகாதார சம்பந்தமாக இக்கிராமத்தில் நூர் வாசிக வேலைகளைப் பல இடங்களிலேயுள்ள நல்ல கிணறுகள், மலசலகூடங்கள் என்பன மற்றும் பொது சனங்களின் ஆதரவுடன் கொண்டும், பாவிக்கும் வழிவகை செய்துள்ளோம். சென்ற வருடத்தில் சிறு முயற்சியுடனும் அரசாங்க நன்கொடையுடனும் 25 மலகூடங்களும் 7 கிணறுகளும் அங்கத்தவர் கூடி நிர்மாணிக்கப் பெற்றுக் கொடுக்கப் பெற்றன. இவ்வருடத்தில் எங்கள் சங்கம் 8 மலகூடங்களும் 8 கிணறுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மாணிக்க வசதி செய்து கொண்டிருக்கிறது. இக்கிராமத்தவர்கள் மிக மிக ஏழைகளாயிருப்பதினால் மலசலகூடம், கிணறு என்பவற்றிற்காக வந்து சேரும் ஏராளமான விண்ணப்பங்களை கவனிக்க வழிவகை செய்து தர அரசாங்கம் முன்வர வேண்டுமென எதிர்பார்க்கிறோம். அன்றியும் இக்கிராமம் கடல் மட்டத்திலிருந்து மிக மிக உயரமாயும் கற்பாறையுடையதாயுமிருப்பதினால் கிணறுகளையோ மலசலகூடங்களையோ அமைப்பதற்குப் பெருந்தொகையான பணம் தேவைப்படுகிறபடியால் அரசாங்க மானியம் பெற்றுத்தருவது மிக மிகத் தேவை என்று குறிப்பிட வேண்டியிருக்கிறது. சமய வளர்ச்சிக்காக இச் சங்கத்தின் சார்பில் "ஜமாலியா மதரசா" என்ற பெயரால் ஓர் 'அரபு' பாடசாலை நடத்தப்படுகிறது. அடுத்தது சமய போதனைகளும், பிரசங்கங்களும் இச் சங்கச் சார்பில் நடக்கின்றன. இடைநிலைக் கல்வி விருத்தி சம்பந்தமாகப் பெரு முயற்சி செய்கிறோம். மட்டப் பாடசாலை, பெண்கள் பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றில் பயிற்சி பெற இக்கிராமத்தில் வசதியாயிருப்பதற்கான காரணத்தைச் சங்கம் நன்கு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதற்கமைய ... ல் பயிற்சி பெறும் எங்கள் ஏழைகட்கு தேவையான வசதிகளுக்கு ... மான பொருளுதவி கிடைக்காதவரை நாம் நன்கு பெற முடியாதிருக்கின்றோம். தொழில் கல்வி புதிதுயிர் பெற வேண்டுமெனில் தொழிற்பயிற்சி பெறுவோர்க்கு ஊக்கத்தை செலுத்தக்கூடிய பணம் பெற வேண்டும். இவைப்பற்றி எங்கள் சங்கம் விசாரித்ததில் நன்கு விளங்கும் விருத்தி வகுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. புதியவர்களுக்கு அங்கத்தவர் கூட்டு L.D.O.வு மிகவும் சங்கமும் எடுத்ததில் பயிற்சியிலும் உற்சாகமளிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை நமக்கு L.D.O. மூலம் ஏதும் கிடைக்கவும் இச்சங்கம் முயற்சிப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுவது தேவையல்ல.

முதன்மையான விஷயமாக இவ்விதத்து சங்க வரலாறு பொன் இந்த எங்கள் கட்டிடத்தை வாங்கி 'ஜமாலியா மதரசா' என்ற பெயரோடு அரபிப் பாடசாலையை நடத்தியது என்று முன்னர் குறிப்பிட்டிருந்தோம். இதை ஆரம்பித்த சங்கம் எங்கள் கிராமமுன்னேற்றச் சங்கத்தையும், சமயசங்க வாசிகசாலையும் நிறுவிக்காக நடைபெற அனுமதித்து இக்கட்டிடத்தை உதவியிருக்கிறது. இக்கட்டிட வளவில் ஓர் கிணறும் இலவசமாகக் கட்டித்தந்த எங்களூர் கிராமச் சங்கத்திற்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வது கடமையாகும்.

இப்படியாக எங்கள் ஏழைக் கிராமம் வளர்ச்சியுற்றுக் கொண்டிருக்கும் போது இப்பகுதி R.D.O ஆக இருந்த திரு. R.A. மொறைஸ் அவர்கள் இக்கிராமத்தவரோடு நன்கு உறவாடி அங்கத்தவர்களின் உதவியோடு பல முன்னேற்ற வேலைகள் திட்டமாகச் செய்து கொள்ள எத்தனித்ததைக் காரணமாக இச்சங்கம் அன்னாருக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

கனம் தங்கிய கிராமாபிவிருத்தி அதிபதியவர்களே! எங்கள் கிராமம் முன்னேற வேண்டிய கிராமம் என்பதை நீங்கள் இதுவரை அறிந்து கொள்ளாமலிருக்கமாட்டீர்களென்று நம்புகிறோம். இங்கு அத்தியாவசியமான அபிவிருத்திகளைப் பின்னும் குறிப்பிட்ட வரைமுறைச் செய்து நிறைவேற்ற உதவி புரியும்படி தயவாய்க் கேட்டுக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நிர்மாண வேலைகளுக்காக அரசினால் அளிக்கப்படும் உதவி நன்கொடையை 75% மாக உயர்த்துதல்

2. சொந்த வீடுகளையும், L.D.O ஒப்பந்த வீடுகளையும் திருத்தியமைப்பதற்காக நன்கொடைப் பணங்களை நல்கல்.

3. L.D.O ஒப்பந்தப் பூமிகளிலும் வீடு, கிணறு, மலகூடம் என்பன நிர்மாணிக்கவும் இச்சங்கமூலம் உதவிபுரிய வழிவகை செய்து தருவதோடு நன்கொடையும் கிடைக்க வழிவகை செய்தல்

4. வறுமையினால் [illegible] கைத்தொழில் நிலையங்களில் கிராமத்தவர் [illegible] பயிற்சி பெறுவோருக்குச் சீவனச் செலவுத் திட்டங்களைப் பணம் தருதல்

5. அயற்புறங்களில் தூர்ந்து கிடக்கும் சிறு குளங்களைத் திருத்தியமைக்கவும், அதின் சுற்றுப்புறப் பூமிகளைத் திருத்தி விவசாயத் திட்டம் செய்யவும் இச்சங்கமூலம் வசதியளித்து உதவி புரிதல். இதனால் கிடைக்கும் உணவும் ஏழைகளின் நோய், விவாகம் மரணம் என்பனவற்றிற்கு செலவு உதவிபுரியும்.

இச்சங்கத்தின் முன்னேற்றத் திட்டத்தை அங்கத்தவர் கேட்கும். பாணமைப் பகுதி A.R.D [illegible] எங்களின் [illegible] உரித்தாகுக.

இப்படிக்கு.

பொத்துவில் [illegible] சங்கம்



**சித்தாயுர்வேத** வைத்தியப் பரம்பரையில் ஆதம் போடி இப்றாலெவ்வை பரிகாரியின் புதல்வராக அக்கரைப்பற்றில் பிறந்தவர் **பள்ளித்தம்பி பரிகாரி** எனும் **சேகு முகையதீன் வைத்தியர்** அவர்கள். பொத்துவிலில் அப்துல் றஸாக் மௌலானாவின் இரண்டாவது புதல்வியை மணமுடித்து தான் இறக்கும் வரை பொத்துவில் மண்ணையே வசிப்பிடமாகக் கொண்டிருந்தவர். மிகச் சிறந்த நாட்டு வைத்தியரான இவர் இலக்கியத் துறையிலும் பாண்டித்தியம் பெற்றவர். சிறந்த இயற் புலவராகவும், பாடகராகவும் ஆர்மோனியம், மோர்சங்கு, புல்லாங்குழல், மௌத் வோக்கன் போன்ற இசைக் கருவிகளை வாசிப்பதில் கைதேர்ந்தவராகவும் விளங்கியவர். 1950களில் கத்னா வைபவ வீடுகளில் ஜெயவர்த்தனா, பாரிசாதம் மாஸ்டர், டோலக் அகமது என்போருடன் இவர் இணைந்து வழங்கிய பஜனை நிகழ்வுகளும் அதில் இவரால் பாடப்பட்டு வந்த ஓஹோ... வெண்ணிலா என்ற பாடலும் மிகவும் பிரசித்தம் பெற்றது. இலக்கியம் மட்டுமல்லாது சீனடி, சிலம்பம் போன்ற கலைகளிலும் இவர் வித்தகராக விளங்கியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(Copy to be issued to the person who entered Dappu immediately it is furnished.)*
(கையொப்பமிட்டவுடன் சொந்தக்காரனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய டாப்புப் பிரதி.

**No. 24333** 1917ம் ஆண்டின் 45ம் நொம்பர் நீர்ப்பாய்ச்சல் கட்டளைச்சட்டத்தின் 19ம் நொம்பர் பிரிவின்கீழ் கீழ்மாகாணத்துக்கென்று நியமிக்கப்பட்ட பிரமாணங்களின் 9ம் நொம்பர் பிரமாணப்படி செய்யப்பட்ட இடாப்பு.

**DAPPU** prepared in accordance with Rule 9 of the Rules Proclaimed for the Eastern Province under Section 19 of "The Irrigation Ordinance, No. 45 of 1917".

(1) Irrigation Scheme ... நீர்ப்பாய்ச்சல் பகுதி
பாணமை

(2) Vaddai ... வட்டை [illegible]

(3) Harvest ... போக வேளாண்மை
முன் போகம்.

(4) Field ... வயல்

(5) Acreage to be cultivated செய்கைபண்ணப்படும் பூமியின் ஏக்கர் 3

(6) Name of Proprietor as appearing in specificaion சொந்தக்காரரின் பெயர் நீர்வரி டாப்பில் உள்ளபடி
பி. முகையதீன் பிச்சை

(7) Lessee ... குத்தகைக்காரன்

(8) Mullaikaran ... முல்லைக்காரன்

(9) Lot number and specification number ... கண்டத்தின் இலக்கமும் நீர்வரி டாப்பு இலக்கமும்

(10) Cultivators செய்கைக்காரர்
பி. முகையதீன் பிச்சை

(11) Agreement for land share அடை ஆயப் பொருத்தனை

[12] Agreement touching hire or wages of cultivators and others.
செய்கைக்காரர் முதலியவர்களின் கூலிப் பொருத்தனை [illegible handwriting]

[13] Signature of parties named in 6, 7, 8,
6, 7, 8, இந்தப் பிரிவிலுள்ளவர்களுடைய கையொப்பம்.

[6] பி. முகையதீன் பிச்சை

[7]

[8]

Fatima Printers, Batticaloa. 6.10.54

Witnesses to signature or marks in column 13.
13ம் கோட்டிலிருக்கப்பட்ட கையொப்பங்களுக்காக அல்லது அடையாளங்களுக்காக சாட்சிகள்:

*Vaddai Vidane.*
வட்டைவிதானை.
[illegible signature]

Examined and found Correct in accordance with rules.
பிரமாணங்களின்படி சரியென்று காணப்பட்டிருக்கின்றது.

[1] [illegible]

[2] [illegible]

Received by me from — *Mullaikaran* — *Cultivation Officer.*
என்னால்பெற்றுக்கொள்ளப்பட்டது. முல்லைக்காரன். வேளாண்மைச்செய்கை உத்தியோகஸ்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J. N. B 39401—500 (10/54). GOVT. PRESS, CEYLON. G. A. M. 178 (E. & T.)
(F 2) 6/49

No. RA/VH8

By Allan Basil Samuel Nesarajah Pullenayegum Esqr. C.C.S.

Government Agent for the Eastern Province.

To Mr. Meeralebbai Mohamed Ibrahim of Pottuvil Div. 2

In accordance with the provisions of Section 2 of the Criminal Procedure Code, I do hereby appoint you to perform Police duties within Pottuvil Division No. 2 while holding the office of Village Headman.

A. B. S. N. Pullenayegum
Government Agent, E.P.

Date: 14th May 1955

இல. RA/VH8

கிழ் மாகாண அதிபதியாகிய அலன்பசில்சாமுவெல்நேசராஜாபுள்ளைநாயகம் ஆல்.

பொத்துவில் 2ம் பிரிவிலுள்ள மீராலெவ்வை முகம்மது இப்றாஹீமுக்கு

பொத்துவில் 2ம் பிரிவில் கிராமத் தலைமைக்காரனுகப் பதவி வகிக்கும்போது பொலிஸ் கடமைகளையும் ஆற்றும்படி கிறிமினல் வியவகாரமுறைச் சட்டத்தின், 2ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நான் உம்மை இத்தால் நியமிக்கின்றேன்.

A. B. S. N. Pullenayegum
கிழ் மாகாண அதிபதி.

திகதி: 14ம் வைகாசி 1955



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையார் பரம்பரை என்று பெயரெடுத்த ஒரு குடும்பத்தில் கிராமத் தலைமைக் காரராக நியமனம் பெற்றவரே நியமனக் கடிதத்தில் காட்டப்பட்டுள்ள முகம்மது இப்றாஹீம் என்பவராவார். இவரது தந்தை மீராலெவ்வை என்பவர் பொலிஸ் தலைமையாகவும் பின்னர் கிராமத் தலைமைக் காரராகவும் கடமை பார்த்தவர். இவரது சிறிய தந்தையும், பாட்டனாரான ஆதங்கண்டு வட்டானை என்பவரும் பதில் பொலிஸ் தலைமைகளாக கடமைபுரிந்துள்ளனர். இந்தவகையில் முகம்மது இப்றாஹீம் அவர்களின் புதல்வர்களான அப்துல் ஜப்பார் மற்றும் முகம்மது சம்சுதீன் என்போர்களும் கூட கிராம சேவையாளர்களாகவும் கிராம நிலதாரியாகவும் கடமை புரிந்துள்ளனர் என்பது சுவாரசியமான விடயமேயாகும்.

---

**பொத்துவில் நாட்டார் பாடல்கள்**

சீனட்டி நெல்லும்
செல்ல இறாலாணமும்
பொத்துவிலூரும்
பொருந்தினதோ வன்னிமைக்கி.

எல்லாக் கிளிக்கும்
றெத்தல்ல வெள்ளாம
என்ட பறக்கும் கிளிக்கு
இந்த பாழுழுந்த ஆத்திமன

கட்டங் குடாவுல
கட்டி வந்த நாம்பனுக்கு
புல் அறுத்துப் போட
ஒங்களுக்கு ஏலுமாமோ

றொட்டய கட்டு நோனாவுக்கு
தவ்வால் வெருமளவும்
நோனா - தண்ணீரில்லை
என்டாவாமோ

நாவலூரு நாலு கட்ட
நடுவ மயிலானோட
மயிலானோட கொப்புல
என்ட மயிலிருந்து கூவுதுகா

இருந்திரட்டோ இருந்திரட்டோ
இனிச் செறகு கட்டிரெட்டோ
பறந்து கொண்டுழுந்திரட்டோ
இந்த பாணகையால் வாசலில

ஒத்த கரத்த வண்டி
ஒரு கால் முறிஞ்ச வண்டி
பட்டம் கழண்ட வண்டி
இப்ப பாணகைக்கு போகுதாக்கும்

பாணக ஊரிருந்து
பறந்து வரும் நங்கணங்காள்
பாலன்ட வாப்பாட
பாடு சுகம் எப்பிடியோ

கொண்டலடிச்சி
கொளம் கலங்கி போனது போல
எந்தன் பாவ கலங்கி
இப்ப பைத்தியமுமானதென்ன

கோடைக்கு கொச்சி நாட்டி
குளுந்த தண்ணி நானூத்தி
மாரிக்குச் செத்த
மனக் கவல மாறுதில்ல

சம்பு வெளியில்
சாய்வுர காணியில
வெள்ளி அரிஞ்சி - சும்மா
வெளியெறங்கிப் போகுதாக்கும்

கோட மழ பேஞ்சி
குடிலொழுகி பாய் நலஞ்சி
ராவு பட்ட பாட்ட - என்ட
நாயன் தான் அறிவான்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. கி.பி. 1955 - பற்றுச் சீட்டுக்கள்.



497 பற்றுச் சீட்டு.

பாணமைப்பற்று ஐக்கிய கிருஷிக பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம். பொத்துவில். E. D. 261 28-2-48.

1. பற்றுச் சீட்டு இலக்கம்
2. அங்கத்தவர் இலக்கம் } 44
3. பணம் கொடுப்பவரின் பெயரும் விலாசமும்
4. பணம் எதற்காகப் பற்றிக்கொண்டது
5. பற்றிக்கொண்ட தொகை — ரூ. ச. முதல் வட்டி மொத்தம்
6. திகதி } 3/1/57
7. பணம் வாங்கியவரின் ஒப்பமும் பதவியும்

தலைவர் / காரியதரிசி

1935 இல் சிக்கன சேமிப்பு நிறுவனமாக, அங்கத்தவர்களுக்கு விவசாயம், வியாபாரம் போன்ற தேவைகளுக்காக கடன் வசதிகளை வழங்கவும், உற்பத்தி, விற்பனவு என்பவற்றுக்கு உதவவும் என பொத்துவிலில் அரசாங்க நியதிகளின் கீழ் ஏற்படுத்தப்பட்ட நிறுவனமே ஐக்கிய நாணய சங்கம் என்பதாகும். இதில் முக்கிய பதவி காரர்களாக இ.லெ. மீராலெவ்வை வாத்தியார், ஆ. முகம்மது காசிம் இலிகிதர், க.றா. கலந்தர் லெவ்வை மரைக்காயர், இ.லெ. மீராசாஹிபு போடியார் போன்றவர்கள் அங்கம் வகித்தனர். உறுப்பினர்களிடமிருந்து சந்தாப் பணம் அறவிடப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னர் கூட்டுறவு நிறுவன விதி முறைகளின் கீழ் பாணமைப்பற்று ஐக்கிய கிருஷிக பொருள் உற்பத்தி விற்பனவு சங்கம் அல்லது பாணமைப்பற்று கூட்டுறவு விவசாய பொருள் உற்பத்தி விற்பனவு சங்கமானது ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைவராக பதவி வழியாக DRO அவர்களும் உப தலைவராக அப்துல் றசாக் மௌலானா அவர்களும் செயலாளராக முகம்மது இப்றாஹிம் விதானை அவர்களும் பொருளாளராக கதிர்காமத்தம்பி முதலாளி அவர்களும் முகாமையாளராக கலுங்குராவுத்தர் அவர்களும் விளங்கினர்.



பற்றுச் சீட்டு. 2908

பாணமைப்பற்று கூட்டுறவு விவசாய பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம், பொத்துவில் E. D. 261 28-2-48.

1. அங்கத்தவர் இலக்கம் } 44
2. பணம் கொடுப்பவரின் பெயரும் விலாசமும்
3. பணம் எதற்காகப் பற்றிக்கொண்டது
4. பற்றிக்கொண்ட தொகை — ரூ. ச. முதல் வட்டி மொத்தம் 137
5. திகதி } 6/7/55
6. பணம் வாங்கியவரின் ஒப்பமும் பதவியும்

தலைவர் / காரியதரிசி / மனேஜர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. கி.பி. 1955 - திருமண அழைப்பிதழ்.

# திருமண அழைப்பு

ஸ்ரீமான் / ஸ்ரீமதி.................................................................................. அவர்கட்கு
அன்புடையீர் !

நிகழும் ஹிஜ்ரி 1374ம் ஹு துல்ஹஜ்ஜி மீ° பிறை 23, (11-8-55) வெள்ளிக் கிழமை இரவு 10 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில்

| எங்கள் சிரேஷ்ட புத்திரன்<br>திருவளர்ச் செல்வன்<br>M. M. **இப்ராஹிம்** அவர்கட்கும்<br>(ஆங்கில ஆசிரியர்) | எங்கள் கனிஷ்ட புத்திரி<br>திருநிறைச் செல்வி<br>S. A. M. **தக்வா** அவர்கட்கும் |
|---|---|

திருமணம் செய்ய நிட்சயித்திருப்பதால் (இன்ஷா அல்லாஹ்) அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதமாய்ச் சமுகந்தந்து புதுமணத் தம்பதிகளை ஆசிர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- கொண்டாட்டம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 15ம் திகதி திங்கட்கிழமை வரை மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

I. L. மீராசாகிவுப் போடியார்
கிராமச்சங்க அக்கிராசனர் அவர்களும்
பாரியாரும்.
பொத்துவில்.

4-8-55.

S. A. M. அப்துல் றசாக் மவுலானா, J. P.
பாணமைப்பற்றுக் காதி அவர்களும்
பாரியாரும்.
பொத்துவில்.

---

*Mr. & Mrs. I. L. Meerasahibu Pody*

(Bridegroom's Parents)

And

*Mr. & Mrs. S. A. M. Abdul Razak Moulana*

(Bride's Parents)

*request the pleasure of the company of*

*Mr. & Mrs.*......................................................................................

*on the occasion of the marriage of*

**Mr. M. M. Ibrahim**

*(Eng. Teacher)*

*with*

**Miss Thakwa Abdul Razak Moulana**

*on Thursday 11th August 1955, at 10 p. m.*

***Reception at bride's residence from 12-8-55 to 15-8-55.***

*Pottuvil, 4-8-55.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. கி.பி. 1955 - கவிஞர் யுவன்.



4.9.55

ஏடு: 29

அறிமுகப்படுத்துகிறோம்

M. A. GAFFOOR
ENG: TEACHER
BEACH ROAD
POTTUVIL - E. P.

## கவியமுதம் படைக்கும் கபூர்

"ராஜபாரதி"

ஆன்றுட வாழ்வில், அனுபவிக்கும் சில நாணயமான—நன்மை தோய்ந்த, கருத்துக்களை வளைத்து கவிதா இலக்கணமென்னுங் கொத்து வேலை செய்து, கற்பனை மெருகையும் அளவறிந்து தீட்டி—மக்கள் சமுதாயத்திற்கு ஆயிரங்காலத்து அமுதப் படைப்பாக அள்ளி வழங்கும் அபூர்வக் கொடைக்குத் தான், 'கவிதை' என்று பெயர். இவ்வாறு இரத்தினச் சுருக்கமாகக் கவிதைக்கு இலக்கணம்கூறும்இவ்விளங் கவிஞர் வேறு யாருமல்ல மட்டக்களப்பின் தென் துருவமாகிய பொத்துவிலைச் சேர்ந்த நண்பர் கபூர் அவர்களே.

இவரது தந்தை இ. மு. மீரா லெவ்வை ஆசிரியர். தாயார் ஆசியத்தும்மா. இவர் பிறந்தது 1935ம் ஆண்டு ஆகஸ்டில். பள்ளிப் பருவம் எய்தியதும், இயற்கையாகவே கவிதைகள் பாடவல்ல! இவரது தந்தையாரே இவருக்கு வித்தியாரம்பஞ் செய்து வைத்தார். ஆரம்பப் பாடசாலையில் படிக்கும் நாட்களிலேயே பாடசாலை மாணவர் மன்றங்களில் துடுக்காகவும், லாவகமாகவும், மேடைப் பேச்சுகள் பேசுவதை அவதானித்த இவரது அபிமான ஆசிரியரும் தற்போது "அரசடி உயர்தரப் பாடசாலை" அதிபராகவும் உள்ள உயர் திரு ந. இராசசிங்கம் அவர்கள் "எதிர்காலத்தில் கபூர், ஒரு மேடைப் பிரசங்கியாக மாத்திரம் அல்ல, உயர்ந்த கவியமுதம் படைக்கக்கூடிய கவிஞனாகவும் போற்றப்படுவான்" என்று ஆசீர்வதித்தாராம்.

அவ்வாக்கைச் சத்தியவாக்காக ஆக்குவதற்கு இவர் தன் பள்ளிப் பருவத்திலே எத்தனையோ மேடு பள்ளங்களைத் தாண்டியிருக்கிறார். வறுமையின் அறைகூவல் வாஞ்சைகொண்ட தாயாரின் வருத்தப் படுக்கைகள் இவையெல்லாம் எதிர்த்து நிற்க முடியவில்லை இவருடைய இலட்சியப் பாதையில்! மத்திய சர்க்கார் வழங்கும் கல்விச் சகாயப் பணத்தைப் பெற்று மட்டக்களப்பு மத்திய கல்லூரியின் மதில்களையே தாண்டினார், கலைப் பசி தீர்க்க...

"கன்னித் தமிழணங்கின்-
காதற் பெருமடிமேல்-
சென்னிவைத்து நிம்மதியாய்
செத்தழியும்படி
யருள்வாய்..."

என்று மனமுருகிப் பிரார்த்திக்கும் இவருக்கு தமிழ்த் தாயிடமுள்ள மகத்தான பற்று எவ்வளவு என்பதை ஈண்டுச் சிலாகிக்கத் தேவையில்லை! ஈழத்தின் பத்திரிகைகளான சுதந்திரன், வீரகேசரி, இஸ்லாமிய சூரியன், தேசாபிமானி, கலைவாணி, தினகரன் முதலியவற்றில் இவருடைய கவிதைகளும், கதைகளும் அனேகமாக வெளிவந்துள்ளன.

அவற்றுள் 'சுதந்திரனில்' வெளிவந்த "தேச சேவை செய்யடா" "பொங்கியெழு" என்னுங் கவிதைப் படைப்புகள் சிறப்பாகப் பாராட்டக்கூடியவை. "ஆனந்தன்" வார இதழ் நடத்திய புது முறைக் கவிதைப் போட்டியின் இரண்டாவது தொகுப்பில் இவருடைய "பச்சைக் குழந்தை" என்னும் கவிதை, முதலாவது ஸ்தானத்தைப் பெற்று, "யாழ்ப்பாணன்" வழங்கிய மாலைக்கு மாலையையும் பாராட்டலையும் பெற்றது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவர் தீட்டிய சிறுகதைகளைச் சிலாகிக்குமிடத்து "சுதந்திரன்" வழங்கிய "பணக்கார உலகமும்" தேசாபிமானி பிரசுரித்த "வேதனையும்" வாசகர்களால் எளிதில் மறக்க முடியாதவைகளாகும்.

கடந்த வருடம் வீரமுனைக் கலவரத்தால் தீ மூட்டப்பட்ட வீரமுனைக் கிராமத்தின்பேரில் வெளிவந்த "தீயுண்ட வீரமுனை—விவரண காவியத்தின்" உதவி ஆசிரியராகத் தொண்டாற்றி, மேற்படியூர் அகதிக் குழந்தைகளின் நிவாரணத்திற்காக நிதி திரட்டி வழங்கிய பெருமை இவரையுஞ் சார்ந்ததாகும். இவர் சிறு பராயத்தில் "சல்மா" என்ற புனைபெயரிலும், பிற்பாடு "யுவன்" என்ற புனைபெயரிலும், சிறந்த இலக்கியப் படைப்புகள் படைத்திருக்கிறார்.

இலக்கிய அரட்டை அடிப்பது, சிகரப் புகைப்பது சிறு குழந்தைகளோடு மழலை பேசி மகிழ்வது இன்னோரன்ன இவருடைய சுவாரசியமான பொழுதுபோக்குகளாகும்.

முஸ்லிம் பெண்மணிகளின் "மாட்டுவால் வளர்ச்சி" போன்ற சமூகப் பிற்போக்கு, வேட்டையாடுதல், சுயபுராணம் வாசித்தல், தமிழ் தாராளமாகத் தெரிந்தும் ஆங்கிலத்தில் உரையாடுதல், முதலியவற்றை இவர் கட்டோடு வெறுக்கிறார்.

தற்போது அக்கரைப்பற்று—விளாக்கிழு [illegible] பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகக் கடமைபுரிகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. கி.பி. 1957 - 58 கப்புப் பனையடி உருவான கதை.



1




2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கி.பி. 1957 காலப்பகுதியில் வழக்கொன்றின் நிமித்தமாக மட்டக்களப்பு நீதிமன்றத்தில் சாட்சி சொல்வதற்காக பொத்துவிலில் இருந்து சென்ற சாய்வு அகமது லெவ்வை (துறைக்காரர்) என்பவரும் முகம்மது இஸ்மாயில் முகம்மது மக்கீம் (தங்கமரைக்கார்) என்பவரும் வழக்கு முடிந்த பின் மட்டக்களப்பு ஸ்டுடியோ ஒன்றில் ஒன்றாக இணைந்து எடுத்த நிழற்படம் 2இல் காட்டப்பட்டுள்ளது. அக்காலங்களில் மட்டக்களப்பு - கல்லடி பாலத்தின் தோற்றம் நிழற்படம் 1இல் காட்டப்பட்டுள்ளது. இச்சமயம் மட்டக்களப்பு வெபர்அரங்கு அமைந்துள்ள முற்றவெளி மைதானத்துக்குச் சென்ற இருவரும் அதன் அண்மித்த பகுதிகளில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நடப்பட்டிருந்த பனை மரத்தினை ஒத்த ஒரு வகை மரங்கள் சில கிளை விட்டிருப்பதைக் கண்டு, அவ்வமையம் அம்மரங்களின் கீழ் காணப்பட்ட விதைகள் சிலவற்றை எடுத்துக் கொண்டு பொத்துவிலுக்கு வந்து சேர்ந்த இருவரில் ஒருவரான துறைக்காரர் என்பவர் பாக்கியவத்தையில் உள்ள தனது வீட்டு வேலியின் ஓரமாக அதனை நட்ட போது காலப்போக்கில் அவை வளர்ந்து கிளை விட்டு கப்புப் பனை மரங்கள் போல காட்சியளிக்கத் தொடங்கின. பொத்துவில் மக்கள் மகிழ்வுடன் நோக்கக் கூடிய காட்சிப் பொருளாகவும் இவை காலப்போக்கிலே மாற்றம் பெற்று இவ்விடமும் **'கப்புப் பனையடி'** என நிலைபெறத் தொடங்கிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. கி.பி. 1957 - பசுமைக்கவிஞனின் வெள்ளக்காவியம்.

ஐம்பத்தேழாமாண்டிலே போட்ட வெள்ளம்
அறுகம்பை பொங்கி அதிக சேதம் ஆக்களுக்கு

அறுகம்பை பொங்கினது ஆக்களுக்கு மட்டுமல்ல
அடுத்த வூ ரக்கரைப்பற்று அதிலும் கொஞ்சம் சேதமாமே

அம்பாறைத் தண்ணீர் ஆறடியில் பாய்ந்ததினால்
நிந்தவூர் கல்முனை நெடிய, பெரும் சேதமாமே

மட்டக்களப்பில் மழை யதிகம் பெய்ததினால்
மக்கள் படும்பாடு வாயாலே சொல்லவொண்ணா

கல்லாறு பொங்கி கனத்த வெள்ளம் போனதினால்
காத்தான் குடிப்பிலேயும் கனத்த மனு சேதமாமே

மன்னம் பிட்டியூரில் மழையதிகம் பெய்ததினால்
மாடு, ஆடு செத்து மனிதரெல்லாம் சேதமாமே

மகோ வெனுமூரில் மாரி மழை பெய்ததினால்
மாட கூடமெல்லாம் மா பெரிய சேதமாமே

அனுராத புரத்தில அதிக மழை பெய்ததினால்
ஆறு குளங்களெல்லாம் அதிக வெள்ளம் போட்டதாமே

வவுனியாவூரில் வலிய மழை பெய்ததினால்
வார போர பாதையெல்லாம் வழியடைத்துப் போட்டுதாமே

கொடி காம வூரில் கொடிய மழை பெய்தமையால்
கொச்சிகளெல்லாம் கொடி விட்டு நிண்டுதாமே

சாவகச்சேரியில் சாச்சியெனக்குச் சொல்லியிருந்தா
சவங்களெல்லாம் சமுத்திரத்தில் போகுதெண்டு

யாழ்ப்பாணப் பட்டணத்தில் ஜாஸ்தியான காத்தடிச்சி
யாழ் நகர் முழுதும் யாழ் தெரியா திருட்டாம்

மன்னார் பகுதியிலே மழையதிகம் பெய்ததினால்
குளங்கள் முறிந்து குடிசைகள் சேதமாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1950 கள் தொடக்கம் 1990கள் வரை பொத்துவில் இலக்கியப் புலத்தில் தனக்கென ஒரு தனித்துவமான பாணியை கவிதைத்துறையிலே வகுத்து அனைத்து தரப்பு மக்களையும் வெகுவாகக் கவர்ந்த பசுமைக் கவிஞனே இந்த அகமது லெவ்வை சுலைமா லெவ்வை என்பவராவார். பொத்துவிலூரின் நடைமுறைச் சம்பவங்களை நாட்டுக் கவி வடிவத்திலே சுடச்சுட இடம், காலம் எதனையும் பொருட்படுத்தாமல் நகைச்சுவையாகப் பாடும் அபார திறமை கொண்ட இந்த நாட்டுக் கவிஞனின் எண்ணிலடங்காப் பாடல்கள் ஆவணப்படுத்தப்படாமல் போனது ஒரு துரதிஷ்ட வசமான விடயமே. இவர் பாடிய பாடல்களுள் **'பாலம் பார்க்கப் போவோம் வா பெண்ணே'** என்ற அறுகம்பை பாலம் தொடர்பான பாடல் பொத்துவிலில் மிகவும் பிரபலமானது இங்கே தரப்பட்டுள்ள பாடலானது 1957இல் வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட பெருவெள்ளத்தையொட்டி இந்தக் கவிஞர் பாடிய வெள்ளக் காவியத்தின் ஒரு பகுதியாகும்.



1957 பெரு வெள்ளத்தில் சிக்கித் தத்தளிக்கும் மட்டக்களப்பு நகர சபை வளாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. கி.பி. 1958 - கத்னா அழைப்பிதழ்.

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்

# விருத்தசேதன அழைப்பிதழ்.

ஜனாப்......................................................அவர்கட்கு

அன்புடையீர்!

நிகழும் ஹிஜ்ரி 1378ம் வருஷம் ஸபர் பிறை 23க்குச் சரியான (8-9-58) திங்கட்கிழமை பி. ப. 6 மணிக்கு

எங்கள் புத்திரர்கள்

M. கலந்தர் M. முஸ்தபா
M. முகைதீன்பிச்சை M. ஆரிபீன்
M. ஜலால்தீன்

ஆகியோருக்கு (கத்தனு) என்னும் சுன்னத்துச் செய்ய நிட்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்களும் தங்கள் குடும்ப மித்திரர்களும் சமூகந்தந்து சிறப்பித்தேகுமாறு அன்பாய் வேண்டுகின்றோம்.

**குறிப்பு:**

3-9-58ல் பின்னிரவு 9 மணிக்கு மௌலீது ஓதப்படும்
4ந் திகதிமுதல் 7ம் திகதிவரை மருதோன்றிக் கலியாணம்
8-9-58ல் ஊர்வலமும் சுன்னத்தும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
**S. மீராலெவ்வை**
(பிள்ளைகளின் தந்தை)
**K. செயினம்பு**
(மாதர் சங்கக் காரியதரிசி)

1ம் குறிச்சி,
பொத்துவில்,
30-8-58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28.** கி.பி. 1959 - அவதார விழாவும் வருடாந்த விழாவும்.

அண்ணல் நபி ( ஸல் ) அவர்களின்

அவதார விழாவும்

# பொத்துவில்

அரசினர் முஸ்லீம் ஆண்கள் பாடசாலை

வருடாந்த விழாவும்

இடம் : அரசினர் முஸ்லீம் ஆண்கள் பாடசாலை
பொத்துவில்.

காலம் : 16 – 9 – 59.

தலைவர் : ஜனாப் M. M. முஸ்தபா M. P.
உதவி நிதி அமைச்சர்.

Adams Press,, Akkaraipattu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடையீர் !

பொத்துவில் அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கச் சார்பில் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அவதார தின விழாவும், பாடசாலை வருடாந்த விழாவும் நடைபெறும். அவ்வமயம் அன்பர்கள் அனைவரும் சமூகம் தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

M. I. M. ஹனிபா

K. M. ஹசன்

(இணைச் செயலாளர்)

பொத்துவில்

10-9-59.

---

# நிகழ்ச்சிகள்.

1. இல்லங்கட்கிடையே விளையாட்டுப்போட்டி,

நேரம் : 16-9-59 புதன் காலை 8-30 — 11-30

தலைவர் : ஜனாப் I. M. A. குத்தூஸ் (தலைமை ஆசிரியர்)

## மத்தியஸ்தர்கள் :

திரு. M. L. S. முகையதீன் (தலைமை ஆசிரியர்) கனிஷ்ட பாடசாலை

„ S. இராசையா (Post Master) பொத்துவில்.

„ Y. M. முஸ்தபா (காதி J. P.)

„ A. P. இஸ்மாலெவ்வை (அக்கிராசனர், பொத்துவில்.

„ A. மீராலெவ்வை (மாஜி கி. த.) பொத்துவில்.

„ M. A. முகம்மதுலெவ்வை (ம. வி. அதிகாரி) பொத்துவில்

## ஆரம்பிப்போர் :

திரு. M. M. இப்ருகீம் (உதவி போஸ் மாஸ்டர்) பொத்துவில்.

„ K. கனகரெத்தினம் (ஆசிரியர்)

## மைதானப் பொறுப்பாளர்.

திரு. K. M. ஹசன் ஆசிரியர் (அ. மு. ஆ. பாடசாலை பொத்துவில்)

„ M. தேவநாயகம் ஆசிரியர்.

„ M. A. ஐஃபர் ஆசிரியர்.

„ M. L. M. இப்ருகீம் (கி. த.) பொத்துவில்.

„ M. முகம்மட் காஸீம் (கி. த. பொத்துவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவாளர்.

A. M. அகமதுலெவ்வை. ஒலிபெருக்குவோர் : M.I.M. ஹனிபா
திரு. K. M. ஹசன்
,, S. M. அலியார்
,, M. P. நந்திசேன
கௌரவ வைத்தியர் : திரு. Dr. S. மாணிக்கவாசர் M. O. பொத்துவில்
,, பொ. மாணிக்கம்பிள்ளை.

2. ## அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அவதார விழாக் கூட்டம்.

நேரம் : பிற்பகல் 2,00 — 4.00
தலைவர் : ஜனாப் M. M. முஸ்தபா M. P. (உதவி நிதி மந்திரி)
1. கிறுஅத் : ஜனாப் A. L. கரீம் மௌலவி
2. தலைவர் உரை.
3. பேச்சாளர்கள் :
1. ஜனாப் M. முகம்மதலி (வித்தியாதரிசி அ. பற்று வட்டாரம்)
2. திரு. B. A. J. காசிநாதர் (பா. ப. காரியாதிகாரி)
3. ஜனாப் S. L. செயினுலாப்தீன் மௌலவி.
4. திரு. P. V. கணபதிப்பிள்ளை, விரிவுரையாளர்
ஆசிரிய கலாசாலை அட்டாளைச்சேனை
5. ஜனாப் T. இப்றுலெவ்வை B. A.
6 H L. முகம்மது லெவ்வை மௌலவி.
7. M. S. M. காஸிம் மௌலவி.

3. ## பாடசாலை வருடாந்த விழா.

நேரம் : பிற்பகல் 4-30 — 6-30
தலைவர் : திரு. S. தணிகாசலம் B. Sc. Dip. in Educati n.
(கல்வி அதிகாரி கி. மா.)
1. பாசாலை அறிக்கை.
2. தலைவர் உரை.
3. பேச்சுப் போட்டி.
4. கரலாட் சேபம்.
5. பரிசளிப்பு : திருமதி. B. A. J. காசிநாதர்.
6. நன்றியுரை.

குறிப்பு : (நிகழ்ச்சிகள் யாவும் ஒலி பெருக்கப்படும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29.** கி.பி. 1960 - கத்னா அழைப்பிதழ்.

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

# விருத்த சேதன விஞ்ஞாபனம்.

ஜனாப் / திரு........................................................

அன்புடையீர்!

எல்லாம் வல்ல ஏகபராபரனின் திருவருளாலும் மாசற்ற மகான் நபிகள் திலகம் (றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம்) அவர்கள் கிருபையாலும் எங்கள் அருமைப் புதல்வர்களான,

**ஆதம்கண்டு மரைக்கார். முகம்மது ஜமால்தீன்**
**,, ,, முகம்மது சித்திக்**

ஆகியவர்களுக்கு (நிகழும் ஹிஜ்ரி 1380, முஹர்றம் பிறை 23 க்குச் சரியான) 18-7-60ல் விருத்தசேதனம் செய்ய நிச்சயித்திருப்பதால் கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலில் காணும் வைபவங்களுக்கு குடும்ப சகிதராய் சமுகம் தந்து சிற்றுண்டி தாம்பூல பதாதிகளருந்தி வைபவங்களைச் சிறப்பித்தேகுமாறு அன்பாய் அழைக்கிறோம்.

**நிகழ்ச்சிகள்:**

18-7-60 மு. ப. 9-30 மணி தொடக்கம் } பள்ளிவாசலுக்கு அவுலியா சியாறத்துக்கு ஏகுதலும் ஊர்வலம் செய்தலும.

,, பி. ப. 3-5 மணி வரை: வரவேற்புக் கொண்டாட்டம்.

,, பி. ப. 6-30 மணிக்கு: விருத்தசேதனம் செய்தல்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்,

பொத்துவில்,
2ம் குறிச்சி,
12-7-60.

அ. லெ. ம. ஆதம்கண்டு மரைக்காயரும், பாரியாரும்.

லங்கா வர்த்தமானி அச்சகம், கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. கி.பி. 1956 - 60 மட்டு நகரில் மாணவர்கள்.



1 2 3



4 5

1. செல்வன் எம்.ஐ. காதர் முகையதீன் (ஓய்வு பெற்ற அதிபர் - மரணம்)
2. செல்வன் எம்.எம். முகைடீன் (தற்போது - ஓய்வு பெற்ற தாதி)
3. செல்வன் கே. ஆதம் கண்டு (மரணம்)
4. செல்வன் எம்.எம். ஹனிபா (ஓய்வு பெற்ற அதிபர் - மரணம்)
5. செல்வன் எம்.ஐ. ஆதம்லெப்பை (தற்போது சிரேஷ்ட சட்டத்தரணி)

1950ற்குப் பின்னரான கால கட்டங்களில் பொத்துவிலில் இருந்து வெளியூர் சென்று கல்வி கற்கக் கூடிய மாணவர் தொகை சற்று அதிகரிக்கத் தொடங்கியது. அதிகமான மாணவர்கள் மட்டக்களப்பு கல்லூரிகளில் இடைநிலை மற்றும் உயர்தர கல்வியினை கற்கத் தொடங்கினர். இதுவே பொத்துவிலின் கல்விப் புரட்சிக்குரிய முக்கியமானதொரு காரணியாகவும் விளங்கியது. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் பொத்துவில் மாணவர்கள் சிலர் அங்குள்ள ஸ்டுடியோ ஒன்றில் இணைந்து எடுத்துக் கொண்ட நிழற்படங்களே இவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. கி.பி. 1960 - அறுகம்பை பாலம்.



1960இல் பாலம் வருமுன்பாக பயணிகளையும், வாகனங்களையும் அறுகம் களப்பினூடாக அக்கரைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட Ferry எனப்படும் 'பாதை' மிதந்து சென்ற காட்சி.



1960இல் அறுகம்பை பாதை (Ferry)யில் பயணம் செய்யும் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1962, 63 காலப்பகுதிகளில் அறுகம்பை பாலம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற காட்சி. ஜேர்மன் அரசாங்கத்தின் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இப்பாலம் பொத்துவில் மக்களின் நீண்டகால பயணத் தேவையை பூர்த்தி செய்தது எனலாம்.




1964இல் அறுகம்பை பாலம் பூர்த்தியானதையிட்டு பாலத்தின் அருகில் நடப்பட்டிருந்த குறிப்புரைக் கல்வெட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1964, 65இல் பாலம் பயணிகளுக்காக திறந்துவிடப்பட்ட போது அதனூடாக சைக்கிள் சவாரி செய்யும் இருவர்.



2002 இல் அறுகம்பை பாலம் (மீண்டும் வர்ணம் பூசப்பட்ட நிலையில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2003இல் அறுகம்பை பாலமும் களப்பும்.



2003இல் அறுகம்பை பாலமும் களப்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2004.12.26இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் விளைவாக பாதை துண்டிக்கப்பட்டு சற்று சேதமடைந்த நிலையில் அறுகம்பைப் பாலம்.



2004.12.26இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் விளைவாக பாதை துண்டிக்கப்பட்டு சற்று சேதமடைந்த நிலையில் அறுகம்பைப் பாலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுனாமியினால் சேதமடைந்த அறுகம்பைப் பாலத்தின் (கிணற்றுத்) தூண் ஒன்று.

சுனாமியினால் சேதமடைந்த அறுகம்பைப் பாலம்.





சுனாமியின் போது துண்டிக்கப்பட்ட அறுகம்பைப் பாதைக்கு பதிலீடாக இந்திய அரசாங்கத்தினால் அறுகம்பைப் பாலத்துடன் இணைத்து நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக பாலம்.

சுனாமியின் போது துண்டிக்கப்பட்ட அறுகம்பைப் பாதைக்கு பதிலீடாக இந்திய அரசாங்கத்தினால் அறுகம்பைப் பாலத்துடன் இணைத்து நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக பாலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2006இல் அமெரிக்க USAID நிறுவனத்தின் உதவியுடன் இலங்கை அரசாங்கத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்படத் தொடங்கிய அறுகம்பை பாலத்தின் ஆரம்ப கட்ட தோற்றம்.



2006இல் அமெரிக்க USAID நிறுவனத்தின் உதவியுடன் இலங்கை அரசாங்கத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்படத் தொடங்கிய அறுகம்பை பாலத்தின் ஆரம்ப கட்ட தோற்றம். (2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2006இல் அமெரிக்க USAID நிறுவனத்தின் உதவியுடன் இலங்கை அரசாங்கத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்படத் தொடங்கிய அறுகம்பை பாலத்தின் ஆரம்ப கட்ட தோற்றம். (2007)



2008இல் அமெரிக்க USAID நிறுவனத்தின் உதவியுடன் இலங்கை அரசாங்கத்தினால் பூர்த்தி செய்யப்பட்ட அறுகம்பை பாலத்தின் தோற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஆத்துமுனைப்பாலம். (கி.பி. 1896இல் ஆங்கிலேயரால் நிர்மாணிக்கப்பட்ட இப்பாலத்தின் 2003ஆம் ஆண்டைய தோற்றம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நமது மூதாதையர்கள் நடந்து சென்ற, நாம் நடந்து வந்த பொத்துவிலின் முதல் பாலமாம் ஆத்துமுனை பாலமானது 2004இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது சீறி வந்த சுனாமிப் பேரலைகளின் சீற்றத்திற்கு இரையாகிப் போய்விட்டது. பொத்துவில் வரலாற்றின் அடையாளச் சின்னமான இதன் நிழற்படங்கள் எவரிடமுமே இல்லாத நிலையில் அதிஷ்ட வசமாக சுனாமிக்கு முன்னரான காலகட்டத்தில் இதனை புகைப்படமாக எடுத்து வைத்திருந்த பத்திரிகை நிருபர் மர்ஹூம் ஜனாப் ஏ.சி. அகமட் லெப்பை அவர்களது பணி நினைவுகூறத்தக்கது. பொத்துவில் மண் சார்ந்த நிழற்படங்களை எடுப்பதில் அலாதிப்பிரியரான இவர் பொத்துவில் வரலாறு தொடர்பான சில தகவல்களையும், நிழற்படங்களையும் தந்து உதவியுள்ளார் என்பதனை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். - நூலாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ துவ்வே பாலம். (கி.பி. 1896இல் ஆங்கிலேயரால் நிர்மாணிக்கப்பட்ட இப்பாலத்தின் 2003ஆம் ஆண்டைய தோற்றம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

உ௮ ௮ 1960

# தமிழ் வாழ்த்து

காதிற்கினிமை தருங் கற்பகத்தாள்
கனிமொழியாள் வாழ்க!
கைக்குவளை யாபதிகொள்
கனியிழையாள் வாழ்க
மேதகுமென் மார்பைத்தா(ங்)கும்
தாமணியாள் வாழ்க!
மின்னுமொளி மேகலை சூழ்
மெல்லிடையாள் வாழ்க!

தண்டாமரையில் வசிக்கும்
சிலம்புடையாள் வாழ்க!
சோழசேர பாண்டியர் தஞ்
செம்மை மகள் வாழ்க!
எக்காலும் சிறந்தோங்கும்
தூயகுறள் தாங்கும்
எழிமைமிகு செந்தமிழ்த்தாய்
நீடுழி வாழ்க!!

—கே. எம். ஹசன்



1. K.M. ஹசன்
(தற்போது ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)

2. U.L. முகைதீன் பிச்சை
(முன்னாள் பொது முகாமையாளர், ப.நோ.கூ.ச, பொத்துவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33. கி.பி. 1962 - பொத்துவிலின் முதல் ஹஜ்ஜாஜிகள்.


1

பொத்துவிலில் இருந்து முதன் முதல் ஹஜ்ஜுக்குச் சென்ற இவர்கள் இருவரும் ஒன்றுவிட்ட சகோதரர்கள் ஆவர். இக்காலங்களில் கடல் வழியாகவே கப்பலில் அரேபிய தீபகற்பம் நோக்கி பயணிக்க வேண்டியிருந்தது. இலங்கையில் இருந்து இவ்வாறு கடல் வழியாகச் சென்று ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றிவிட்டு மீண்டும் சொந்த நாடு வந்து சேர்வதற்கு சுமார் 04 மாதகாலம் எடுக்கும். இந்த வகையில் இறைவனின் உதவியால் பொறுமையாகவும், வெற்றிகரமாகவும் ஹஜ்ஜுக் கிரிகையை முடித்துவிட்டு ஊர் திரும்பிய இந்த ஹாஜிமார்களை பொத்துவிலூர் மக்கள்திரண்டு சென்று பழைய கிராமக் கோடு சந்தியில் இருந்து வரவேற்று ஊர்வலமாக தக்பீர் கூறி பெரிய பள்ளிவாயல் வரை அழைத்துச் சென்றனர் என்பது வரலாறு.

1. அல் ஹாஜ் கருதலெவ்வை ஹயாத்து லெவ்வை (இவர் நீண்ட காலங்கள் பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாயலில் முஅத்தின் ஆக கடமை புரிந்தவர். இவரது புதல்வர்களுள் ஒருவரே லெப்பைத் தம்பி மௌலவி அவர்கள்.)

2. அல் ஹாஜ் இசுமான் குட்டி முல்லை யூசுப் (இவர் இஸ்லாமிய மார்க்க விடயங்களிலும் விவசாய நடவடிக்கைகளிலும் அதிக ஈடுபாடுள்ளவராக விளங்கியவர். அன்னாரது புதல்வர்களுள் ஒருவரே சாய்வுத்தம்பி வட்டாணையின் மருமகன் ஆதம் லெவ்வை போடியார் என்பவர்.


2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**34.** கி.பி. 1963 - கத்னா அழைப்பிதழ்.

விருத்தசேதன அழைப்பிதழ்

திரு ................................................ அவர்கட்கு

அன்புடையீர்!

எல்லாம் வல்ல இறைவன் திருவருளைமுன்னிட்டு எம்பிரான் முஹம்மது(ஸல்) அவர்களின் கிருபை கடாச்சத்தால் எங்கள் அருமைப் புதல்வர்கள்,

மீ. லெ. முகம்மதப்துல் காதர்
மீ. லெ. முகம்மதிப்றுகிம்
மீ. லெ. முகம்மது ஸக்கரியா

என்பவர்களுக்கு "சுன்னத்து நவவி" என்னும் விருத்தசேதனம் செய்ய ஹிஜ்ரி 1383 றபியுல் அவ்வல் பிறை 27 க்குச்சரியான 1963ம் ஆண்டு ஆவணிமாதம் 18ம் திகதி (18-8-63) ஞாயிற்றுக்கிழமை 8மணிக்கு பெரியோர்களால் நிட்சயித்திருப்பதால் நிகழ்ச்சியில் குறிப்பிட்ட வைபவங்களுக்கு தாங்களும் இனமித்திரர்களும் வந்து மீந்து சந்தோஷிக்குமாறு வேண்டுகிறோம்.

நிகழ்ச்சி நிரல்

(15-8-63)ந்திகதி வியாழக்கிழமை பி. ப. 9 மணிக்கு விருந்துபசாரம்

(16-8-63) வெள்ளிக்கிழமை பி. ப. 2மணி தொடக்கம 17-8-63 சனிக்கிழமை பி. ப. 5 மணிவரை (மருதோன்றிக் கலியாணம)

(18-8-63)ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணிக்கு பொத்துவில் பள்ளிவாசல் (குஞ்சுமூஸ் அவ்லியா) சியாறத்தேகுதல்

(18-8-63) ஞாயிறு பி. ப. 8மணிக்கு விருத்தசேதனம் செய்தல்

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
உறவினர்கள்.

★

இங்ஙனம்,
உதுமாங்கண்டு
மீராலெவ்வையும் பாரியாரும்

2ம் குறிச்சி, பொத்துவில். (5ம் வாட்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. கி.பி. 1964 - மீலாதுந் நபி விழா நிகழ்வு.

"மறையளித்த இறைவனுக்கே மாபெரும் புகழனைத்தும்"

# மீலாது விழா

இடம்: பொத்துவில் இ. லெ. மீராசாகிப் போடியாரின் வளவு.

காலம்: 22-7-64 மு. ப. 8 மணி முதல்.

**அங்கம்: 1** மு. ப. 8 மணி முதல் 12 மணி வரை

**தலைவர்: வை. எம். முஸ்தபா (J. P. கி. ச. த.) அவர்கள்**

**நிகழ்ச்சிகள்**

1. மாணவர்களுக்கான 5 மைல் சைக்கிளோட்டப் போட்டி: ஊறணியிலிருந்து பொத்துவில் வரை. ஆரம்பிக்கும் நேரம்: மு. ப. 8 மணி.
2. பொதுமக்களுக்கான 10 மைல் சைக்கிளோட்டப் போட்டி: கோமாரியிலிருந்து பொத்துவில் வரை. ஆரம்பிக்கும் நேரம்: மு. ப. 8-30 மணி.

**மத்தியஸ்தர்கள்**

திரு. கே. செல்வரெட்ணம் (D. R. O.)
,, ஆர். ஈ. எஸ். ஸ்ரனிஸ்லொஸ் (S. I.)
,, எஸ். கணநாதன் (P. M.)
,, எம். எல். மீராசாகிபு (கி. ச. அ.)
ஜனாப் எம். எல். எஸ். முகையதீன் அதிபர்
திரு. எம். கணபதிப்பிள்ளை (D. O.)
திரு. பி. பெஸ்ரியன் (S. K.)
ஜனாப் ஏ. மீராலெவ்வை சீப் மரைக்காயர்

**ஆரம்பிப்போர்**

ஜனாப் எம். எம். இப்ருகிம் (A. P. M.)
,, எஸ். எல். பறக்கத்தலி ஆசிரியர்
திரு. கே. வைத்தீஸ்வரன் (P. H. I.)
ஜனாப் கே. ஆர். எம். சகீது ஆசிரியர்
திரு. ஆர். ராஜகோபால் (T. A.)
,, எம். இராமநாதன் (சார்ஜன்)
ஜனாப் எம். எல். மீராலெவ்வை மனேஜர்
,, எம். ஐ. ஆதம்லெவ்வை ஆசிரியர்

**வைத்தியப் பொறுப்பாளர்**

திரு. Dr. வி. சுந்தரலிங்கம், M. O.
திரு. என். கந்தையா, A. I. C.

**ஒலி பெருக்குவோர்**

ஜனாப் எஸ். ஏ. காதர் ஆசிரியர்
ஜனாப் ஏ. எம். காஸீம்கான் ஆசிரியர்

3. மாணவ மாணவிகளுக்கான பேச்சுப் போட்டி.
4. கட்டுரைப் போட்டி.

**அங்கம்: 2** பி. ப. 2 மணி முதல்

**தலைவர்: ஜனாப் ஏ. ஏ. அகமட் ஜிப்ரி (B. A. Lond.)**

(அதிபர், ஆ. ப. கலாசாலை, அட்டாளைச்சேனை)

**பேருரை ஒழுங்குகள்**

1. கிருஅத்: மௌலவி எஸ். எல். செயினுலாப்தீன் அவர்கள், பொத்துவில்.
2. வரவேற்புரை: ஜனாப் கே. எம். ஹசன் ஆசிரியர் (இ. மு. க. தலைவர்)
3. தலைமையுரை:
4. ஜனாப் ஏ. ஆர். எம். ஸலீம் (சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர்) அக்கரைப்பற்று.
5. ,, ஏ. யூ. எம். ஏ. கரீம் ஆசிரியர், கொழும்பு.
6. ,, எச். எல். லெவ்வைத்தம்பி மௌலவி, பொத்துவில்.
7. ஜனாப் எஸ். எம். நளீம் ஆசிரியர், மருதமுனை.
8. ,, எம். எல். எஸ். முகையதீன் (E. T.) அதிபர், பொத்துவில்.
9. செல்வி நயிமா ஏ. பசீர் (வானொலிப் பேச்சாளர்) அப்புத்தளை.
10. ஜனாப் ஏ. எல். எம். காசிம் மௌலவி, ஊவாக் கல்லூரி, பதுளை.
11. ஜனாப் எம். எம். இப்ருகிம் (A. P. M.) பொத்துவில்.
12. ,, வை. எம். முஸ்தபா (J. P. கி. ச. த.) பொத்துவில்.
13. ,, எம். ஐ. ஏ. சலாகுதீன் மௌலவி, பொத்துவில்.
14. ,, கவிஞர் எம். ஏ. கபூர் 'யுவன்', பொத்துவில்.
15. ,, எம். ஏ. அப்துல் மஜீத் (B. A.) பா. உ. பொத்துவில்.

கானம்: பாவலர் ஜனாப் எம். எம். இப்ருலெவ்வை
(இலங்கை வானொலிப் பாடகர், அக்கரைப்பற்று)

போட்டிகளுக்கான பரிசு வழங்கல்: திரு. கே. செல்வரெட்ணம் (B. A.) D. R. O. பொத்துவில்.

நன்றியுரை: ஜனாப் ஏ. எம். காசிம்கான் ஆசிரியர் (இ. மு. க. செயலாளர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்!**

இஸ்லாமிய முன்னேற்றக் கழகம்,
பொத்துவில், - 17-7-64.

இவ்வண்ணம்
**"மீலாத் குழுவினர்."**

குறிப்பு: நிகழ்வன யாவும் ஒலிபெருக்கப்படும்.

பாத்திமா அச்சகம், மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36. கி.பி. 1965 - பொத்துவிலின் பிரதான இடங்கள்.



பொத்துவில் 2ஆம் குறிச்சி மத்திய வீதியின் தோற்றம். சைக்கிளில் உலா வருபவர் செல்வன் எம்.எம். ஷெரிப் (தற்போதைய நிலையில் ஓய்வு பெற்ற அதிபர்.)



பொத்துவில் மீன் சந்தைக் கட்டடத்திற்கு எதிர்ப்புறமாக காணப்படும் Dr. A.L. அமினுத்தீன் அவர்களது வர்த்தகக் கட்டடம் அமைந்துள்ள இடத்தின், 1965ஆம் ஆண்டினது பின்னணித் தோற்றமே இதுவாகும். இருவருக்கும் மத்தியில் நிற்பவர் அலியார் நாகூர்த்தம்பி (வியாபாரி) என்பவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. கி.பி. 1966 - பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாயல் பரிபாலன சபை

# அறிவித்தல்.

### பொத்துவில் கிராமத்திலுள்ள முஸ்லிம் மக்கள் யாவருக்கும் அறியத்தருவது;

அன்புடையீர்,

பொத்துவில் பள்ளிவாசல் பரிபாலன சபையார் "தண்டல்" வரி சம்பந்தமாக பின்குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர். ஆகவே, இந்த ஒழுங்கு முறையை நடைமுறைக் கெடுத்துக்கொள்ளும்படி உங்களை அன்பாய் வேண்டிக் கொள்கிறோம்.

(1) நமது பள்ளிவாசலையும், அதைச் சேர்ந்த கடமைகாரர்களையும் பராமரித்து வேதனம் வளங்குவதற்காக ஒவ்வொரு முஸ்லிம் ஆண்மகனும் ரூபா 6/- வீதம் வரி செலுத்துமாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் வழமையாக செலுத்திவந்த நெல் மரைக்கால் 4. இதை 3 மரைக்காலாக குறைக்கப்பட்டு இதன் விலையாக ரூபா 6/- ஐ மட்டும் அல்லது நெல் மரைக்கால் 3 மட்டும் வரிசெலுத்துமாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(2) மேற்கூறிய தீர்மானப்படியான வரியை அறவிடுவதற்கு பள்ளிவாசல் அதிகாரி அ. முகையதீன்வாவாவை தற்போது நியமிக்கப்பட்டுண்டு. இவரிடம் உங்கள் வரியைச் செலுத்தி பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்வீர்களாக.

இந்த வரியை வசூலித்து கடமைகாரர்கட்கு வேதனம் வளங்குவதோடு ஊருக்குப் பொதுவாக ஓர் "மதுரசா" (குர்ஆன் ஓதுவிப்பதற்காக) ஏற்படுத்தி நடத்தும் செலவுக்கும் பயன்படுத்தப்படும்.

இந்த வரி வருடந் தோறும் ஆவணி மாதம் 31ம் திகதிக்குமுன் செலுத்தப்படல் வேண்டும்.

இந்த ஒழுங்கு பள்ளிவாசல் கடமைகாரரின் கடமைச் சோர்வை அகற்றுவதற்கும், சிறந்த ஓர் குர்ஆன் மதுரசாவை ஸ்தாபிப்பதற்குமாகவேயாகும். இந்த ஒழுங்கை நீங்கள் மனச் சந்தோஷத்துடன் ஏற்று பள்ளிவாசல் நிருவாகத்தை சீருடன் நடத்த ஒத்துழைக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்

(பரிபாலனசபை) முதல் மரைக்காயரும் குடி மரைக்காயரும்:-

| பள்ளிவாசல் கதீப்மார். | |
|---|---|
| மு. மீ. முகம்மதிஸ்மாயில் லெவ்வை | ஆ. மீராலெவ்வை ஸீப் மரைக்காயர் |
| மு. ம. முகம்மதலியார் லெவ்வை | பு. லெ. மு. முஸ்தபா ,, |
| | பா. லெ. ம. கலந்தர்லெவ்வை ,, |

| | | | |
|---|---|---|---|
| 1. | க. மீராலெவ்வை | மரைக்காயர் | அல்லிப்பூ குடி |
| 2. | சா. லெ. ம. கலுங்குராவுத்தர் | ,, | அல்லிப்பூ குடி |
| 3. | ம. மீராலெவ்வை | ,, | அல்லிப்பூ குடி |
| 4. | ஆ. சிக்கந்தர் | ,, | அல்லிப்பூ குடி |
| 5. | உ. கலந்தர்லெவ்வை | ,, | வெள்ளரசன்குடி |
| 6. | மீ. மு. இப்றாகிம் | ,, | வெள்ளரசன்குடி |
| 7. | க. முகம்மதிஸ்மாயில் | ,, | வெள்ளரசன்குடி |
| 8. | க. அகமதுலெவ்வை | ,, | சம்மாங்கோட்டிக்குடி |
| 9. | உ. ம. ஆதம்லெவ்வை | ,, | சம்மாங்கோட்டிக்குடி |
| 10. | ஆ. அபூவக்கர் | ,, | சம்மாங்கோட்டிக்குடி |
| 11. | மு. இஸ்மாலெவ்வை | ,, | பணிவிட்டுகுடி |
| 12. | அ. ம. கலந்தர்லெவ்வை | ,, | பணிவிட்டுகுடி |
| 13. | அ. லெ. ம. ஆதம்கண்டு | ,, | ஓடாவிகுடி |
| 14. | இ. லெ. மீராசாகிபு | ,, | பவளக்குடி |
| 15. | மீ. மு. முகம்மதிஸ்மாயில் | ,, | வடக்கனுகுடி |
| 16. | மு. அ. சாய்வுத்தம்பி | ,, | பாங்கி நெய்ந்தகுடி |
| 17. | மு. மீ. முகம்மதுக்காசிம் | ,, | சந்திராதி முதலிகுடி |
| 18. | எம். எம். இப்றாகிம் | ,, | மாந்தருகுடி |
| 19. | மு. அ. அகமது முகையதீன் | ,, | மாமணுப்பிள்ளைகுடி |
| 20. | அ. லெ. சேகுதாவுது | ,, | பைக்கீர் குடி |
| 21. | இ. லெ. முகம்மதிஸ்மாயில் | ,, | வரத்துக்குடி |
| 22. | க. அபூபக்கர் | ,, | வெத்திலிங்காராச்சிகுடி |
| 23. | அ. முகையதீன்வாவா | | அதிகாரி |

பொத்துவில் பள்ளிவாசல், 1-5-66.

மோடேன் அச்சகம்; பிரதான வீதி, கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**38. கி.பி. 1967 - ஜௌபர் மௌலானா வழங்கிய தொகுப்பாக்கம்.**

5 முஸ்லிம் வாரப் பத்திரிகை 17-11-67 வெள்ளிக்கிழமை இன்ஸான்

# ஆலிப்புலவர் தந்த மிஃறாஜ் மாலை

## இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் முதல் எழுந்த இலக்கியம்

**31-10-67ல் பொத்துவிலில் இலக்கிய வட்டத்தின் சார்பில் ஆலிப் புலவர் அரங்கில் நடைபெற்ற மிஃறாஜ் விழாவின் இலக்கிய நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கி, கவிஞர் "முருகையன்" அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கத்தை "இன்ஸான்" வாசகர்களுக்காக தொகுத்தளிக்கின்றேன்.**



இஸ்லாமிய இலக்கியம்



1960, 70 களில் சமூகப் புரட்சியாளராகவும், முற்போக்கு சிந்தனை கொண்டவராகவும் சிறந்த கவிஞராகவும், ஆசிரியராகவும் விளங்கியவரே S.Y.M. ஜௌபர் மௌலானா அவர்கள். முச்சுடர் கவிதை நூலில், மூன்று சுடர்களுள் ஒருவரான இவர் விளையாட்டுத் துறையில் ஈடுபாடும், பாடல்களை இயற்றிப் பாடும் திறனுங் கொண்டவர். 1970களில் இவர் இயற்றிய;

**குஞ்சு மூஸா அவுலியாட**
**கோட்டைக்குள்ளே கொள்ளையடா**
**அஞ்சாமலே களவெடுத்த**
**ஆசாமி அவன் யாரோ**

என்ற பாடல், பொத்துவிலில் சகல மட்டங்களிலும் மிகப் பிரசித்தம் பெற்றிருந்தது. சகல பஜனை நிகழ்வுகளிலும் தவறாமல் பாடப்படும் பாடலாக இது விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. கி.பி. 1968 - மீராலெவ்வை வாத்தியாரின் மழைக்காவியம்.

ஜனாப் மீராலெவ்வை பாவலரின்

! 786. 23.3.76. பொத்துவில்

மழைக் காவியம்

1. அருளென அமைத்தார் [illegible]
அண்ட பகிரண்டமெனும் அகிலமும் விரித்தார்
வருணனை குறிக்க முடியாத வல்லோனிடம்
வல்லவனெனும் பொருளை மனதினில் மறவேன்

2. [illegible] விதி நியமம் [illegible] என்ன [illegible]
இறைவன் என்றிந்த வையகம் போற்றும்
[illegible] அறுவையும் எண்ணிக் கணக்கிடும்
[illegible] பொத்தி மகிழ் வேனே.

3. அண்டமெனும் மண்டலம் உண்டென்றுணர்த்திடும்
அறிவதனை புகட்டி அறியாத மறையொன்றை
விண்டு மொழியதனை நம் பெருந்தகைக்கீந்திட்ட
வேறு பெரும் விதி யதனை மெய் [illegible]

4 அவ்வாறவை [illegible] அரிய [illegible]
அவனியில் [illegible] யதனை [illegible]
ஒவ்வாத கனியதனை உண்டவன் புசித்த
உபாயமதை நீ உன் உணர்த்திய [illegible]

5 பாவமெனும் பாவி [illegible]
[illegible] பூமியில் பல காலமதை
[illegible]
காதல் [illegible] தான் [illegible]

6 [illegible] அருளியமை [illegible]
[illegible]
[illegible] யவர் அறிந்திடு விதியென
அமைத்திட்டார் பின் அதனை அறியாரோ?

7 ஆதிநாள் [illegible]
அன்றுள் குறிப்பிடும் அரியதிப் பொழுதை
இதுநாம் நாவிலும் நாடிடும் உண்மையிது
இவ்விதி மக்களை உணர்த்திவாகன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு விளையாட்டு விழா!

தலைவர்: திரு கே. செல்வரெட்ணம் D. R. O. பாணமைப்பற்று

பரிசு வழங்குபவர்: ஜனாப்: எம். ஏ. அப்துல் மஜீத் (பா. உ.) பொத்துவில்.

**காலம்:- 13—4—68 சனிக்கிழமை.**

**இடம்:- "குண்டுமடு" விளையாட்டு மைதானம்.**

நிகழ்ச்சிகள்.

## அங்கம் 1: காலை 7. 00—10. 00 வரை.

1. 10மைல் சைக்கிள் ஓட்டம்: லகுகல—பொத்துவில்
2. 4மைல் மரதன் ஓட்டம்: பசறிச்சேனை—பொத்துவில்

## அங்கம் 2: மாலை 2. 00—6. 00 வரை.

1. கரப்பந்தாட்டப் போட்டி: கழகங்கள்.
2. கயிறு இழுத்தல் போட்டி: மணமானவர்—மணமாகாதவர்
3. தலையணைப்போர்:
4. அஞ்சல் ஓட்டம்: 4×220: கழகங்கள்
5. 440 யார் ஓட்டம்: 50 வயதுக்குமேற்பட்டோர்கள்
6. பலூன் ஊதி உடைத்தல்: பாடசாலை மாணவர்கள்
7. உருளைக்கிழங்கு பொறுக்குதல்: பாடசாலை மாணவர்கள்
8. தடைதாண்டி ஓட்டம்: பாடசாலை மாணவர்கள்
9. 'சிகரெட்' பற்றவைத்தல்: உத்தியோகஸ்தர்கள்
10. சங்கீதக்கதிரை: பெண்கள்.

அன்புடையீர்!

தமிழ்—சிங்கள புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நடைபெறவிருக்கும் எமது விளையாட்டு விழாவில் பங்குபற்றிச்சிறப்பித்தேகுமாறு அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்.

இ. பா. தங்கராஜா
தலைவர்.

கே. எம். ஹசன்
எம். எல். எம். சம்சுதீன்
இணைச் செயலாளர்கள்.

வி. அழகரெட்ணம்
விளையாட்டு உத்தியோகஸ்தர்.

பா. ப. விளையாட்டுக்குழு,
பொத்துவில் 9—4—68.

ஆதம்ஸ் அச்சகம், அக்கரைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41. கி.பி. 1968 - முத்தான கவிதை.



தினபதி கவிதா மண்டலம்

எங்கள் ஊர்

# பொத்துவில்

**— பொத்துவிலூரன் —**

முப்புறம் வயலாற் சூழ
முன்புறம் நகர் விளங்க
எப்புறம் நோக்கி னாலும்
இளந்தெங்குச் சோலை தோற்றும்!
அற்புதம் விளைக்கும் மேலார்
அவ்லியா குஞ்சு மூசா
பொற்புற அடங்கப் பெற்ற
பொத்துவில் எங்க ளூரே!

இருலொடு மணலை துன்னும்
எழில்நிறை குளங்க ளோடும்,
விரிமணற் பரப்பும், என்றும்,
விரும்புமுல் லாசர்க் காக
நிறுவிய விடுதி யோடும்,
திகழ்ந்திடும் வளைகுடா வாம்
அறுகம்பைக் கடற்கரை சேர்
பொத்துவில் எங்க ளூரே!

மூவினம் மக்கள் வாழ்வர்;
முஸ்லீம்கள் தொகையே மேலாம்;
பாவினம் அறியா ரேனும்
பாத்தும்மா போலும் பெண்கள்
நாவினிற் கவி பிறக்கும்;
நல்லதேன் பாலும் மீனும்
காவினிற் கொணர்வார் வாழும்
பொத்துவில் எங்க ளூரே!

நெய்தலும் மருதமுஞ் சேர்
நிலமிது; இந்நி லத்திற்
செய்பயிர் செழிப்பதோடு
சிறப்பான விளைவும் காணும்!
செய்தொழிற் குறைத லில்லை;
சீருற மக்கள் வாழ்தல்
பொய்யிலை, பொலிவு மிக்க
பொத்துவில் எங்க ளூரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42. கி.பி. 1968, 69 - கவிதைகள்.

### உணர்வாரோ....?

—முதல்வனர்—

பாலும் ப்ழமும் உண்பதனுல்
பசியை என்னென் றறியாதார்
கூழும் இன்றி வாடுகிறுர்
கொடுமை தன்னே உணர்வாரோ?

★

மாளிகை மனேகளில் வசிப்போர்கள்
மெத்தை மீது புரள்வோர்கள்
நாளும் ஊர்நடு வீதிகளில்
நலிவோர் அடைதுயர் அறிவாரோ?

★

பட்டும் பலவித உடைகளேயும்
பகட்டாய் அணிந்து மகிழ்வோர்கள்
கொட்டும் பனியில் மழைவெயிலில்
கொடுகும் காட்சி காண்பாரோ?

★

பட்டம் பதவி ஆழ்வோர்கிழ்ப்
பணிந்து வாழும் ஏழைகள்
இட்ட பணியை நிறைவேற்ற
எய்தும் தொல்லேயை எண்ணுவரோ?

4

முதல்வனார் எம்.ஐ. ஆதம் லெப்பை (சிரேஷ்ட சட்டத்தரணி) அவர்கள் 1960, 70 களில் ஆசிரியராகக் கடமை புரிந்த வேளையில் பொத்துவிலின் மிகச் சிறந்த இலக்கியவாதிகளுள் ஒருவராகவும் கவிஞர்களுள் ஒருவராகவும் விளங்கியிருந்தார். இவ்வேளையில் இவரது அதிகமான கவிதைகள் மற்றும் கட்டுரை ஆக்கங்கள் இலங்கையில் அன்று வெளிவந்த பல்வேறு பத்திரிகைகளிலும் இடம்பெற்றிருந்தன. அவற்றுள் ஒரு கவிதையே இதுவாகும். அதே போன்று இக்காலங்களில் கே.எம்.ஹசன் (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்) அவர்களும் சிறந்த கவிஞராக விளங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் மட்டுமல்லாது இக்காலங்களில் இலக்கிவாதிகள் சிலர் இலை மறை காயாக இருந்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் மர்ஹூம் கே.ஆர்.எம். சஹீட் பொறியியலாளர் ஆவார்.

இலங்கையின் மிகச்சிறந்த பத்து கவிஞர்களுள் ஒருவராக விளங்கிய கவிஞர் யுவன் (அப்துல் கபூர்) அவர்கள் 1950 தொடக்கம் 1980கள் வரை இலக்கிய வானில் மேலோங்கி நின்றவர். இவரது இலக்கிய ஆக்கங்கள் எதுவும் நூலுருப்படுத்தப்படாமல் போனது துரதிஷ்டவசமான ஒன்றேயாகும். இவர் கவிதைத்துறையில் மட்டுமல்லாது நாடகம், ஓவியம், பேச்சு, விவாதம் என இலக்கியத்தின் பன்முகத் தன்மைகளையும் கொண்டவர். இவரது வானொலி நாடகங்கள் 1960களில் இலங்கையில் மிகவும் பிரசித்தம் பெற்றவையாக விளங்கியிருந்தன. குறிப்பாக பாசத்தின் மடியில், அழாதே சிரி போன்றவை இன்றும் பேசப்படக் கூடியவை.

### என்னே வருத்தும் பிணி!

ஊரைப் பிரிந்து உற்றூர் உறவினர்
பேரைத் தாங்கிடும் பிறவிகள், புத்திரர்
அனேவரும் வெறுத்து-ஆண்டியாய் வாழ்வின்
முனேவருமட்டும் முனகும் உருவாய்
ஒட்டிய வயிறுடன் ஒட்டைகள் நிறைந்த
கட்டிய உடையுடன் கவலேயில் துடித்திடும்
உருவம் ஒன்று!! ஒப்பிலாப் பிறவி
தெருவே அஞ்சும் தீரனய் வாழ்ந்த
பெரிய மனிதர்...பேய்களும் அஞ்சும்
உருவிலே திரிகிறுர்...
ஊரவர் வியக்க...
கருவில் உதித்தோர் கவனியா நிலேயால்
வறுமையில் வாடும் வயோதிபர்...
பாவம்!!
எண்ணவே நெஞ்சில் ஏக்கம்...எடுத்தது!!
சின்னவோர் ஆசையில் சிக்கலில் தவிக்கும்
தந்தையாய் வாழும் தகமையாளன்
தொந்தரவின்றி தொல்லுலகத்தில்
எந்த நாளும் என்னது மக்கள்
இன்புறல் வேண்டும் இதுவே ஆசை
என்று துடித்த இலட்சிய மனிதனே
எண்ணினேன் கண்ணீர் ஏனே வடிந்து
என்னே வருத்தும் பிணி??'

**கவிஞர் யுவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. கி.பி. 1968 - இக்பால் இளைஞர் இயக்கம்.

# கலைஞர்களின் தேவையை 'தினபதி' பூர்த்தி செய்கிறது

"நாடகக் கலை வளர்ச்சிக்கு பிரச்சாரமும் மிக மிக அவசியம். விளம்பரத்தையும், விசாலப் புகழையுமே ஒவ்வொரு நடிப்புக் கலைஞனும் விரும்புகிறன். இந்தத் தேவையை உணர்ந்த நம் நாட்டு மக்கள் தினசரியான "தினபதி" நாடகத்துறைக்கு என ஒரு தனிப் பகுதியை ஒதுக்கி உள்ளதை நாம் மறந்துவிடக் கூடாது."

பொத்துவில் இக்பால் இளைஞர் இயக்கத்தின் கலைக் குழுவினரால் அரங்கேற்றப்பட இருக்கும் முஸ்லிம் சமூக, சரித்திர நாடகங்களின் அங்குரார்ப்பண வைபவத்திற்கு தலைமை வகித்துப் பேசிய வானொலிக் கலைஞரும், நாடக ஆசிரியருமான கவிஞர் யுவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் சொன்னதாவது:-

"உழைப்பையே உயிரெனக் கருதும் கிராமிய மக்களிடையே அறிவைப் பெருக்கும் ஒரே ஒரு சாதனம் நாடகங்களே. சிரிப்பதற்கு மட்டுமல்ல நாடகம், சிந்திப்பதற்கும் பயன்படுத்தப்படல் வேண்டும்.

## நாடக ஆரம்ப விழாவில் கவிஞர் யுவன் பாராட்டு

"எழுத, வாசிக்கத் தெரியாத எண்ணற்ற தொழிலாளர்களுக்கு நகைச்சுவை நாடகங்கள் மூலம் சிந்தனைத் தெளிவு ஏற்படுத்த முடியும்.

"அறிஞர் அண்ணா போன்ற மேதைகள், ஷேக்ஸ்பியர் போன்ற நாடக ஆசிரியர்கள் தமது சிந்தனைகளைப் பரப்ப நாடகங்களையே கருவியாகக் கையாண்டு வெற்றி கண்டனர். நமது கலாச்சாரத்தையும், நமது பிரச்சினைகளையும், நமது சுயதேவைகளையும் விளக்க நாடகங்களை விடச் சிறந்த சாதனம் இல்லை. இந்தத் துறையில் முஸ்லிம் வாலிபர்கள் துணிவுடன் பணியாற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

"எல்லாம் ஊருக்காக...!" என்ற நகைச்சுவை நாடகத்தையும், "பாசத்தின் மடியில்" என்ற இலக்கிய வரலாற்று நாடகத்தையும் வெகு விரைவில் மேடையேற்ற இக்பால் இளைஞர் இயக்கக் கலைக் குழுவினர் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக இயக்கச் செயலாளர் எம். எல். எம். பாறூக் குறிப்பிட்டார்.

இந்த இரண்டு நாடகங்களின் கதை, வசனம், பாடல்கள் ஆகியவற்றை கவிஞர் யுவனே எழுதி இருக்கிறார். (ண-247)



## கி.பி. 1969 - இன்ஸான்

### இஸ்ரேலுக்கு எச்சரிக்கை

கவிஞர் யுவன்

தூக்கத்தில் எமைமறந்து துயில்கையிலே.
துள்ளி எம்மை வெற்றி கண்டு
சாக்குருவி வேதாந்தம் பேசின்றீர்
சரித்திரத்தை மறந்தாவிட்டீர்?
காக்கின்ற மறையோனைக் காணப்பொழுதில்
''கல்பிவி''லே எண்ணுதாலே
தாக்கமின்றுவந்ததென உணர்ந்துவிட்டோம்
தலைவீக்கம் கொண்டிடாதீர்!!

பகைவரையும் பரிவோடு பாதுகாத்த
பண்புநிறை நபிநாதர் வழியில்வந்த
வகையறிவீர்; வாலாட்டி வீரம்காட்டி
வையகத்தில் சக்திபெற்றோம் என்கிறீரே!
நகைக்கிறதே வையகமும் வானகமும்
நரிச்செய்கை நிலைப்பதுண்டோ?
திகைப்படையப் போகிறீர் விரைவினிலே
தீனோரின் திறமை காண்பீர்!!

துயருக்கும் முடிவுண்டு; தொல்லைக்கும்
முடிவுண்டு; பெருமை காட்டும்
உயர்வுக்கும் முடிவுண்டு; உணர்வுக்கும்
முடிவுண்டு; வெறியைத் தூண்டும்
கயமைக்கும் முடிவுண்டு; கவலைக்கும்
முடிவுண்டு; கடமை செய்ய
அயர்ந்திட்ட தீனோர்கள் விழிப்புற்றார்
அடக்கத்தின் பயனைக் காண்பீர்!!

'உங்களது தந்திரங்கள் உண்மையிலே
வெற்றியையே தருமாம்' என்று
எங்களது திருமறையில் இறையோனே
இடித்துரைத்துக் கூறிப் பின்னர்,
'சங்கையற்ற துரோகிகளாம் உங்களது
எதிர்காலம் அழிவே' என்றும்
மங்காத சுடரான மாமறையின்
இறை வாக்கை மறந்தா விட்டோம்?
மறதியினால் மதிகெட்டு இருந்ததினால்
மமதை வெறிகொண்டு விட்டீர்!
அறங்காத்த ''ஆதத்தின்'' சேய்களெமை
அடக்கிவிட ஆசை கொண்டீர்!
திறமிருக்கு எம்மிடத்தில் துள்ளாதீர்,
திட்டங்கள் தீட்டிவிட்டோம்!
உறவுக்குள் பகைமூட்டி விட்டீரே,
உயர்வீரா? எச்சரிக்கை விழ்வீர் உண்மை!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்போரைப் பற்றிய இக்பால் உரை!

பொத்துவில் ஜௌபர் மௌலானா,
விடுகை வருடம்.

கலையமுதம்

ஓடாத புகழாலே நிமிர்ந்து நிற்கும்
    ஊரான மலைகொண்ட சியோல் கோட்டின்கண்
வாடாத மலராக உயிர்த் தெழுந்தார்
    வையத்தில் நிலை கொண்ட கவிஞர் இக்பால்
கோடான கோடி மனக் கண்கள் தம்மில்
    கோணாத கொள்கையினை ஊட்டிச்சென்றார்
ஈடாகா எவர்கருத்தும் அவர்கருத்துக்
    கிணையாக அமையாது நோக்கு வீரே!

உழைப்புக்கு மதம் தடையாய் இருக்கு தென்று
    ஒப்பாரி வைத்த 'லெனின்' 'கால்மாக்ஸ்' என்போர்
களைப்பின்றிச் சொன்னார்கள் ''மதம் அபினைப்
    போன்ற தப்பா அதனை விட்டு
உழைப்பதற்கு வந்துவிடு; பொருளாதாரம்
    உறைந்தாலே முன்னேற முடியும்'' என்று!
இளைப்பாறு அல்லாமா இக்பால் மட்டும்
    இடித்துரைத்தே அவர் கூற்றை மீறிவிட்டார்.

''உதிரத்தைச் சாறாக்கி உதிர்த்து உன்றன்
    உள்ளத்தைப் பளிங்கைப்போல் சுத்தமாக்கி
அதர்மத்தை முற்றாக மாய்த்துத் தூய
    அறம் பேணி இறைஎண்ணத்தோடு நின்று
அதிசிரத்தை மேற்கொண்டு உழைப்பாய்'' என்றே
    அல்லாமா அறைந்திட்டார்; சிந்தனையின்
கதிர்வீச்சுத் தத்துவத்தைக் கண்ட மக்கள்
    காலத்தில் துடித்தெழுந்தார் வெற்றிகண்டார்!

பிறைக் கொடியைத் திரும்பிப் பார்; வையகத்தின்
    பிணக்காட்டுத் துயரழிய உழைப்பீர்; மக்காள்!
இறைக் கடிமை எனும் உணர்வில் திரண்டெழுந்து
    இரத்த வெறி மாறிடவே உழைப்பீர்; என்றார்!
சிறைக் கைதி ''புல்புல்'' லின் சிந்தனையின்
    சிறப்பம்சம் எதுவென்று ஆய்ந்து நோக்கி
குறைச் சமுகம் நிறைவு பெற உழைப்பாய் என்றார்
    குவலயத்திற் குணம் கண்ட கவிஞர் இக்பால்?

கி.பி. 1969

பகல் முழுதும் மெய்யுருகப் பாடு பட்டும்
    பயனடையாகக் குடிமகனைப் பார்த்து இக்பால்
அகம் உருகிக் கூறுகிறார் ''ஏ மனிதா
    அடிபணிந்து வாழாதே; முதலாளியும்
இகத்தினிலே உன்போன்ற குடி மகன்தான்
    எதற்காகப் பணிகின்றாய்? தலை நிமிர்ந்து
தகைமை தரும் உரிமைகளைக் கேட்பாய்'' என்றார்
    தன்னுணர்ச்சி பெற்றுயர்ந்த கவிஞர் இக்பால்.

மடியேந்தி மனிதனிடம் இரந்திடாதே!
    மயக்கத்தில் நிலை மறந்து வாழ்ந்திடாதே!
முடியாத வினை இங்கு இல்லை; சற்று
    மனவுறுதி கொள்ளப்பா; மண்ணகத்தில்
தடியேந்தித் தள்ளாடும் வயதில் கூட
    தன்மான உணர்வோடு உழைத்திடப்பா!
விடியாத நாளில்லை நீயும் இன்றே
    விடிவையே நோக்கிடு வெற்றி'' என்றார்.

துடிதுடிக்கும் இளைஞரைப் பார்த்து வண்ணத்
    தூயகவி பாடுகிறார் ''தோழனே நீ
அடிமுடியை அறிந்தாயா? நெஞ்சுயர்த்தும்
    ஆணவத்தை உணர்ந்தாயா? வஞ்சகத்தூண்
ஒடிந்து விடும் வழியதனைக் கண்டாயா? சொல்!
    ஓநாயை நம்பி வீண் போயிடாதே!
வடிவினிலே ''ராஜாளி'' நீயடா நீ
    வாடாதே மலை முகடில் சஞ்சாரஞ்செய்!

திறனார்ந்த கரம் பெறு! உரமே வாய்ந்த
    திண்டாமை உளம் பெறு! சுடுமணலில்
தரம் வாய்ந்த உடல் பெறப் புரண்டிரு!
    தண்ணீரில் மூழ்கவும் பழகிடு! உழைத்திடு!
நெறி தேர்ந்து கற்றிடு! செஞ்சகத்தில்
    நேர்மையை நிறைத்திடு! வாழ்க்கை இன்பம்
குறைந்திடாப் பணியினைச் செய்திடு! முன்னோரின்
    குணத்தினை உணர்ந்திடு!! என்றறைந்தார்??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**44.** கி.பி. 1969 - பொத்துவிலின் முதல் (கவிதை) நூல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் தத்துவம்

ஓடியாடித் திரிகின்றேன்
உடலும் நிலையோ உயிர் நொடியில்
ஆடி அடங்கு மற்பமடா
ஆறடி நிலமே சொந்தமடா
பாடிக் களித்துத் தொட்டிலதில்
பாலும் தேனு மூட்டி நிதம்
வாடிக் கிடந்தா ளன்னையவள்
வாழ்வை முடித்தாள் வேறென்னே??

நாளும் பொழுதும் சுழலுலகின்
நாட்டம் தேட்டம் என்றோதி
வாழும் வாழ்வும் பாழ்தானே
வாடாமலரும் வாழ்ந்திடுமோ
காலின் பலமும் குறைவாகக்
கண்ணி னொளியும் தளர்வாகும்
கோளும் திசையும் கண்டாலும்
குளிரின் குணமோ சொல் மனமே.

மதியைக் காணத் துடித்தவனும்
மண்ணின் புகழைப் பெற்றவனும்
விதியை விரட்டியடித் தானோ?
வீறு தணிந்தே போச்சுதடா
கதியே இறையோன் சக்தியிங்கே
கருணையாள னில்லத்தே
புதிர்கள் காணத் துடித்தவனும்
போனான் திரும்பி வந்தானோ.

முச்சுடர் கவிதை நூலில் வெளிவந்த மூன்று சுடர்களுள் ஒருவரான கவிஞர் ஜௌபர் மௌலானா அவர்களது முத்தான கவிதை இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கவிஞர்களைப் பற்றி.....

1. **ஜௌபர் மௌலானா:** ஆசிரியர் பணியாற்றும் கவிஞர் ஜௌபர் மௌலானா அவர்கள் இளம்பிறையின் மூலம் கவிதைத் துறையிற் காலடி எடுத்து வைத்தவராவர். கட்டுரை - சிறு கதைத் துறைகளில் ஈடுபாடுள்ள இவரது கவிதைகளில் இஸ்லாமிய மணமும் – இலக்கியச் சுவையும் ஒருங்கே அமைந்திருக்கும். பொத்துவில் கிராமத்தைப் பற்றியும் – சமூக ஊழல்களைப்பற்றியும் எண்ணும்போதெல்லாம் கவிஞர் உணர்ச்சிவசப்பட்டு பாடக்கூடியவர். பொத்துவிலில் நடைபெற்ற கவியரங்கொன்றில் புரட்சிக் கனல் கக்கிப் பொதுமக்களின் பாராட்டைப் பெற்றவர். முச்சுடரில் இவர்தம் கவிதைகள் முத்துச் சுடர் விட்டிடாளிர்கின்றன.

2. **கவிவாணன்: எம். ஏ. அஸீஸ்:** மாத்தளை வள்ளுவர் மன்றக் கவிதைப் போட்டியிற் பரிசு பெற்ற கவிவாணன் – தினபதியின் கவிதைப் பண்ணையால் வளர்ச்சி பெற்றவர். கவிவாணனின் ஆரம்பகாலக் கவிதைகள் அவருடைய எதிர்காலத்தைப்பற்றி நம்பிக்கையூட்டின. ஈழத்தில் வளரும் கவிஞர்களுள் கவிவாணன் முன்னணியில் நிற்கிறார். இவரின் கவிதைகளில் உணர்ச்சித் துடிப்பும் – உன்னதமான கருத்துக்களும் இழையோடுவதைக் கவனிக்க முடிகிறது.

3. **கலையன்பன்: எஸ். எம். ஏ. அஸீஸ்:** வானொலிப் பேச்சாளராகிய கலையன்பனுக்கு சொல்லாட்சி கைவரப்பெற்ற கலை என்பதை அவர் தம் கவிதைக் கண் சொல்லாமற் சொல்கின்றன. கவிதைத் துறையில் கலையன்பனின் ஈடுபாடு குறைவுடையது என்றாலும் அவரின் கவிதைத் தரம் குறைவுடையதல்ல.

## பொதுவாக.....

பொத்துவிலின் புத்துணர்வுக் கவிஞர்களின் கூட்டுப் படைப்பு மொத்தத்தில் சிறப்புற அமைந்துள்ளது. பொத்துவிலின் முச்சுடர்களான கவிஞர்கள் கவிதைத் துறையில் பொற்சுடர்களாக விளங்கவேண்டுமென்பதே எமது அவா!

— முதல்வனார் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**45. கி.பி. 1969 - புரட்சிகரமான அறிக்கை.**

# எமது எல்லைப் பிரச்சினை

கிராமச் சபைத் தலைவர்,

**ஜனாப் வை. எம். முஸ்தபா, J. P.**

அவர்களால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது எல்லைப் பிரச்சினை

பொத்துவில் சிறு கிராமமாயிருப்பினும் அது வெளிக்கொணர்ந்துள்ள உண்மைகள் ஈழத்தின் ஓரந்தம் முதல் மறு அந்தம் வரை வாழும் மனிதாபிமானம் படைத்த மக்களின் கண்களைத் திறந்து விடப் போதியவை. சுமார் முப்பது ஆண்டுகளின் முன் ஏற்பட்ட பொத்துவில் - பாணமை எல்லைப் பிரிவினையால் இன்று பொத்துவில் வாழ்மக்கள் பெரும் இன்னல்களுக்கு இலக்காகி விட்டனர். ஒன்பது கிராமங்களைத் தன்னுள் அடக்கிய பாணமைப்பற்று, ஒன்பது கிராம சேவகர்களினதும் ஒரு பிரிவுக்காரியாதிகாரியினதும் பரிபாலனத்தின் கீழ் இயங்கி வருகிறது. இங்கு வசிக்கின்ற சிங்கள, முஸ்லீம், தமிழ் மக்கள் பல நூற்றுண்டு காலமாக இன மத மொழி பேதமின்றி வாழ்ந்து வருகிறுர்கள். ஆனுல் தற்போது பொத்துவில் கிராமத்தில் எல்லைப் பிரச்சினை எழுந்துள்ளதை நாமறிவோம். இன்றைய நிலை ஏற்படக் காரணம் என்ன? இதன் விளைவுகள் என்ன? என்பதனை நாம் நன்கறிந்து, அதனை நிவர்த்தி செய்ய-இப்பிரச்சினையை மிக அமைதியாக ஆழ்ந்து ஆராய்ந்து ஏற்ற வழி வகைகளைக் கையாள்வது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடனுகும்.

பாணமைப் பற்றில் முன்பு ஒரேயொரு கிராமச் சபை இயங்கி வந்தது. இதனை அரசினரின் வேண்டுதலுக்கிணங்க அதிகரிக்க வேண்டியதாயிற்று. அப்போது பொத்துவில் கிராமத்திற்கு ஒன்பது பிரதிநிதிகளும், மற்றையக் கிராமங்களுக்கு ஆறு பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படக் கூடிய வண்ணம் அரசாங்கம் ஆக்கித் தந்தது. ஆனுல் இதனை ஆதரிக்க சிலர் பாணமைப் பற்றுக் கிராம சபையை இரண்டாகப் பி

1960, 70களில் பொத்துவிலின் அரசியலில் மிகப்பிரபல்யமாக பேசப்பட்ட விடயம் பொத்துவில் கிராம சபையின் எல்லைப் பிரச்சினை தொடர்பானதாகும். வளமான இடங்களை இழந்த நிலையில் வளமற்ற பகுதிகளோடு இயங்கி வந்த பொத்துவில் கிராம சபையானது தனக்கு உரித்தாக வரவேண்டிய எல்லைப் பகுதி தொடர்பாக தொடர்ந்து போராடி வந்தது. இந்தப் போராட்டத்தை மிகக் காத்திரமாக மேற்கொண்டு வந்தவர் பொத்துவில் கிராம சபையின் அக்கிராசனர் வை.எம். முஸ்தபா அவர்களாவர். கிராம சபையின் சார்பில் அவரால் வெளியிடப்பட்ட சிறு நூலின் முதலாவது பக்கமே இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46. கி.பி. 1969 - பொத்துவில் யங்ஸ்டார் விளையாட்டுக்கழகம்.



1950களில், அரசாங்க உத்தியோகத்தர்களால் பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்ட பொத்துவில் அரசாங்க உத்தியோகத்தர் விளையாட்டுக் கழகம் மற்றும் 1960களில் படித்த இளைஞர்களால் ஏற்படுத்தப்பட்ட **ஹெட்மேன்** விளையாட்டுக் கழகம் என்பவற்றுக்குப் பின்னர் பலமானதும் ஒழுங்கு படுத்தப்பட்டதுமான, உதை பந்தாட்ட விளையாட்டுக்கென 1969இல் ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டுக் கழகமே **"யங் ஸ்டார்'** விளையாட்டுக் கழகமாகும்.

விளையாட்டில் மிக ஆர்வமும் துடிப்பும் கொண்ட இளைஞரான ஜனாப் எம்.ஐ.எம். இப்றாஹீம் அவர்களது முயற்சியின் விளைவாக, காலஞ்சென்ற பா.உ. எம். கனகரட்ணம் அவர்களது முழுமையான உதவி ஒத்தாசைகளுடன் இது ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஸ்தாபகராகவும், தலைவராகவும் பதவி வகித்தவர் எம்.ஐ.எம். இப்றாஹீம் அவர்களேயாவார். ஏனைய விபரங்கள் வருமாறு,

| | | |
|---|---|---|
| ஆயுட்கால போசகர்கள் | - | திரு. எம். கனகரட்ணம் ஐயா<br>ஜனாப் எஸ்.எம். காசிம் (சேவயர்)<br>திரு. எஸ். முத்துலிங்கம் |
| செயலாளர் | - | ஏ.எல்.ஏ. முகம்மத் |
| உப தலைவர் | - | ஐ. முகைதீன் பிச்சை |
| உப செயலாளர் | - | எம்.சி.ஏ. றசீட் |
| ஏனைய உறுப்பினர்கள் | - | ஜனாப் எம்.எம்.எஸ். முகைடீன், எம். அபுல் ஹசன், எம்.ஐ.ஏ. மஜீட், எம்.பி. அலியார், எஸ்.எச். முகம்மட், எம்.ஏ. சலாம், எம்.ஏ. மூஸாலெவ்வை, எம்.ஏ. அஸீஸ், எம்.எல்.எம். பாறூக், எம்.எம். அப்துல் மஜீட். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. கி.பி. 1970 - **சாதனையாளர்** - எம்.அப்துல் மஜீத்
(ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்.)



***The Flying Gazzle Majeed***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Winners of the National Sports Festival Inter-Club 7-a-Side side team 1970:** Standing L-R: E. K. R. Wijewardana, Bandula Wijesinghe, Daya Jayasundara, Anton Benedict, N. W. Abeysinghe, S. K. Basnayake, M. Morseth. Seated L-R: Rudra Rajasingham (S. P. Headquarters), E. L. Ageygoonewardena (President, Police Sports Club), M. A. Majeed (Captain), Kavan Rambukwella (Coach) and S. T. Thuraliretnam (Hony. Secy. Police Rugby Secy).

# The 'Flying Gazzle' Majeed

**Text and pix by M. Farook Lantra**

Mohamed Abdul Majeed, the wizard of rugby of the Ceylon rugby team in of the 70s, has a string of achievements to his credit.

Majeed is a product of Zahira College Colombo.

In 1959-60, he was a member of the soccer team and then became the champion athlete of Angora House.

In 1959, he chose to play rugby for Angroa House in the Inter House tournaments. During this tournament, he played a grand game and planted several tries through his sizzling runs and finally Angora House emerged champions.

While the Inter House tournament was on, his skills and his ability was spotted by the late O. M. Muhlar (Master in Charge, Rugby), A. H. A. Samad (Coach) T. Amith and K. S. Mohamed and was chosen to play as a center for the college team.

In 1960, he played practice matches against the CR Bees and the college defeated the CR Bees due to a few Majeed specials.

At that time, the CR Bees was captained by rugby legend, Summa Navaratnam, who was also a coach. Young Majeed's superb performance caught the eye of Summma who contacted Zahira College and spoke to Samad who was also an ex CR and Sri Lanka player. Permission was granted for Majeed to cross over to CR & FC after leaving school in 1960.

Majeed's first match for CR & FC 1st XV was in 1962 against CH & FC at the Race Course Grounds.

In 1964, he had the opportunity to join the then Ceylon Police as a Sub Inspector and was a member of the Police rugby. The rise of Police rugby came to the limelight after 1964.

Majeed captained the Ceylon Police from 1968 to 1970. He took over the captaincy from another stalwart, S. Sivendran.

Majeed, who was a regular member of the Ceylon rugby National team from 1965 had the honour of captaining the Ceylon National rugby team in 1970 and during his captaincy in 1971 he took part in the Asiad held in Sri Lanka.

Majeed, who has an unblemished record in rugby, was the first Policeman to touch the



Mohamed Abdul Majeed

Clifford Cup during his captaincy in 1970. He is the first policeman to captain the Ceylon National team which he did in 1970.

Finally, in 1972, he played his last match against the Sri Lanka Army as a wing three quarter.

During this match, when Majeed was running at terrific speed for a try, behind came Army's wing three quarter M. P. Amaradasa (taxi), who came up with a nasty tackle. Majeed twisted his ankle, and that put paid to his chances of playing again.

He prematurely retired as an SSP to enter politics.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை முஸ்லிம்களின், குறிப்பாக கிழக்குவாழ் முஸ்லிம்களின் வரலாற்றில் மிக அழுத்தமாக தடம்பதித்தவர்களுள் ஒருவர் பொத்துவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட எம்.அப்துல் மஜீத் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) அவர்கள்.

பொத்துவில் மண்ணின் நாமத்தினையும், சிறப்பினையும் இலங்கையெங்கிலும், சில உலக நாடுகளிலும் பறைசாற்றியதில் இந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அல் ஹாஜ் எம். அப்துல் மஜீத் அவர்களுக்கு நிறையவே பங்கு உண்டு.

1941 செப்டம்பர் 23ஆம் திகதி பொத்துவிலில் இ.லெ.போ. மீராசாஹிபு போடியார் - மீ.லெ.போ. ஜுவைரியத்தும்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராக பிறந்தவரான அப்துல் மஜீத் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியினை பொத்துவில் மெ.மி.த.க பாடசாலையிலும், பொத்துவில் அரசினர் ஆண்கள் பாடசாலையிலும் கற்றுத் தேர்ந்து 05ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையிலும் சிறந்த சித்தியினையும் பெற்றுக் கொண்டார். 06ஆம் வகுப்பினை பொத்துவில் அரசினர் கனிஷ்ட பாடசாலையிலும் 07 தொடக்கம் SSC வரையிலான கல்வியினை ஆங்கில மொழி மூலமாக மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரியிலும் நிறைவு செய்த இவர் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் உயர் தர வகுப்பு விஞ்ஞானப் பிரிவிலும் கல்வி கற்றவர்.

ஒரு அரசாங்க வைத்தியராக வரவேண்டும் என்ற அவரது குடும்பத்தினரின் கனவுகளையும் மீறி, இறைவனின் விதி அன்னாரை, ஒரு சிறந்த றகர் விளையாட்டு வீரராகவும் அதனூடாக பொலிஸ் துறையில் பல படிக் கற்களைத் தொட்டு சாதனையாளராக மிளிரவும் வழிசமைத்தது. றகர் விளையாட்டில் **Sri Lankan Rugby Captain** (1965 - 1972) ஆகவும், முதல் முஸ்லிம் கெப்டன் ஆகவும் சிறந்து விளங்கிய இவர் விளையாட்டு ரசிகர்களினாலும், ஊடகங்களினாலும் **"Flying Gazzle"** என வர்ணிக்கப்பட்டார். இறைவனின் உதவியால் தனது அபார விளையாட்டுத் திறமைகளினால் உள்ளூர் எதிரணிகளை மட்டுமல்லாமல் சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாட்டு அணிகளையும் திக்கு முக்காடச் செய்து தனது தாய் நாட்டுக்கு சிறப்பினை பெற்றுக் கொடுத்தவர். இவற்றின் விளைவாக பொது மக்களால் இவர் றகர் மஜீத் எனவும் செல்லமாக அழைக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1964இல் பொலிஸ் துறையில் ஆரம்ப கட்டமாகவே **Sub Inspector** ஆக காலடி எடுத்து வைத்த அப்துல் மஜீத் அவர்கள் 1964 தொடக்கம் 1971 வரை SI ஆக சிலாபம், குருநாகல், தெகிவளை போன்ற இடங்களில் மிகத் துடிப்புடனும், திறமையுடனும் கடமையாற்றினார். இதன் விளைவாக இவரது திறமைக்குப் பரிசாக, 1971 இல் **Inspector of Police** ஆக (IP) பதவி உயர்வு பெற்று கொழும்பு சினமன் கார்டன் பகுதியில் அதிரடியாக பணிபுரிந்து வந்த வேளையில் அடுத்த பதவி உயர்வும் தேடி வந்தது. 1974 இல் OIC ஆக பருத்தித்துறையில் தொடங்கிய இவரது பணியானது கந்தளாய், பொலநறுவை, கிருலப்பனை, நாரஹேன்பிட்டி, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி வரையிலும் தொடர்ந்தது. பல பாதாள உலகக் கும்பல்களை வேரோடு சாய்த்து பொலிஸ் திணைக்களத்தின் நன்மதிப்பினையும், பெற்றுக் கொண்ட இவர் 1981இல் உதவிப் **பொலிஸ் அத்தியட்சகராகவும் (ASP)** பதவி உயர்வு பெற்றுக் கொண்டவர். கொள்ளுப்பிட்டி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில், பயங்கரவாதம் முளைத்து வந்த அந்தக் கால கட்டங்களில் இவர் துணிச்சலாகக் கடமையாற்றி வேகமாக வளர்ந்து கொண்டிருந்த வேளையில், இவரது திறமையினை நன்கு இனங்கண்டுகொண்ட பொலிஸ் திணைக்களம் இவரை National Intelligence Bureau (NIB) வில் இணைத்துக் கொண்டது. 1983 தொடக்கம் 1994 வரை இப்பிரிவில் இவர் ஆரம்பத்தில் **Assistant Director** ஆகவும் பின்னர் **Deputy Director** ஆகவும் கடமையாற்றியிருப்பினும் இக் கால எல்லைக்குள் தான் இவர் பொலிஸ் அத்தியட்சகராகவும் (SP) சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகவும் (SSP) பதவியுயர்வும் பெற்றுக் கொண்டார். இதே வேளை 1984 தொடக்கம் 1988ஆம் ஆண்டு வரை தமிழ் நாடு சென்னையில் அமைந்துள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் முதல் தர பாதுகாப்புச் செயலாளராகவும் இவர் பணியாற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

1989ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அதிமேதகு ஜனாதிபதி R. பிரேமதாசவின் அழைப்பின் பேரில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஐ.தே.க வின் வேட்பாளராகப் போட்டியிட்டு அதன் வெற்றிக்காக உழைத்த அப்துல் மஜீத் அவர்கள் மீளவும் 1994ஆம் ஆண்டிலும் இதே மாவட்டத்தில் இதே கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு கணிசமான வாக்குகளைப் பெற்று திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஐ.தே.க வின் வெற்றிக்காக அயராது உழைத்தாலும் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு தனது மக்களுக்காக சேவையினை நல்க வேண்டும் என்ற இவரது கனவு மெய்ப்படவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இங்கு விஷேடமாக குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விடயம் என்னவெனில், இலங்கையின் வரலாற்றில் ஒரு அரசாங்க (பொலிஸ்) உத்தியோகத்தருக்காக, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தலைமையில் கெபினட் கூட்டப்பட்டு விஷேட தீர்மானங்களை மேற்கொண்டு அரசாங்க பதவி வகித்தல் மற்றும் ஓய்வு பெறுதல் தொடர்பான சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது என்றால் அது பொத்துவில் மண்ணில் பிறந்த எம். அப்துல் மஜீத் என்ற ஒருவருக்காக மட்டுமே தான். குறிப்பாக 1989இல் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேண்டி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியிலிருந்த அப்துல் மஜீத் அவர்களை, தொழிலை இராஜினாமா செய்ய வைத்து, வென்றால் MP (பாராளுமன்ற உறுப்பினர்) - தோற்றால் SP (பொலிஸ் அத்தியட்சகர்) என்ற உடன்பாட்டின் அடிப்படையில், பா.உ. பதவியினை இவர் பெறத் தவறியதையடுத்து 1989இல் மீண்டும் தனது தொழிலைப் பெறவும் பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெறவும் வழிவகுத்த ஜனாதிபதி R. பிரேமதாச தலைமையிலான கெபினட் தீர்மானமும், பின்னர் 1994இல் பிரதிப் பொலிஸ்மா அதிபராக (DIG) பதவி உயர்வு பெறும் நோக்குடன் நேர்முகப் பரீட்சைக்கு சென்று வந்த பின்னர், வெளிவிவகார அமைச்சர் ACS. ஹமீட் அவர்களது வற்புறுத்தலின் பேரில் ஜனாதிபதி DB. விஜேதுங்க தலைமையிலான மினி அமைச்சரவையானது அவசர, அவசரமாகக் கூடி அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வுபெறும் வயதுக்கு முன்பாக அவர் ஓய்வு பெறுவதற்கு விரும்பினால், ஓய்வு பெறும் திகதிக்கு ஒரு மாத காலத்திற்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று இருந்த 44/90ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் நிபந்தனையை இரத்துச் செய்து அப்துல் மஜீத் அவர்கள் உடனடியாகவே ஓய்வுபெறுவதற்கு வசதியாக சுற்றுநிருப நிபந்தனையை, ஓய்வுபெற விரும்புகின்றவர் உடனடியாகவே விண்ணப்பிக்கலாம் என மாற்றியமைத்து, அப்துல் மஜீத் அவர்களை சட்ட ரீதியாகவே ஓய்வும் பெறவைத்து 94ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைத்தமையும் இலங்கையின் வரலாற்றில் சிறப்பாக பதிவு செய்யப்பட வேண்டிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளேயாகும்.

இதே வேளை கிழக்கு மாகாண மட்டத்தில் முஸ்லிம்களிடத்தில் மட்டுமல்லாது ஏனைய இனத்தவரிடத்திலும் கூட இவரது செல்வாக்கு அதிகரிப்பதற்குரிய சூழ்நிலைகள் 1990களில் இடம்பெற்றன. இக்காலப்பகுதியில் வடக்கு, கிழக்கில் பயங்கரவாதம் உச்சக்கட்டத்தில் இருந்த வேளையில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கிழக்கு மாகாண பாதுகாப்பு இணைப்பதிகாரியாக நியமனம் பெற்று 1994 வரை மிகச் சிறந்த முறையில் பணியாற்றி கிழக்கு வாழ் மக்களது உள்ளங்களிலும் சிறந்த இடத்தினை பிடித்துக் கொண்டவர் இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994ஆம் ஆண்டுத் தேர்தலுடன் தனது பொலிஸ் துறைப் பதவியிலிருந்து இவர் ஓய்வினைப் பெற்றுக் கொண்டாலும் இவரது ஆற்றலை தொடர்ந்து வந்த கால கட்டங்களில் தனியார் துறையினரும் பயன்படுத்திக் கொண்டனர்.

2000ஆம் ஆண்டில் ஐ.தே.க வில் தேசியப் பட்டியல் MP யாக பாராளுமன்றத்திற்குள் களம் புகுந்த அப்துல் மஜீத் அவர்கள் துரதிஷ்ட வசமாக 2001 இல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதனை அடுத்து ஒரு வருடகாலம் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை வகிக்க நேர்ந்தது. இருப்பினும் அம்பாறை மாவட்டத்திலோ, தேசிய ரீதியாகவோ இவரது செல்வாக்கு தொடர்ந்தும் (ஏற்றம், இறக்கம் என) காணப்படவே செய்தது. 2002ஆம் ஆண்டு தொடக்கம் 2004ஆம் ஆண்டு வரை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நோர்வேயின் ஒஸ்லோ நகரில் இடம்பெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகளில் இலங்கை முஸ்லிம் இனக் குழுமத்தின் பிரதிநிதிகளுள் ஒருவராக இவர் கலந்து சிறப்பித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



1994இல் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது, SLMC யின் தலைவர், கௌரவ அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து போட்டியிடுமாறு அழைப்பு விடுத்த போதிலும் அப்போதைய அரசியல் சூழ்நிலைகள் அதற்கு இடம் கொடுத்திருக்கவில்லை. காலவோட்டத்தில் ஐ.தே.க வில் அதிருப்தி அடைந்த SSP அவர்கள் 2004 இல் SLMC யின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களது அழைப்பின் பேரில் அக்கட்சியில் இணைந்து கொண்டார். SLMC யின் அரசியல் உயர்பீட உறுப்பினராகவும் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் SLMC யின் வேட்பாளர்களுள் ஒருவராகவும் இவர் போட்டியிட்டாலும், கணிசமான வாக்குகளைச் தொடர்ந்தும் பெற்றுக் கொண்டாலும் பாராளுமன்ற உறுப்பினராக வெற்றிபெற முடியாமல் போய்விட்டது. இந்த துர்ப்பாக்கியமான நிலையானது இவருக்கு மட்டுமல்ல, பொத்துவில் மண்ணைச் சேர்ந்த எவருக்குமே கிடைக்கக் கூடியதுதான். தொகுதிவாரி தேர்தல் காலத்தின் போதும், விகிதசம தேர்தல் காலத்திலும் கூட பொத்துவில் மக்களது வாக்குகளால் வெளியூர்ப் பிரதிநிதிகள் வெற்றிபெறக்கூடியதொரு நிலையே இன்று வரையிலும் தொடர்ந்து காணப்படுகின்றது. பொத்துவில் மக்கள் ஏனைய பிரதேச வேட்பாளர்களுக்கு தமது வாக்குகளை வாரி வழங்குகின்ற அளவுக்கு, ஏனைய பிரதேச மக்கள் பொத்துவில் மண்ணைச் சேர்ந்தவர்களுக்கு வாரி வழங்குவதில்லை என்பதே வரலாறாகவும் இருந்து வருகின்றது. அந்த வகையில் நோக்கினால் எம். அப்துல் மஜீத் அவர்கள் பொத்துவில் மண்ணில் இதுவரை தோல்வியடைய வில்லையென்பதும் வரலாறுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014ஆம் ஆண்டில் SLMC லிருந்து விலகிய அப்துல் மஜீத் அவர்கள் மீண்டும் தனது தாய்க்கட்சியான ஐ.தே.க வில் இணைந்து அக் கட்சியின் கிழக்கு மாகாண கரையோர அமைப்பாளராகவும் நியமனம் பெற்றுக் கொண்டார். அண்மையில் இடம்பெற்ற 7வது ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு ஆதரவாக கிழக்கு மாகாண பிரச்சார நடவடிக்கையில் களமிறங்கி செயற்பட்ட இவருக்கு, ஐ.தே.க உயர் மட்டத்தில் தற்போது சிறந்த செல்வாக்கு நிலையும் காணப்படுகின்றது. இருப்பினும் கிடைக்கும் என பரவலாக எதிர்பார்த்த கிழக்கு மாகாண ஆளுநர் பதவி எம்.அப்துல் மஜீத் அவர்களுக்கு கிடைக்காமல் போனது பெரும் ஏமாற்றத்தினையே தருகின்றது. எவ்வாறு இருந்தாலும் பொத்துவிலில் விளைகின்ற முத்துக்கள் ஈழமெங்கும் பிரகாசித்தே வந்துள்ளன என்பதற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். அப்துல் மஜீத் அவர்களும் ஒரு உதாரணப் புருஷரே.



M.ABDUL MAJEED SSP



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**48.** கி.பி. 1970 - பொத்துவில் பொது நூலகம் ஆரம்பம்.

# பொத்துவில் கிராமச் சபை

## உள்ளூராட்சி வார விழா

### 8-2-70 — 13-2-70

அன்பரீர்,

பொத்துவில் உள்ளூராட்சி வார விழாவை உன்னதமாகக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளோம். பின் குறிப்பிடும் நிகழ்ச்சி நிரலின்படி உரிய இடங்களில் சமுகமளித்து ஒத்துழைத்து ஊக்குவித்து உதவுமாறு சகலரையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்,

வை. எம். முஸ்தபா ஜே. பீ.
தலைவர்,
கிராமச் சபை, பொத்துவில்.

பொத்துவில்,
6-2-70.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிகள்

—( ✶ )—

## 8-2-70 ஞாயிறு: சமய ஆராதனை தினம்

*காலை 5 மணி:*
பொத்துவில் பள்ளிவாயல்.

சுபஹூத் தொழுகையும் பிரார்த்தனையும்

*காலை 6 — 9 மணி வரை:*

**ஊர்வலம்.**

மாணவர்கள், துவிச்சக்கர வண்டிகள், உழவு இயந்திரங்கள், பெற்றோர்கள், பிரமுகர்கள் பவனி வருதல்.

*காலை 9-00 — 9-30 மணி வரை:*
கிராமச் சபைக் காரியாலயம்.

பாணமைப் பற்றுப் பிரிவுக் காரியாதிகாரி ஜனுப். M. H. A. சுக்கூர் அவர்களால் கொடியேற்றி வைத்தல்.

*காலை 9-30 — 12-00 மணி வரை:*
பொத்துவில் பள்ளிவாயல்.

பள்ளிவாயல் கட்டிடம், வளவு ஆதியனவற்றை துப்பரவு செய்தலும்,
ஏழைகளுக்கு குடிநீர் வழங்கலும்.

*பி. ப. 4 — 6 மணி வரை:*
பொத்துவில் பள்ளிவாயல்.

பிரார்த்தனையும்,
உலமாக்களால் சன்மார்க்கப் போதனைகளும்.

## 9-2-70 திங்கள்: சிரமதான தினம்

*காலை 9-30 — பி. ப. 2-00 மணி வரை:*
பொத்துவில் எல்லைக்குட்பட்ட பாடசாலைகள்.

துப்பரவு செய்தலும், பாலர் பாடசாலைக்கு கிராமச் சபை மூலம் கேற் நடுதலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10-2-70 செவ்வாய்: சுகாதார தினம்

காலை 9-30 — 11-30 மணி வரை:
பொத்துவில் கிராமச் சபைக்குட்பட்ட பகுதிகள்.

பெற்றோர், மாணவ, மாணவிகளின் சுகாதார ஊர்வலம்.

காலை 11-30 — 12 மணி வரை:
கிராமச் சபைக் காரியாலயம்.

பொத்துவில் சுகாதார அதிகாரிகளின் பேச்சு.

பி. ப. 3 — 5 மணி வரை:
கிராமச் சபைக் காரியாலயம்.

வீடு, வளவுகள், திடகாத்திரமான ஒரு வயதுக் குழந்தைகள், போறணைகள் ஆதியனவற்றின் தேர்வு.

## 11-2-70 புதன்: சேரி ஒழிப்பு தினம்

காலை 10 — 12 மணி வரை:
பொத்துவில் பள்ளிவாயலுக்கருகாண்மையில்.

சேரி ஒழிப்பும், வடிகால் திட்டமும்.

## 12-2-70 வியாழன்: கல்வித் தினம்

காலை 9 — 10 மணி வரை:
கிராமச் சபைக் காரியாலயம்.

நூல் நிலையத் திறப்பு விழா.

திறந்து வைப்பவர்:
ஜனாப். ஆ. கி. த. மு. ம. மீராலெவ்வை அவர்கள்.

காலை 10 — 10-30 மணி வரை:
கிராமச் சபைக் காரியாலயம்.

நூல் நிலையத்திற்கான பத்திரிகைகளின் சந்தாப் பணமேற்றலும் — புத்தகங்கள், நன்கொடை வழங்கலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13-2-70 வெள்ளி: கலாச்சார, விளையாட்டுகள் தினம்

*காலை 6 — 8 மணி வரை:*
பொத்துவில் பசறிச்சேனை அ. மு. க. பாடசாலையிலிருந்து
பொத்துவில் பொலிஸ் நிலையம் வரை.

துவிச்சக்கர வண்டியோட்டப் போட்டியும்,
மரதன் ஓட்டப் போட்டியும்.

*காலை 8 — பி. ப. 2 மணி வரை:*
பொத்துவில் அ. மு. க. பாடசாலை.

தேசிய விளையாட்டு நிகழ்ச்சிகள்.

*பி. ப. 3 — 4-30 மணி வரை:*
மகாவித்தியாலயம்.

உதைபந்தாட்டப் போட்டி.
பொத்துவில் கழகங்களுக்கிடையில்.

*பி. ப. 4-45 — 6-00 மணி வரை:*
பொத்துவில் தபாற் கந்தோரருகிலுள்ள கரப்பந்தாட்ட மைதானம்

1. கரப்பந்தாட்டப் போட்டி.
2. வலைப்பந்தாட்டப் போட்டி.

*பி. ப. 7-45 — 10-45 மணி வரை:*
பொத்துவில் அ. மு. க. பாடசாலை.

கலை விழா நிகழ்ச்சியும், கடந்த நிகழ்ச்சிகளில்
வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கலும்.

### நிகழ்ச்சிகள் யாவும் ஒலி பெருக்கப்படும்.

துவிச்சக்கர வண்டிப் போட்டிப்
பரிசு அன்பளித்தவர்:

திரு. எம். கனகரெத்தினம் அவர்கள்
பிரபல வர்த்தகரும், அரசாங்க ஒப்பந்தக்காரரும்.

•—O—•

ஆனந்தா அச்சகம், பிரதான வீதி, கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49. கி.பி. 1970 - பொத்துவில் கிராம பிதாவின் அறிக்கை.

### பொத்துவில் கிராமச்சபை

ஈழநாட்டின் தென்கிழக்கிலே இடம்பெற்றுள்ள கிராமங்களில் பொத்துவில் கிராமமும் ஒன்ருகும். இது ஓர் சிறுகிராமமாயிருப்பினும், கிழக்கே இந்துமகா சமுத்திரத்தையும், தெற்கும், மேற்கும் வளங்கொழிக்க வகையாற்றும் வெள்ளப் பெருக்கெடுத்து வளைந்து நெழிந்து செல்லும் நாவலாற்றையும், வடக்கே ஊரணியென்னும் ஓடையையும், நீர்வளத்தால் செழிப்புற்றேங்கும் நெல் வயல்களையும், எல்லையாகக் கொண்டு பார்ப்போர் மனதைப் பரவசத்திலாழ்த்தும் இயற்கை வனப்புடையதாய்க் காட்சியளிக்கின்றது. அன்றியும், இக்கிராமத்தை நடுநாயகமாகக்கொண்டு கோமாரி, லகுகலை, ஹுலானுங்கை, வக்மிற்றியாவ, பாணமை, கூமுனை ஆதியாம் குக் கிராமங்கள் சூழ்ந்து ''பாணமைப்பற்று'' என்னும் காரணப் பெயருடன் மலர்மாலையின் நடுநாயகம்போல் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. மேலும், அளவிடற்கரிய அனேக பிரிவுகளல்லாது மும்மூர்த்திகளைப்போன்று மூன்று குறிச்சிகளை மட்டுமுடையதாயுமுளது.

*ஆட்சிமுறை:*

1943ம் ஆண்டு முற்பகுதிவரை ''பாணமைப்பற்று கிராமச்சங்கம்'' என்னும் ஒரேயொரு கிராமச்சங்கம் மட்டுமே இப்பகுதியில் இயங்கி வந்தது. 26-3-1943ம் திகதி வெளியான 9103ம், இலக்க அரசாங்க வர்த்தமானிமூலம் (பொத்துவில் 1ம், 2ம், குறிச்சிகளையுள்ளடக்கிய) பொத்துவில் கிராமச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. முற்கூறிய குக்கிராமங்களுடன் பொத்துவில் கிராமத்தின் அதி பிரதான பகுதியாம் 3ம் குறிச்சியுடன், பாணமைக் கிராமச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. மூன்று குறிச்சிகளை மட்டுமுடைய பொத்துவில் கிராமத்தின் பிரதானமான



அல்-இர்பான் பாடசாலையின் நிகழ்வொன்றில் உரையாற்றும் அக்கிராசனர் YM. முஸ்தபா அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்கபாதைக்கண்மித்த. சகல ஸ்தாபனங்களையுள்ளடங்கிய, இக்கிராமத்தின் பிரதான வருவாய் திரட்டக்கூடிய பகுதியாகிய மூன்றும் குறிச்சி பாணமைக் கிராமச்சங்கத்துடன் இணைக்கப்பட்டதை நோக்குமிடத்து ஒருமனிதனின் தலைப் பாகம் வேருகவும், உட்பாகம் வேருகவும் பிரிக்கப்பட்டதையொப்ப விருக்கின்றது. எனவே தலையில்லா முண்டம்போல் பொத்துவில் கிராமத்தின் பிரதான பகுதியையிழந்த பொத்துவில் கிராமச்சங்கம் தற்போது இரு குறிச்சிகளைமட்டும் உள்ளடக்கியதாய்க் கருமமாற்றி வருகின்றது. இவ்விரு குறிச்சிகளையுமுள்ளடக்கிய இடப்பரப்பே ''பொத்துவில் கிராமச்சபை'' இடப்பரப்பாகும்.

**உறுப்பினர்கள்:—**

பொத்துவில் கிராமத்தின் பிரதானபகுதியாம் மூன்றுங்குறிச்சி ஒரு வட்டாரமாக்கப்பட்டு மற்றக் கிராமச்சபையுடன் இணைக்கப்பட்டிருப்பினும், 1ம், 2ம் குறிச்சிகளான இரு குறிச்சிகளும் கிராமச்சங்க நியதிக்கேற்ப எட்டு வட்டாரங்களின் இடப்பரப்பாக பிரிக்கப்பட்டு, எட்டு உறுப்பினர்கள் பணிபுரியத் தக்கதாய் அமைக்கப்பட்டுள்ளது. எனவே உறுப்பினர்கள் எண்மர் தொண்டாற்றும் ஸ்தாபனமாக இயங்குகின்றது. பொத்துவில் கிராசச்சபை தலைப் பாகத்தையிழந்த முண்டமாக தன்னிறைவுபெறத் தத்தளிக்கும் நிலையையடைந்த போதிலும் இச்சபைக்கு அவ்வப்போது தெரிவு செய்யப்பட்ட கிராம பிதாக்களினதும், உறுப்பினர்களதும் அயராமுயற்சியும், சுயநலமற்ற சேவையும் இக்கிராமம் முன்னேற வழி வகுத்துதவியுள்ளது.

முதன் முதலாகப் ''பொத்துவில் கிராமச்சங்கம்'' ஸ்தாபிக்கப்பட்டபோது முதலாவது கிராம பிதாவாக ஜனுப் வை. எம். முஸ்தபா அவர்களே நியமனம் பெற்ருர். அதன்பின்னர் ஜனுப் எம். எம். கலந்தர்லெவ்வை மரைக்காயர், ஜனுப் எம். ஏ. முகம்மதுலெவ்வை (காலி) ஜனுப் இ. லெ. மீராசாகிபுப் போடியார், ஜனுப் ஏ. பீ. இஸ்மாலெவ்வை ஆகியோர்களும் இச்சபையின் தலைவர்களாக நியமனம் பெற்றுத் தொண்டாற்றி வந்துள்ளனர். இச்சபையின் முதல் கிராம பிதா கையேற்கும்போது சில புத்தகங்களும், கோவைப் புத்தகங்களும் அழிந்து பாழடைந்த ஓர் மார்க்கட் கட்டிடமும், கால் ஏக்கர் நிலமுமே இதன் ஆஸ்திகளாக இருந்தன. தற்போது பின்குறிப்பிடும் ஆஸ்திகளை நம் கிராமச் சபை சொந்தமாக்கி அவற்றைப் பரிபாலித்து வருவதைக் காணுமிடத்து பொத்துவிலைத் தாயகமாகக் கொண்ட எவருமே பூரிப்படையாதிருக்கமுடியாது.

**உடைமைகளாவன:—**

(1) கிராமச் சபைக்குரிய வளவும், கட்டிடமும், மதிற்சுவர்களையுடையதும், மலகூடம், தொழிலாளர் வசிக்குமிடம், விலங்கினங்கள் கட்டப்படும் கொட்டில் ஆதியனவும்,

(2) பாதைகளில் 28 பாதைகள் கிறவல் ரோட்டாக்கப்பட்டுப் பலவருடங்களாகப் பரிபாலிக்கப்பட்டும் வருகின்றன, அத்துடன் 21 பொதுக்கிணறுகளையும் உடையதாயிருக்கின்றது,

(3) பாழடைந்து பாவிப்பின்றிக் கிடந்த சந்தை வளவில் இரு நிரந்தரக் கட்டிடங்களும், பல தற்காலிகக் கடையறைகளும், மீன், இறைச்சி, மரக்கறி வகை ஆதியாம் பலரக வியாபாரஞ்செய்யும் பிரபல் இடமாய்க் காட்சியளிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) மதியொளி மன்றம் என்னும் இயக்கத்தின் தலைவர் ஜனாப் எம். எம். யூசுப் அவர்களினதும், அவர் உறுப்பினர்களினதும் அயரா முயற்சியால் ஓர் சிறந்த நூல் நிலையம் இக்காரியாலயக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. இந் நூல் நிலையத்தை நம்சபை பொறுப்பேற்றுக் கிராமச்சபைக் காரியாலயத்தில் மேலதிகமாயமைக்கப்பட்டுள்ள இரு அறைகளில் ''பொது நூல் நிலையமாக'' 12–2–70ம் திகதியிற் புனர் நிர்மானஞ்செய்ய எத்தனிக்கப்பட்டுமுளது.

(5) இக்கிராமச்சபை எல்லைக்குள் நான்கு சனசமூக நிலையங்களும் ஓர் நிரந்தரமான கட்டிடமும் உண்டு. அன்றியும் தற்காலிகமான ''பட்டமாளிகை'' ஒன்றும் இயங்கி வருகின்றது.

(6) தொன்றுதொட்டுப் பொத்துவில் கிராமத்தின் முஸ்லீம்களின் அடக்க ஸ்தலங்களாகப் பாவிக்கப்பட்டுவந்த 1ம் குறிச்சி மையவாடி, 2ம் குறிச்சி மைய வாடி, உல்லை மையவாடி ஆகிய மூன்று மையவாடிகளும் தற்போது கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கின்றது மட்டுமல்ல இவைகள் வருடந்தோறும் பரிபாலிக்கப்பட்டும் வருகின்றன.

## உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்

இக்கிராமச்சபையின் ஆரம்பம்முதல் 1961ம் ஆண்டு பிற்பகுதிவரை லிகிதர்ப் பதவியில் கூட்டு லிகிதர் ஒருவரே இரு கிராமச் சபைகளிலும் கடமை புரிந்துவந்துள்ளனர். (அதாவது வாரத்தில் மூன்றுநாட்களில் பொத்துவில் கிராமச்சபையிலும், மூன்றுநாட்களில் பாணமைக் கிராமச்சபையிலும்) காவலரும், தூதுவரும் என்னும் பதவியில் ஒருவரும் ஆக இருவர் மட்டுமே உத்தியோகத்தர்கள் என்னும் இடத்தை வகித்துவந்துள்ளனர், 1961ம், ஆண்டு பிற்பகுதி முதல் இலிகிதர் ஒருவரும், காவலர் தூதுவர் ஒருவரும் இருவர்களே கடமையாற்றுகின்றனர். விரைவில், இன்னும் இரு பதவிகளை ஏற்படுத்த ஒழுங்குகள் கையாளப்பட்டு வருகின்றன. அன்றியும், இரு நகரசுத்தி தொழிலாளர்களும் ஓர் குப்பைக் கரத்தையும் சேவையிலீடுபட்டு வருகின்றன.

இக்கிராம சபையில் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள இலிகிதர்களே 1961ம் ஆண்டு பிற்பகுதிவரை கடமையாற்றி வந்துள்ளனர். அதன்பின் உள்ளூராட்சி சேவையிலில்லாத இலிகிதர் ஒருவரே கடமையாற்றி வருகின்றார். எனினும் இந்த இலிகிதரின் அயரா ஊக்கத்தினாலும், பொதுத் தொண்டார்வத்தினாலும், பொறுமை, பொதுநலம், ஆதிய நற்பண்புகளினாலும் இக்கிராமச்சபை புனர் ஜென்மம் பெற்று வளர்மதிபோல் முன்னேற்றமடைந்துளதென்பது இப்பகுதி மக்களுக்கு எடுத்தியம்பவேண்டியதில்லையெனத் திடமாகக் கூறலாம்.

இப்பகுதி மக்களும், அன்னவர்களின் சந்ததியினரும் குடியிருக்கப் போதிய நில வசதியற்ற குறுகிய இடப்பரப்பில் வாழப்பெற்றது நம்மவர்களின் துர்ப்பாக்கியமே, இப்பகுதிக் கிராமசேவக்ர் எல்லைகளும் மிகப் படுமோசமான பிரிவினைகளாக்கப்பட்டுள்ளன, உதாரணமாக ஐம்பது வாக்காளர்களுள்ள கிராமத்திற்குக் கொடுக்கப்பட்டள்ள எல்லைவீதமே, ஐயாயிரம் வாக்காளர்களுள்ள கிராமத்துக்கும் வழங்கப்பட்டுளது, இதைத் திருத்தியமைக்கப் பாராளுமன்ற உறுப்பினர், மாவட்ட அதிபர், ஆகியோர்களுடன் நம்சபை தொடர்புகொண்டு ஆவனசெய்ய எத்தனித்துளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதியளவு வயல் நிலங்களிருப்பினும் நீர் வழமின்மையால் இவைகளால் நற்பயன்பெற இயலாதிருக்கின்றது, சிலவேளைகளில் இலாபத்திற்குப் பதிலாகப் பெரும் நட்டத்தையேயடையவேண்டி ஏற்படுகின்றது. எனவே இவைகளால் பூரணபலனடையவேண்டுமெனில் ''ஹெட்ஒயா'' கட்டப்படல் வேண்டும், இல்லையேல் ''வலதுகைவாய்க்கால்'' பாணமை மட்டும் திறக்கப்படல் வேண்டும்.

பெரும்பான்மையான இப்பகுதி மக்களின் தொழில் விவசாயமும், மீன் பிடித்தலுமேயாம், பெரும் வியாபாரத் தொடர்புகள் இப்பகுதி மக்களிடமில்லையென்றே கூறலாம், கைத்தொழில் நிலையங்களும் மிக அபூர்வமே.

சுகாதாரத்தைப் பொறுத்த மட்டில் இப்பகுதி மிகப் பிற்போக்கான பகுதிகளில் ஒன்றென்றே கூறலாம். இங்கமையப்பட்டுள்ள அரசினர் வைத்தியசாலை இக்கிராம மக்களுக்குமட்டுமல்ல பாணமைப்பகுதி மக்களனைவர்கட்கும் சேவையாற்றவேண்டிய நிலையையுடையது. இங்குள்ள துர்வாடையும், சுகாதாரத்தைப் பாதிக்கக் கூடிய தன்மைகளும், இப்பகுதியின் சுகாதார நிலையை வெளிப்படையாகக் காட்டக்கூடியதாயமைந்துள்ளது. சுகாதாரத்தைப் பேணுமிடம் இவ்வாறாயின், இக்கிராமத்தின் சுகாதார நிலை? .... ... ....

அரசினர் வைத்தியசாலை, நோயாளர் தங்குமிடம் ஆதியன வருடாந்தம் அல்லது இரண்டு, மூன்று வருடங்கட்கொரு முறையாவது பரிபாலிக்கப்படுவதில்லை, எப்போதாவது சுகாதார மந்திரியார் போன்ற மகான்கள் வருகை தரும்போதுதான் இவைகள் சற்றுப் பரிபாலன வேலையிலீடுபட்டுச் சுத்தமாகக் காணப்படும். சமீபத்தில் நடைபெற்ற சுகாதார மந்திரியவர்களின் வரவேற்பே இதற்குப் போதிய சான்றாகும்.

இப் புண்ணியபூமியின் பாக்கியத்தின் மிகச் சிரேட்டமானது கௌரவ மந்திரிமார்களின் வருகையேயாகும், அடிக்கடி இங்கு பல மந்திரிமார்களும் விஜயமளிப்பார்கள், அப்போது எங்கள் குறைகளை எடுத்தியம்பி மன்றாடுவோம். சுருங்கக்கூறின் நாங்கள் எங்கள் குறைகளைக் கூறுமலுமில்லை, இறுதிவரை இலவுகாத்த கிளியின் நிலை போலாகிவிடுவதே மிகத் துக்ககரமான செயலாகின்றது, எனினும், மனித வாழ்வுக்கு மிகமிக முக்கியமானதாம் சுகாதாரக் குறைபாடுகளை நிவர்த்திக்க நம்சபை முக்கிய நடவடிக்கையெடுத்து வருகின்றது. அன்றியும் மாதாசிசு பரிபாலன நிலையம், ஆயுர்வேத மருத்துவ நிலையம் ஆதியவற்றையும் ஸ்தாபிக்க கோரிக்கைகள் விடுக்கவுளது.

மேலும், குளாய்நீர் வினியோகம், மின்சாரம், ஆதியவற்றைப் பெறவும் எத்தனித்துளது. விரைவில் இவைகளின் குறைகள் நிவர்த்திக்கப்படுமென எதிர்பார்க்கின்றோம்.

அன்றியும், நம் கிராமச்சபை கடந்த பல வருடங்களாகக் கல்வி வளர்ச்சியிலும் ஊக்கம் காட்டி வருகின்றது. வறிய மாணவ மாணவிகளுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்களை வினியோகித்தல், புலமை பரிசில் வழங்குதல் ஆதியனவும் செய்து வருகின்றது.

சுருங்கக் கூறின் இக்கிராமச்பை இவ்வளவு முன்னேற்றமடையுமென எவரும் எதிர்பாராதவாறு சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்து வருவதையிட்டு நம் பகுதி மக்களும், விடயமறிந்த மேலதிகாரிகளும் பாராட்டாமலிருக்க முடியாது, அன்றியும் இச்சபை மென்மேலும் மேலோங்கவும், குறைகள் தீர்ந்து நிறைவுபெற்றுக் கிராம மக்களுக்குச் சேவையாற்றும் ''கிராமசேவா மன்றமாக'' திகழவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
நம் கிராமபிதா,
***வை. எம். முஸ்தபா***, ஜே. பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50. கி.பி. 1970 - கலைத் துறையில் கலையன்பன்.



பொத்துவிலின் பூர்வீகப் பகுதியான பெரிய பள்ளிவாயல் சுற்றாடலில் இப்றாலெவ்வை பரிகாரி சேகு முகைதீன் என்ற ஆற்றல் மிகு இலக்கிய வாதியின் மூத்த புதல்வராக 1945ஆம் ஆண்டில் பிறந்தவரே 'கலையன்பன்' என தென்கிழக்கு தமிழ் இலக்கிய பரப்பினால் விழிக்கப்படுகின்ற அப்துல் அஸீஸ் அவர்கள்.

பொத்துவிலின் கலை, இலக்கிய வரலாற்றில் 1960கள் என்பது ஒரு பொற்காலமேயாகும். மிகத்திறமையான கவிஞர்களும், கலைஞர்களும் கைகோர்த்து நின்று இலக்கியப் புரட்சியொன்றினையே இந்த மண்ணில் ஏற்படுத்தியிருந்தனர். அத்தகைய இலக்கிய வாதிகளில், முச்சுடர்களுள் மூத்த சுடராய் ஒளிவிட்டுப் பிரகாசித்தவரே இந்த கலையன்பன் அப்துல் அஸீஸ்.

'கலையன்பன்' என்றாலே எமது மனக்கண் முன்னால் வருவது அவரது கம்பீரமான தோற்றம் தான். வயதும், ஆரோக்கியமின்மையும் இன்று அதில் சிறு தாக்கத்தினை ஏற்படுத்தியிருப்பினும் 1960, 70கள் காலப்பகுதியில் கர்ஜிக்கும் சிங்கமாய், சிம்மக் குரலோனாக இந்த மண்ணில் வலம் வந்த மிகச் சிறந்த ஒரு கவிஞனின், கலைஞனின் இலக்கியத்தடத்திற்கு இன்று ஆதாரமாக எஞ்சியிருப்பது 1969ஆம் ஆண்டு தினபதி பத்திரிகையில் வெளிவந்த கவிதையும், இதே ஆண்டில் வெளிவந்த முச்சுடர் என்ற கவிதை நூலும், ஒரு சில நிழற்படங்களும், பசுமையான நினைவலைகள் மட்டுமேதான். ஏனைய சான்றுகள் அனைத்தும் அழிந்து விட்டன. அதனால் தான் எதிர்கால இலக்கியத் தலைமுறையினருக்கு இந்தப் பெருங் கலைஞனை ஞாபகப்படுத்திட இந்தச் சுவடிக் கூடமானது சில பக்கங்களை அவருக்காக இங்கு ஒதுக்கியிருக்கின்றது.

கல்வி கற்ற சிறு வயதுக் காலங்களிலே இயல்பாகவே இவரிடம் குடிகொண்டிருந்த இலக்கிய ஆர்வத்தினை பீறிட்டு எழச் செய்தவர், இறைவனின் துணைகொண்டு அவரது தந்தையார் சேகுமுகைதீன் பரிகாரி அவர்கள். 1950களில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களிலே பொத்துவில் தொகுதி வேட்பாளராகப் போட்டியிட்ட சேர் ராசிக் பரீட் அவர்களது மருமகன் அப்துல் ஜவாத் அவர்களது அரசியல் மேடையில், தந்தையார் வடித்துக் கொடுத்த பாடல், பேச்சுக்களுடன் பதின்மூன்று (13) வயதில் ஆரம்பித்த இவரது இலக்கியப் பயணம் இன்றுவரையிலும் தொடரவே செய்கின்றது. அந்த மாணவர் பருவத்திலிருந்து தன்னை ஒரு பாடகராக, பேச்சாளராக, கவிஞராக, எழுத்தாளராக, நடிகராக வளர்த்துக் கொண்ட கலையன்பன் அப்துல் அஸீஸ் அவர்கள் பொத்துவில் மண்ணின் இலக்கிய வரலாற்றில் மறக்க முடியாத ஒரு பாத்திரம் என்பதை எவருமே மறுக்க முடியாது எனலாம். இவரது கலை, இலக்கிய ஆற்றலுக்கு துணை நின்ற மனிதர்களுள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது தந்தையார் தவிர, சின்னத்தம்பி மாஸ்டர், ஜௌபர் மௌலானா, கவிஞர் யுவன் மற்றும் இசைச் சுடர் எஸ்.எச்.ஏ. சலாம் என்போரது பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கவை. 1960களில் பொத்தூர் ஆரியன், பொத்துவிலான், ஈழவேள் என்ற புனைப் பெயர்களில் எழுத்தாளராக தடம்பதித்த கலையன்பன், இலங்கையின் தேசியப் பத்திரிகையான தினகரன் மற்றும் இந்திய சஞ்சிகைகளான மணிவிளக்கு, முஸ்லிம் முரசு போன்ற வற்றில் அதிகமான இலக்கியக் கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியுள்ளார். இவரது உச்சக்கட்டமான கவிதைகள் பல 1969இல் வெளிவந்த முச்சுடர் என்ற கவிதை நூலில் இடம்பெற்றுள்ளது.

## "கரிவண்டி"

கரிவண்டி என்றவனைக் கூறுகின்ற போதெல்லாம்
கருத்தேதும் அறியாது கலங்கிற்று என்னுள்ளம்
எரிகின்ற வேதனையில் ஏக்கம் தணிக்கவந்து
ஏகினேன் அவனுடம்பு இருக்குமிடம் நோக்கி...
வாருங்கள் தம்பி வந்ததேன் ஏழையிடம்
வரச்சொன்னால் நானோடி வந்திடவே மாட்டேனா?
கூறுங்கள் ஏழைக் குடிசைக்கு வந்ததென்ன?
''கரிவண்டி'' என்றாலே காக்கைக்கும் தெரிந்திடுமே!
எள்ளளவும் மனங்கோணா தியம்புகின்றான் அப்பெயரை
ஏனோதான் எனதுள்ளம் எண்ணிப் புழுங்கிற்று
கள்ளமிலா வெள்ளைமனக் காவலனே உந்தனுக்கு
"கரிவண்டி" யென்றழைக்கக் காரணமும் என்னென்றேன்.
சிரிப்பொன்றைச் சிந்திவிட்டுச் சீராளன் கூறுகிறான்
சிந்திக்க வைத்ததெனைச் செறிந்த தத்துவங்கள்
பொறித்திட்ட வார்த்தையிலே புதுவாழ்வு தெரிகிறது
புரியாத மனிதனவன் புத்தியினைக் கேட்கின்றேன்.
ஈழத்திரு நாட்டில் வேலையற்று எத்தனையோ
இளைஞர் அலைகின்றார் இன்னல் படுகின்றார்
வாழத் தெரியாது வைகின்றார் அரசியலை
வாழ்வுக்கு நம்மிடமே வழியுண்டு உணர்ந்தாரா?
படித்துவிட்டுப் பதவிக்காய் துடிக்கின்றார் பாடுபட்டுப்
பயனடையும் உளம் கெட்டு பரிதவித்து நிற்கின்றார்
வடிகட்டும் முட்டாளாய் வாழாமல் நான் இன்று
வன்மையுடன் செய்கின்றேன் வகுத்துத் தொழிலொன்று
ஏழையான் கோழையல்ல என்று செயல் காட்டுகிறேன்
என்தோளால் கரி சுமந்து விற்று வளர்கின்றேன்.
நாளை வருகின்ற சமுதாய நலிவகற்ற
நம் கையே நமக்குதவி நானும் படித்தவன்தான்!

— கலையன்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முச்சுடர் நூலுக்கு அச்சாரமாக அமைந்த கலையன்பனின் **'கரிவண்டி'** என்ற இந்த பிரபல்யமான கவிதையானது யதார்த்தமாக அவரினால் உருவாக்கப்பட்டதாகும். விறகுக்கரி சுமந்து தேனீர்க் கடைகளில் அதனை விற்பனை செய்து வயிற்றுப் பிழைப்பு நடாத்திவந்த ஒரு உழைப்பாளியை நேர்காணல் செய்து உணர்வோடு எழுதப்பட்ட அந்தக் கவிதை இன்றும் ஈழத்து இலக்கிய வானில் சுடர்விட்டு ஒளிர்ந்து கொண்டே இருக்கின்றது எனலாம்.

கவிதைகளை எழுதுவது மட்டுமன்றி கவியரங்குகளில் கவிதைபாடி சபையினரை கட்டிப் போடுவதில் கைதேர்ந்தவரான கலையன்பன் தன்னை கவிதைத் துறையில் வளப்படுத்தியதில் கவிஞர் யுவனின் பங்களிப்பு மிகப் பிரதானமானது என என்றுமே நினைவுகூறத் தவறுவதில்லை. ஒரு சமயம் பதுளை நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மீலாதுந் நபி விழாவுக்கு கவிஞர் யுவன் அப்துல் கபூர் அவர்கள் தலைமைதாங்கிக் கொண்டிருந்தார். இலங்கையின் நாலாபக்கங்களிலிருந்தும் பல திறமையான மார்க்க அறிஞர்கள் வந்திருந்தனர். அவ்வமையம் கலையன்பனும் இருந்தார். அந்த மாபெரும் கூட்டத்தில் பேசுவதற்காக வேண்டி பேச்சு ஒன்றினை கலையன்பன் தயார்படுத்தி வந்திருந்தார். கலையன்பனுக்கு அழைப்பு விடுத்த ஏற்பாட்டாளர் நிகழ்ச்சியை மாற்றி அவரை கவிதை பாடுமாறு வேண்டிக் கொள்ளவே, சற்று தடுமாறித்தான் போய்விட்டார் கலையன்பன். சிக்கலான நேரம் திடீரென ஒரு கவிதையை சிறப்பான முறையில் எவ்வாறு யார்ப்பது. அந்த வேளை கலையன்பனுக்கு இறைவனின் அருளால் கவிதையூற்று திறந்தது. கர்ஜிக்கும் சிங்கமாக கணீரென்ற குரலில் அது பார்வையாளர்களை பரவசப்படுத்தியது. உணர்வுகள் மேலிட கவிஞர் யுவன், அப்துல் அஸீஸ் என்ற அந்த இளங் கவிஞரை அப்படியே கட்டியணைத்து உணர்வுபூர்வமாக, இன்று முதல் இவன் **'கலையன்பன்'** எனக் கூறி அகமகிழ்ந்த போது, கலையன்பன் என்ற அந்த புனை நாமம் அப்துல் அஸீஸின் பெயரோடு ஒட்டிக்கொண்டு விட்டது. இன்று கலையன்பன் என்றால் தான் மக்களுக்கு இவரைத் தெரியும் என்ற அளவுக்கு இந்தப் பெயர் ஆழமாகவே பதிந்து விட்டது.

## திரமுடன் போரிடுவோம்!

இடி ஒன்றைப் போட்டிட்டான் இஸ்ரவேலன்!
இனியும் ஏன் இருக்கின்றாய்? துடித்து எழு!
முடர் அறுந்து போவதற்கே சுடித்துவிட
முஸ்லீமே முன்னெழடா! உரிமை காக்க
திடம் பெற்றே தோளுயர்த்து! தரணிதன்னில்
திரமுடன் வெளிக்கிடடா! திசைதிருப்பி
முடமாகி வாழ்வதிலே பயனே இல்லை!
மூச்சுவரை போரிடுவோம் முட்டும் நீசர் —

★

தலை தெறித்துச் சிதறட்டும்! மானம் காப்போம்!
தடம் புரண்டு அதிரட்டும்! தீனைக் காப்போம்!
புலை நிறைக்கும் கொடுங்கோலன் இஸ்ரவேலன்
புறமுதுகு காட்டத்தான் வேண்டும்! சீறி
மலையதிரப் பாய்ந்திடுவோம்! வேங்கை போல!
மண்டையிலே இடிவீழ்த்தி யூதனை நாம்
கொலைக் களத்தின் சாக்கடையில் குவித்திடாமல்
குடிக்கின்ற கூழ் எமக்குச் சுவைப்பதெங்கே! !

— கவிஞர் ஜௌபர் மௌலானா
— கவிஞர் கவிவாணன்
— கவிஞர் கலையன்பன்



1969ஆம் ஆண்டு தினபதி பத்திரிகையில் வெளிவந்த இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிரான கலையன்பனின் கூட்டுக் கவிதையே இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞராக மட்டுமன்றி சிறந்த நாடகக் கலைஞராகவும் தன்னை வளர்த்துக் கொண்டவர் இவர். பாடசாலைக் காலங்களில் இருந்தே இவரது நடிப்பாற்றல் துலங்கத் தொடங்கிவிட்டது. **கல் கொண்டு வந்த காதை, புலமைப் போர், காதிக் கோர்ட்டில் கலந்தரும்மா, போடியார் வீட்டு சம்பந்தம், வீரபாண்டிய கட்ட பொம்மன், சோக்ரட்டீஸ், சாம்ராட் அசோகன் மற்றும் யார் அவன்** என்பன போன்ற மேடை நாடகங்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

1970களில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் முதல் முஸ்லிம் செய்திச்சர சேகரிப்பாளராகவும், அறிவிப்பாளராகவும் இணைந்து கொண்ட கலையன்பன், ஆஸாத் மௌலானா அவர்களுடன் இணைந்தும், தனித்தும் பல நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கியுமுள்ளார். அத்துடன் நற்சிந்தனை, உரைகள் என்பவற்றோடு முஸ்லிம் நாடகங்கள் பலவற்றையும் எழுதி, இயக்கி, நடித்தும், ஒலிபரப்பியுமுள்ளார். குறிப்பாக '**விசித்திர உருவங்கள்**' என்ற அவரது வானொலி நாடகத்தில் ஒரு மீனவத் தண்டேலாக நடித்து வானொலி ரசிகர்களின் பலத்த வரவேற்பினையும் இவர் பெற்றுள்ளார். இவர் எழுதி இயக்கிய மற்றுமொரு வானொலி நாடகமான **என் இலட்சியம்** என்ற நாடகம் அவரது கலைப்பயணத்தில் இன்னுமொரு மைல் கல்லாக அமைந்து நின்றது.

இவ்வாறு பன்முக இலக்கியவாதியாக திகழுகின்ற கலையன்பன் அவர்கள் தனது பேச்சாற்றலால் சபையினரை பிரமிக்க வைப்பதில் சிறந்த விற்பன்னர். அக்கரைப்பற்று மக்கள் இவரை '**பீரங்கிப் பேச்சாளர்**' எனவும் விழிப்பர். கர்ஜிக்கும் கம்பீர சிங்கமாக சிலிர்த்து உலா வந்த இந்தக் கலைஞன் இன்று அக்கரைப்பற்றில் அமைதியாக வாழ்ந்து வந்தாலும் அவரது கலையுள்ளம் என்னவோ இன்றும் கூட தான் பிறந்த பொத்துவில் மண்ணுடனேயே தொப்புள் கொடி உறவாக வலம் வந்துகொண்டிருக்கின்றது எனலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முடிச்சு அவிழ்ந்ததடா !

முடிச்சு அவிழ்ந்ததடா
மூச்சு பறந்ததடா - உயிர்
மூச்சு பறந்ததடா!!

நடிக்கின்ற வாழ்வின் நாடகம் முடிந்தது
துடித்த இதயத் துணிவும் அகன்றது - ஊரை
வடித்த பொருளெலாம் வாசல் விடுத்தது
பிடித்த பேராசைப் பேயும் அகன்றது

முடிச்சு அவிழ்ந்ததடா
மூச்சு பறந்ததடா - உயிர்
மூச்சு பறந்ததடா!!

கடிக்கின்ற நாயெனக்
காலமும் கடந்தது
படித்த திருட்டுப்
பாடமும் பறந்தது - ஏழையை
அடித்தும் தேடிய
அனைத்து மறைந்தது
இடித்த பெருமலை
இனியும் தோன்றுமா

முடிச்சு அவிழ்ந்ததடா!
மூச்சு பறந்ததடா - உயிர்
மூச்சு பறந்ததடா!!

— கலையன்பன்.

முச்சுடர் - 1969

## நிறைவு

✲

நாளை வருமுலகு
நமதே வாலிபர்காள்
கோழைக் குணத்தாலே
கொள்கை மறந்தீர்கள்

இளைஞர் கிளர்ந்தெழுந்தால்
இரும்பும் உருகாதோ!
கலையைப் பயன்படுத்தும்
கரமுடையோர் வாலிபரே!

நாற்றம் அகற்றுங்கள்
நரம்புகளில் சுய உணர்வை
ஏற்றுங்கள் எதிர் கால
ஏடுகளில் இடம் கொடுங்கள்

ஓடுங்கள் தொண்டு செய்ய
ஓர் குலமாய் மக்களெல்லாம்
கூடுங்கள் குவலயத்தின்
குறை போக்கி நிறைவுறவே!

— கலையன்பன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 51. மறைந்து போன மண் குடிசைகள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 52. கி.பி. 1970 - R. பிரேமதாசவின் முதல் வருகை.




1970 காலப்பகுதியில் காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் ஐ.தே.க வின் முக்கியஸ்தராகவும், உள்ளூராட்சி அமைச்சராகவும் இருந்த வேளையில் பொத்துவிலுக்கு விஜயம் செய்த முக்கிய நிகழ்வு இது. அருகில் நிற்பவர்கள் வை.எம். முஸ்தபா, எம். கனகரட்ணம், எம்.ஏ. அப்துல் மஜீத் (பா.உ), சிறிசேன குரே (1988க்குப் பின்னரான ஜனாதிபதி R. பிரேமதாசவின் ஆட்சிக் காலங்களில் வீடமைப்பு நிர்மாண அமைச்சராக பதவி வகித்தவர்).



பிஸ்கால் உடையார் ஆ.சிக்கந்தர் அவர்களது மூத்த புதல்வரான அப்துல் காதர் ஆசிரியர் அவர்களே இவராவார். சிறு வயதிலிருந்தே தந்தையின் ஊக்கத்தினால் கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்கிய இவர், தனது ஆரம்பக் கல்வியை பொத்துவில் மெ.மி.த.க. பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை அக்கரைப்பற்று RKM வித்தியாலயத்திலும் நிறைவு செய்து 1950 களில் ஆசிரியராகவும் நியமனம் பெற்றவர். தமிழ்ப் பாடத்தில் மிகச் சிறந்த புலமையும், பேச்சாற்றலுமிக்க இவர் பொத்துவில் ஆண்கள் பாடசாலையில் தான் மரணிக்கின்ற வரை அதிபராகவும் கடமையாற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 53. கி.பி. 1971 - மைலன் தியேட்டர்.



1971இல் மைலன் தியேட்டர் ஆரம்பமானது. உரிமையாளர் திரு. எம். கனகரட்ணம் ஐயா (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மாவட்ட அமைச்சர்) அவர்கள்.



1990 ஜுன் மாதத்தில் பொத்துவிலில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையின் போது இது தீக்கிரையாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 54. கி.பி. 1971 - பொத்துவிலின் முதல் என்ஜினியர்.



பொத்துவில் மண் தேசிய மட்டத்திலும் கிழக்கு மாகாணம் தழுவிய தென்கிழக்குப் பகுதி சார்ந்தும் பல முதல்களை ஈன்றிருக்கின்றது. குறிப்பாக இலங்கையின் முதல் முஸ்லிம் சிறு பிள்ளை வைத்திய நிபுணர், முதல் முஸ்லிம் உபவேந்தர், முதல் முஸ்லிம் வாத்தியார் என்போர்கள் பொத்துவிலில் இருந்தே உருவாக்கம் பெற்றுள்ளனர்.

இந்த வகையில் பொத்துவிலின் முதல் என்ஜினியராக இந்த மண்ணில் தடம்பதித்தவரே கலுங்கு ராவுத்தர் முகம்மட் சஹீட் அவர்கள்.

1942 ஜுலை 13 இல் பொத்துவில் இரண்டாம் குறிச்சிப் பகுதியில் பிறந்த இவர் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியினை பொத்துவில் அரசினர் ஆண்கள் பாடசாலையிலும், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும் கற்றுக் கொண்ட நிலையில் தனது உயர்தரக் கல்வியினை கொழும்பு சாஹிராக் கல்லூரியிலும் நிறைவு செய்தவர்.

1963இல் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று பொத்துவில் ஆண்கள் பாடசாலையில் கடமையாற்றிவந்த நிலையில் 1965 இல் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் உயர் கல்வியினை மேற்கொள்ளும் வாய்ப்பினையும் பெற்றுக் கொண்டார்.

1970 இல் தனது பட்டப்படிப்பினை முடித்துக் கொண்டு ஒரு என்ஜினியராக வெளிப்பட்ட இவருக்கு முதல் நியமனம் 1971 ஜுன் 01 இல் வழங்கப்பட்டு கல்முனை நீர்ப்பாசனத் திணைக்கள காரியாலயத்தில் கடமையாற்றும் வாய்ப்பும் கிடைக்கப்பெற்றது. 1971 தொடக்கம் 1985 வரை Irrigation Engineer ஆக கல்முனை, அம்பாறை, தனமல்வில, கொழும்பு, தம்பகல்ல, ஹம்மாந்தோட்ட பகுதிகளில் கடமையாற்றி வந்த சஹீட் அவர்கள் 1986 தொடக்கம் 1990 வரை Chief Irrigation Engineer ஆக பதவியுயர்வு பெற்று திருகோணமலை, மொனராகலை, பண்டாரவலை போன்ற பிரதேசங்களிலும் கடமையாற்றியுள்ளார். தொடர்ந்து 1990 தொடக்கம் 1995 வரை ஹம்மாந்தோட்ட, பதுளை, கொழும்பு போன்ற இடங்களில் நீர்ப்பாசன திணைக்களக் காரியாலயத்தில் Deputy Director ஆகவும் கடமையாற்றி பொத்துவில் மண்ணுக்கு சிறப்பினை வழங்கியுள்ளார். 1995 தொடக்கம் World Bank Project ஊடாக Consultant ஆக தடம்பதித்த இவர் தனது அந்திம காலங்களில் Europe Funded MAGA Project ஊடாக தனது பிறந்த மண்ணில் Consultant / Resident Engineer ஆக மிகத்திறம்பட பணியாற்றி 2011 செம்டம்பர் 05 ஆம் திகதியில் வபாத்தானார். இவரது அந்திம கால Project களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது Major Project Pottuvil - Siyambalanduwa (33km), Pottuvil - Akkaripattu (31km) என்பவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1974



ஜனாப் KRM. சஹீட் என் ஜினியருடன் YMMA பொத்துவில் கிளை உறுப்பினர்கள்.



## 1974

1974 ஜனவரி 05ஆம் திகதி YMMA இயக்கத்தினரால் பொத்துவில் 2ம் குறிச்சி தைக்காவில் ஹதீஸ் மஜ்லிஸ் நிகழ்வொன்று ஹஜ்ஜுப் பெருநாள் தினமொன்றில் நடாத்தப்பட்ட போது பொத்துலில் கிளை போசகர் KRM. சஹீட் பொறியியலாளர் உரை நிகழ்த்துவதையும் அருகில் பொத்துவில் கிளை YMMA இயக்கத் தலைவர் AC. அகமட் லெவ்வை அவர்களையும் காணலாம்.

## 1977

1977 இல் பொத்துவில் மத்திய கல்லூரியில் வெள்ளி விழா நிகழ்வில் செல்வன் MLM. அஷ்ரப் எனும் மாணவனுக்கு பரிசு வழங்குபவர் KRM. சஹீட் அவர்கள். அருகில் மாணவனின் தந்தை S. மீரா லெவ்வை (ஆலிம்) ஆசிரியர் அவர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றுமே காணாத இனிய கலை விருந்து!
# காணத்தவறாதீர்கள்!!

பொத்துவில் பிள்ளைகளின் கல்வி நலங்கருதித்து பாடசாலைக் கட்டிட
நிதிக்காக கிராம முன்னேற்றச் சங்கத்தின் புதிய நிருவாகத்தினர்.
மனமுவந்தளிக்கும் மகத்தான கலை விருந்து !!

ஈழப் புகழ் வாய்ந்த கலைஞர்கள் வருகை தருகின்றனர்.

- ★ கண்கவர் நடனம் - கலையரசி சரஸ்வதி!
- ★ இசை விருந்து - கலாமாலினி – சரஸ்வதி!
- ★ மேலை நாட்டு வாத்தியக் கச்சேரி -கலைவாணி இசைக்குழு
- ★ வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கும் நகைச்சுவை நாடகங்கள்!
- ★ உணர்ச்சியூட்டும் ''கற்பின் பரிசு'' சரித்திர நாடகம்!
- ★ சிங்கள பக்தி நடனம்!
- ★ நேரடி வருணனை – நகைச்சுவை நிகழ்ச்சி.

இன்னும் பல இன்பம் அளிக்கக் கூடிய இளைஞர் குழுவின் சினடி - மெஜிக்என்பனவும் இடம் பெறும்.

## காலம்: 18-9-71 பி. ப. 8 மணி சனிக்கிழமை
## இடம்: அ. மு. க. பாடசாலை (போய் ஸ்கூல்)

★ பெண்களுக்குப் பிரத்தியேகமான இடவசதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மின் வெளிச்சத்தில் மேனிசிலிர்க்கும் நாடகங்களையும் – பரவச மூட்டும் பாடல்களையும்-நடனங்களையும் – ஒரே மேடையில்கண்டு களிக்கத் தவறாதீர்கள்!!

பள்ளி அமைக்கப் பாடுபடும் இளைஞருக்கு உள்ளம்மகிழ்ந்து உதவி புரியுங்கள்!!

கல்விக்குதவியவர் காலமெலாம் வாழுகிறார்!!

## கட்டணங்கள்.

| | | |
|---|---|---|
| 1ம் வகுப்பு | 5 | ரூபா. |
| 2ம் வகுப்பு | 2 | ரூபா. |
| 3ம் வகுப்பு | 1 | ரூபா. |

பாடசாலைச் சிறுர்களுக்கு மட்டும் –/50 சதம்

ஆர்வமுள்ள தங்களின் ஆதரவை வேண்டுகிறோம்.

கிராம முன்னேறச் சங்கம்
பொத்துவில்.
10-9-1971.

எம். ஏ. அலிம்
செயலாளர்.

ஆதம்ஸ் அச்சகம், அக்கரைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல புகழும் இறைவனுக்கே!

''யா அல்லாஹ்''

# பொத்துவில் கந்தூரி

## வைபவம்.

அன்புடையீர்,

நமதூரில் வழமையாய் நடைபெற்று வந்த கந்தூரி வைபவத்தை இவ்வாண்டில் தவறாது நடத்த வேண்டும் என்ற பொதுமக்கள் கோரிக்கையை ஆராய்ந்து நம் மரைக்காயர் சபை இவ்வாண்டுக் கந்தூரியை மிகவும் சிறப்பாக கொடுக்க வேண்டுமென தீர்மானித்து இருக்கிறார்கள்.

ஆகவே பின் குறிப்பிடும் விபரப்படி நடைபெற விருக்கும் இக் கந்தூரி நிகழ்ச்சிகளில் சகல மக்களும் சமுக மீந்து ஒத்துழைப்புத்தரும்படி மிக பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

## நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| கந்தூரி: | 11-9-71 — 12-9-71 |
| நடைபெறும் தினம்: | சனி, ஞாயிறு, ஆகிய இரு நாட்கள் |
| இடம்: | பொத்துவில் ஜும்ஆ பள்ளி வாயல் |
| உலைவைத்தல்: | 11-9-71 காலை 3 மணி |
| நார்சா வழங்குதல்: | 11-9-71 பி. ப. 2மணி இருந்து 6 மணி வரை (காட்ஸ் மூலம்) |
| மார்க்க உபன்னியாசம்: | 11-9-71 மாலை 9. 12 மணி மரை |
| மௌளூத் ஓதல்: | 12-9-71 காலை 3 மணி தொடக்கம் 7மணி வரை |
| தட்டம் வழங்குதல்: | 12-9-71 காலை 7. 30 தொடக்கம் 10 மணிவரை |

குஞ்சு முசா அவ்லியா அவர்களின் வருடாந்த விழா 17-9-71 மாலை 6 மணி தொடக்கம் 9 மணிவரை குர் ஆன் ஓதி தமாம் செய்யப்படும்.

குறிப்பு:— விரும்பியோர்களே! இதில் கலந்து கொள்ளலாம். எவ்வித வேறு பாடுகளும் காட்டப்படமாட்டாது. பெண்களுக்கு பிரத்தியேகமான இடம்உண்டு நார்சாவுக்கு காட்ஸ் கிடையாதவர் 11-9-71ம் திகதிக்கு முன் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நிகழ்ச்சிகள்
யாவும்
ஒலி பெருக்கப்படும்.

இவ்வண்ணம்
**Y. M. முஸ்தபா**
பிரதான மரைக்காயரும்
மரைக்காயர்மார்
சபையும்.

வஸ்ஸலாம்.

ஆதம்ஸ் அச்சகம், அக்கரைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 57. கி.பி. 1971 - குறிச்சி வாதத்தின் மறு பக்கம்.

786

அல்ஹம்துலில்லாஹ்

# பொத்துவில் வாழ் முஸ்லிம் மக்களுக்கோர் விளம்பரம்.

அன்பர்களே!

"பொத்துவில்கந்தூரிவைபவம்" என்ற தலையங்கமிட்டு ஜனுப் Y.M. முஸ்தபா பிரதான மரைக்காயரும், மரைக்காயமார் சபையும் எனக்காட்டி அண்மையில் வெளி வந்த அறிவித்தலை யாவரும் வாசித்திருப்பீர்கள். உண்மையில் பொத்துவில் 1ம் குறிச்சி மரைக்காயர்மார் 1ம் குறிச்சி பொது மக்களிடம் கந்தூரிக்கென வரி வசூல் செய்து 11-9-71—12-9-71 இல், நடத்தப் போகும் கந்தூரியை "பொத்துவில் கந்தூரி வைபவம் என்று குறிப்பிட்டுள்ள மர்மந்தான் என்ன? பொத்துவில் கந்தூரி வைபவம் என்றல் பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு பிரதான மரைக்காயராய் நியமிக்கப் பட்டவர்களில் மற்ற மரைக்காயர்மார்களையொப்பமிடாததேன்? 2ம்குறிச்சி பிரதான மரைக்காயர் ஒப்பமிடாத அறிவித்தலில் "பொத்துவில் கந்தூரி வைபவம்" என்று அழைத்திருப்பது 2ம் குறிச்சி மக்களை ஏமாற்றும் நோக்கமா?

பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு அடக்கமான 2ம் குறிச்சி முஸ்லிம்கள் ஊர்ச்சம்பிரதாய முறைப்படி வரிசெலுத்தி பங்கு கொள்ளாமல்இருக்கும்போது பொத்துவில் கந்தூரி வைபவம் என்று அழைப்பதை 2ம் குறிச்சி மக்கள் ஏற்றுக் கொள்ளலாமா? இவ் வைபவத்தில் 2ம் குறிச்சி மக்கள் கலந்து கொள்வது தன்மானம் அற்ற செய்கை அன்றோ!

29—6—71ல், பொத்துவில் பள்ளிவாசலில் நடந்த மரைக்காயமார் கூட்டம் ஒன்றில் விஷயங்கள் சுமுகமான முடிவுக்குவராமல் இருந்தால் கூட்டத்தை ஒத்திவைக்குமாறு பேசி கூட்டம் கலைந்து அடுத்த நாளே 1ம் குறிச்சி பிரதான மரைக்காயரும் ஏனைய மரைக்காயமாரும் சேர்ந்து புறம்பாக கூட்டம் நடத்தி 1ம்குறிச்சிக்குரிய பள்ளிவாசல் கடமைகளை புறம்பாக நடத்த ஆரம்பித்ததோடு அடுத்தபடியாக பள்ளிவாசலில் நடந்த பொதுக் கூட்டத்தின் 1ம் குறிச்சி. பிரதான மரைக்காயர் அப்பிரிவினையை ஊர்ஜிதம் செய்யவும் முனைந்தார் இப்படிப் பிரிந்துசெயலாற்றுவதால் வருங்காலத்தில் மக்களுக்கிடையில்ஏற்படப்போகும் சீர்கேட்டையூகித்தஓர்மரைக்காயர்வருங்காலச் சந்ததிகளுக்கிடையில் போட்டி மனப்பான்மை வேரூன்றச் செய்யும் இதனல் பலதீமைகள் ஏற்படக் கூடும் என எடுத்துக்காட்டப்படும் 1ம் குறிச்சி மரைக்காயர்மார் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றுவதே சிறப்பெனக்கருதி இதற்கு முட்டுக்கட்டை போட வேண்டாம் தடைசெய்ய வேண்டாம் ஆண்டவனுக்காக 1ம்குறிச்சி நிருவாகத்தை புறம்பாக நடாத்தி எங்கள் கிராமத்தை முன்னேற்றம்செய்ய விட்டுவிடுங்கள் என்றுபிரிந்து கொள்ளவில்லையா? அப்படிப்பிரிந்தவர்கள் 1ம் குறிச்சிக்குரிய பள்ளிவாசல் கருமங்களை நடத்திக் கொண்டு போனதுமல்லாமல் கந்தூரி கொடுக்க வேண்டுமென்று அவர்களே? தீர்மானித்துக் கொண்டு செயலாற்றினர்களே? பொதுவான பொறுப்பு வாய்ந்த கந்தூரிநடத்தும் தீர்மானத்தை பள்ளிவாசலில் இருபகுதி மரைக்காயமாரும் இருந்து தீர்மானிக்கவில்லையே. ஒருபகுதியாரின் போக்கைமற்றப்பகுதியார் பின்பற்றி நடக்க வேண்டும் என்றகொள்கையில்தான் கந்தூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளதே. மக்களில் பெரும்பாலாரோர் கந்தூரி கொடுக்க வேண்டுமென்பதை விரும்பவில்லையே.

உள்ளதை உள்ளபடி வெளியிடாமல் பொத்துவில் கந்தூரி வைபவம் பிரதான மரைக்காயரும் மரைக்காயமார் சபையும் எனப் பொதுப்படக்காட்டியது தவருன செய்கையே.

---

ஆனுலும், 1ம குறிச்சி மரைக்காயமார் ஆரம்பித்த நிறைவேறும் நிலைகருள்ளிருக்கும கந்தூரியை நடத்தி அவ்லியாக்களைக் கண்ணியப்படுத்தி இறைவனிடம் பிரார்த்தனை செய்து நற்பேறுதேடும் இக் கைங்கரிய செயலைப்பாராட்டுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

இங்ஙனம்,

**ஆ. மீராலெவ்வை**

**சா. லெ. ம. கலுங்குராவுத்தர்**

பிரதான மரைக்காயமாரும் மரைக்காமார் சபையும்

பொத்துவில் 2ம் குறிச்சி.

7—9—71.

---

ஆதம்ஸ் அச்சகம், அக்கரைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது புதிய நிர்வாகமும், மறைக்காயர் சபையும்.

| | |
|---|---|
| முதல் மறைக்காயர் | ஜனாப் வை. எம். முஸ்த்தபா ஜே. பி. |
| பரிபாலனக் காரியதரிசி | ... எச். எல் லெவ்வைத்தம்பி மௌலவி |
| தனாதிகாரி | ... பீ. எம். எம். அலாவுதீன் மறைக்காயர் |

## குடி மறைக்காயர்.

| | | | |
|---|---|---|---|
| அலிப்புக் குடி | ஜனாப். | எம். மீராலெவ்வை | மறைக்காயர் |
| | ... | எம். சீ. சீனிமுகம்மது | ... |
| | ... | எம். சாய்வுத்தம்பி | ... |
| வெள்ளரம் குடி | ... | பீ. எம், எம். அலாவுதீன் | ... |
| | ... | கே. எல். எம். முகம்மது லெவ்வை | ... |
| | ... | யூ. எல். ஆதம்லெவ்வை | ... |
| பணி வீட்டுக் குடி | ... | ஏ எல். எம். கலந்தர் | ... |
| | ... | எம். ஸீ. ஆதம்லெவ்வை | ... |
| | ... | டீ. எச் முகம்மது | ... |
| சம்மாஙெட்டிக் குடி | ... | ஏ. அபூபக்கர் | ... |
| | ... | ஐ. எல். முகம்மதலியார் | ... |
| சந்திராதி முதலி குடி | ... | எஸ். மீராலெவ்வை | ... |
| ஓடாவி குடி | ... | கே. எல். சேகுமுகம்மது | ... |
| | ... | எம். ஐ. மீராமுகைதீன் | ... |
| பாக்கி நெயிந்தை குடி | ... | எஸ். ஏ. காதர் | ... |
| | ... | எம. எல். எம். மீராலெவ்வை | ... |
| பவளக் குடி | ... | ஐ. எல். கலந்தர் | ... |
| ராசாம் புள்ள குடி | ... | யூ. எம். முகம்மதிஸ்மாயில் | ... |
| | ... | ஏ. யூ. பி. அசனார் | ... |
| | ... | ஏ. எல். ஜமால்தீன் | ... |
| மறைக்காநெயித்தை மாந்தரு } குடி | ... | எம். ஐ. எம். ஏ. காதர் | ஆசிரியர் |
| மாமனாப்புள்ள குடி | ... | பீ. அகமது | மறைக்காயர் |
| வெற்றி சிங்கராச்சி குடி | ... | ஏ. முகம்மதிஸ்மாயில் | ... |
| வடக்கனு குடி | ... | ஏ. நாகூர் | ... |

## நியமன அங்கத்தவர்கள்

| | | |
|---|---|---|
| ஜனாப் | எச். எல் லெவ்வைத்தம்பி | மௌலவி |
| ... | எம். ஏ. முகம்மதுலெவ்வை | காதி |
| ... | ஏ. எம். காசீம் | கிளார்க்கர் |
| ... | ஏ. எம். காசீம் | மாஸ்ரர் |
| ... | எஸ். எம். ஹனீபா | |
| ... | எம். எம். இஸ்மாயில் | பதிவுகாரர் |
| ... | ஏ. பீ. எம். இஸ்மாயில் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 59. கி.பி. 1972 - கவிவாணர் எம்.ஏ. அஸீஸ்.

### கவிஞர்

பொத்துவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் எம். ஏ. அஸீஸ் "கவிவாணன்" என்ற புனை பெயரிலும் பல இலக்கியப் படைப்புக்களைப் படைத்திருக்கின்றார். "தினபதி" நடத்திய கவிதைப் போட்டியில் பங்கு கொண்டு தங்கப் பதக்கம் பரிசாகப் பெற்ற இவர், பொத்துவில் இலக்கிய வட்ட இணைச் செயலாளராகவும், இக்பால் இளைஞர் இயக்கத் தலைவராகவும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார். கவிதைத் துறையில் மிகவும் ஈடுபாடு கொண்டு ஆர்வத்துடன் எழுதி வரும் இக்கவிஞர், பல கவியரங்குகளிலும் பங்கு பற்றி இருக்கின்றார். இவரது கவிதைகள் பல இதழ்களிலும் வெளியாகி உள்ளதோடு, இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பாகி உள்ளன. இலக்கிய உலகில் சிறந்த கவிஞராகத் திகழவேண்டும் என்பதே இவரின் விருப்பம்.



### வாலிப முன்னணிச் செயலாளர்

பொத்துவில் தொகுதி ஸ்ரீ. ல. சு. க. வாலிப முன்னணியின் கௌரவ செயலாளராக, கவிஞர் எம். ஏ. அஸீஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிறந்த சமூக சேவையாளரும், பேச்சாளரும் உணர்ச்சித் துடிப்பும் அரசியல் ஞானமுமுள்ள இளைஞரான இக்கவிஞர் கவிவாணன், என்ற புனை பெயருள் மறைந்துள்ளார்.

"ஷூட்டிங் ஸ்டார்" விளையாட்டுக் கழகத் தலைவராகவும், இக்பால் இளைஞர் இயக்கத் தலைவராகவும் பொத்துவில் இலக்கியக் கழகச் செயலாளராகவும், கவிஞர் மன்றச் செயலாளராக படித்த வேலையற்ற வாலிபர், சங்கப் பொதுச் செயலாளராகவும், பாணமைப்பற்றுப் ப. நோ. கூ. சங்க கிளைக்குழு, பொதுச் சபை முதலியவற்றின் உறுப்பினராகவும் சேவையாற்றி வருகின்றார்.



1972.02.08, 1972.03.06 ஆம் திகதிகளில் தினபதி பத்திரிகையில் கவிவாணரைப் பற்றி வெளிவந்த செய்தித் துணுக்குகள்.

*குறிப்பு:* 1960களில் இருந்து இலக்கியத்தினையும், அரசியலையும் சமச்சீராக கொண்டு சென்ற கவிவாணன் அவர்களை 1994ற்குப் பின்னர் அரசியலானது மேலாதிக்கம் செய்ய முற்பட்ட போது அவரது இலக்கிய வெளியீடுகள் குறைந்து செல்லத் தொடங்கின. அரசியல் வேலைப் பளுக்களுக்கு மத்தியில் கவியரங்குகளை, இலக்கிய மன்றங்களை இவரால் நடாத்த முடியாது போனாலும் இலக்கியத்தின் மேல் கொண்ட இவரது தாகம் குறையாமலேயே இருந்து வந்தது. இவரது கவிதைகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுப்பு நூலொன்றை வெளியிடுவதற்கு இவர் முயற்சி செய்து வந்தாலும் அவரது ஆயுட் காலத்திற்குள் அந்த முயற்சி நிறைவேறாமேலேயே போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிவாணர் அப்துல் அஸீஸ்



1963 களிலிருந்து ஈழத்து சஞ்சிகைகளிலும் நாளேடுகளிலும் (தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, இன்ஸான், புத்தொளி, வெற்றிமணி, தாய்நாடு, தேசாபிமாணி) (கவிவாணன், புதுமையாளன், மேகதூதன் போன்ற புனைப் பெயர்களில்) தரமான கவிதைகளை(யும், கட்டுரைகளையும், சிறு கதைகளையும்) படைத்துவரும் கவிஞர் கவிவாணனின் கடந்தகால இலக்கியப் பங்களிப்பு வியக்கத்தக்கது. இரசிகமணி கனக செந்திநாதனின் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் இடம்பெற்ற புலவர் பொத்துவில் மீராலெவ்வையின் புதல்வரான கவிவாணனும் ஒரு இலக்கிய பரம்பரையை சேர்ந்தவரே. கவிஞர் யுவன் இவரின் சகோதரர்.

1969இல் அகில இலங்கைரீதியில் நடைபெற்ற வள்ளுவர் தினக் கவிதைப் போட்டியில் பதக்கம் பெற்ற கவிஞர் கவிவாணனின் கவிதைகளில் புரட்சியும், புதுமையும், துணிச்சலும் காணப்படுவதனால் இவர் ஒரு பிரச்சினைக்குரிய கவிஞர் என்று தான் கூற வேண்டும். இவர் கூறும் துணிச்சலான கருத்துக்கல் பல சர்ச்சைகளை தூண்டியுள்ளதை இலக்கிய உலகம் அறியும். முச்சுடர் என்ற கவிதைத் தொகுதியில் இவரது பல கவிதைகள் வெளிவந்துள்ளன.

25.10.1981 தினகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்.ஏ. அஸீஸ்

குவலயத்தைக் கடுகுமணிக் குறளாய்த் தந்தான்
குணத் தந்தை! வள்ளுவனின் உள்ளத்துள்ளே
தவக்கனலாம் தத்துவங்கள் தழலாய்ப் பொங்கும்,
தமிழாகித் தரணியிலே அறிவின் வெற்பாய்
அவதாரம் எடுத்தோனே செந்நாப் போதான்!
அறம் பொருளை இன்பத்தை அழகாய்ச் சொன்ன
தவஞானி, பேரறிஞன், தமிழின் கீர்த்தி
தரணியெலாம் மணம் பரப்பும் குறளின் தந்தை!

★

நாடாத வளமுடைய நாடே நாடு,
நாநிலத்தில் என்றுரைத்தான் அறிவில் மூத்தோன்!
பாடாத பொருளில்லை, பாரோர் வாழப்
பைந்தமிழைக் கடைந்தெடுத்து அமுதம் ஈந்தான்!
கூடாத தீமை யெலாம் கடிந்தான்; நெஞ்சின்
குறை தவிர்த்தால் நிறைவாழ்வு உண்டு என்றான்!
தேடாத பொருள் எல்லாம் "தீ"யே என்றான்
திக்கெட்டும் ஒளிவீசும் தீப மாறன்!

★

ஆயிரத்து முன்னூற்று முப்பதுந் தான்
அமுதமென்று அகிலமெலாம் போற்றும் போது
வாயிருந்தும் எதுபயன்? ஞான மேதை
வள்ளுவனைப் போற்றாத நாவும் நாவோ?
காயிருந்து கனிந்துவந்து ரசமாய்த் தேங்கும்
கவியமுது; கறைநீக்கும் அமுதின் சாற்றுப்
பாயிரமா? சிறுகுறளா? என்று சொல்லிப்
பாராட்டத் தமிழேட்டிற், சொல்லும் உண்டோ?

★

கற்றதனால் பயனென் கொல், வாலறிவன்
கால்பணியாச் சென்னியிருந் தென்னலாபம்?
சுற்றமிருந் தென்ன பயன்? இடுக்கண் வந்தால்
சூழவிருந்தவர் துயரம் துடைக்க முந்தும்
அற்புதநற் பொற்கரமே நட்பின் சின்னம்;
அல்லாத கைகளெல்லாம் உலக்கை என்றே
பொற்புறவே மணிக்குறளில் புகன்ற மேதை!
புவி அனைத்தும் ஒளிபரப்பும் தீபமாறன்!

1968 இல் தினபதி பத்திரிகை நடாத்திய அகில இலங்கை வள்ளுவர் தின கவிதைப் போட்டியில் பதக்கத்தை பெற்றுக் கொண்ட கவிவாணர் அவர்களது பரிசுக் குரிய கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மாமறையோன் துணை போதும்!’

**எம். ஏ. அஸீஸ் பொத்துவில் கவிவாணன்**

கத்துபவர் கத்தட்டும் —கருத்திழந்து
கதறுபவர் கதறட்டும் —கலியுகத்தில்
எத்துபவர் எத்தட்டும் —இதயமின்றி
எதிர்ப்போர்கள் எதிர்க்கட்டும்—இந்நிலத்தில்
சத்தியத்தின் வேதமதை —அழிப்பாம் என்று
சாற்றுபவர் சாற்றட்டும் —சான்றோருக
இத்தரையை இன்பமுடன் —ஆளுகின்ற
இறைவனது துணையொன்றே —எனக்குப்போதும்!

கட்டுபவர் கட்டட்டும்—கற்கள் கொண்டு
கலைப்போர்கள் கலைக்கட்டும்—கருணை இன்றி
குட்டுபவர் குட்டட்டும் —குவலயத்தில்
கொடுமைகள் குவியட்டும்—குருதி பாய
வெட்டுபவர் வெட்டட்டும்—விருப்பமின்றி
வெறுப்போர் வெறுக்கட்டும்—மதியிழந்து
திட்டுபவர் திட்டட்டும் —தரணிமீதும்
‘தீன்’ தந்த திறலோனின் —துணையே போதும்!

சீறுபவர் சீறட்டும் —சிரத்தையின்றி
செல்பவர்கள் செல்லட்டும்—சினம்மிகுந்து
ஏறுபவர் ஏறட்டும்— இரக்கமற்றோர்
இன்னல்கள் விளைக்கட்டும்—இகழ்ச்சி
வார்த்தை
கூறுபவர் கூறட்டும்—கொடுமை செய்யக்
கொதிப்போர்கள் கொதிக்கட்டும்— கொள்கை
தன்னில்
மாறுபவர் மாறட்டும்-- மகிழ்ச்சி பொங்க
மாமறையோன் துணை ஒன்றே எனக்குப்போதும்.

1968.06.28 இல் வீரகேசரி நாளிதழில் வெளியான
கவிவாணரின் காத்திரமான கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**60. கி.பி. 1972 - பொத்துவிலின் முதல் டொக்டர் (அல் ஹாஜ் - எம்.எல்.எம். சஹீட்).**



அன்றும்



இன்றும்



2013இல் பொத்துவில் மத்திய கல்லூரியில் நடந்தேறிய நல்லம்மா டீச்சரின் நூல் வெளியீட்டு நிகழ்வின் பின்னர் தனது இளமைக்கால நண்பர் ஜனாப் ஏ.ஆர்.எம். காதர் மௌலானா (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்) அவர்களுடன் அல் ஹாஜ் - டொக்டர் எம்.எல்.எம். சஹீட் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மில்லாஹிர்றகுமானிர்றஹீம்

**நிந்தவூரை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டுத் தொழில்சார் பிரமுகர்களை உள்ளடக்கிய நிறுவனங்களுக்குத் தலைமைதாங்கி, கல்வி, பள்ளிவாசல், மதரசா போன்றவற்றின் அபிவிருத்திக்காக, சமூக பொருளாதார வேலைத்திட்டங்கள், வறியோர் நலன்பேணும் செயற்பாடுகள் போன்ற சமூகநலப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் "நேசி" அமைப்பின் தலைவர் வைத்தியகலாநிதி அல்-ஹாஜ் டாக்டர் எம்.எம்.சஹீட் அவர்களை நிந்தவூர்ப் பொதுமக்கள் ஒன்றுகூடி, அவரின் சேவைகளைப் பாராட்டுவதற்காக எடுக்கப்பட்ட பெருவிழாவில் நிந்தவூர் மக்கள் சார்பாக வாழ்த்தி வழங்கப்பட்ட**

# வாழ்த்துமடல்

வன்னியனார் உடையார்மார்கள் வகித்தஅரச உத்தியோகம்
வழிமுறையில் DRO விதானைமார் என்ற பெயரைப் பெற்று
கோத்திரமும், பரம்பரையும் குடும்பத்தின் அந்தஸ்தும்
பார்த்தெடுத்த விதானை ஹாஜி பண்பாளர் மீராலெவ்வை
அல்லாஹ்வின் திருவருளால் மணமுடித்த ஆய்ஷாஉம்மா
இல்லறத்தின் தவப்பயனால் இறையளித்த டாக்டர் சஹீட்
நாற்பத்து ஆறாமாண்டு ஆவணித்திங்கள் இருபத்துநாலில்
பொத்துவிலின் சொத்தான முத்தாகப் பிறந்தாரே.

மெதடிஸ்மிஷன் பள்ளியிலே ஆரம்பக்கல்வி பெற்று
கனிஸ்டபாடசாலைசென்று கல்வியைத் தொடர்ந்துகற்று
பாத்திமாக் கல்லூரியில் படித்ததன் பின் உப்போடை
சிவானந்தா வித்தியாலயத்தில் AL கற்று கொழும்புசென்று
அலெக்சாந்திராக் கல்லூரியில் அட்வான்ஸ்லெவல் சித்திபெற்று
மருத்துத்துவத்துறை மாணவனாய்க் கொழும்புமா நகரிலுள்ள
பல்கலைக்கழகத்திலே MBBS பட்டம் பெற்று
பொத்துவிலில் முதன்முதலாய்த் தடம்பதித்த டாக்டர் ஆனீர்.

கல்முனையில் டாக்டராகக் கன்னிச்சேவையை நீர்தொடங்கி
எல்லோரும் உனைப்போற்ற இனியபணி செய்ததனால்
வல்லோனின் பரிசு" என்று அன்றுவாழ்ந்த மக்கள் வாழ்த்திப்
பல்லின மக்களதும் பாராட்டைப் பெற்றுயர்ந்தாய்
அன்றிலிருந்து இன்றுவரை அனைவருமே உனைநினைத்து
என்றுதான் வருவாரோ இன்னுமொரு தடவை என்று
ஆண்டாண்டு காலமாக காத்திருக்கும் மக்களுக்கு
மீண்டுமொரு தடவை ஐயா மனமிரங்கி வருவீரோ?

இதுவரை முஸ்லீம்கள் எவருமே வகித்திராத
வரலாற்றுப் புகழ்படைத்த நிதிஅமைச்சராயிருந்த
அல்-ஹாஜ் முஸ்தபா எம்.பி. அருமைமகள் நசீறாவை
அல்லாஹ்வின் திருவருளால் மணமுடித்த மணவாழ்வில்
இறையளித்த மக்கள் செல்வம் நிசாட் சஹீட், ஹிபா சஹீட்
இரண்டையும் இறையருளால் வைத்தியத்துறைமேதைகளாய்
உலகுக்குச் சேவை செய்ய உவந்தளித்த உத்தமனே
உன்குடும்பத்தோடு நீடூழிவாழ அருள்புரிவாய் யாறகுமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MBBS, MD(Colombo) மற்று MRCP (UK) பட்டங்கள் பெற்று
முழுஇலங்கை முஸ்லீம்கள் வரலாற்றில் முதன்முதலாய்
சிறுபிள்ளை வைத்தியனாய்த் தடம்பதித்துப் படியுயர்ந்து
FRCP(UK), DCP(London) FRCPCH பட்டங்களோடு
றியாத்நகரில் பதினைந்தாண்டு இனமதபேதமின்றி
எவருமே செய்திடாத இலவச கிளினிக் செய்து
மன்னரின் தம்பிமார்கள் மக்களுக்கும் சிறுபிள்ளை
வைத்தியனாய்ச் சேவை செய்த வள்ளலே நீ நீடு வாழ்க.

றியாத்திலுள்ள Security force Hospital இல் மட்டுமன்றி
King Khalid University வைத்திய சாலையிலும்
அதிவிசேட சிறுபிள்ளை வைத்தியகலா நிபுணராக
அதிசிறப்பாய்க் கடமையாற்றி உன்சேவைக்காலம் முடிந்தபின்பும்
எங்குமே போகவேண்டாம் என்றரவு உனைவேண்டி
அங்கேயே வைத்துனது ஆற்றலையும் ஆளுமையையும்
அகிலமே வியந்துபார்த்துன் அருஞ்சேவைதனைப் பாராட்ட
இறைவன்தந்த பரிசன்றோ.

முத்துமணி மாலையிலே இரத்தினக்கல் பதக்கம்போல
நெசிமுத்துக் கோர்வையிலே நீவைரப்பதக்கமாகி
முன்னெடுத்து வழிநடாத்தும் சமூகநலத்திட்டங்களும்
வறுமைதீர மக்கள் பெறும் பொருளாதார விருத்திகளும்
இம்மை மறுமை இரண்டிலுமே இறையருளைப் பெற்றுயர
ஈருலகக் கல்வியோடு இறைவணங்கப் பள்ளிவாசல்
அத்தனையும் எமதூர்பெற அருஞ்சேவை செய்துவரும்
முத்துக்கோர்வை நெசியே உன்னைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பள்ளிவாசல் மதரசாக்கள் கல்விஅபி விருத்தியோடு
வறியோர்கள் நலன்பேணல் பொருளாதார வேலைத்திட்டம்
புர்கான்பள்ளி நிர்மாணம் புலமைப்பரிசில் விசேடவகுப்பு
பட்டதாரி மாணவர்க்கு பல்கலைக்கழக நிதியுதவி
இன்னோரன்ன சேவைகளை தேவைகண்டு நிறைவு செய்ய
முன்னின்று பணிபுரியும் நெசித்தலைவர் டாக்டர் சஹீத்
நிந்தவூரே திரண்டிங்கு நெசிஅமைப்பு நீடுவாழ
வல்லோனை வேண்டுகின்றோம் அருள்புரிவாய் யாறகுமான்

ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்
புகழனைத்தும் இறைவனுக்கே.

இங்ஙனம்,
தலைவர் அவர்களையும் நெசிஅமைப்பையும்
நன்றியுடன் பாராட்டி வாழ்த்தும்
நிந்தவூர்ப் பெருமக்கள் சார்பாக
அல்ஹுதா சமூகசேவை ஒன்றியம்
நிந்தவூர்.

ஆக்கம் :
ஹாஜியானி மைமூனா செயினுலாப்தீன்
நிந்தவூர் அல்மஸ்ஹர் பெண்கள் உயர்தரப்
பாடசாலை ஸ்தாபக அதிபர்
நிந்தவூர்.

06.07.2013

afeecom, Nintavur.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறை கற்கை நெறியை மேற்கொள்ளும் வேளையில் பல்கலைக்கழக நண்பர்களுடன் டொக்டர் எம்.எல்.எம். சஹீட்



2013இல் தனது 4ஆம் வகுப்பு ஆசிரியை ஹாஜியானி மைமூனா செய்னுலாப்தீன் (நல்லம்மா) அவர்கள் எழுதிய பொத்துவிலின் பொன்னான முதல் அனுபவங்களும் மாணவ மணிகளும் என்ற நூல் வெளியீட்டுக்கு தலைமை தாங்குவதற்காக பொத்துவில் மத்திய கல்லூரிக்கு விஜயம் செய்த வேளையில் கல்லூரியின் பிரதி அதிபர் ஜனாப் கே. ஹம்ஸா அவர்களால் மாலை அணிவித்து வரவேற்கப்படும் நிகழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2013இல் நல்லம்மா அதிபரின் நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு வருகை தந்த பிரமுகர்கள் 1. அல் ஹாஜ் எம்.ஐ.எம்.ஏ. காதர் (ஓய்வு பெற்ற அதிபர்) 2. எம்.எஸ்.அப்துல் வாஸீத் (கௌரவ தவிசாளர், பொத்துவில் பிரதேச சபை) 3. அல் ஹாஜ் எம்.எல்.எம். சஹீட் டொக்டர். 4. ஹாஜியானி மைமூனா செய்னுலாப்தீன் (நல்லம்மா - ஓய்வு பெற்ற அதிபர்) 5. ஜனாப் எம்.ஏ.எம். புஹாரி (பொத்துவில் மத்திய கல்லூரி அதிபர்) 6. அல் ஹாஜ் கே.எம். ஹசன் (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)



நூல் வெளியீட்டு நிகழ்வில் தனது மரியாதைக்குரிய ஆசிரியை நல்லம்மா (அதிபர்) அவர்களுடன் அல் ஹாஜ் டொக்டர் எம்.எல்.எம். சஹீட் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 61. கி.பி. 1972 - சின்ன உல்லை அல் அக்ஸா வித்தியாலயத்தின் தோற்றங்கள்.






1972இல் தோற்றம் பெற்ற கமு/சின்ன உல்லை அ.மு.க. பாடசாலையின் 74/75 இன் தோற்றம். 1. ஜனாப் எம்.ஐ.எம். ஹனிபா (அதிபர்) 2. ஜனாப் எஸ்.வை.எம். ஜௌபர் மௌலானா 3. மௌலவி ஏ. ஆதம் லெப்பை மற்றும் மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1990இல் சுதந்திர தின ஊர்வலத்திற்கு தயாரான நிலையில் அதிபர் எம்.ஐ.எம்.ஏ. காதர் அவர்களுடன் ஆசிரியர்களும், மாணவர்களும்.



1992இல் டேவிட் என்ற வெளிநாட்டவர் இப்பாடசாலைக்காக அமைத்துக் கொடுத்த மலசல கூடமும் பாடசாலை மாணவர்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1992 இல் கமு/சின்ன உல்லை அ.மு.க பாடசாலையின் ஒட்டுமொத்த மாணவர் குழாம். இப்பாடசாலையின் வளர்ச்சியில் ஸ்தாபக அதிபர் அல் ஹாஜ் எம்.ஐ.எம். ஹனிபா அவர்களைப் போன்றே இக்காலப்பகுதியில் கடமையாற்றிய அதிபர் அல் ஹாஜ் எம்.ஐ.எம்.ஏ. காதர் அவர்களது அர்ப்பணம் மிகுந்த உழைப்பானது இப்பாடசாலையை கல்வி ரீதியில் உயர்ந்த மட்டத்துக்கு இட்டுச்சென்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Kaiyoom* - *Fathima*




*Cadermohideen* ima

அன்புடையீர்,

M. C. M. அப்துல் கையூம்
அவர்களுக்கும்
(தபால் தந்தி திணைக்களம்)

M. பாத்திமா அவர்களுக்கும்

M. I. காதர் முகைதீன்
அவர்களுக்கும்
(ஆசிரியர்)

M. C. நஃமா அவர்களுக்கும்

1973ம் ஆண்டு மாசி மாதம் 4ம் திகதி ஞாயிறு பி. ப. 8-30 மணியளவில் நிகழவிருக்கும் திருமண வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடனும் மகிழ்வுடனும் அழைக்கின்றோம்.

மௌலவி H. L. லெவ்வைத்தம்பி
அவர்களும் பாரியாரும்
(மணமகனின் மச்சான்)
மௌலானாத் தோட்டம்,
பொத்துவில் - 3.

U. M. முகம்மது இஸ்மயில் மரைக்காயர்
அவர்களும் பாரியாரும்.
(மணமகனின் பெற்றோர்)
M. I. அப்துல் மஜீத் அவர்களும்
பாரியாரும்.
(மணமகனின் சகோதரர்)
பிரதான வீதி, பொத்துவில் - 1.

*Mr. & Mrs. Moulavi H. L. Lebbethamby & Mr. & Mrs. U. M. Mohamed Ismail*

*Extend their most cordial invitation and*

*request the pleasure of your company at the Wedding Ceremony of*

**M. C. M. Abdul Kaiyoom**
(Post and Telecom. Dept.)
to
**M. Fathima**

**M. I. Cader Mohideen**
(Teacher)
to
**M. C. Nahma**

*on Sunday 4th February 1973 at 8-30 p. m.*

*Moulana Estate,*
*Pottuvil-3.*

*Main Street,*
*Pottuvil-1.*

73-01-25.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 63. கி.பி. 1974 - திருமண நிகழ்வுப் பாரம்பரியங்கள்.



முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர், ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அல் ஹாஜ் எம். அப்துல் மஜீட் அவர்களது திருமண ஊர்வலத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வுப் பாரம்பரியங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**64. கி.பி. 1974 - தேசிய பாடப்புத்தகத்தில் பொத்துவில் கவிஞரின் பாடல்.**

---

# பாலர் கழகம்

## வெண்ணிலவே!

- முதல்வனார் -

விண்ணில் மின்னும் மீன்களிடை
  விளங்கும் நல்ல வெண்ணிலவே!
மண்ணில் மக்கள் மகிழ முழு
  மதியாய் என்றும் வாராயோ?

★

நிலவே நீயும் நீள்வானில்
  நிலவுவ தால்நில வென்றோ?
உலகோர் உவக்க ஒளிதந்து
  உலவும் உனக்கேன் உருமாற்றம்?

★

வழியில் உன்னைக் கார்மேகம்
  வந்தே மறைப்பது, அநியாயம்!
எழில்மிகு தண்மதி உன்மீது
  எரிச்சல் ஏன்தான் கொண்டதுவோ?

★

நல்லது செய்ய வேண்டுமென
  நாடிச் சேவை செய்வார்க்குத்
தொல்லை துன்பம் தடை எல்லாம்
  தோன்றும்; அதற்குநீ உவமை!

1970களில் 4ஆம் வகுப்பு தமிழ் மலர் பாட நூலில் இடம்பெற்ற பொத்துவில் கவிஞர் முதல்வனார் எம்.ஐ. ஆதம் லெவ்வை (ஆசிரியர்) அவர்களது சிறுவர் பாடலே இதுவாகும். இலக்கிய கர்த்தா அ.ஸ. அப்துல் ஸமது அவர்களது முற்றத்து மல்லிகை என்ற சஞ்சிகையில் வெளிவந்த முதல்வனாரின் இந்தக் கவிதை இலங்கை பாடநூல் [illegible]ால் பொருத்தமானதென தெரிவு செய்யப்பட்டதன் விளைவாக தேசிய ரீதியில் பொத்துவில் மண்ணின் ஆற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65. கி.பி. 1974 - புரட்சிகரமான புத்தகம்.







1970களில் பொத்துவில் அரசியல், சமூக விவகாரங்களில் புரட்சிகரமான சிந்தனைகளுடன் முற்போக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இளைஞர் குழுவுக்கு தலைமை தாங்கியவர் மர்ஹூம் ஆஸாத் மௌலானா அவர்கள். இவர் சிறந்த எழுத்தாளராகவும், சிறந்த பேச்சாளராகவும், பன்மொழிப் பாண்டித்தியம் பெற்றவராகவும் விளங்கியவர். இயல்பிலேயே துடிப்பும், வேகமும், விவேகமும், புரட்சிகர எண்ணமும் கொண்டு விளங்கிய மௌலானா அவர்கள் உலகில் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கின்ற அநீதிகளைக் கண்டு பொங்கி எழக்கூடியவராக காணப்பட்டார். இவரது சமூகப்பற்றும் ஆவேசமும் பல சந்தர்ப்பங்களில் நூல் வடிவிலும் வெளிப்பட்டன. அத்தகைய நூல்களுள் 07 நூல்கள் இலங்கையில் பிரசித்தம் பெற்றவை.

1. சலாம் சொல்லாதே
2. அல் - அக்ஸாவில் யூதர்கள் சதி
3. இஸ்லாமிய இனம் ஒழிந்து போகுமா
4. மதம் மாறினர் முஸ்லிம்கள்
5. கமால் அப்துல் நாசர்



இவர் உலகில் பேசப்படும் மொழிகளுள் 17 மொழிகளை சரளமாக பேசக்கூடிய ஆற்றல் கொண்டவராக விளங்கியவர். தனது பட்டப்படிப்பினை பாகிஸ்தானின் முல்தான் மற்றும் கராச்சிப் பல்கலைக் கழகங்களில் மேற்கொண்டு இஸ்லாமிய கலாசாரத் துறையில் சிறப்புப் பட்டங்களையும் பெற்றுக் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலஞ்சென்ற
ஜனாதிபதி ஜே.ஆர்.
ஜெயவர்த்தன
அவர்களுடன்
மர்ஹூம் ஆஸாத்
மௌலானா
அவர்கள்.





பொத்துவிலின் SLFP முக்கியஸ்தர் செயினுலாப்தீன் முதலாளி மற்றும் ஆதரவாளர்களுடன் பொத்துவில் பிரதேச SLFP அமைப்பாளர் மர்ஹூம் ஆஸாத் மௌலானா அவர்கள். (ஆயிஷா பில்டிங் - பிரதான வீதி பொத்துவில்)



கொழும்பில்
இடம்பெற்ற
கருத்தரங்கு ஒன்றில்
முக்கிய
பிரமுகர்களுடன்
மர்ஹூம் ஆஸாத்
மௌலானா அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**66.** கி.பி. 1974/ 75 - மயில்வாகனம் ஓவசியர் குடும்பத்தினரின் திருமணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பக்க நிழற்படத்தில் உள்ளவர்கள் விபரம்.

இடமிருந்து வலம் (முதலாவது வரிசை)

1. திரு எம். கனகரட்ணம் (பா.உ., மா.அ)
2. ஜனாப் ஏ. மீராலெவ்வை (விதானை)
3. ஜனாப் வை.எம். முஸ்தபா (அக்கிராசனர்)
8. திருமதி ரங்க நாயகி பத்மநாதன்

(இரண்டாவது வரிசை)

1. ஜனாப் எம். மீராலெவ்வை (கி.ச.உ)
2. ஜனாப் எஸ். மீராலெவ்வை ((முல்லைக் காரர்)
3. ஜனாப் ஏ. அபூபக்கர் (மரைக்காயர்)
4. ஜனாப் எம்.பி. அப்துல் காதர்
5. ஜனாப் ரீ.கே. முகையதீன் பாவா (போடியார்)
6. ஜனாப் கே. அகமது லெவ்வை (மரைக்காயர்)
7. ஜனாப் எம்.எம். முகம்மது இஸ்மாயில் (வ.வி)
9. ஜனாப் ஏ. முகம்மது அலியார் (மனேஜர்)
10. ஜனாப் ஏ.யு.பி. அசனார்
12. ஜனாப் எம்.எம். ஹனிபா லெவ்வை (ஹாஜியார்)
13. ஜனாப் எஸ்.ஏ. காதர் (அதிபர்)



பொத்துவில் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நபர்களில் ஒருவர் காலஞ்சென்ற எம். கனகரட்ணம் ஐயா அவர்கள். பெரும் தனவந்தரான இவர் வேலுப்பிள்ளை மயில் வாகனம் ஓவசியரின் மூத்த புதல்வருமாவார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ரங்கநாயகி பத்மநாதன் அவர்கள் இவரது சகோதரி ஆவார். பொத்துவில் மண்ணின் இன ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாகவும், இன உறவுக்கு ஒரு பாலமாகவும் திகழ்ந்த இம் மனிதர் சிறந்த கொடை வள்ளலும் ஆவார். 1977ஆம் ஆண்டில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பொத்துவில் தொகுதியில் உதய சூரியன் சின்னத்தில் (த.வி.கூ) போட்டியிட்டு பொத்துலில் தொகுதியின் இரண்டாவது MP ஆகவும் தெரிவு செய்யப்பட்டவர். இடையில் ஐ.தே.க அரசாங்கத்தில் இணைந்து மாவட்ட அமைச்சராகவும் பதவி வகித்து தனது தொகுதி மக்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கு பெரும் சேவையினை வழங்கியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 67. கி.பி. 1976 - உணர்வூட்டும் பிரசுரம்.

ஊரை வளர்க்க ஒன்று திரள்வோம்

உழைப்போரை உயர்த்த ஒரே குரல் எழுப்புவோம்.

## பொத்துவில் பிரதேச வாலிபத் தோழர்களே !

அஸ்ஸலாமு அலைக்கும்

இற்றைக்கு சுமார் இருநூறு வருடங்களுக்குமுன் தோன்றிய எமது ஊர் இலங்கையின் பழம்பெரும் கிராமங்களு ளொன்றாகும். இருந்தும் அண்மைக்காலங்களிற்றோன்றிய சில கிராமங்கள் கூட நாளுக்குநாள் சமூக பொருளாதார விடயங்களில் முன்னேறிவருகின்றன ஆனால் நமதூர்மட்டும் அன்றிருந்த நிலையிலேயே இன்றும் அபிவிருத்தியடையாது இருந்து வருகின்றது. இந்நிலைக்குக்காரணமென்ன? இளைஞர்களாகிய நாம் எமதூரின் பொருளாதார—சமூக-கலாச்சார அரசியல் விடயங்களில் ஒன்றுபட்டு ஓரேகுரல் எழுப்பாமையேயாகும்,

சென்ற பொதுத்தேர்தலின் பின் நாம் பலகட்சியினராகப்பிரிந்து நமக்குள் பகைமையை வளர்த்துக்கொண்டோமே தவிர நமதூர் முன்னேற்றத்திற்காக எத்தவொரு முயற்சியும் எடுத்ததில்லை இம்மடமைத்தனத்தால் பொத்துவில் கிராமம் கற்பனை செய்துகூடப்பார்க்க முடியாதளவிற்கு பின்தள்ளப்பட்டுள்ளது. இந்நிலையை வாலிபர்களாகிய நாம் இன்னும் பார்த்துக்கொண்டுசும்மாயிருப்பதா?

சில சுயநலவாதிகள் பலவருடங்களாக அவர்கள் நினைத்ததிசைகளிலெல்லாம் எம்மை இழுத்துச்செல்ல நாமும் இழுபட்டுச்சென்றோம். இன்று படுகுழியில் விழுந்துகிடக்கின்றோம். இந்நிலையில் நாம்இன்னும் இருப்பதா? துடித்தெழுங்கள் விழித்துவிட்டோமென்று ஓரேகுரல் எழுப்புவோம். மற்றைய இடத்தவர்களெல்லாம் தமது ஊருக்காக இனத்திற்காக உயிரையே இழக்கச்சித்தமாக இருக்கும்போது நாம் மட்டும் உணர்ச்சியற்ற மனித பொம்மைகளாக இருப்பதில் அர்த்தமேயில்லை.

கேட்டுக்கேட்டு எமது செவிகளுக்குப்புளித்துப்போன எமதூர் எல்லைப்பிரச்சினை ஒரு ஆயுட்காலப் பிரச்சினையா? இப்பிரச்சினைக்கு சாவுமணியடிக்க எம்மால்முடியாதா? நம்மிடையே ஒற்றுமையின்மையும் வாலிபர்களாகிய நாம் இவ்விடயத்தில் பங்கெடுக்காமையுமே இப்பிரச்சினை தொடர்ந்திருப்பதற்குகாரணமாகும் எனவேஇப்பிரச்சினையின் ஆயுளைமுடித்து சாவுமணியடிக்க வாலிபர்களே ஓரேயணியில் சேர்ந்து முன்வாருங்கள்.

இன்று எத்தனையோ கிராமங்கள் அரசாங்கத்தின் 'கிராமப்புறங்களுக்கு மின்சாரம்வழங்கல்' என்னும்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளன ஆனால் பொத்துவில்மட்டும் தொடர்ந்து பேரிருளில் மூழ்கிவருவதேன், இதுமட்டுமா? விவசாயத்தில் தன்னிறைவுகாண்போம், தன்னிறைவு காண்போம் என்றகுரல் நாலாபக்கமும் கேட்டுநாமும்செய்தோம் விவசாயம் வேளாண்மை. டபலன் என்ன? மனைவியரின் தாலி மக்கள் வங்கியிலே, குடியிருக்கும் வளவு குபேரர்கையிலே, சங்கத்திலே ஆயுட்காலக்கடன்காரன் என்ற கதவடைப்பு இத்தனையும் ஏன்?நீரில்லை நீரைத்தேக்கிவைக்க குளமில்லை குளமமைக்க ஆளில்லைவாக்குகோட்டுவந்தவர்களின் நாக்கை நம்பி நாம் வாக்களித்தோம் இன்று வயிறெரிய வானம்பார்த்து நிற்கின்றோம். தனித்தனியே சென்று தமதுபதவிகளையும் பட்டங்களையும் பாதுகாத்துக்கொண்டோமேதவிர பொதுப்பிரச்சினைக்கு முடிவுகண்டோமா? இல்லை. இந்நிலையை இன்னும்தொடரவிடுவதா? இளைஞர்களே இச்சந்தர்ப்பத்தில் ஒன்றுபட்டால் இப்பிரச்சினைக்கு ஒருநல்ல முடிவைக்காணலாம்

எமதுகிராமம் பொருளாதாரத்தில் பின்தங்கியதற்கு முக்கியகாரணம் தொழிலில்லாப் பிரச்சினையேயாகும். எம்மில் பலர் ஒருவருடத்தில் நான்குமாதங்கள் வேளாண்மைத்தொழிலில் ஈடுபட்டாலும் ஏனைய எட்டுமாதங்களும் தொழிலின்றிச்சோம்பித்திரிகின்றனர், எனவே இத்தத்தொழிலில்லாப்பிரச்சினையை ஒழிக்க எத்தொழிலையும்தயங்காது செய்ய நாம் முன்வரவேண்டும். " மற்றவனைக்கெடுக்கும் தொழிலைவிட வேறு எந்தத்தொழிலும் இழிவானதல்ல, என்பதை நாம் உணரவேண்டும்: நமதூரில் இப்போது எத்தனையோ தொழில்கள் தேடுவாரற்றுக்கிடக்கின்றன, உதாரணமாகக் கூறப்போனால் நமதூரில் இப்போது செங்கற்கள் செய்யலாம் ஆனால் எல்லாவசதிகளிருந்தும் அத்தொழிலைச்செய்ய நம்மவர்கள் தயங்குகின்றனர். ஏனித்தநிலை நிலையைமாற்றியமைப்பதோடு நமதூரில் இன்னும் பல சிறுகைத்தொழில் வசதிகளையும் ஏற்படுத்தமுன்வரவேண்டும்.

மாண்புமிகு கல்வியமச்சரின் அரியசேவையால் நமது நாட்டின் பல பகுதிகளும் பயனடைந்துவரும் இவ்வேளையில் நமதூர்மட்டும் பயனடையாமல் இருந்துவருவது வித்தையாலதே இதற்குக்காரணமென்ன?பாடசாலைவிடயங்களில் நமக்கு அக்கறையில்லை. அதுமட்டுமல்ல நமதூரின்எந்தவொரு கல்வி முன்னேற்ற வேலையிலும் நாம் ஒருசிந்தனைசெலுத்துவதில்லை, இந்நிலைமாறவேண்டும், ஆசிரியர்பற்றாக்குறைவு பாடசாலைகட்டிடக்குறைவு மாணவர்கல்விபெற வசதியின்மைபோன்ற குறைகளை நீக்கவும் பாடசாலைபற்றியோ அல்லது தமது பிள்ளைகளுக்கு கல்வியூட்டவேண்டும் என்பதுபற்றியோ கவலையில்லாமல் தூங்கிக்கொண்டிருக்கும் பெற்றோர்களைத் தட்டியெழுப்பவும் நாம் ஒன்று திரண்டு முன்வரவேண்டும். கட்சிப்பற்றை இப்போது மறந்து ஊர்ப்பற்றைப் நினைத்து காரியத்தில் இறங்கவேண்டும்.

இவ்வாறாக நமதூரில் எத்தனையோகுறைகளுள்ளன. இக்குறைபாடுகளை நீக்குவதற்கு பழையபகைமையும் தனிப்பட்ட பகையையும் மறந்து இளைஞர்களாகிய நாம் ஒன்றுதிரளவேண்டும், உயிருள்ளவரை ஊர் முன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டும். உழைப்போரை உயர்த்தவேண்டும், என்னும்நோக்குடன் நமது பொத்துவில் பிரதேசத்தில் வாலிபர் பேரவையொன்றை அங்குராப்பணம் செய்துவைத்துள்ளோம் இப்பேரவை சட்டரீதியானதாகவும் 18-35 இடைப்பட்டசகல இளைஞர்களையும் அங்கத்தவர்களாகக்கொண்டதுமாக இருக்கும். பொத்துவிலில் உள்ள ஒவ்வொரு வட்டாரத்திலும் அவ்வட்டாரத்திலுள்ள வாலிபர்களைக்கொண்டு ' பொத்துவில் பிரதேச வாலிபர் பேரவைக்கிளைகள் ' அமைக்கப்படும், இதற்கு சகல வாலிபர்களும் ஒன்றுசேர்ந்து முன்வரவேண்டும்

இதற்குமுன் இதுபோன்ற எத்தனையோ இயக்கங்கள் தோன்றி நாளடைவில் அழிந்துபோயிருக்கலாம். ஆனால் அவை போன்று இந்தப்பேரவையும் அழிந்துபோகுமென்று நாம் கற்பனைசெய்யலாம். ஆனால் அவ்வாறு அந்நிலை இப்பேரவைக்கு ஏற்படமுடியாது. என்றுதான் நாம் நினைக்கின்றோம் துடிப்புள்ள இளைஞர்கள் இதற்குமுன் நமதூரில் இல்லாமலிருந்திருக்கலாம். ஆனால் இப்போது துடிப்புள்ள இளைஞர்கள் இருக்கிறார்கள், இந்தப் பொத்துவிலில் இவ்வாறான இளைஞர்கள் உள்ளவரை இப்பேரவை அழியாது. அழிக்கவும் முடியாது. முன்தோன்றிய இயக்கங்கள் போன்று இதுவும் நாளடைவில் அழிந்துவிடுமானால் இவ்வூரில் துடிப்புள்ள இளைஞர்கள் இல்லையென்றும் இளைஞர்கள் என்ற பெயரில் நடைப்பிணங்கள்தான் உலாவுகின்றன என்றும்தான் பொருளாகும். எனவே இளைஞர்களாகிய நம் ஒற்றுமையாகவிருந்தால் ஒருவராலும் எம்மைமக்கூறுபோட முடியாது என்பதை நாம் மனதிற்கொள்ளவேண்டும்.

இளைஞர்களே ஒற்றுமைக்கு சக்தியளியுங்கள் வேறு எந்தத்தீய சக்திக்கும் இடமளிக்காதீர்கள். பணவசதி படைத்த பெரியோர்களே இப்பேரவைக்கு உதவுங்கள். " அவர்கள் பாட்டில் செல்லட்டும் என்று எங்களை ஒதுக்கித்தள்ளிவிடாதீர்கள் " உங்கள் நல்லறிவுகளை எங்களுக்குக் கூறுங்கள்,

" மரியாதைசெய்வோம் ஆனால் வால்பிடிக்கமாட்டோம் "

" அன்புசெலுத்துவோம் ஆனால் அடிபணியமாட்டோம் "

இப்பிரசுரம் பொத்துவில் பிரதேச அபிவிருத்தி வாலிபர்பேரவைக் குழுவினரால் கல்முனை பிரதான வீதியில் இருக்கும் நூர்பிரிண்டிங் அச்சகத்தில் அச்சிட்டு 3-9-1976ல் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 68. கி.பி. 1976 - பொத்துவில் மக்கள் வழங்கிய கௌரவம்.

வெள்ளிவிழாக் கண்டு வீறு நடைபோடும் வெற்றி வீரனும்
பதில் நீதி அமைச்சரும்
நிந்தவூர்த் தொகுதி அரச பேரவை உறுப்பினருமான

**ஜனாப். எம். எம். முஸ்தபா அவர்களுக்கு**

பொத்துவில் மக்கள் பூரித்தளிக்கும்

# மாபெரும் வரவேற்பு விழா

### நிகழ்ச்சிகள்:

காலம்: **8-10-76** (வெள்ளிக்கிழமை) பிற்பகல் **4** மணி.

இடம்: பொத்துவில் கிராம சபைச் சந்தைச் சதுக்கம்.

தலைமை: ஜனாப். வை. எம். முஸ்தபா J. P. அவர்கள் (பிரதம நம்பிக்கையாளர்)

கிறுஅத்: ஜனாப். எச். எல். லெவ்வைத்தம்பி மௌலவி அவர்கள்.

வரவேற்புரை: ஜனாப். எம். ஐ. ஆதம்லெவ்வை (ஆசிரியர்) அவர்கள்.

<u>பிரதம பேச்சாளர்கள்</u>

- ★ திரு. சோமரெட்ண செனரத் **M. P.** (அம்பாரை மாவட்ட அரசியலதிகாரி, பிரதி நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைச்சர்)
- ★ ஜனாப். **A. M.** சம்ஸுதீன் **J. P. U. M.** (சட்டத்தரணி)
- ★ ஜனாப். எம். சி. அகமது **M. P.** (கல்முனை)
- ★ ஜனாப். பக்கீர்த்தம்பி – ஈழமேகம் (அதிபர்)
- ★ ஜனாப். எம். ஐ. ஏ. ஜப்பார் **J. P.** (சட்டத்தரணி) (பிரதம சட்ட ஆலோசகர் R.V.D.B.)
- ★ ஜனாப். யூ. எல். எம். முகைதீன் **J. P.** (சட்டத்தரணி) (ஸ்ரீ. ல. சு. க. பிரதம அமைப்பாளர்)
- ★ ஹாஜி **A. L. M** காஸீம் மௌலவி
- ★ திரு. என். தருமலிங்கம் **J. P.** (ஸ்ரீ. ல. சு. க. பிரதம அமைப்பாளர்)
- ★ ஜனாப். கே. எம். ஹஸன் (ஆசிரியர்)
- ★ திரு. சி. முத்தையா **J. P.**
- ★ ஜனாப். **S. A.** காதர் (ஆசிரியர் - A. P. C. மெம்பர்)
- ★ ஜனாப். எம். எம். ஹனிபா ஹாஜி (பிரதம நம்பிக்கையாளர்)
- ★ திரு. எம். எஸ். சல்காது (அதிபர் - சிங்கள வித்தியாலயம்)
- ★ ஜனாப். யூ. எல். எம். அபுபக்கர் (அதிபர் - முஸ்லிம் மகாவித்தியாலயம்)
- ★ திரு. வி. ரி. செல்லத்துரை (அதிபர் - மெ. மி. த. க. வித்தியாலயம்)
- ★ ஜனாப். எம். பி. ஏ. அஸீஸ் **J. P.** (ஸ்ரீ. ல. வா. மு. தலைவர்)
- ★ ஜனாப். **A. M.** காசிம் **J. P.** (தலைவர் - இணக்கசபை)
- ★ ஜனாப். ஏ. அபுபக்கர் மரைக்கார் (உபதலைவர், ஸ்ரீ. ல. சு. க. பொத்துவில்)
- ★ ஜனாப். எம். மீராலெவ்வை மரைக்கார் (ஜெட்டைக் குழுத் தலைவர்)
- ★ ஜனாப். எம். ஐ. காதர் முகைதீன் (தலைவர் - இ. சோ. மு)
- ★ ஜனாப். எம். ஏ. அஸீஸ் (செயலாளர் இளைஞர் பேரவை)
- ★ ஜனாப். எம். சி. ஏ. றசீது (இளைஞர் பேரவை உறுப்பினர்)

நன்றியுரை: ஜனாப். கே. எம். காசிம் (கிராம சேவகர், செயலாளர் - ஜும்மாப் பள்ளிவாசல்)

**மேள வாத்தியம், பொல்லடி, சீனடி, வாள்வீச்சு, பூவாணம், குரவை**
சகிதமாக பிரதான வீதி வழியாகப் பொத்துவில் ஜும்மாப் பள்ளிவாயலுக்குச் சென்று அலங்காரப் பந்தல் வரை ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்.

இவ்வண்ணம்,
வரவேற்புக் குழுவினர்

பொத்துவில் — 2-10-76.

குட்வின் ஒட்டோ அச்சகம் கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 69. கி.பி. 1977 - அரசியல் கவிதை.

# வாருங்கள் எம்.பி. ஐயா வணக்கம் பல கோடி!

வாருங்கள் "எம்பி" ஐயா!
வணக்கம் பலகோடி!
பாருங்கள் இத்தொகுதி
பாழாகி விட்டதுவே?

ஏழாண்டின் முன் நீங்கள்
எங்கள் தெருக்களிலே;
நாளாய் அலைந்த
நடை எல்லாம் நாமறிவோம்?
அன்று...!

உங்களைப் போல்...?
சமதர்ம வாதியினைச்
சரித்திரமே காணுது!
எம்போல...!

ஒருசாண் வயிற்றுக்காய்
உழைத்து, உழைத்தலுத்த
தோழர்களின் திண்ணைகளில்;
"சோஷியலாய்" நீரமர்ந்து;
சோடா குடித்திர்
சொக்கினேம் அப்போது.
நீயோர், நடிகனென்று
நினைத்திடவும் இல்லையயா!!
உன்னுடைய:

ஆசை மொழிகள்!
அத்தனையும் எம்முடைய
என்பில், உதிரத்தில்;
இதயத்தி லெலாம் தோய்ந்து;
அன்பு உருகும் ஆசைப் பிரவாகம்!!
இன்பம், நீ பாய்ச்சிடுவாய்;
எம் பதியை வாழவைப்பாய்
என்று;. எம் வாக்குகளை
எழிற் கரத்தால் வார்த்தளித்தோம்?!
அதனலே...?

அன்று நீயோர் அரசன்!!
எம்தொகுதிக்கு அரசன்!!!
அதால்...!

எங்கள் உரிமைகள்,
என்றும், நிலை பெறவே;
உம்மைத் தெரிந்தோம்!!
நீவிர்... எம்மை!!

"அவசர நிலை" என்ற
"ஆள் விழுங்கிப் பூட்டதனுல்"
கவசமிட முன் நின்றீர்!!
கருத்தை, உணர்வுகளை;
காட்டுகின்ற எம்முடைய
பத்திரிகைச் சுதந்திரத்தை
பறித்தீர்!! அதற்குள்ளே...!
இன்றைக்கு, இங்கே!
உங்கள், தரிசனமும்
வந்த தையா??

உங்களுக்கு நாம் வணக்கம்
ஐயா!

பாழ் விழுந்த எம் தொகுதி,
வாழ் வெடுப்ப தென்றையா??
"றெஸ்ட் ஹவுஸில்" நீ வந்தால்
"ரேஸ் கார்கள்" ஓடுதையா!
கஷ்டப் படும் நாங்கள்
"கார்" பிடிக்க யாது செய்வோம்!!
"நீயெம்பி"! நாம் நம்பி-!!
வீண் வம்பு!!! அதனலே...!

வாருங்கள் எம் பி ஐயா,
வணக்கம் பலகோடி!!
தீருங்கள்!! எம்தொகுதித்
தேவைகளை! என்று நாம்;
கூறத் தயாரில்லை!
ஏனென்றால்...!!

உம்முடைய அருஞ்சேவை
உணர்ந்தவர் நாம்!!
உணர்ந்தவர் நாம்!!
இப்போது —
ஐந்தாண்டு முடித்த
"எம்பி"க்கள் எல்லார்க்கும்!!
"பென்சன்" பெறலாமே!!
எம் பி ஐயா??
மன்னிக்க வேண்டுகிறோம்!!
வணக்கம்!! சென்று சேருமையா!!

— பொத்துவிலூரன்

பொத்துவிலூரனின் இந்த அரசியல் கவிதையானது 1977.04.10ஆம் திகதிய சிந்தாமணி வார இதழில் வெளிவந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. கி.பி. 1980 கள் - பொத்துவில் சந்தைப்பகுதியின் (சின்ன மார்க்கட்) இரு வேறு தோற்றங்கள்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 71. கி.பி. 1980 - கிழக்கு சிவாஜி - கலைஞர் முகைதீன்.

# பொ | வெண்ணிலா கலைக் கழகம்

**கலையகம் " சகிலா மன்சில் "**

லேக் வியு

**பொத்துவில்**

அமைப்பாளரும் இயக்குனரும் எம். எம. முகைதீன்.

ஆலோசகர்

**ஆசிரியர்**
ஜனாப் S.H.M. ஹுசைன்
மட்டுநகர்.

காரியதரிசி
M. P. முகைதீன்.



பொத்துவில் கலை, இலக்கிய வரலாற்றில் 'ஈழத்து சிவாஜி' என்ற புனைப் பெயர் இரண்டு கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. ஒருவர் யுவன் அப்துல் கபூர், மற்றவர் கலையன்பன் அப்துல் அஸீஸ் அவர்கள். இந்த வகையில் கிழக்கு சிவாஜி என அழைக்கப்படுகின்ற மூத்த கலைஞரே ஓய்வு பெற்ற ஆண் தாதி ஜனாப் எம்.எம். முகைதீன் அவர்களாவார்.

கலைஞர் எம்.எம். முகைதீன் அவர்கள் 1960களில் இருந்து இன்று வரையிலும் கலைத்துறையில் குறிப்பாக நடிப்புத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக திகழ்பவர்.

மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் வேளை அங்கு இடம்பெறும் மாணவர் மன்ற நிகழ்வுகளில் தனது பேச்சாற்றலையும் விவாதக் குழுவினூடாக தனது விவாதத் திறனையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் வேளையில் தமிழ் ஆசானும் பிரபல எழுத்தாளருமான எஸ். பொன்னுத்துரை அவர்களின் தூண்டுதலினால் நல்ல நடிகராகவும் வெளிப்படத் தொடங்கினார். கல்லூரியின் பரிசளிப்பு விழா ஒன்றின் மூலமாக இவர் நடித்த முதல் நாடகம் '***வேள்வி***' என்பதாகும். சரித்திரக் கதை அமைப்பு கொண்ட இந்நாடகத்தில் முகைதீன் அவர்கள் கெப்பிட்டிப்பொல திசாவையின் பாத்திரமேற்று நடித்து நல்ல வரவேற்பினைப் பெறவே, இவரது ஆர்வம் நாடகத்துறையினை நோக்கி முழு வீச்சில் திரும்பியது. தொடர்ந்து சரித்திரக் கதை அமைப்பு கொண்ட மேடை நாடகங்களின் மூலமாக வெளிப்பட்ட இவரது நடிப்பாற்றல் கல்லூரியின் ஆசிரியர்களையும், மாணவர்களையும் வியப்பில் ஆழ்த்தியது. ஒரு சமயம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைப்பற்றில் நடைபெற்ற மீலாத் விழா நிகழ்வொன்றில் கல்லூரி சார்பாக சாஜஹான் என்ற சரித்திர நாடகத்தினை மேடையேற்றுவதற்காகச் சென்று அதனை சிறப்பாக அரங்கேற்றிய வேளையில் அந்தவூரின் பிரபல நாடகக் குழுவொன்று நாடகப்போட்டியொன்றுக்கு முன்வருமாறு சவால் விடுத்தது சவாலை ஏற்றுக் கொண்ட முகைதீன் அவர்கள் அந்த இடத்திலேயே, போடி போடி போக்கணங் கெட்ட போடி எனும் நாடகத்தை சடுதியாக உருவாக்கி வெற்றியும் பெற்றமை அவரது கலை வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாகவே இன்றும் நிழலாடுகின்றது.



கல்லூரி வாழ்வு நிறைவடைந்த பின்னர் 1965 காலப்பகுதியில் இலங்கை வானொலி தேசிய சேவையானது மாவட்டம் தோறும் ஈழத்து கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக வேண்டி நடாத்தி வந்த **'குதூகலம்'** எனும் நிகழ்ச்சியில் போடியார் என்ற ஓரங்க நாடகத்தில் ஆறு (06) வகையான பாத்திரங்களில் நடித்ததன் மூலம் இவரது கலைத்திறமை இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் வாழும் இடங்களிளெல்லாம் பரவத் தொடங்கிற்று. இந்நிகழ்வில் இருந்து ஓரங்க நாடகங்களில் தொடராக ஆர்வங் காட்டி வந்ததோடு சினிமாப் பாடல்களை ஒலிக்களிட்டு அதற்கு வாயசைத்து அபிநயம் காட்டி நடித்த முதல் கலைஞர் என்ற பெயரும் இவருக்குக் கிடைத்தது. நடிகர் திலகம் சிவாஜியின் சோகப் பாடல்களை பின்னணியாக ஒலிக்கவிட்டு இவர் அப்பாடல்களுக்காக வெளிப்படுத்திய நடிப்பசைவுகள் அப்படியே நடிகர் திலகத்தையே ரசிகர்கள் முன் கொண்டுவந்து நிறுத்தியது. மட்டக்களப்பெங்கிலும் இவரது திறமை பரவத்தொடங்கியது. இதன் விளைவாக உச்சக்கட்ட வீச்சுடன் இவர் நாடகத்துறையில் ஈடுபடத் தொடங்கினார்.

1970 களில் ஈழத்து தமிழ் சினிமா தவழத் தொடங்கியிருந்த வேளைகளில் சுமதி எங்கே என்ற திரைப்படத்தில் ஒரு உப பாத்திரத்திலும், ஏழு வீரர்கள் என்ற திரைப்படத்தில் ஏழு நாயகர்களுள் ஒருவராகவும் நடித்து தன்னை திரைப்பட நடிகராகவும் வெளிப்படுத்தியிருந்தார். எனினும் நிதிப்பிரச்சினை காரணமாக ஏழு வீரர்கள் திரைப்படம் இடையிலேயே நிறுத்தப்பட்டு விட்டது. அது வெளிவரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது சொந்தவூராம் பொத்துவிலில் 1967இல் 'பார் மகளே பார்' எனும் மேடை நாடகம் மூலமாக களமிறங்கிய முகைதீன் அவர்கள் தொடர்ந்து 1970ஆம் ஆண்டில் கலையன்பன், முதுநபீன், ஜௌபர் மௌலானா, றசீட் மனேஜர் போன்ற கலைஞர்களுடன் இணைந்து 'யார் அவன்' என்ற துப்பறியும் மேடை நாடகத்திலும் பின்னர் தனது சொந்த முயற்சியில் 1978 காலப்பகுதியில் பித்ரா மற்றும் இறைவனின் பாதையிலே போன்ற நாடகங்களையும் இயக்கி நடித்து அரங்கேற்றியிருந்தார்.

1980இல் வெண்ணிலா கலைக்கழகத்தினை உருவாக்கி பல புதிய கலைஞர்களையும் அறிமுகப்படுத்தியதோடு மீண்டும் பார் மகளே பார் என்ற நாடகத்தினை அரங்கேற்றி பலத்த பாராட்டினையும் பெற்றார்.

இக்காலங்களில் குறிப்பாக 1977இல் பொத்துவில் மகா வித்தியாலயத்தின் வெள்ளிவிழா நிகழ்வில் இடம்பெற்ற இவரது பாடல் அபிநயமும், ஓரங்க நாடகமும் அதே போன்று 1982ஆம் ஆண்டு காலப்பகுதியில் அ.ச. அப்துல் ஸமது, ராஜ கவி, கவிவாணர் போன்ற மூத்த கவிஞர்களும், கலைஞர்களும் பங்குபற்றிய பொத்துவில் கடற்கரை கொடியேற்று கலைவிழா நிகழ்வில் இவர் வழங்கிய ஓரங்க நாடகமும் பொத்துவில் மக்களால் இன்றுவரையும் பேசப்படுகின்றன. நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் சாயலில் அமைந்து நின்ற இவரது நடிப்பும், அபிநயமும் அன்றைய காலகட்ட ரசிகர்களை வெகுவாக கவர்ந்திழுத்தது எனலாம்.

2005ஆம் ஆண்டிற்குப் பின்னர் கலைஞர் றிஸ்வி அவர்களுடன் இணைந்து நிஜம், நிழல் மற்றும் Rate Boy போன்ற குறுந் திரைப்படங்களில் நடித்ததன் மூலமாக சின்னத் திரை நடிகராகவும் வலம் வந்து கொண்டிருக்கும் கலைஞர் முகைதீன் அவர்களின் கலையாக்கங்கள் இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. கலைஞர் றிஸ்வி அவர்களுடன் இணைகின்ற வரை சிவாஜியின் சாயலில் நடித்துக் கொண்டிருந்த முகைதீன் அவர்கள் நிஜம் என்ற குறுந்திரைப்படத்தினூடாக தனது நடிப்புப் பாணியை யதார்த்தமாக மாற்றிக் கொண்டுள்ளார். கொடுத்த பாத்திரத்தை அதிசிரத்தை கொண்டு நடித்து முடிக்கின்ற உண்மையான கலைஞன் என கலைஞர் றிஸ்வி அவர்களினால் சான்றுரையும் வழங்கப்பட்டவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









சிரேஷ்ட கலைஞர் முகைடீன் அவர்கள் நடித்த குறுந்திரைப்படங்கள் சில.

1. Rate Boy
2. பாடல் அபிநயம் (Relax Time) சக்தி TV
3. } நிழல்
4.
5.



சக்திதொலைக்காட்சியில் 2004இல் Relax Time நிகழ்ச்சியில் இடம்பெற்ற இவரது பாடல் அபிநயமும் 2014இல் வசந்தம் டிவியில் ஒளிபரப்பான **'யாதும் ஊரே யாவரும் கேளீர்'** நிகழ்ச்சியில் கலைஞர் றிஸ்வியின் **'செல்லாக் காசு'** குறுந்திரைப்பட சூட்டிங் நிகழ்வும் இவரது நடிப்புத் திறனை (சின்னத்திரை மூலமாக) இலங்கையெங்கிலும் வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களாக அமைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**72.** கி.பி. 1981 - ஜலால்டீன் சதுக்கம் எனும் இருபது வீட்டுத்திட்டம். (தினகரன் - 1981.03.28)

# தொகுதி வாழ் மக்களின் மனதில் அபிவிருத்தி காணும் பொத்துவில்



பொத்துவில் தொகுதியின் முதல் எம்.பி. ஜனாப் எம். ஏ. எம். ஜலால்தீன்

**கட்டுரைத் தொகுப்பு: ஐ. எல். எம். தாஹிர், ஏ. நகீம் உடையார் [நமது அட்டாளைச்சேனை நிருபர்]**

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தின் அதி பழமைவாய்ந்த சுமார் பதினைந்தாயிரம் முஸ்லிம், தமிழ், மக்கள் வாழும் கிராமமே பொத்துவிலாகும். வடக்கே பத்து மைல்களுக்கப்பால் கோமாரிக் கிராமத்தையும், தெற்கே பதினேழு மைல்களுக்கப்பால் பாணமைக் கிராமத்தையும் கிழக்கே இந்து சமுத்திரக் கடலையும், மேற்கே பதினேழு மைல்களுக்கப்பால் லாகுகலை கிராமத்தையும் எல்லையாகக் கொண்டு சுற்றுச்சூழ கிழக்கில் கடலாலும் ஏனைய பாகங்களைத்தும் சுற்றுச் சூழ யானை, புலி, கரடி போன்ற பயங்கர விலங்குகள் வாழும் காடுகளைக் கொண்டும் வேறுபடுத்தப்பட்ட அபிவிருத்தி மிகக் குன்றிய ஒரு பெரும் கிராமமே இதுவாகும்.

கடந்த காலங்களை எடுத்துப் பார்க்கும் போது தன்னிச்சையாகவே இருந்து வரும் இக்கிராமம் இரண்டு வகையில் பிரபலம் பெற்று வருகின்றது. ஒன்று அறுகம்பைக் குடாவும், வண்ணப்பறவைகள், விலங்குகளின் புகலிடமாக இருந்து வரும் 'கூமுனை' என்னும் இடங்களைக் கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் அதிகவரும் அமைப்புக்களைக் கொண்டிருப்பதுவுமாகும். அடுத்தது பொத்துவில் தொகுதி என்ற பெயரில் அரசியல் துறையில் அடிக்கடி அடிபட்டும், தனது பெயரைக் கொண்ட பொத்துவில் என்ற பெயரை முதலாகக் கொண்டு இரு காரணங்களுமாகும்.

இந்தக் கிராமத்தை எடுத்து நோக்கும்போது அரசியல் வரலாற்றில் கடந்த 30 ஆண்டுகளாக தம் பெயரைக் கொண்டு பலருக்கும் பெரும், புகழும் எடுத்துக் கொடுத்து நின்றதும் இவ் அரசியல் காரணங்களால் தாம் எவ்வித அபிவிருத்தியுமே கண்டு மிளிரவில்லை.

இங்கு வாழும் மக்கள் பிரதானமாக விவசாயத்தையும், மீன் பிடித்தொழிலையுமே செய்து வருகின்றனர். இவ்விரு துறைகளிலும் சுயமாகவே ஏதோ இயற்கையின் உதவியுடனும், சிற்றக்கூடுமே வாய்ப்புப் படைத்த கொண்டுள்ளதை தெளிவாக உணரமுடியும். இவர்களுக்கு அரசியல் இலாபங்கள் மிக அரிதாகவே கிடைத்து வந்துள்ளன.

இந்நிலையில் அதிமேன்மைமிகு தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களின் தலைமையின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளாக இந்நாட்டில் தர்மீக ஆட்சி மிளிரச் செய்து வரும் இக்கால கட்டத்தில் அரசின் மேன்மைக்குரிய பிரதிநிதியாக பொத்துவில் தொகுதியின் முதல்வராக இருந்துவரும் கௌரவ டாக்டர் ஜனாப் எம். ஏ. எம். ஜலால்டீன் அவர்களின் கண்ணோட்டத்தில் இக் குறுகிய மூன்று ஆண்டுகளுக்குள்ளாக எத்தனை தூரம் அபிவிருத்தி அடைந்துள்ளது என்பதனை இக்கிராமத்துக்குச் செல்லும் எவரும் விரைவாக தெரிந்து கொள்ள முடியும். இதனை உணர்த்தும் ஓர் பேர்விழாதான் நாளை பொத்துவிலுக்கு விஜயம் செய்யும் மாண்புமிகு வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீட் அவர்கள் இன்று திறந்துவைக்கும் உயர் கல்விக்குதவும் படியான இரு பிரிவு விஞ்ஞான ஆய்வு கூடம், வீடற்றோருக்கான 'ஜலால்டீன் சதுக்கம்' எனும் வீடமைப்புத் திட்டம், மூப்பதற்கு மேற்பட்டோர்களுக்கு வேலையளிக்கும் தச்சுத் தொழிற்பயிற்சி நிலையம் என்பனவாகும். இத்துடன் வெளிநாட்டமைச்சர் அவர்களால் இருபத்து ஐந்தாயிரம் ரூபா செலவில் பொத்துவில் வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள சுற்றுமதிலும் திறந்து வைக்கப்படுகின்றது.

இது தவிர இங்கு செய்து முடிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களையும் முற்றாக இங்கே விளக்கமளிப்பதாயின் இக் கட்டுரை நீண்டு கொண்டு சென்றுவிடும். எனவேதான் அவற்றில் முக்கியமானவற்றை குறிப்பிடுவது சிறந்ததாகும்.

விவசாயத்தைப் பொறுத்த வரை இக்கிராமத்தில் வாழும் சுமார் எண்பது சத வீதமானோர் சொந்த விவசாயக் காணிகளை உடையவர்களாவர். ஆயினும் இக்காணிகளில் தொன்றுதொட்டு சதவீதமானவை மாரிபோக மழையை நம்பி நெற்செய்கை பண்ணப்படுபவையாகும். ஏனைய பத்து வீத மானவற்றுக்கு மாத்திரமே இருபோக நெற்செய்கைக்குரிய பாய்ச்சல் வசதிகள் இருந்தன. எனவே ஏனைய 90 வீதமான காணிகளுக்கும், பாய்ச்சல் வசதியை ஏற்படுத்தும் முகமாக இப்பகுதியில் தூர்ந்து போய் இருந்த செம்மண்ணிக் குளம், றொட்டை, நாவலாறு, சோளம் குளம், பாணமைக் குளம், தமராம் பொலை போன்ற பல குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், தமராம்பொலை எனும் பகுதியை விஸ்தரி முன்மாதிரிக் கிராமமாக்கும் முயற்சியும் நடைபெறுகின்றது குறிப்பிடத்தக்கது.

மற்றும் கல்வித்துறையைப் பொறுத்தவரை இக்கிராமம் அதி பின்தங்கிய நிலையில் காணப்பட்டே வந்துள்ளது. சுமார் 15 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழும் இக்கிராமத்தில் சில பாடசாலைகளுண்டு. ஆனால் பொத்துவில் முதல்வர் அவர்களின் சிறப்பு முயற்சியினால் ஹிதாயாபுரம், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் மேலும் இரு புதிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்லாது ஒளி இன்றியிருந்த பொத்துவில் கிராமத்துக்கு பல இலட்சம் ரூபாய்ச் செலவில் மின்சாரம் வழங்கப்பட்டதுடன் மீனவர்களுக்கான இருபது வீடுகளும், நவீன சந்தை, மர டிப்போ என்பனவும் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுதவிர மற்றும் பலவும் செய்யப்பட்டுள்ளன.

பொத்துவில் ஹிதாயாபுரம், இன்ஸ்பெக்டர் ஏத்தம், ஆகிய இடங்களுக்கு நீர் வழங்கும் திட்டம் ஒன்றும் செயற்படுத்தப்படவுள்ளது. இதற்கான குழாய்க் கிணறுகள் நாவலாறு எனும் இடத்தில் யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் செய்யப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

எனவே எத்தவித அபிவிருத்தியும் இல்லாத நிலையில் இருந்த பொத்துவில் இன்று ஐக்கிய தேசியக் கட்சி அரசின் கீழ் அட்டாளைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட மக்கள் சேவகன் டாக்டர் ஜலால்தீன் அவர்களினால் பெருமளவு அபிவிருத்தி அடைந்து வருகின்றது.

இத்தருணத்தில் அரசியல் லாபம் கருதும் சிலர் இவ்வூர் மக்களின் மனமாற்றத்தை திசை திருப்பி அரசின் நற்சேவையினை மறைக்க முயன்று கொண்டிருக்கவும் செய்கின்றனர் என தெரிய வருகின்றது. இவர்களின் எந்தச் செயலும் நன்றியுள்ள மக்களின் முன்னே பலிக்காது என்பதற்கு ஒப்பாகவே இன்று பொத்துவிலில் நடைபெறும் பேர்விழா ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. இத்தருணத்தில் இச்சிறப்புக் கட்டுரையினையும் நாம் வெளியிடுவது சாலப் பொருத்தமுடையதாகும்.

எனவே மக்கள் சேவையில் மகிழ்வோருக்கு மனம்நிறைந்த பாராட்டுக்களை வழங்குவதுடன் மக்களும் சேவையுடையோர்க்கு சிறப்பான ஒத்தாசை கொடுத்து நலிந்த கிராமங்களுக்கு நற்பணிகள் தொடர்ந்திட வாழ்த்துவோமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1980இல் கமு/தாறுல் பலாஹ் வித்தியாலயத்தினை ஆரம்பித்து வைக்கும் முகமாக வருகை தந்த பா.உ. உறுப்பினர் Dr. M.A.M ஜலால்டீன் அவர்கள் வரவேற்கப்படுவதையும், அருகில் கல்வி அதிகாரிகளும், ஊர்ப் பிரமுகர்களும் இணைந்து நிற்பதனையும் காணலாம்.



1980இல் கமு/தாறுல் பலாஹ் வித்தியாலயத்தினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் மேடையில் பா.உ. Dr. M.A.M. ஜலால்டீன் அவர்களுடன் ஏனைய பிரமுகர்கள் அமர்ந்திருப்பதனையும், பொத்துவில் பிரதேச ஐ.தே.க அமைப்பாளர் ஜனாப் எம்.ஐ. காதர் முகைதீன் அவர்கள் உரையாற்றுவதையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 73. கி.பி. 1981 - பொத்துவில் வித்தகர்.



பொத்துவில் மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டு இம் மண்ணிலேயே வாழ்ந்து வரும் பிரபல தனவந்தர், அல் ஹாஜ் ஏ.எல்.எம். காசிம் மௌலவி அவர்கள் ஒரு அரசாங்க நியமனம் பெற்ற மௌலவி ஆசிரியராக கடமையாற்றியவர் என்பது இன்றைய புதிய தலைமுறையினருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லைதான். 1960களில் பதுளை ஊவா கல்லூரி, கொழும்பு DS சேனநாயக்கா கல்லூரி மற்றும் சென் மத்தியூ கல்லூரிகளில் SSC வகுப்புக்கள் வரையும் இஸ்லாம், அரபுப் பாடங்களை போதித்து வந்ததோடு 'பொத்துவில் வித்தகன்' என்ற புனைப் பெயரில் சிறந்த இஸ்லாமிய இலக்கியவாதியாகவும் திகழ்ந்தவர். 1960, 70களில் தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, முஸ்லிம் முரசு என அனேக நாளிதழ்களில் இஸ்லாமிய சட்டங்கள், வரலாறு, இலக்கியம் தொடர்பான ஏராளமான கட்டுரைகளை வரைந்ததோடு இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவையில் திருக் குர்ஆன் விளக்கம், இஸ்லாமிய சட்டம், மணி மொழிகள் என பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்தி நாடாளாவிய முஸ்லிம்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றவர். அத்துடன் 29 இஸ்லாமிய நூல்களை எழுதி, தன்னை ஒரு ஆற்றல் நிறைந்த இஸ்லாமிய இலக்கியவாதி எனவும் வெளிப்படுத்தியவர். எழுத்தாளராக மாத்திரமின்றி சிறந்த பேச்சாளராகவும் துலங்கி நின்ற மௌலவி அவர்கள், யாழ்ப்பாணத்தில் வித்துவான் வேந்தனாரினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'திருக்குறல் விழா' நிகழ்வில் ஊவாக் கல்லூரியின் சார்பாக பங்குபற்றி 'புலால் உண்ணாமை' என்ற தலைப்பில் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் ஒரு ஆழமான உரையினை ஆற்றி சூழவும் வந்திருந்த இந்துக்கள் மத்தியில் பரபரப்பினை ஏற்படுத்தியவர். 1960களில் இலங்கை முழுவதும் இடம்பெறுகின்ற அனேக மீலாது விழாக்களிலும் இவரது பேச்சு இடம்பெறத் தவறுவதில்லை. இஸ்லாமிய இலக்கியவாதியாக மட்டுமல்லாமல் சிந்தாமணி வாரப்பத்திரிகையில் 'காதல் மோகத்தினால் கவி பாடும் காதலர்கள்' என்ற தலைப்பில் சிறு கதைத் தொடரினை புனைந்து தனது தமிழ் இலக்கிய புலமையினையும் நிரூபித்தவர்.

இலங்கை வரலாற்றில் முதன் முதலாக மதீனா இஸ்லாமியப் பல்கலைக்கழகம் சென்று 'இஸ்லாமிய சட்டமும் அடிப்படையும்' என்ற துறையில் பட்டம் முடித்து இலங்கையின் முதல் மதனியாக வெளிப்பட்டவர். சவூதி அரேபிய இஸ்லாமிய பிரச்சாரச் சபைக்கு இலங்கைப் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டு, பணி புரிந்த காசிம் மௌலவி அவர்கள் 1980, 90களில் பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபையின் தலைவராகவும் சமூக, சமய சேவைகளில் ஆர்வமுள்ளவராகவும் அரசியலில் ஈடுபாடு உள்ளவராகவும் விளங்கியவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல் ஹாஜ் ஏ.எல்.எம். காசிம் மௌலவி அவர்கள் எழுதிய நூல்களின் பட்டியல்.

***

### விரிவுரையாளரின் நூல்கள்

1. விரதம் தரும் விளக்கம்.
2. இப்திகாறுல் இஸ்லாம்.
3. அல்ஹஜ்ஜு–அல்உம்று–அஸ்ஸியாறு. (மொழி பெயர்ப்பு)
4. தப்ஸீர் மஆனீ ஸூறத்துல் பாத்திஹா–கொள்கை கோட்பாடு.
5. மூன்று அடிப்படைகளும் அவற்றிற்கான ஆதாரங்களும். மொ. பெ.
6. நவவியின் நாற்பது நபிமொழிகள். மொ. பெ.
7. பரிசுத்தம்–ஒழுக்கம் (அஞ்சல்கள்). மொ. பெ.
8. ஐந்து அடிப்படைகளும் அவற்றிற்கான ஆதாரங்களும்.
9. ஒளிவிடும் மணிவிளக்கு (தப்ஸீர்).
10. அறவழியும் அழைப்போரும்.
11. மனிதப்புனிதர்கள்.
12. முஸ்லிமும் படைப்புக்களும்—பழக்கமும் வழக்கமும். மொ. பெ.
13. முஸ்லிம் குடும்பம்.
14. யார் இந்த ஸலபீ!
15. இறையாண்மையும் உளத்தூய்மையும்.
16. நற்குணங்கள்–நற்சிந்தனைகள். மொ. பெ.
17. கொள்கை–கடமை.
18. புனிதர்களின் பூங்கா. மொ. பெ.
19. எழுத்தறிவித்தவன் இறைவன்.
20. அஸ்ஸுன்னாவின் அந்தஸ்து.
21. ஈச்சமர நிழலில்...
22. நபிமொழிப்பூங்காவில் நான் கொய்த மலர்கள்.
23. அறிஞர்களே அல்லாஹ்வை அஞ்சுங்கள்!
24. திருநபியின் திருமணங்கள்பற்றி திரித்துக் கூறுபவனுக்கு...
25. மறைந்தோர்களுக்கு மாமறை...
26. நம் முன்னோர்கள்... மொ. பெ.
27. வழிகாட்டும் ஒளி... மொ. பெ.
28. அல்லாஹ்வை அணுவதற்கு...
29. பாடத்திட்டமும் பாடங்களும். மொ. பெ.



தப்ஸீர்

மஆனீ

ஸூறத்துல் பாத்திஹா

கொள்கை கோட்பாடுகளின் அடிப்படையில்
அமைந்த விரிவுரை

THAFSEER SOORATHUL FATTHIHA-TAMIL

விரிவுரையாளர்:

அல்-ஷெய்கு அஹமது லெப்பை முஹம்மது காஸிம்
மௌலவி ஆலிம் (இலங்கை), பீ.ஏ.பீ.ரி. (ஸவூதி அரேபியா), எம்.ஏ.பி. (இந்தியா)
மெயின் வீதி, பொத்துவில்-3 (கி. மா.), ஸ்ரீலங்கா-இலங்கை)

இரண்டாவது பதிப்பு: 1981-1401

அல்லாஹ்வின் அருளை ஆதரவு வைக்கும்
அல்செய்யது முஹம்மது அப்துர்ரஹ்மான் அல்றயிஸ் (துபாய், ஐ.அ.எ.)
அவர்களது செலவில் அச்சிடப்பட்டது.

அல்லாஹ்வின் பாதையில் இலவச வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**M. H. M. ASHRAFF**
Attorney-at-Law
" Hirah "
KALMUNAI.
Tel. 067-2201.

05.01.83

A. M. A. Hakeem
Post Office Road
Pottuvil.

அன்புடையீர்.

[illegible]

அன்புள்ள

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 75. மனதை மயக்கும் மண்வாசனைக் காட்சிகள்.



பொத்துவில் அறுகம்களப்பினூடாக பயணிக்கும் மாட்டு வண்டில்கள்.



பொத்துவில் வயற்பரப்பொன்றில் பொலி தூற்றப்படும் காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 76. நாட்டுப்புறச் சுவைஞர்.



பொத்துவிலில் வாழ்ந்து மறைந்த மறக்கமுடியாத சுவாரசியமான பாத்திரங்களுள் ஒருவர் 'மான் குட்டி' என மக்களால் செல்லமாக அழைக்கப்பட்டு வந்த ஆதம் பாவா நெயிந்தைக் கண்டு என்பவர்.

1930 களில் பொத்துவிலில் பிறந்த இவர், 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் தான் மரணிக்கின்ற வரை கிராமிய மணம் வீசும் ஒரு நாட்டுப் புறப் பாடகராக வாழ்ந்து நின்றவர். 1960, 70 களில் பொத்துவில் ஜும்ஆப் பள்ளிவாயலில் வை.எம் இன் நிருவாகத்தின் கீழ் பள்ளி அதிகாரியாக திறம்பட கடமையாற்றியவர். அக்கால வழக்கங்களின் படி பள்ளிவாயல் மரைக்காயர் சபையின் தீர்மானங்கள் அனைத்தும் பள்ளி அதிகாரி மூலமாக ஊர் வாழ் மக்களுக்கு, கூவுதல் அடிப்படையிலேயே தெரிவிக்கப்படும். நெயிந்தைக் கண்டு அவர்கள் மரைக்காயர் சபையின் தீர்மானங்களை ஊர் வீதிகள் ஊடாக முக்கியமான சந்திகளில், பொதுமக்கள் கூடி நிற்கின்ற இடங்களில் உரத்த குரலில் வெளிப்படுத்தி இறுதியாக "இது மரைக்காயர் சபையின் கட்டளை..." என கூறி முடிவில் உச்சஸ்தாயியில் கூ...... என்று கூவி முடிப்பார். இவர் இந்த அறிவித்தலை கூறுகின்ற விதமும் கூப் போடுகின்ற முறையும் கிராமிய மணம் வீசும் சுவை மிகு நிகழ்வாக அமைந்து நின்றது. அரைக் கை சேர்ட்டும், இடுப்பில் பொக்கற் வாரும், தலையில் தலைப்பாகையும், கையில் தடியுடனும் இவர் வீதிகளில் மிகுந்த உற்சாகத்துடன் வலம் வந்த அந்த நிகழ்வுகள் இன்றும் பலரது நினைவலைகளில் சுழன்று கொண்டே இருக்கின்றது. பொத்துவில் முக்கியஸ்தகர்கள் பலரது குரல்களை அப்படியே மிமிக்ரி செய்து இவர் புரிகின்ற நகைச்சுவை சேஷ்டைகள் என்றும் மறக்க முடியாதவை. கிராமியக் கவிகளை மிக ரசமாக இவர் பாடுவது போன்று வேறு எவரும் பாட முடியாது எனக் கூறுகின்ற அளவுக்கு சிறந்த நாட்டுப்புறப் பாடகராக மறக்க முடியாத கதாபாத்திரமாக இவர் பொத்துவில் வரலாற்றில் பதிவு செய்யப்படுவது தவிர்க்க முடியாதது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொத்துவில் வரலாற்றில் முதல் விவசாயப் பூமியாக திகழ்ந்து நிற்கும் 'பொத்துவெளி' வெட்டையில், வயற்பரப்பில் அதிகாரி ஆதம்பாவா நெயிந்தைக் கண்டு அவர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 77. அழிந்து போன அடையாளங்கள்.




பொத்துவில் மெதடிஸ்ட் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் இடைக்கால முகப்புத் தோற்றம்.




பொத்துவில் பொது நூலகத்தின் இடைக்காலத் தோற்றம். (தற்போது இவ்வளாகத்தில் பொத்துவில் பிரதேச சபையின் புதிய காரியாலய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 78. கி.பி. 1984 - பொத்துவில் கண்ட மற்றுமொரு பெருவெள்ளம். (தினபதி - 1984.02.20)

# வெள்ள நிவாரண வேலை திருப்திகரமாக இல்லை!

## பொலிவிழந்த நிலையில் பொத்துவில் பிரதேசம்

— எம். ஐ. ஆதம் லெவ்வை —

(தலைவர், பொத்துவில் அபிவிருத்தி முன்னணி)

### விவசாயம் பாதிப்பு

### நிவாரண நடவடிக்கை

### விவசாயிகள் கோரிக்கை

1957ஆம் ஆண்டைய பெருவெள்ளத்தின் பின்னர் பொத்துவில் கண்ட மற்றுமொரு பெருவெள்ளம் 1984ஆம் ஆண்டில் ஏற்பட்டது எனலாம். இந்தப் பெருவெள்ளத்தின் போது அனேகமான வயல்கள் பாதிக்கப்பட்டதுடன் இதன் விளைவாக பலரும் விவசாயத்தை கைவிட வேண்டியும் ஏற்பட்டது. அறுவடை செய்து குவிக்கப்பட்டிருந்த உப்பட்டிகள் வெள்ளத்தில் அடிபட்டு சென்ற போது, சில விவசாயிகள் அறுகம்பை முகத்துவாரம் செல்கின்ற இடத்தின் அருகில் நின்று அந்த உப்பட்டிகளை கைப்பற்றியெடுத்த நிகழ்வுகளும் இந்த வெள்ளத்தின் போது நடந்தேறியிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு:- பொத்துவில் அப்துல் மலிக்.

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம் தொடர் இல: 05.

ஸல்மான் ருஸ்த்தி என்ற முஸ்லிமால் எழுதப்பட்ட ''சாத்தானிய வசனங்கள்'' என்ற நாவலுக்கு

## இஸ்லாமிய பொதுப்பணி இயக்கத்தின் வன்மையான கண்டனம்!

இந்தியாவில் பிறந்து இங்கிலாந்தில் வாழும் ஸல்மான்ருஸ்த்தி என்ற நாவல் எழுத்தாளர் முஸ்லிம் பெயருக்குள் மறைந்திருக்கும் ஒரு ''முஷ்ரிக்'' ஆவார். மூன்று கிறிஸ்துவப் பெண்களை மணந்துள்ள இவர் ''சாத்தானிய வசனங்கள்'' எனும் 547 பக்கங்கள் கொண்ட ஒரு நாவலை எழுதியுள்ளார் இந்நூலில்...........

அல்குர்ஆன் ஷைத்தானின் வார்த்தை எனவும், முஃமின்களின் தாய்மார் என அழைக்கப்படும் நபி (ஸல்) அவர்களின் மனைவிமாரை வேசைகள், விபசாரிகள் எனவும், இப்றுகிம் (அலை) அவர்களை வேசிமகன் எனவும், பிலால் (ரழி) அவர்களை இரக்கமற்ற கறுத்தத்தடியன் எனவும், ஸல்மான் பாரிஸி (ரழி) அவர்களை புணர்ச்சியிலீடுபடும் பண்பாடற்ற மக்கு எனவும் தூஷனை வார்த்தைகளைக் கொண்டு எழுதியுள்ளான். இந்த அற்ப அறிவிலி ஸல்மான் ருஸ்த்தி சுருக்கமாக இந்நூல் முஸ்லிம்களை ஆபாசமாக அசிங்கமாகச் சாடுகின்றது.

இதனால் உலக முஸ்லிம்களின் எதிர்ப்புகளும், கண்டனங்களும், ஆர்ப்பாட்டங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் இதுவரை 39 முஸ்லிம்கள் ஷஹீதாக்கப்பட்டுள்ளனர். பல முஸ்லிம் நாடுகளும், சில முஸ்லிம் அல்லாத நாடுகளும் இந்நூலுக்கு தடை விதித்துள்ளன. எமது இலங்கை அரசும் இந்நூலை தடைசெய்துள்ள விடயம் குறிப்பிடத்தக்கது.

இவ்விடயத்தில் நன்மையை ஏவினால் தீமை தானாகப் போய்விடும் என்ற மோட்டுத்தனமான கொள்கையைப் பின்பற்றி மௌனம் சாதிப்பது முஸ்லிம்களுக்கு அழகல்ல என்பதை உணரவேண்டும்.

இதனால் இந்த நூல் உடனடியாகத் தடைசெய்யப்பட வேண்டுமென்றும், ஏற்கனவே விற்பனையானவற்றை தாமதமின்றி வாபஸ் வாங்குவதன் மூலம் விற்பனையை நிறுத்த வேண்டுமென்றும் உலக முஸ்லிம்கள் சார்பாக பொத்துவில் இஸ்லாமிய பொதுப்பணி இயக்கம் வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கின்றது.

**யா அல்லாஹ்! இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கெதிரான சகல விஷம சக்திகளையும் தவிடு பொடியாக்கி செயலிழக்கச் செய்வாயாக! ஆமீன்,**

இஸ்லாமிய பொதுப்பணி இயக்கம், பொத்துவில், சிறிலங்கா. 04-03-89



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80. கி.பி. 1988/89 - அபூர்வமான நிழற்படங்கள்.



1988ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் காலகட்டத்தில் பொத்துவில் பிரதான வீதியில் இடம்பெற்ற சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களை ஆதரித்து நிகழ்த்தப்பட்ட பிரச்சாரக் கூட்டத்தின் போது முன்னாள் கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத், (மேல் மாகாண ஆளுநர்) அலவி மௌலானா என்போர்களுடன் முதல்வனார் மற்றும் கவிவாணன் அவர்கள்.



1992இல் பொத்துவில் கோட்ட அதிபர்களும் ஆசிரியர்களும் பொத்துவில் மத்திய கல்லூரியில் ஒன்றாகக் கலந்து நிற்கின்ற அபூர்வமான நிழற்படம் இது. 1. ஏ.ஏ. அஸீஸ் (தொ.க.வி.ப போதனாசிரியர்) 2. எம்.எம். ஹனிபா (ஆசிரியர்) 3. எம்.எல்.எம்.ஏ. காதர் (கோ.க. அதிகாரி) 4. எம்.ஐ. காதர் முகைதீன் (ஆசிரியர்) 5. ஏ. குழந்தை மரைக்கார். (அதிபர்) 6. எஸ்.எஸ். முகைதீன் (அதிபர்) ஏ. காசிம் கான் (அதிபர்) 8. எம்.எம். ஷெரீப் (அதிபர்) 9. சி.பி. உதுமாலெவ்வை மௌலவி (அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 81. கி.பி. 1989 - பொத்துவில் கடற்கரை கொடியேற்று விழா.

முகவரி:- அப்துல் மலிக் இப்னு ஷரீப் [illegible]

பிரசுரம் இல 01.

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

பொத்துவில் கடற்கரை கொடி (யதை) யேற்றுவிழா நிகழ்ச்சிச் சுருக்கம்.

1. நூற்றுக்கணக்கான ரூபாய் செலவில் பாரிய பலவர்ணக் கொடி தயாரித்தல்.
2. புத்தாடை, பொன்னாபரணம் பூண்டு, நறுமணம் பூசி, சர்வ அலங்காரத்துடனும், அரைகுறை நிர்வாண உடல்தெரியும் உடையுடனும் பெண்கள் சமூகம் தரல்.
3. இக் கொடிமரத்தை தரிசிக்கும் நோக்கத்துடனும், பறக்கத்தைப் பெறும் எண்ணத்துடனும் உள்ளூரில் இருந்தும், வெளியூரில் இருந்தும் மூட்டை முடிச்சுக்களுடன் பொதுமக்கள் வருகைதரல்.
4. கொடியை கொடிமரத்தடிக்குக் கொண்டுவந்து 7 முறை வலம் வரல்.
5. ஆண், பெண் பக்தர்கள் முட்டி மோதி, அத்தர்வாசனை பூசி தக்பீர் முழக்கத்துடனும், றபான் ஒலியுடனும் கொடியை ஏற்றுதல்.
6. சாகுல் ஹமீது ஒலியுல்லா நாயகம் பெயரால் நேர்ச்சை வைத்துக் கொண்டுவந்த ஆடு, மாடு, கோழி நாரிசா ஆகிய வற்றையும் தங்கம், வெள்ளியால் செய்யப்பட்ட அங்க உடல் உறுப்புக்களையும் பக்தியுடன் பக்தர்களிடம் ஒப்படைத்தல்.
7. நேர்ச்சை வைத்துக் கொண்டு வந்த சிறிய பச்சைக்கொடிகளை கொடிமரத்தினடியில் நடல்.
8. பக்திப்பரவசத்துடன் கண்ணீர்மல்க தமது தேவைகளையும், நாட்டங்களையும் சாகுல் ஹமீது ஒலியுல்லாவிடம் கேட்டல்.
9. கொடி மரத்தினடியில் குமிக்கப்பட்டுள்ள மணலில் தம் குழந்தைகளை வளர்த்தாட்டி உருட்டுவதுடன் நேர்ச்சை வைத்தபடி குறித்த எண்ணிக்கையில் தோப்புக்கரணம் போடுதல்.
10. நோயாளர்கள் சுகம்பெறவும், ஏனையோர் பறக்கத்தைப் பெறவும்; சந்தணக்குச்சி, சாம்புராணி பற்றி எரிந்த சாம்பரை உடலில் பூசிக்கொள்வதுடன் பிள்ளைகளுக்கும் கரைத்து குடிக்கக் கொடுத்தல்.
11. மது அருந்துவதுடன் வாள் வீச்சு, சீனடி செலம்படி, லொத்தர் சூதாட்ட நிகழ்ச்சிகள்.
12. சோப்பு, சீப்பு. கண்ணாடி, மாப்பெட்டி சாமான்கள் வாங்க ஆண் பெண்கள் முட்டிமோதி இரண்டறக்கலந்த நிலையில் இருத்தல்.
13. ஆங்காங்கே மூலைமுடுக்குகளிலும், மலையடி வாரங்களிலும், கடற்கரை யோரங்களிலும் காளையர் கன்னியரின் காமச்சேட்டைகள்.
14. இவை அனைத்தும் முஸ்லிம் மையவாடியில் நடைபெறுவதால் கப்றுகளை மிதித்த வண்ணமே நடத்தல்
15. சாதி மத வேறுபாடின்றி அந்நியப் பெண்கள் அரைகுறை நிர்வாண உடல் தெரியும் உடையுடன் சமூகமளித்தல்.
16. பன்னிரண்டாம் நாள் பக்திப்பரவசத்துடன் கண்ணீர் மல்க தக்பீர் முழக்கத்துடனும் 'யாமுருதி' கோஷத்துடனும் கொடி இறக்கப்படல்.
17. அதனைத் தொடர்ந்து சாகுல் ஹமீது ஒலியுல்லா பெயரால் மாபெரும் கந்தூரி வைபவம்.
18. சமூகச்சீரழிவாக இளம் காளையர்கள் கன்னியர்களில் சிலர் பெற்றோருக்குத் தெரியாமல் வீட்டைவிட்டே ஓடிவிடல்.

இஸ்லாத்தில் புதிதாக உண்டாக்கப்படுபவை அனைத்தும் வழிகேடுகளே, வழிகேடுகள் அனைத்தும் நரகத்தையே சாரும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இக்கொடியேற்று விழாவினால் நாம் அல்லாஹ்வின கோபத்துக்கும், சாபத்துக்கும் உள்ளாகின்[illegible] அத்துடன் இக்கொடியேற்று விழா இஸ்லாத்தில் முற்றிலும் தடுக்கப்பட்ட காரியமாதலால்; பொ[illegible] அனைத்து உலமாக்களும், படித்தவர்களும், பாமரர்களும் முன்னின்று இக்கொடிய கொடி யேற்று வி[illegible]வ ஒழித்துக்கட்டி இவ்வருடத்துடனயே நிறுத்திவிட முன்வந்துள்ளனர்.

எனவே பொத்துவில் வாழ் முஸ்லிம்கள் அனைவரும் இக்கொடிய விழாவில் கலந்துகொள்ள வேண்டாமெனவும் இத்தீர்மானத்துக்கு தங்களது பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குமாறு மிகவும் அன்பாக அல்லாஹ்வுக்காக வேண்டுகிறோம்.

இனிமேல் இக்கொடிய விழா எமதூரிலும், ஏனைய ஊர்களிலும் நடைபெறாமலிருக்க அல்லாஹ் அருள் புரிவானாக (ஆமீன்)

இவ்வண்ணம்
பொத்துவில் உலமா சபையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 82. கி.பி. 1989 - இஸ்லாமிய இளைஞர் பொதுப்பணி இயக்கம்.

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர் - றஹீம்

# பள்ளிவாசலும்- ஜனாஸாவும்

பொத்துவிலில் பிறந்த ஒவ்வொரு முஸ்லிமுக்கும் பள்ளிவாசலும் அதன் பூமியும் சொந்தமானதாகும். எமதூரில் அவ்வப்பிரதேசங்களுக்கென பொதுமையவாடி கடற்கரையோரம் இருப்பது எம்மனைவருக்கும் தெரியும் இங்கு ஜனாஸாக்களை அடக்கம் செய்ய எதுவித செல்வாக்கும் பயன்படுத்தப்படுவதில்லை ஏற்றத்தாழ்வின்றி அனைவரையும் பொதுமையவாடியில் அடக்கம் செய்வதுதான் பொதுவான முறையாகும் இது இவ்வாறிருக்க

சிலவருடங்களுக்கு முன் குறிப்பிட்டசிலரின் ஜனாஸாக்களைஜும்மாப்பள்ளியில் நம்முன்னோர்களால் அடக்கம் செய்யப்பட்டிருப்பது எமக்குத்தெரியும் இது எமது முன்னோர்களால் "விடப்பட்ட தவறாகும்" இத்தவறின் காரணமாக நடைபெறும் நூதன அனுஷ்டானங்களான கப்றுகளுக்கு மேல் கட்டிடம் கட்டுதல் விளக்கேற்றுதல், காணிக்கை செலுத்தல், நேர்ச்சைசெய்தல் போன்ற மார்க்கத்துக்கு முரணான அனுச்சாரங்களை இன்று நாம் எம் கண் முன்னாலேயே காண்கிறோம். இதே தவறை விடயம் தெரிந்த நாமும் விடுவது வருங்கால எம் முஸ்லிம் சமுதாயத்தினருக்குச் செய்யும் மாபெரும் துரோகமாகும். ஏனெனில்,

இஸ்லாத்தில் ஏழை பணக்காரன், செல்வாக்குள்ளவன், செல்வாக்கற்றவன் என்ற ஏற்றத்தாழ்வு ஒரு போதும் இல்லை. இனிமேலும் இருக்க் கூடாது. அவ்வாறுயின் பொதுமக்களுக்கென பொதுமையவாடி கடற்கரையோரம் இருக்க ஒரு சில செல்வாக்குள்ள பணம் படைத்த சகோதரர்களின் ஜனாஸாக்களை மட்டும் பொதுமக்களுக்குச் சொந்தமான பள்ளிவாசல் பூமியில் அடக்கம் செய்து முஸ்லிம்களுக்கிடையே ஏற்றத்தாழ்வை உண்டாக்குவது மனம் வருந்தத்தக்கதாகும்.

**✱ அவ்வாறுயின் பள்ளிவாசலில் யார் யாரை அடக்கம் செய்யலாம்?**

அதற்கு தனிப்பட்ட முறையில் தகுதிகள் ஏதாவது உண்டா? அப்படியானால் அதற்கு என்ன தகுதி தேவை? அதாவது பள்ளியில் கடமை புரிபவர்கள் அல்லது நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் போன்ற தகுதிகளாக அவை இருக்க வேண்டுமா? இப்படி ஏதாவது உபவிதிகள் பள்ளிவாயல் சட்டப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளதா? அப்படியானால் பொது மக்களாகிய எங்களுக்கு பகிரங்கமாக அறியத்தர முடியுமா?

எனவே ஒன்றில் அல்லாஹ் றஸுலின் கட்டளைப்படி முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அவ்வப்பிரதேசங்களுக்கான பொது மையவாடியில் ஏற்றத்தாழ்வற்ற முறையில் அடக்கம் செய்வோம். அல்லது பள்ளிவாயல் பூமியை பொது மையவாடியாக மாற்றி முஸ்லிம்களனைவரின் ஜனாஸாக்களை ஏற்றத்தாழ்வற்ற முறையில் அடக்கம் செய்வோம்.

நடந்தது நடந்ததாக இருக்கட்டும். அறிஞர்கள் பொறுப்புள்ளோர் அல்லாஹ்வை மட்டு அஞ்சி இனிமேலாவது குறிப்பிட்ட செல்வாக்குள்ளோரை மாத்திரம் பள்ளிவாயலில் அடக்கம் செய்யாமலிருப்பார்கள் என நல்லெண்ணம் வைக்கிறோம். பள்ளிவாயல் பூமி மையவாடியாக அல்லாமல் புனித பூமியாகவே தொடர்ந்தும் இருக்கட்டும்.

இனிமேலாவது முஸ்லிம்களனைவரையும் பொது மையவாடியில் அடக்கம் செய்ய ஆவன செய்வோம். எவரையும் குற்றம் குறை கூறுவது நோக்கமல்ல மாறாக நியாயத்தை முன்வைத்து பொது மக்களை விழிப்படையச் செய்வதே நோக்கமாகும்.

**யா அல்லாஹ்! உன்னை மட்டும் அஞ்சி கடமை செய்யக்கூடியவர்களாக எம் தலைவர்கள் அனைவரையும் ஆக்கி வைப்பாயாக, ஆமீன்.**

வஸ்ஸலாம்.

***இப்பிரசுரம் பொத்துவில் இஸ்லாமிய இளைஞர் பொதுப்பணி இயக்கத்தின் பிரதான போசகர் ஜனாப். எஸ். எம். அப்துல் கரீம் மௌலவியால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.***

பிரசுரம் தொகுப்பு: எம்.எஸ்.எம். அப்துல் மலிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் இஸ்லாமிய சகோதரர்களே கீழே உள்ள விடயங்களை இறையச்சத்தின் அடிப்படையிலே, தக்வாவை கடைப்பிடித்தவர்களாக நன்கு சிந்தித்து குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் உரசி ஆராய்ந்து பின்பற்றுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

## மௌலூது ஓதுவோம் வாருங்கள்

முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் போற்றும் வகையில் ஒவ்வொரு வருடமும் றபியுல் அவ்வல் மாதம் தோறும் மௌலூது பாடப்படுகின்றது. இதை இயற்றிய கவிஞர் யார்? இந்தக் கவிதையின் பொருள் என்ன? இதில் நுழைக்கப்பட்டுள்ள ஷிர்க்கான நச்சுக்கருத்துக்கள் என்ன? என்பவற்றைச் சிந்திக்காமல் படித்தவர்களும் பள்ளிவாயில்களில் இக்கவிதையைப் படிப்பது இதன் கருத்தை உணர்ந்தவர்களுக்கு மனம் வருந்ததக்கதாக இருக்கின்றது. இம் மௌலூது கவிதையில் ஆங்காங்கே றசூல் (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் அந்தஸ்த்துக்கு உயர்த்தியது. மட்டுமல்லாமல் றசூலுல்லாஹ் தான் அல்லாஹ் என்ற ஷிர்க்கான நச்சுக்கருத்துக்களை கவிஞர் சொருகியுள்ளதையும் அறியலாம். எனவே படிப்பினைக்காக, பகிரங்கமாக சுபுஹான மௌலூதிலுள்ள ஒரு சில ஷிர்க்கான வரிகளை மட்டும் கீழே தருகின்றோம். இவற்றை குர்ஆன் ஹதீஸில் உரைத்துப் பார்த்து செயற்பட முன்வாருங்கள்.

1. "யாலய்யிதல் ஸாதாதி ஜிஃதுக காஸிதா,
அர்ஜூ ஹிமாக பலாது கய்யிப் மக்ஸதி"

" தலைவர்களுக்கெல்லாம் தலைவரே. உங்களை நாடியே உங்களிடம் வந்தேன். உங்களது பாதுகாப்பை நான் வேண்டுகின்றேன், எனது நாட்டத்தைத் தோல்வியுறச் செய்யாதீர்கள்!

இம்மௌலூது வரியில் நாட்டம் வைத்ததும், பாதுகாவல் தேடியதும், பிரார்த்தனை புரிந்ததும் நபியிடமல்லவா? இவைகளை கோர வேண்டியது நபியிடமா? அல்லாஹ்விடமா? இதனை ஷிர்க் என்றால் அதை மறுப்பார் முஃமினாக முடியுமா? சிந்தியுங்கள்.

2. யாவலிய்யல் ஹஸனாயியாரபீ அத்தரஜாதி
கப்பிரன் அன்னீ துனூபி வஃபுஃ அன் ஸய்யிஆதி"

"நன்மைகளுக்குரியவரே அந்தஸ்தில் உயர்ந்தவரே எனது பாவங்களை பொருத்தருள்வீர், எனது குற்றங்களை மன்னித்தருள்வீர்"

இம்மௌலூது வரியில் பாவங்களை பொருத்தருளும்படியும், குற்றங்களை மன்னிக்கும்படியும் நபியிடமே கேட்கப்படுகின்றது. பாவங்களையும், குற்றங்களையும் மன்னிப்பது நபியா? அல்லாஹ்வா? இதை அல்லாஹ் 3;31, 110:3: ஆகிய குர்ஆன் வசனத்தில் தெளிவு படுத்துகிறான். அல்லாஹ்வுக்கும், றசூலுக்கும் வழிப்பட்டவன் இதனைப்படிக்கலாமா? இதனை ஷிர்க் என்று ஏற்றுக்கொள்ள மறுப்போருக்கு இஸ்லாத்தில் பங்குண்டா?

3. "அன்த ஸம்ஸுன் அன்த பத்ருன்,
அன்த நூறுன் பவ்க நூரி"

"நீரே சூரியன் நீரே சந்திரன் நீரே ஒளிகளுக்கெல்லாம் ஒளி" இந்த நூர் (பிரகாசம், ஒளி) என்ற சொல் அல்லாஹ்வின் பெயர்களில் ஒன்று இதை நபி (ஸல்) அவர்களுக்குண்டெனக் கூறுவது ஷிர்க் அல்லவா? இதனை அல்லாஹ் 24.35 எனும் குர்ஆன் வசனத்தில் தெளிவுபடுத்துகிறான்.

4. "அன்த கப்பாருல் கதாயா, வத்துனூபில் முபிகாதி
அன்த ஸத்தாருல் மஸாவி வமுகீலுல் அதராதி"

"நீரே குற்றங்களையும் பெரும்பாவங்களையும் மன்னிக்கிறவர், நீரே குறைகளை மறைப்பவரும் குற்றங்களை மறைப்பவரும்"

சிறு பாவங்களை மட்டுமல்ல பெரும்பாவங்களையும் மன்னிக்கும் தகுதி நபி (ஸல்) அவர்களுக்குண்டென இங்கு நபியை அல்லாஹ்வுடன் சமப்படுத்துகிறார் கவிஞர். இதனை ஷிர்க் என்றால் அதனை மறுக்கலாமா?

இதை அல்லாஹ் 3; 135; 110; 3 ஆகிய குர்ஆன் வசனத்தில் தெளிவு படுத்துகிறான்,

அமர்ந்திருந்து மௌலூது ஓதுபவர்கள் "யாநபி" / "குல்லுஸ்ஸுகுரி"யைத்தை படிக்கும்போது நபி (ஸல்) அவர்கள் குறித்த இடத்துக்கு சமூகம் தருவதாக எண்ணி அவர்களது வருகைக்கு மரியாதை செலுத்துவதற்காக கைகட்டி எழுந்து நின்று பாடுகிறார்கள்.

ஒரே நேரத்தில் பல இடங்களில் மௌலூது ஓதப்பட்டாலும் எல்லா இடங்களுக்கும் ஒரே நேரத்தில் சமூகமளிக்கும் சக்தி நபி (ஸல்) அவர்களுக்குண்டென மௌலூதுப்பிரியர்கள் கூறுகிறார்கள். இப்படியான எண்ணம் ஷிர்க் அல்லவா, இவ்வாறான சக்தி அல்லாஹ்வுக்கு மட்டும்தான் உண்டு என்பதை குர்ஆன் பல இடங்களில் கூறுகிறது.

இப்பொழுது அனைத்தும் தெளிவாக விளங்கியிருக்கும் இன்னும் இதை விட மோசமான கருத்துக்களும் அனுஸ்டானங்களும் உண்டு. விரிவஞ்சி அவற்றை எழுதவில்லை.

இதுபோன்றுதான் ஏனைய மௌலூதுகளும், தலைப்பாத்திஹா, புர்தா கவிதைகளும், சிந்தியுங்கள். இப்படியான நச்சுக்கருத்துக்கள் அடங்கிய கவிதைகளை பள்ளிகளிலும் வீடுகளிலும் பாடுவது சரியா? தவறு என நீங்களே சிந்தித்து முடிவுசெய்யுங்கள்.

நன்மையை ஏவி தீமையை தடுத்தல் எனும் அடிப்படையில் இவற்றை நாம் பகிரங்கமாக படித்தவர்களுக்கும், பள்ளித் தலைவர்களுக்கும், குடும்பத் தலைவர்களுக்கும் பொது மக்களுக்கும் பகிரங்கமாக தெரியபடுத்தினோம். என்பதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் மறுமையில் சாட்சியாக இருங்கள்.

தொகுப்பு :- எம்.எஸ்.எம் அப்துல் மலிக்.

இப்பிரசுரம் பொத்துவில் இஸ்லாமிய இளைஞர் பொதுப்பணி இயக்கத்தின் போசகர் எஸ். எம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 84. கி.பி. 1989 - கனவான் அரசியல்.



'*முதல்வனார்*' எனும் போது, எமது மனத்திரையில் தோன்றுவது சிரேஷ்ட சட்டத்தரணி எம். இஸ்மாயில் ஆதம் லெப்பை அவர்களது வதனம் தான். 1960களில், இலங்கையின் இலக்கியவானில் முதல்வனார் என்ற புனைப் பெயரில் கவிதைச் சரங்களுடன் முன்னணித் தமிழ்ப் பத்திரிகைகளில் உலா வந்தவர். 1971இல் ஆசிரியர்களுக்கு அரசியல் ஈடுபாட்டு உரிமை முழுமையாகக் கிடைத்ததைத் தொடர்ந்து அத்துறையில் ஈடுபாடு கொண்ட அரசியல் வாதியாக திரு. அனுர பண்டார நாயக்காவின் அனுசரணையுடன் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வாலிப முன்னணித் தலைவராக செயற்படத் தொடங்கிய போது, கனவான் அரசியல் என்ற நாகரிகத்தினை தனது அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு பொத்துவில் அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொரு தடத்தினையும் பதித்தவர் ஆதம் லெப்பை அவர்கள்.

தனது ஆரம்பக் கல்வியினை பொத்துவில் அரசினர் ஆண்கள் பாடசாலை, பொத்துவில் அரசினர் கனிஷ்ட பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியினை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும், உயர்தரக் கல்வியினை கம்பளை சாஹிராக் கல்லூரியிலும் நிறைவு செய்த இவர் 1963இல் ஆசிரியராக நியமனம் பெற்று, தான் பிறந்த மண்ணில் கல்விச் சேவையினை ஆற்றும் சந்தர்ப்பத்தினையும் பெற்றுக் கொண்டவர். கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட விரிவாக்க நெறியிலும், கொழும்பு சட்டக் கல்லூரியிலும் தனது சட்டப் படிப்பினை நிறைவு செய்த இவர், பொத்துவிலின் ஆரம்பகால முதல் மூன்று சட்டத்தரணிகளுள் ஒருவராகவும் திகழ்பவர். 1989இல் சட்டத்தரணியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர், இவரது முழுக் கவனமும் சட்டம் தொடர்பான விடயங்களிலும், அரசியல் விவகாரங்களிலும் செலுத்தப்பட்டதனைத் தொடர்ந்து, இவரிடம் குடிகொண்டிருந்த இலக்கிய ஈடுபாடும் தானாகவே விடைபெற்றுச் சென்று விட்டது எனலாம்.

1968இல் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் தலைமையிலான இலங்கை இஸ்லாமிய சோசலிஷ முன்னணி மூலமாக அரசியல் பிரவேசத்தினை மேற்கொண்ட இவர் 1971இல் SLFP இன் வாலிப முன்னணி மூலமாக தீவிரமாக இயங்கத் தொடங்கியதையடுத்து இவரது அரசியல் ஈடுபாடும் படிப்படியாக அதிகரித்தே வந்துள்ளது. 1975 தொடக்கம் 1979வரை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொத்துவில் மத்திய குழு செயலாளராகவும், 1979 தொடக்கம் 1985 வரை மத்திய குழுத் தலைவராகவும் சமகாலங்களில் அம்பாறை மாவட்ட கரையோரப் பகுதி மாவட்டக் குழுவின் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப தலைவராகவும், SLFP யின் தீவிர செயற்குழு உறுப்பினராக அதன் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் பாடுபட்டு வந்த இளைஞர்களுள் ஒருவராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். இதன் விளைவாக, அம்பாறை மாவட்ட SLFP அரசியல் தலைவர்களான கௌரவ அமைச்சர் M.M. முஸ்தபா (நிந்தவூர்), கௌரவ பா.உ U.L.M. முகைதீன் (சம்மாந்துறை) மற்றும் (SLMC யின் தேசியத் தலைவர்) M.H.M. அஷ்ரப் என்போர்களுடன் மிக நெருக்கமாக செயலாற்றும் சந்தர்ப்பத்தினை பெற்றுக் கொண்டதோடு தேசியத் தலைவர்களான தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க, கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் போன்றவர்களின் அன்புக்குப் பாத்திரமானவராகவும் திகழ்ந்தார். இவற்றின் விளைவாகவே 1989ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் SLFP யின் முக்கிய வேட்பாளர்களுள் ஒருவராக அக்கட்சியின் தலைமைப் பீடத்தினால் இவர் நிறுத்தப்படவும் நேர்ந்தது.




இலங்கை முஸ்லிம்களின் பெரும் அரசியல் சக்தியாக 1980களில் இருந்து உருவாக்கம் பெற்றுள்ள 'சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்' தான் இன்று வரையிலும் திகழ்கின்றது என்பதில் எவருக்குமே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இந்த முஸ்லிம் காங்கிரஸ் என்றவொரு சமூக ரீதியான அரசியல் இயக்கம், உருவாக்கப்படல் வேண்டும் என்ற எண்ணக்கருவை முன்வைத்தவர்களுள் ஜனாப் M.I. ஆதம் லெப்பை அவர்களும் ஒருவர் என்பது பலரும் அறியாத விடயமாகவிருப்பினும் அதுவே யதார்த்தமானது. 1980களின் ஆரம்பங்களில் முஸ்லிம்களுக்கான ஒரு பலமான அரசியல் இயக்கம் தேவை என்ற எண்ணக்கருவினை மர்ஹூம்களான அமைச்சர் MHM. அஷ்ரப் அவர்கள், பா.உ மருதூர்கனி மற்றும் நிந்தவூர் அமீர் மேர்ஷா என்போருடன் இணைந்து உருவாக்கியதில் முதல்வனாருக்கும் குறிப்பிடத்தக்க பங்குண்டு. இது அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படாத காலங்களில் அஷ்ரப் அவர்களுடன் நெருக்கமாக செயற்பட்டு இதன் உப தலைவராகவும் சில காலங்கள் செயலாற்றி வந்துள்ளார் என்பதும் பிற்காலங்களில் அமைச்சர் அஷ்ரப் அவர்களது கரையோர மாவட்ட எண்ணக்கரு உருவாக்கத்தில் இவருக்கும் பங்குண்டு என்பதும் வரலாற்றில் பதிவு செய்யப்படவேண்டிய விடயங்களேயாகும். இருப்பினும் 1986ஆம் ஆண்டில் SLFP யின் பொத்துவில் தொகுதி அமைப்பாளராக இவர் நியமனம் செய்யப்பட்டதனையடுத்து, தொடர்ச்சியாக SLMC உடனோ, அஷ்ரப் அவர்களுடனோ இணைந்து செயற்படுவதற்கான சூழ்நிலைகள் இல்லாமற் போய்விட்டன. எனினும் அமைச்சர் MHM. அஷ்ரப் அவர்களுக்கும் முதல்வனாருக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வும், நட்புறவும் தொடர்ந்தே வந்துள்ளன. இதன் ஒரு பிரதிபலிப்பாகவே, 1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக இடம்பெற்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டார நாயக்கா அவர்களுடனான SLFP முஸ்லிம் தலைவர்களது சந்திப்பின் போது, வடக்கு - கிழக்கிலும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலும் உள்ள முஸ்லிம்களது பேராதரவினை பெறுவதற்கு கண்டிப்பாக SLMC தலைவருடன் இணைந்த தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் நாம் ஈடுபடல் வேண்டும் என்ற கருத்தினை மிக அழுத்தமாக சிரேஷ்ட சட்டத்தரணி MI. ஆதம் லெப்பை அவர்கள் அச் சந்தர்ப்பத்தில் எடுத்துரைத்தமையும் அம்பாறை மாவட்டத்தில் இந்த ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின் போது அஷ்ரப் அவர்களுடன் ஒரே மேடையில் இவர் கைகோர்த்து நின்றமையும் என சில அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் நடந்தேறின என்பது குறிப்பிடத்தக்கது.

1996 தொடக்கம் 1999 வரையான காலப்பகுதிகளில் பொத்துவில் கிராமத்தின் அபிவிருத்தி என்ற வகையில் அமைச்சர்கள் மூலமாக பொத்துவில் பஸ் டிப்போவினை நிறுவியமை, ஜலால்தீன் சதுக்க விளையாட்டு மைதான உருவாக்கம், பொத்துவில் பிரதான பாதை அபிவிருத்தி என்பன இவரது அரசியல் சேவையில் முக்கிய தடயங்களாகும். போலித்தனமான அரசியலை விரும்பாது நாகரிக கனவான் அரசியலை மேற்கொள்வது என்ற இவரது அரசியல் பாணியினால் குறிப்பிட்ட எல்லைகளுக்கு அப்பால் வெற்றியினை இவரால் சுவைக்க முடியவில்லை. 2001ஆம் ஆண்டில் இடம்பெற்ற அரசியல் சூழ்நிலைகள் காரணமாக தனது தாய்க் கட்சியான SLFP யிலிருந்து விலகி சிறிது காலங்கள் அரசியல் விவகாரங்களிலிருந்தும் ஒதுங்கி வாழ்ந்த இவர், ஏலவே இலக்கியத்தை மறந்திருந்த போதும் அரசியல் என்ற வலைப்பின்னலில் இருந்து விடுபட முடியாமல் போயிற்று. 2009இல் முற்போக்கு முஸ்லிம் காங்கிரசினை உருவாக்கி அதன் முதல்வராகவும் செயற்பட்டு வரும் சிரேஷ்ட சட்டத்தணி MI. ஆதம் லெப்பை அவர்கள் கனவான் அரசியலுக்கு ஒரு உதாரணமாக இன்று வரையிலும் திகழ்ந்து வருகின்றார் என்பது கோடிட்டுக் காட்டக் கூடிய விடயமாகும்.



மேற்காட்டப்பட்டுள்ள நிழற்படத்தில் உரையாடிக் கொண்டிருப்பவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவ மற்றும் சட்டத்தரணி எம்.ஐ. ஆதம் லெப்பை என்போர். (1982 ஜனாதிபதித் தேர்தல் - பொத்துவில் சந்தை சதுக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதும் !

காதல் கடுகளவும்
கன்னி உனக்குண்டேல்
ஏதடியோ இந்த நிலே
எந்தனுக்கு?—காதுவரை
நீண்ட நினது விழி
நீர்மையினுல் யானுறுதல்
'தூண்டிற் படுமீன் துயர்!'

அஞ்சுகமே உந்தன்
அழகுமொழி கேட்கவென
நெஞ்சம் அழியும்
நெடுநாளாய்—கொஞ்சமெனுங்
கூசாமல் என்மேற்
குறிபார்த்து வாள்விழியை
வீசுவது போதும் விடு!

கன்னக் குழிவினை நீ
காட்டாதே, என்மனத்து
எண்ணத்தை வீணுய்
எழுப்பாதே — புன்முறுவல்
செய்யும் இதழ் காட்டிச்
செல்லாதே கண்ணம்பு
எய்யாதே என்மேல் இனி!

— முதல்வனர்.



1970 ஜுன்



மலர் (சஞ்சிகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 85. கி.பி. 1990 - யுவனின் கண்ணீர்க் கவிதை.




கவிஞர் யுவனின் வாழ்க்கையே ஒரு கவிதை போன்றது. அது சிந்தனைகளால் நிரம்பியது. தனது அந்திம காலங்களில் மிக அமைதியாகவும், மௌனமாகவும் வாழ்ந்து கொண்டிருந்தாலும் இவரது மனதில் எழுந்த ஏக்கங்களும், கவலைகளும் அவரது கடிதத் தலைப்புகளை கவிதைகளால் நிரப்பிக் கொண்டன. தனது பிள்ளைகள் மேல் அளப்பெரிய பாசம் கொண்டிருந்த யுவன் அவர்கள் ஒரு கனத்தில் தனது மூத்த புதல்வனின் அகால மரணத்தினால் மொத்தமாக நொறுங்கிப் போய் விட்டார் எனலாம். பாகிஸ்தான் கவிஞரான அல்லாமா இக்பால் மீதும், பாரசீகக் கவிஞரான பிர்தௌஸி மீதும், மிகுந்த அபிமானம் கொண்டிருந்த யுவனார் தனது மூத்த இரு ஆண் பிள்ளைகளுக்கும் அவர்களது நாமங்களையே சூட்டியிருந்தார். மூத்த ஆண் பிள்ளையான பிர்தௌஸின் மரணம் அவரை வெகுவாக பாதித்த போது அவரது மனதிலே எழுந்த கவலைக் குமுறல்கள் இசையும் கதையுமாக, கவிதையாக்கமாக எழுத்துருவம் பெற்றது. அவரது சொந்த கையெழுத்தில் ஆக்கப்பட்ட அக்கவிதையே இங்கு தரப்பட்டுள்ளது.

கவிஞர் யுவன் பற்றிய சில குறிப்புக்கள்...

* இலங்கை வானொலி முஸ்லிம் பகுதியில் கவிதை நாடகத்தை (அருட்கவி) முதன் முதலில் அறிமுகம் செய்தவர்.
* இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்க செயற்குழு உறுப்பினர்.
* ஊவா இலக்கியக் கழகத்தின் உபதலைவர்.
* ஈழத்து இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் தலைவர்.
* பதுளை ஸாபியால் பதிப்பகத்தின் ஆலோசகர்களில் ஒருவர்.
* மட்டக்களப்புத் தெற்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்.
* கொழும்பு மனோரஞ்சித நாடக சபாவின் உதவிப் பொறுப்பாளர்.
* கொழும்பு பிச்சஸ் லேனில் சுதந்திர இலவச இராப் பாடசாலையினை நடாத்தி வந்த MCM க்கு உறுதுணையாக செயற்பட்டவர்.
* 1956 இல் அக்கரைப்பற்றில் சமூகசேவா இயக்கத்தினை தோற்றுவிக்க உறுதுணையாக நின்று உழைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையும் கதையும் — (1)

கவிஞர் புவன்?

# போடா! மகனே! போ!!

ஆதமலையின் அடியிலே, அமைதியாக
வீற்றிருக்கின்றேன்!! — என் கால்கள் தள்ளாடும்
வயது. ஆமாம் ஐம்பத்து ஐந்து வயதைத் தாண்டி
அரசபணியைத் திறமையுடனாற்றிவிட்டு — அமைதியைத்
தேடித் தேடி அலைகின்ற என் மனம்....
ஆதம்பாபாவின் அருள் நிறைந்த பாதமலையின்
பள்ளத்திலே ... நீண்ட நஞ்சில்லாப் பாம்புபோல
பேழையுள் உயிர்க்கும் பெட்டிப் பாம்புபோல
ஒடுங்கி, நடுங்கி ஏங்கி ஏங்கி, விம்மி விம்மி,
புலம்பி அழுது — நைந்து உருகி — என் மகனைத்
தேடித் தேடி அலைந்து அலுத்து —
அழுது அழுது, அல்லாஹ்வைத் தொழுது
தொழுது — நாடி தளர்ந்து வாடி வதங்கி
உருவத்திலும் முதிர்ந்து — உள்ளகத்திலும்
இளமைத் துடிப்புடன் உறங்காமல் உறங்கு
கின்றேன் — முடியவில்லை!!
ஏன் அது!!
துக்கம் தூக்கத்தைக் கெடுக்குமோ?
ஏன் அது? ஆமாம் உன்னை
நான் உண்ணவில்லை!
முடியவில்லையே!!
என் மூத்த மகன், முதல்வன், முழுமூச்சாய்
உழைத்து உழைத்து — என் பிஞ்சுகளைப்
பாசத்தோடு பாதுகாத்த என் அருமை
மகன் பிர்தௌஸ் எங்கே? எங்கே?

ஏக்கமும் தாக்கமும் என்னை ஆட்டுகின்றன!!
வாக்கிலே வல்லவன்! நோக்கிலே நல்லவன்!
என்றெல்லாம் மற்றவர் போற்றும்போது
ஆனந்தமாகச் சிரிப்பேனே!! இன்று...
ஏன்? ஏன்? ஏன்? நான் அமைதியைத்
தேடி இங்கு இந்த ஆதம் மலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-2-

அடியிலே கிடக்கின்றேன்!!
நேரம் 12 மணி. ஆமாம், ஆடும்
அரவங்களும் கண் அயரும் சாமம்!!
அந்தக் குரல் ---, ஆமாம்.. என் அருமை
மகள்
ஆமினாவின் குரல்.. கேட்கிறதே!!

என்ன?
ஆமினாவின் குரலா??
அவள் ஏன் வந்தாள்?
எதற்காக அவள் என்னைத்
தேடி வரவேண்டும்...

எண்ணுகின்றேன்
எண்ணுகின்றேன்
எண்ணுங்கால் —

எண்ணுங்கால், என் நெஞ்சத்தின் அடித்தளத்திலே உறைந்து போன அதே கீதம்... அதே பாடல் அதே இனிமையான குரல் -- ஆமாம் ஆமினாவின் குரல்தான் அமைதியில்லாது அல்லோலப்படும் என் உள்ளத்திற்கு ஒரு ஆறுதலாக அமைகிறது. அந்தப் பாட்டிலே லயிக்கின்றேன்:- என் மகள் விரும்பிப் பாடும் அதே பாடலை ஆமினா பாடுவது போலக் கேட்கிறது

பிரமையா? பாடல்:- சோதனை மேல் சோதனை போதுமடா சாமி
வேதனைதான் வாழ்க்கை என்றால்
தாங்காது பூமி!

குரல் கேட்ட திசையிலே ஒரு சிரிப்பொலி கேட்கிறது.. ஆமாம் அவள்தான் நான் மகளே! மகளே! என்று ஆசையோடு அழைப்பேனே அவளே தான் ஆமினா... பஞ்சவர்ணக் கிளி போல என் நெஞ்சில் நிறைந்த உருவம். என் இளமைத் தங்கையின் மகள். என் மகள் பிள்ளைகளோடு மணல் வீடு கட்டி, மண் சோறு கறிசமைத்து, பானைப் பிள்ளைக் கல்யாணம் முடிக்க பக்கத்து வீட்டுக் குஞ்சி ரோஸ்களோ, தொட்டிலில் ஆசையோடு அழைத்து - குலவையிட்டு டம்..டும் என்று வாய் ஒலியில் கூட்டு.. பீபீ பிப்பீ.. உலஉலா என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் மேளமடித்து - மாப்பிள்ளை ஊர்வலம் வந்து - மட்டைக்
குடில் மாளிகையிலே செல்வந்தம் சூழ்ந்தின் மெத்தையிலே
கடதாசிப் பூ மாலைச் சோடனைகளுக்கிடையே - பட்டுச் சீலைத் துண்டுக்
குள் மறைந்திருந்த மரவள்ளிக்கம்புத் துண்டு மணமகளுக்கு...
மாப்பிள்ளையை ஊர்வலமாக அழைத்துவரும் போது..
என் மூத்தமகன் முகம்மது பிர்தௌஸ்... தனது மாப்பிள்ளை
பெரியவன்.. உயர்ந்தவன்.. அவன் பட்டாடை பாத பாவாடை
விரித்தால் தான் உங்கள் மாளிகைக்குள் காலடி வைப்பான்
என்று பெருமையாக அடம்பிடிக்கிறான். அவனுடன்
வந்த மாப்பிள்ளை வீட்டார் "ஆமாம்! ஆமாம்!" "மாப்பிள்ளைக்கு
பட்டு பாவாடை... பாத பாவாடை - நிலத்தில் போட வேணும்!"
என்று பக்கவாத்தியம் பாட - பெண்வீட்டார்.. ஆத்திரமாக
ஓடி ஆடி சியாங்க - என் மகள் ஆமினா.. ஓடிப்போய்
வீட்டுக்குள் சூட்கேஸ் பெட்டிக்குள் இருந்த என் தங்கையின்
பட்டுச் சேலையை மெதுவாக இழுத்து எடுத்துக் கொண்டு
ஓடிவந்து - "இதோ இதை விரியுங்கள்! மாப்பிள்ளை கோபிக்கப்
போறார்!" என்று சைகை செய்து பட்டாடை விரித்து
அந்த மாப்பிள்ளைப் பவனியை எங்கள் வளவிலே நடத்திய
அந்தக் காட்சி... இன்றும் என் உள்ளத்தில் அப்படியே
பளிச்சிடுகின்றதே! மகன் முகம்மது பிர்தௌஸுக்கு
ஐந்து வயது! சித்திரையில் பிறந்த உத்தம புத்திரன்.
தங்கையின் மகள் ஆமினாவுக்கு வயது நான்கு. இருவருட
வித்தியாசம். என்றாலும் நீண்ட உதைக் கொழுக்கட்டை
போலச் சொக்கும், ரோசமலர்ச் செவ்விதழும்! நாவற்பழக்
கண்களும் - தும்பியைப் போன்று வில்லாய் வளைந்த நெற்றியும்
குறுகுறுத்த பார்வையும், குறும்புச் சிரிப்பும் - அடிக்கடி
தன் மச்சானை - தம்பி! தம்பி! என்று அழைக்கும் போது
சிமிட்டும் கண்கள் பேசும் காவியங்களும்.. ஆஹா! ஆஹா!!
அற்புதம்! அற்புதம்!!
இந்தக் காட்சியை பாமரனும் நானும் ஆமாம்..
பாமரன் தான் பிஞ்சுகளின் தாய்... பகிமை மறந்து ரசித்த
நாட்கள் கனவாகி விட்டன! அவை காலத்தின்
ஞாபகச் சின்னங்கள்!! இவை யாவும் என் நெஞ்சுக்கு ஒரு
சுகம் சாந்தி தரக் கூடியவைகள்!!

என் எண்ணக் கடலிலே
தத்தளிக்கும் வேளையிலே.... மயிலின் குரல்... அந்த
மலையடிவாரத்தில் கேட்கிறது... ஆமினாவின் சிரிப்பொலி
மெல்ல மெல்ல மங்கி மங்கித் தேய்கிறது.... அதோ
என் மகன்! என் அருமை மகன்... வெள்ளை ஆடை
அணிந்து கைவீசி நடக்கிறான்.. ஆமாம் ஆதிநபி
ஆதம் நபியின் காலடியை நோக்கி மலையின்
உச்சிக்கு நடக்கிறான்... பாடிக் கொண்டே நடக்கிறான்.
என்னையே மறந்த நான்.. மகனே! மகனே!
என்று எழுந்து நடந்து அவனைத் தொடர்கின்றேன்!
அதோ மேலே! மேலே ஏறி ஏறி விரைவாய்
செல்லும் என் மகனின் குரல் ஒலிக்கிறது!-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்

வானத்தைப் பார்த்தேன்!
பூமியைப் பார்த்தேன்!
மனுஷனை இன்னும் பார்க்கலையே!
நான் பிறந்தது அழுதிடத் தானா?
என் விதியே சரிதானா...?

பாடல் முடிய - மலையின் உச்சியிலே அதிகாலையிலே
ஆதமலையின் சிகரத்திலே நிற்கிறேன். என் மகன்
அதோ விண்ணிலே நடக்கிறானே! வெள்ளித் தகடாகப்
பாலமுதப் பேழையாக ஒளி பரப்பும் இளஞ்சூரியனின்
பந்து போன்ற உருவத்துக்குள்ளே - என் அருமை
மகனின் முகம் தெரிகிறது!!
அங்கு - அந்தச் சூரியனின் ஒளிச் சுடரோடு
மங்காத மாணிக்கம் என் மகன் சங்கமமாகிவிட்டானே

பாடல்:-

எங்களுக்கும் காலம் வரும்!
காலம் வந்தால் வாழ்வு வரும்
வாழ்வு வந்தால் அனைவரையும்
வாழ வைப்போமே!!

என்ற கோஷம் மலையடிவாரத்திலே கேட்பது
போல ஒலிக்கிறது!
ஆமாம் சீருடை அணிந்த வாலிபர்கள் -
பாதுகாவலர்கள் என் மகனைப் போன்ற போராளிகள்
வீரர்கள் கைகளிலே துப்பாக்கி ஏந்திய படியே
மலையடிவாரத்தை நோக்கி வேகமாக நடக்கின்றனர்.

எல்லோரும் வாழ வேண்டும்
உயிர்கள் இன்புற்றிருக்க வேண்டும்
நல்லோரின் எண்ணம் இதே!
நல்லற வாழ்வும் இதே! என்று என் மகன்
பாடுகிறான்!!

அவனுடைய குரலைத் தொடர்ந்து
அந்தப் பாட்டை யாரோ பாடுகிறார்கள்
ஆமாம் என் சின்ன மகன் - என் அருகிலே
என் கட்டிலின் அருகிலே இருந்து கொண்டு...
பாடுகிறான்....

போடா மகனே! போ!!
போய் நீ பாரடா
பாரினில் நீதி.. போடா மகனே போ!

இலங்கை வானொலியில் ஒலித்த இந்தப் பாடலை
என் இளையவன் பாடுகிறான்! நான் என்னையே மற[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மர்ஹூம் SHM. சரீப் (ஆசிரியர்)



A. தர் திபர்)



மர்ஹூம் I. செய்யது அஹமது மௌலானா (ஆ ாத் மௌலானா)



மர்ஹூம் AM. சிம்கான் (அதிபர்)



மர்ஹூம் MLS. முகைடீன் (அதிபர்)

அல் ஹா MM. இப்றாஹிம் (ஓய்வ ற தபாலதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 ஆடி 6, ஜூலை 6. 1991.

எழுச்சிக் குரல்

# பொத்துவிலிலும் கறுப்பு வெள்ளிக்கிழமை!

## படுகொலைப் புலிகளின் வெறிக்கு அப்பாவிகள் பலி!

கடந்த ஜுன் 27ஆம் திகதி பொத்துவிலில் இருந்து கொழு

ம்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் வண்டி லகுகல 11 ஆம் மைல் கல்லில் புலிகளின் கண்ணி வெடித்தாக்குதலுக்கு இலக்காகியது. இதனால் 30 பிரயாணிகள் கொல்லப்பட்டனர் 09 பேர் காயமடைந்தனர்.

பிரஸ்தாப பஸ்வண்டி 27 ஆம் திகதி பி. ப. 5.45 மணியளவில் பொத்துவிலிருந்துகொழும்பு நோக்கிப் பயணமானது. சம்பவம் இடம் பெற்ற இடத்தை 7.15 மணிக்கு சென்றடைந்ததும் புலிகளின் கிளை மோர் கண்ணி வெடிக்கு இலக்காகியது. பஸ்மீது நடாத்தப்பட்ட தாக்குதல் இலக்குத் தவறியதால் பஸ் வீதி ஓரத்தில் பாய்ந்தது. இந்த சந்தர்பத்தை பயன்படுத்திய பயணிகளில் சிலர் காட்டுக்குள் ஓடி மறைந்து கொண்டனர். அதற்குள் தமது இலக்குத்தவறியதை அறிந்த புலிகள் பஸ்ஸை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் பஸ்ஸிற்குள்ளேயே பல பிரயாணிகள் இறந்தனர். தப்பி ஓடும் போதும் சில பிரயாணிகள் சூடுபட்டு இறந்தனர்.

சம்பவம் இடம் பெற்று சுமார் 5 - 10 நிமிடங்களுக்குள் காட்டுக்குள் மறைந்திருக்கும் பிரயாணிகளை வெளியே எடுத்து சுட்டுக் கொல்வதற்காக புலிகள் இராணுவத்தினர் வருவதைப் போன்றும் அவர்கள் பிரயாணிகளை அழைப்பது போன்றும். இராணுவ வாகனங்கள் வருவதைப் போன்றும் கெஸட் ரெகோடர் மூலம் ஒலி பரப்பிக்காட்டினர். இதைக் கேட்ட பிரயாணிகளில் சிலர் காட்டை விட்டு வெளியே வந்தனர் அங்கே இராணுவத்தினர் இருக்கவில்லை மாறாக படு

கொலைப் புலிகளே நின்றனர். வெளியே வந்த பிரயாணிகளையும் சுட்டுக் கொன்று பஸ்ஸினுல் போட்டு தீவைத்தனர். மீண்டும் காட்டுப்பக்கமாக சரமாரியாக வேட்டுகளைத் தீர்த்துவிட்டு புலிகள் தப்பிச் சென்றனர்.

சம்பவம் நடந்த இடத்திற்கு சுமார் 25 நிமிடங்களின் பின்னர் இராணுவத்தினர் வந்து நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். காயமடைந்தவர்களை

சியம்பலாண்டுவ, பதுளை வைத்திய சாலைகளில் அனுமதித்தனர். அதன் பின் காட்டுக்குள் மறைந்திருக்கும் பிரயாணிகளை தேடும்பணியில் ஈடுபட்டனர்.

வெள்ளிக்கிழமை காலை இறந்தவர்களை அடையாளம் காண்பதற்காக பொதுமக்கள் சென்றனர். அங்கே சடலங்கள் தீயினால் கருகி எலும்புகள் மட்டுமே இருந்தன. 4 சடலங்கள் மாத்திரமே கருகாமல் மீட்கப்பட்டன. இதில் ஒரு டென்மார்க் பிரஜையும், இரண்டு முஸ்லீம்களும் ஒரு சிங்களப் மௌண்மணியும் அடங்குவர்.

இந்தபஸ் வண்டியில் இருந்த பலஇலட்சரூபாய் பணமும் ஏனைய உடமைகளும் மீட்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வெள்ளிக்கிழமை ஜும் ஆத் தொழுகையின் பின் சிதைந்த ஜனாசாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்நாள் பொத்துவிலின் வரலாற்றில் ஒரு கரி நாளாகும்.

பொத்துவிலைச் சேர்ந்த எம். எஸ். எம். அப்துல்மலிக் பின்வருமாறு அறிவிக்கிறார்.

பொத்துவிலில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் வண்டியொன்றை 27-06-91 அன்று, வெள்ளி இரவு 7.10 மணிக்கு இனவெறி நாய்களான படுகொலைப் புலிகள் வழிமறித்து தாக்குதல் நடத்தியதில் 30 முஸ்லிம் பயணிகள் பஸ்ஸோடு எரிந்து சாம்பலாகினர். 05 பேரின் உடல்கள் கருகிய நிலையில் காணப்பட்டன. இன்னும் 11 பேர் தப்பியோடியுள்ளனர். 08 பேர் சிகிச்சைக்காக சியம்பலாண்டுவ, பதுளை ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கருகிய உடல்களில் உல்லாசப் பிரயாணியான டென்மார்க் பிரஜையும் ஒருவராவர்.

அம்பாறையைச் சேர்ந்த லகுகல, ஹுலானுகே என்ற கிராமத்திலேயே மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கொலையுண்டோரில் 30 பேர் முஸ்லிம்களாவர். அதிலும் 15 பேர் பெண்களும், ஒரு இளம் பாடசாலை மாணவியும், ஒரு கைக்குழந்தையும் அடங்கும். ஏனையோர் சிங்களவர்களாவர்.

கிளேமோர் கண்ணி வெடியொன்றை இவ் இனவெறி நாய்கள் வெடிக்கச் செய்துள்ளனர். இதனால் பஸ் தானாகவே தீப்பிடித்துக் கொண்டது. அதன் பின்னர் சரமரியாக துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளனர். பஸ்ஸில் மொத்தம் 54 பேர் பிரயாணம் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 கி.பி. 1991 - லகுகலயில் முஸ்லிம்கள் படுகொலை.

# புலிகளின் தாகத்திற்கு

## பொத்துவிலில் இலக்கானோர்

கடந்த 27-6-91ல் பொத்துவிலிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் மீது லுஹுகலையில் வைத்துப் புலிகள் இயக்கத்தினர் நடத்திய தாக்குதலின் போது கொல்லப்பட்ட முஸ்லிம்களின் பெயர் விபரம் வருமாறு:

கே. முகமட் இஸ்மாயீல் (45), எஸ். எம். ஏ. ஐதுறூஸ் (36), ஜே. பாதிலா உம்மா (55), எம். கே. அதிஸியாவீவி (22). கே. அப்துல் கபூர் (35). எம். முஸ்தபா (36), ஏ.சலமா வீவி (30), ஏ. ஸி. எம். இஸ்மாயீல் (45), எம். முஹமட் நியாஸ் (23), எஸ். மீரா லெவ்வை (55), எம். எல். லரீபா (15), ஏ. முகம்மது அலியார் (50), அவ்வா உம்மா (30), எம். எஸ். ஆயிசா (55), ஏ. கே. அலியார் (45), ஐ. எல். ஹயாத்து முகம்மது (55) எம். எஸ். எம். இப்றாஹீம் (50), எம். ஐ. மர்ழூனா (19), எம். ஸி. எம். காதர் முகைதீன் (35), எம். ஏ. ஸல்மா வீவி (30), எம். எல். ஆயிசா (18).

(தகவல்-அலி அல் றிழா, அப்துல் மலிக்)

பாமிஸ் மாசிகை

August 1991.

பொத்துவில் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கின்ற அநீதிகளை ஆவணப்படுத்துவதில் மிகுந்த ஆர்வலராக திகழ்பவர் பொத்துவிலைச் சேர்ந்த சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர் எம்.எஸ்.எம். அப்துல் மலிக் அவர்கள். இவரிடம் இருந்தே இத்தகைய விடயங்களில் இந்த சுவடிக்கூடத்திற்கான மிக முக்கிய ஆவணங்கள் பல கிடைக்கப்பெற்றன. 1980களில் இருந்து பத்திரிகைத் துறையில் நாட்டம் கொண்டு துணிச்சலான முறையில் பொத்துவில் தொடர்பான விடயங்களை எழுதிவரும் இவரின் அநேக ஆக்கங்கள் எழுச்சிக்குரல், நவமணி போன்ற பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**89.** கி.பி. 1992 - பொத்துவில் யுவன் கலை, இலக்கிய சங்கமிப்பு.

# பொத்துவில் யுவன் கலை இலக்கிய சங்கமிப்பு நிர்வாகிகள் தெரிவு

பொத்துவில் யுவன் கலை இலக்கிய சங்கமிப்பு நிர்வாகிகள் தெரிவு அண்மையில் அல் இர்பான் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ராஜகவி எம். காசிம் கான் (அதிபர்)

உப தலைவர்: கவிவாணர் எம். ஏ. அஸீஸ் (அதிபர்)



(கவிஞ்ஞர் யுவன்)

விசேட ஆலோசகர்: எம் எல். எம். ஏ. காதர் (கல்வி அதிகாரி)

செயலாளர்: ஏ. எல் முகம்மத் (ஆசிரியர்)

இணைச் செயலாளர்கள்: எம். எஸ். எம். றிஸ்வி (ஆசிரியர்). ஐ எல். பக்கீர் முகிதீன், என் ரீ மல்ஹர்தீன்

பொருளாளர்: ஏ. எம். எம். நாசர் (ஆசிரியர்)

பிரச்சாரச் செயலாளர்; எம். ஏ. ஏ. லத்தீப் (ஆசிரியர்)

நிர்வாக உறுப்பினர்கள்: ஏ எஸ். எம் கரீம் (ஆசிரியர்). எம். எஸ். எம். அப்துல் மலிக் (சுகாதார இன்ஸ்பெக்டர்). யூ எல். எம் தஸ்தக்கீர், எம். பீ. ஹிலுர் முகம்மத் (பீ.ஏ.), எஸ் எம். மஹறூம், ஏ. எம். ஹிமாயூன் (ஆசிரியர்), ஏ. எஸ் எம். சலீம் (ஆசிரியர்), ஏ. எம் றசீட், என். ஏ. கரீப் (ஆசிரியர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தகவல்:
பொத்துவில்
அப்துல மலிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90. கி.பி. 1992 - கோமாரியில் முஸ்லிம்கள் படுகொலை.

# இனவெறி புலிகளின் இரத்த வெறிக்கு முஸ்லீம் பயணிகள் பலி !

கடந்த 02.06.92 அன்று வியாழக்கிழமை மாலை அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவிலை நோக்கி சென்ற தனியார் பஸ்வண்டி அக்கரைபற்றுக்கும் பொத்துவிலுக்கும் இடையிலுள்ள கோமாரி – 67ஆம் கட்டை எனுமிடத்தில் வைத்து சுமார் 2.00 மணியளவில் இனவெறி படுகொலைப் புலிகளினால் வழிமறிக்கப்பட்டு அதில் பயணம் செய்தோர் சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் 13 முஸ்லிம்களும், 02 சிங்களவர்களும், 01 தமிழரும் அடங்குவர். 13 முஸ்லிம்களில் 02 கிராமசேவை உத்தியோகத்தர்களும் ஏனையோர் ஏழை-எளிய குடும்பங்களைச் சுமந்து கொண்டிருந்த சின்னஞ்சிறு மரக்கறி வியர்பாரிகளுமாவர். சிங்களச் சகோதரர்கள் பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் புதிதாகக் கடமையேற்க வந்த பொலிஸ் உத்தியோகத்தர்களாவர். தமிழ் சகோதரர் கிராம் அபிவிருத்தி உத்தியோகத்தராவர்.

இவர்களது விபரம் வருமாறு:

02.06.92. அன்று பி.ப.2.00 மணியளவில் வழிமறித்து கொலை செய்யப்பட்ட 67ஆம் கட்டை எனும் இடத்தில் ஒரு புறம் கோமாரி அதிரடிப்படை முகாமும், மறுபுறம் ஊறணி முகாமும் கூப்பிடு தூரங்களில் இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. சம்பவம் நடந்து அரைமணி நேரத்தில் பஸ்ஸும், கொலை செய்யப்பட்டோரும் பொத்துவில் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டனர். இவை அதிரடிப்படையினரின் உதவியுடனேயே மேற்கொள்ளப்பட்டது. மறுநாள் மு.ப. 8.30 மணியளவில் 12 ஜனாஸாக்களும் நல்லடக்கம் செய்யப்பட்டன. ஜனாஸாவை அடக்கும் பணியில் பொத்துவில் மேலதிக அரசாங்க அதிபர் ஜனாப். ஹலீமும் இஸ்லாமிய சமூக சேவைகள் அமைப்பைச் சேர்ந்த இளைஞர்களும், பொத்துவில் உலமா சபையினரும் மும்முரமாக ஈடுபட்டு ஜலால்புரம் மையவாடியில் பத்தாயிரம் மக்கள் புடைசூழ கண்ணீர் மழையுடன் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| ஏ.எச். காதர் முகிதீன் | (21) | இனம் வியாபாரி |
| எம்.ஸீ. ஆதம்பாவா | (30) | மரக்கறிவியாபாரி |
| எம்.ஐ. சாலித்தம்பி | (31) | மரக்கறி வியாபாரி |
| எஸ். இப்றாஹீம் | (22) | இனம் வியாபாரி |
| எம். ஜமால்தீன் | (24) | இளைஞர் கழகம் |
| ஏ. அயாத்து லெப்பே | (20) | ஹோம் காட் |
| எம். சுக்கூர் | (24) | சாரதி |
| எம். ஸீ. அபூபக்கர் | (30) | கிராம சேவை உத்தியோகத்தர் |
| எஸ்.எம். ஹனீபா | (31) | கிராம சேவை உத்தியோகத்தர். |
| ஐ. முபாறக் | (24) | கிளினர் |
| ஏ. முகிதீன்-முஸ்தபா | (30) | |
| திரு. குலேந்திரன் | (31) | கி.அ. உத்தியோகத்தர் |

ஏனையோர் சிங்களச் சகோதரர்களாவர்.

தகவல்:
எம்.எஸ்.எம். அப்துல் மலிக்
பொத்துவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொத்துவில் ஷுஹதாக்கள் நினைவு மலர்

இரத்தவெறி பிடித்த இனவெறி நாய்களான படு கொலைப் புலிகளால் 2 - 6 - 92 அன்று அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவிலை நோக்கி வந்துகொண்டிருந்த பஸ் வண்டியை கோமாரியில் வழிமறித்து சுட்டும் வெட்டியும், எரித்தும் கொலைசெய்யப்பட்ட 17 ஷுஹதாக்களின் நினைவாக பொத்துவில் ''யுவன் கலை இலக்கிய சங்கமத்தினரால்'' பாக்கொதியல் தொகுப்பொன்று ''எண்ணக் கொதிக்குது நெஞ்சம்'' என்ற பெயரில் றோனியோப் பிரதி மலராக வெளியிடப்பட்டது.

இதன் முதல் பிரதியை கல்வியதிகாரி எம். எல் எம். ஏ. காதர் அதிபர் எம். ஐ எம். செரீப்பிடம் கையளித்தார்.

கவிவாணன் அஸீஸ் அதிபரை ஆசிரியராகக்கொண்ட இத்தொகுப்பில் ராஜகவி காசிம்கான் அதிபர், வளர்கவி முகம்மத் ஆசிரியர், இறைநேசன் பொத்துவில் அப்துல் மலிக் சுகாதார இன்ஸ்பெக்டர், இளம்பிறைகள் துஸ்றத் மலிக் மஹ்தூம், றம்ஸா இஸ்மாயில் கச்சேரி, கவிவேந்தன் ஜிப்ரி, மல்ஹர்தீன், பக்கீர் முகிதீன், றிஸ்வி ஷெரீப், காசிம்பாவா, ஆசிரியர், தநீறா இஸ்மாயில் ஆசிரியை, றபீபா இஸ்மாயில் ஆசிரியை, கவிச்செல்வி சித்தி றபீக்கா ஆசிரியை, அழகு கரீம் ஆசிரியர், ஆகியோர்களது கொதியல்கள் ''எண்ணக் கொதிக்குது நெஞ்சம்'' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளன.

தகவல்: இறைநேசன் - அப்துல் மலிக்

1992 ஆனித்திங்கள் இரண்டாம் நாள் பாசிச காட்டுமிராண்டிகளால் கோமாரி எல்லையிலே கொடூரமாக கொலை செய்யப்பட்ட எமது இரத்தத்தின் இரத்தங்களது நினைவாக, யுவன் கலை, இலக்கிய சங்கமிப்பு 1992.06.14ஆம் திகதி நடாத்திய பாக்கொதியலின் தொகுப்பு. - எண்ணக் கொதிக்குது நெஞ்சம் நூலின் முதற் பக்கத்திலிருந்து.

...

### காணிக்கை

பெற்றெடுத்த உதிரத்தைப்
பேர் பொறித்த இதயத்தை
விட்டுப் பிரிந்து
விதி எண்ணி விறைக்கின்ற
நெஞ்சங்களுக்கு எம்
நிலையான காணிக்கை -

எண்ணக் கொதிக்குது நெஞ்சம் நூலின் முதற் பக்கத்திலிருந்து.

...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை ... :-

(...காசிம்கான் அதிபர்)

வஞ்சம் புரிந்ததமையால் வாழ்விழந்த பேரை எண்ணி
நெஞ்சம் குளமாகி நெக்குருகி நிற்கையிலே
தஞ்சம் எமதினையச் சோதரர்க்காம் இந்நிலைச்
அஞ்சும் உளந்தோடவனையே இறைஞ்சி நின்று;
தஞ்சம் அடைந்தோம் அவன் தாழ்வேண்டி
மிஞ்சும் எனது பணிவு சலாம் உண்டாக,
"பாக்கொதியல்" செய்யப்பாவாணர் கூடி இங்கு
மாக்களிலே வேறுபட்ட மக்களுக்கு
நாங்களினால் கூடி நல்ல அறம்பாடித்
தாங்கவில்லை என்றால் தரணி அழும்
ஆகையினால்........!
எக்குறைச்செய்த எதிரி அழிந்த விட...
பாக்கவிகள் கூறல் பயனளிக்கும்,
சோதரரே!
ஓடிவந்த வாகனத்தை உடன்நிறுத்த என்றதனால்
நாடிவந்த நம்முரார் நடுங்கினரே கெஞ்சினரே!
"தேடிவந்தோம் சோனிகளை" என்றான் இரக்கமிலான்
வாடி வதங்கி வஸ்ஸுக்குள் தஞ்ச அழகை,
பேடி அவன் படபடவென கிடுகிடெனச் சுட்டுக்கண்
மூடித்திறப்பதற்குள் முட்டாள்கள் ஓடினரே!

*

உற்ற துணை இழந்த ஓலங்கள் கேட்டனவே
பெற்றதாய் பிள்ளை எனப் பேண இனியாருண்டோ
குற்றுயிராய்க்கிடந்தோர் கொண்டுவரப்பட்டதமே
நற்றவம் செய்தோரும் நடுநடுங்கி ஒடுங்கினரே
கற்றவரும் கண்ணீர் சொரிந்தோடக் கடக் கண்ணீர் சொரிந்தோட
மற்று உறவாரும் தாரடித்துச் சாய்ந்தனரே!
...........
கண்மணியே கற்கண்டே என்று
மண்ணில்புழுவாய் மாந்தர் துடித்தனரே
விண்ணே அதிர விழுந்து கதிகலங்கி
என்ன கொடூரம் இழைத்தான் இரக்கமிலான்;



முன்னே பதறி முண்டி யடித்தே வந்தோர்
எண்ணக் கொதிக்குதே எம் நெஞ்சம்.

தாய்க்கு மகனில்லை தந்தைக்குப் பிள்ளையில்லை
சேய்க்கு நற்செய்தி செப்பிவிட்ட அப்பனில்லை-உயிர்
மாய்த்த தலை வயிற்றில் வைத்த வெடி வேட்டால்
சாய்த்துவிட்ட சங்கதியைச் சன்மார்க்கர் சகிக்கவில்லை,
பேய்க்குணம் கொண்டோர் பிதற்றிய இச்செயலால்
பாக்கியாம் உள்ளோர் பரிதவிக்கின்றோமே!

உயிரே திரண்டு உதிரக்கண்ணீர் வடித்தோம்
யாரே இவர் குடும்பு யாசகத்துக்குதவ
பாரே இப்பாதகரின் செயல் ஏற்கார்.
வேரோடொழிக்க விரும்பிய கா பிர்ஒழிய
சீரே இழந்த சிறுகுடும்பம் தலை எடுக்க,
நாரே தப்பீர் கூறி நாமுதவி நிற்போமா!

*வஸ்ஸலாம்*

ராஜகவி ஏ.எம். காசிம் கான் அதிபர்
(எண்ணக் கொதிக்குது நெஞ்சம் - கவிதைத் தொகுப்பிலிருந்து ... )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜப் 1413 1993 ஜனவரி நேசன்

# பொத்துவிலில் ஞாபகார்த்த நூல் வெளியீடு

இதுவரை காலமும் பாசிஸப் புலிகளினாலும், ஏனைய தமிழ்த் தீவிரவாத இயக்கங்களாலும், இந்திய இராணுவத்தாலும் அப்பாவித்தனமாக ஈவிரக்கமற்றமுறையில் குத்தி, வெட்டி, சுட்டு, எரித்துக் கொல்லப்பட்ட முஸ்லிம்கள் பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தாவூர், ஏறாவூர், மூதூர், வாழைச்சேனை, கிண்ணியா, காத்தான்குடி, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய ஊர்களில் நடைபெற்ற அநாகரீகக் கொலைகள் ஆகியவற்றையும், முஸ்லிம்களைதமது இருப்பிடத்தைவிட்டு அப்புறப்படுத்திய செயலையும் ஞாபகமூட்டி, எதிர்காலத்தில் படிப்பினை பெறும் நோக்கத்துடன் "இரத்தச் சுவடுகள்" என்ற நூலொன்றை பொத்துவில் யுவன் கலை இலக்கிய சங்கமிப்பு, பொத்துவில் இஸ்லாமிய சமூக சேவைகள் அமைப்பு ஆகியனஒன்றிணைந்து வெளியிட்டப் பட்டன.

இவ் வெளியீட்டு விழா கவிவாணன் அஸீஸ் அதிபர் அவர்களது தலைமையில் பொத்துவில் அல் இர்பான் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நூலின் முதற்பிரதியை, சாயிதமருது பொதுச்சந்தையில் கொல்லப்பட்ட சகோதரர்களின் நினைவாக கவிவாணன் அஸீஸ் அதிபர் அவர்களிடமிருந்து இலங்கை வங்கி முகாமையாளர் ஜனாப் வை.பி. அலியார் பெற்றுக் கொண்டார். **அப்துல் மலிக்.**

## பொத்துவிலில் "இரத்தச் சுவடுகள்"

**இதுவரை காலமும் பாஷிசப் புலிகளினால் நிகழ்த்தப்பட்ட படுபாதகக் கொடூரக் கொலைகளை, குத்து வெட்டுக்களை, எரிப்புச் சம்பவங்களை, சித்திரவதைகளை நினைவு கூறும் முகமாக "யுவன் கலை இலக்கிய சங்கமத்தினால் "இரத்தச் சுவடுகள்" என்ற நினைவு மலர் ஒன்று சஞ்சிகையாக இம்மாத இறுதியில் வெளிவர இருக்கிறது.**

**கவிவாணன் அஸீஸ் அதிபர் சஞ்சிகை வெளியீட்டுக் குழு ராஜா வி காசிம்கான் அதிபர், வளர்கவி முகம்மத் ஆசிரியர், இறைநேசன் பொத்துவில் அப்துல் மலிக், ரிஸ்வி ஷெரீப் ஆசிரியர், அழகு கரீம் ஆசிரியர் இதற்கான ஏற்பாடுகளில் பங்கு கொண்டுள்ளனர்.**

**தகவல்: இறைநேசன்**
**பொத்துவில்**
**அப்துல் மலிக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*இரத்தச் சுவடுகள் கவிதைத் தொகுப்பிலிருந்து சில வரிகள் ...*
*கவிதை: எஸ்.எம். மக்தூம்*

ஏனின்று முஸ்லிம்கள்
ஏக்கத்தில் வாழுகிறார்
ஏகாதிபத்தியங்கள்
ஏன் எம்மை வதைக்கிறது.

சீரான மார்க்கத்தைச்
சிந்திக்கத் தவறிவிட்டோம்
சீர் கெட்டுச் சிதைவுற்று
சீரழிவைக் கண்டுவிட்டோம்.

விலைபேசி மார்க்கத்தை
விறகத் துணிந்து விட்டோம்
விளையாட்டில் காலத்தை
வீணாய்க் கழித்துவிட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

திக்கெட்டும் நெறிவளர்த்த
தீனில் பிறந்ததற்காய்;

அக்கிரமம் கொடூரம்

அநியாயம் என்பவற்றால்.....!

திருக்கோவில், பொலிஸ் நிலையம்

செங்காமம் ஜமாந்தறையும்

றொட்டை பெரிய குளம்

கோமாரிக் காட்டுக்குள்;

திக்கற்றுச் சஹீதான

தீரர்களின் இரத்தத்தில்

எங்களது காணிக்கை

இது-!!

[illegible]

| | | வயது |
|---|---|---|
| 1. பி.டி. அப்துல் குத்தூஸ் | (திருக். கோவில்) சீ.வி.எப். | 23 |
| 2. எம். கே. குளந்தைமரைக்கார் | | 22 |
| 3. எம். ஐ. அப்துல் கரீம் | " | 20 |
| 4. எம். பி. மீராசாஹிபு | " | 22 |
| 5. ஐ. எல். அவுதுராவுத்தர் | " | 19 |
| 6. எம். எல். அப்துல்லத்தீப் | " | 21 |
| 7. ஏ. எல். அப்துல் நசுதர் | " | 20 |
| 8. எல். நவாஸ் | " | 19 |
| 9. ஏ. எல். அப்துல் வஹாப் | (பொலிஸ் முற்றுகை) | 22 |
| 10. எம். எஸ். உதுமான் | " | 23 |
| 11. ஏ. பி. அலாவுதீன் | " | 22 |
| 12. எம். எஸ். வஹாப் | " | 25 |
| 13. எம். ஏ. உதுமான் | " | 22 |
| 14. ஏ. ஐயுப்கான் | " | 21 |
| 15. ஏ. ஜீ. எம். பிர்தௌஸ் | " | 22 |
| 16. எம். எல். நஜுமுதீன் | " | 25 |
| 17. எம். பி. சாலி | (கல்முனை) | 25 |
| 18. ஏ. எஸ். எம். உறம்தான் | (கிளிநொச்சி) | 30 |
| 19. ஏ. பசால் சம்சுதீன் | (பாலமுனை) | 31 |
| 20. ஏ. கையூம் | (திருக்கோவில்) | 24 |
| 21. ஏ. கலந்தர் | (றொட்டை) | 35 |
| 22. எம். எம். அபுல்உஸ்மான் | சுட்டம்/ஜமாந்தறை | 22 |
| 23. எம். எல். எம். காசீம் | " | 19 |
| 24. எல். சுபைர் | " | 20 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 25. ஏ. பாரதீர் | 14 |
| 26. எம். எம். கமால்தீன் | 13 |
| 27. ஏ. நழீம் | 14 |
| 28. ஏ. பி. முகைதீன்பிச்சை | |
| 29. ஏ. சபீர் | 15 |
| 30. எம். பி. புகாரி | 12 |
| 31. ஏ. ஆதம்பாவா (உள்வலக்காட்டில்) | 40 |
| 32. ஏ. முஸ்தபா 〃 | 35 |
| 33. எம். பி. கலீல் 〃 | 22 |
| 34. எம். அலிவராசா 〃 | 18 |
| 35. சம்சுதீன் | 14 |
| 36. கே. எல். உறவிபா (செங்காமம்) | 40 |
| 37. ஏ. நாகரீத்தம்பி (றொட்டை) | 26 |
| 38. எல். அகமதுலெவ்வை 〃 | 30 |
| 39. ஏ. மூசா 〃 | 50 |
| 40. ஏ. உறவிபா 〃 | 35 |
| 41. கே. எம். உறவிபா (3ம்கட்டை) | 35 |
| 42. இளையதம்பி 〃 | 27 |
| 43. கே. எம். இஸ்மாயில் (பள்ளிவாசலில் லாஉற கலை) | 45 |
| 44. எஸ். எம். ஏ. அப்பாஸ் 〃 〃 | 36 |
| 45. ஜே. பதிலாஉம்மா 〃 | 55 |
| 46. எம். கே. அலியாவீவி 〃 | 22 |
| 47. கே. அப்தல்லீம் 〃 | 35 |
| 48. எம். முஸ்தபா 〃 | 36 |

| | |
|---|---|
| 49. ஏ. சல்மாவீவி பள்ளிவாசலில் லாஉற கலை | 30 |
| 50. ஏ. சி. எம். இஸ்மாயில் 〃 | 45 |
| 51. எம். முகம்மது நியாஸ் 〃 | 22 |
| 52. எம். எல். மீராலெவ்வை 〃 | 60 |
| 53. எம். எல். முபீபா 〃 | 15 |
| 54. ஏ. முகம்மது அலியார் 〃 | 50 |
| 55. ஏ. அலிவாஉம்மா 〃 | 30 |
| 56. ஏ. கே. அலியார் 〃 | 45 |
| 57. ஐ. எல். உதுமாலெப்பை முகம்மது 〃 | 55 |
| 58. எம். எஸ். எம். இப்றாகீம் 〃 | 50 |
| 59. எம். ஐ. மர்சுனா 〃 | 19 |
| 60. எஸ். சீ. எம். காதர்முகைதீன் 〃 | 35 |
| 61. எம். ஏ. சல்மா | 30 |
| 62. எம். எல். ஆயிஷா | 18 |
| 63. வை. பி. பாத்தும்மா | 38 |
| 64. எல். ரி. முசாலெவ்வை | 42 |
| 65. எம். ஸி. அப்பக்கர் சி. சே. உ. த. (கோமாரிபவ்) | 35 |
| 66. இஸட். எம். உறவிபா சி. சே. உ. த. 〃 | 36 |
| 67. ஏ. எச். காதர்முகையதீன் 〃 | 21 |
| 68. எம். வி. ஆதம்பாவா 〃 | 30 |
| 69. எம். ஐ. சாலித்தம்பி 〃 | 31 |
| 70. எஸ். இப்றாகீம் 〃 | 22 |
| 71. எம். ஜமால்தீன் 〃 | 24 |
| 72. ஏ. எம். முஸ்தபா 〃 | 30 |
| 73. எம். எஸ். ஏ. மஜீத் (முபீன்) மகாகவகொலை | 32 |
| 74. ஐ. ஏ. நஸீறுதீன் 〃 | 29 |
| 75. எம். எஸ். தௌபீக் பொத்/பொலிஸ் நிலையம் | 22 |
| 76. எஸ். ரீ. பீர்முகம்மது சியம்பலாந்துவை | 36 |
| 77. ஏ. எம். ஜிப்ரி 〃 | 24 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06

7[illegible]. ஏ. அயாதீத லெவ்வை (கோமாரி பங்) 20
79. எம். கக்கர் " 24
8[illegible]. ஐ. முபாறக் " 24
81. ஏ. றிமீதியாஸ் " 22
82. எம். ஏ. றசாக் ஆசிரியர் - செங்கலடி) 36
83. . ஐ. எம். உறனிபா சியம்பலாந்தீவை 24
84. எம். எம். உறனிபா " 23
85. எம். எம். றபாம்தீன் உறிதாயாபுரம் 21
86.

முன்வீடு என்கின்ற ஒரு
முனைப்பில் கருவாக்கி
முர்க்கவெறி கொண்டு
மோசம் புரிந்தவரின்
பட்டியல் நாளும்
பலவாறாய் நீளுகிறது!!

அவ்வாறு.......;

எங்கு பிறந்தாலும்
எங்கு மறைந்தாலும்
அவர்களுக்கு எல்லாம்
அல்லாஉற்விடம் அருள் பெருக!
சுவனம் கிடைக்க-
துவாக்கேட்போம்
சோதரரே!!

07

உதவிக்கல்விப்பணிப்பாளர்
ஜனாப் - எம். எல். எம். அப்துல் காதர்
(B A Dip in Edu) அவர்கள் வழங்கிய
சாற்றுரை

எண்ணக்கொதிப்புகளை எழுத்தில் உருக்கொடுத்த
வடிக்கவியாக வடித்திருக்கும் நம் கவிஞர்
இரத்தத்தில் தோய்ந்தே எழுந்து வருகின்றார்!
அவ்வாறின்.............;
என்ன அலைகளிலே இறையச்சம் காணுகிறேன்!
பண்மைத்தப் பாவெழுதும் பாவலர்கள்
நம்முடைய,
கண்ணாகி விடுகின்றார் கவிதைத் திறத்தாலே!!
அவர்க்குள் என்னைத் திணித்தேன்.....!

இதயச்சதை உருக்கி
இரகக் கடைந்தெடுத்த
இரத்தச்சுவடுஇது
இறவா வடுக் கொத்த!!

ஊருதி குடித்திட்ட
கயமைத் தனைத்தனை
நாக்கி வடித்தெடுத்த
மாறாச் சுவடு இது!
ஆறு உயர்களினை
ஓாலொன்றில் கோர்த்தெடுத்த
ஆறாத்துயர்க் கொத்த
யார் கழுத்தில் வீழ்ந்ததவோ??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30

# அடங்காத மூச்சுக்கள்

என். கே. அப்துல் கரீம்

வஞ்சனைகள் எங்கள் வாழ்வதன் மீது
வந்து விழுந்தது மேன்? - இந்த
நிந்தனைகளாலே நெஞ்சு சூழ்ந்து
நிலைகெட்டுப் போவது மேன்?

கொலைஞரெல்லாம் ஒன்று கூடிய வந்து
கொன்று குவித்தனரே!!

தலையை உடலைத் தவிக்க அறுத்தே
தரையில் விழுத்தினரே!!

உறவுகள் எல்லாரும் ஒன்றாகவே கண்ணீர்
உதிர்த்தவர் என்ன கண்டார்?!!

அரக்கத்தை கோரம் அடங்கித் தெளிவு;
ஆவதும் எந்நாளோ!!?

இரத்தச் சுவட்டுகள் ஈரமே காயுமுன்
ஈனமலிகின்றதே - கருத்தோ,

இரவு பகலுமே எங்கிரும் மூச்சு
இன்னும் அடங்கவில்லையே!!.

இரக்கத்தை தேடிங்கு பஞ்சம்
ஈனர்கள் செய்வதோ வஞ்சம்
அரக்கத் தனத்திலா நெஞ்சம்
அறம் கொன்றதே பிரபஞ்சம்

கொலைப்புலிகள் புறப் பட்டு
கொன்று குவிக்கிறார் நம்மை
இளைஞர் சிறுகுகள் முதியோர் என
என்றும் உணர்வுமே அற்றார்!!

31

வெறி கொண்டலைகிறார் இங்கே; கொடு
வெக்காடு கொட்டிச் சரிக்கிறார் எம்மை
குறிவைத்தார் முஸ்லிம்கள் என்றே - பொய்க்
கொள்கையை இன்றே புரிகிறோம், அன்றோ!

பித்தப் பிடித்த நிற்றாரே - மடி
வீறிக்கருவைக் கிழித் தெறிந்தாரே!!
யுத்த தருமத்தைச் சொன்னார் - இந்த
யோக்கிய மற்று நிற்கின்றார்!!

பொங்கிய பொருளும் பொன்னும்
பொருந்திய இன சனமும்
மங்கியே மறையலாச்சு!
மண்ணுமே சிவந்து போச்சு!!

துப்பாக்கி ரவையின் ஆட்டம்
தட்டரின் செயலோ நீட்டம்!
மப்பாசி வானில் வாட்டம்!!
மதி கேடர் கொலை பேரீட்டம்!!

ஈழ நாத வானிலே
ஈன பேத தாரகை
ஆளவென்ற எங்களை
மாளவைக்கும் போரதை!!

இருப்புக்கு நிகரான தீயர்
ஈட்டிய தீச் செயலாலே!!
உறவை இழந்து தடித்தார்!!
ஒலங்கள் கேட்டு உருகுது நெஞ்சே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன் வாரமஞ்சரி 1993ம் வருடம் மார்ச் மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை

# கலையுலகம்

*** தே. செந்தில்வேலவர். ***

## பொத்துவிலில் ஒரு கலைத் தடம்



கிழக்கிலங்கையின் இயற்கை எழில் கொஞ்சும் எமது ஊரான பொத்துவில் கலை இலக்கியத்துறைக்குப் பல கோணங்களில் நின்று தன் பங்பளிப்பைச் செய்துள்ளது. கவிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய சிந்தனையாளர்களை அவ்வப்போது வளர்த்தெடுத்துள்ளது.

இவ்வகையில் நாடகத் துறையை நோக்கும் போது, கடந்த 1982 இலிருந்து நாடகத்துறைக்கும் அதன் வளர்ச்சிக்கும் அதிக பங்களிப்புச் செய்தவர் பிரதேச சபை வீதி, பொத்துவில்-01 எனும் விலாசத்தைச் சேர்ந்த மு. ச. முகம்மது றிஸ்வி என்ற இளங்கலைஞனாகும்.

இவர் பொத்துவில் மத்திய கல்லூரியில் க. பொ. த. உயர்தரம் வரைக் கற்று, பள்ளிப் படிப்புடனேயே நாடகம், கவிதை, ஓவியம், பாட்டு போன்ற துறைகளின் வாயிலாக தன் கலைப்பிரவேசத்தைத் தொடங்கினார். 1982 முதல் 1986 வரை பாடசாலை நாடகங்களை எழுதி, இயங்கி, நடித்து தன் ஆற்றலை வெளிப்படுத்திய இவர் 1987லிருந்த இன்று வரை பல நாடகங்களை மேடையேற்றி பாராட்டுகளையும், பரிசுகளையும் பெற்றார். அதில், கலை சிந்தும் கண்ணீர், சிதைந்த சிற்பங்கள், உறங்காத உண்மைகள், தியாக தீபங்கள், வறுமை வடிவங்கள் போன்ற நாடகங்கள் சிறப்புக்குரியன.

இது தவிர, 1990ல் தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் அகில இலங்கை ரீதியல் நடாத்தப்பட்ட நாடக, பாடல் போட்டிகளில் வெற்றியீட்டிப் பல பரிசுகள் சான்றிதழ்களையும் இவர் பெற்றுள்ளார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டின் நடுப்பகுதியில் "போகப் போகப் புரிஞ்சுக்கு வீங்க" எனும் நாடகத்தை மேடையேற்றக் காத்திருக்கும் இவர் கவிதைகள் இயற்றுவதில் யதார்த்தப் போக்கும், பாடல்களை தாமே இயற்றிப் பாடுவதிலும் ஆர்வமுள்ளவர். இவ்வாறான பல கலைத்திறமைகள் பொதிந்துள்ள இக்கலைஞன் மென்மேலும் எம்மூரில் கலைத்தடம் பதித்துச் செல்ல வாழ்த்துவோம்.

தகவல்:- ஏ. எம். எம். ஹுமாயூன்,
ஆஸ்பத்திரி வீதி,
பொத்துவில்-03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ரசிகருக்கு அர்ப்பணிக்க வேண்டிய பொக்கிஷம் கலை; அதற்கு யாரும் உரிமை கோர முடியாது!"

கலை என்பது இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளின்றி ஒவ்வொருவரினதும் உளத்தூய்மையுடன் வளர்க்கப்பட வேண்டிய ஒரு இயற்கையின் அருட்கொடையாகும். உலகில் பிறந்து வளரும் அனைவரும் தன்னகத்தே ஏதோ ஒரு திறமையினை ஊட்டிக்கொண்டே இருக்கின்றார்கள். அவை சிறப்பான முறையில் மக்களின் மனமகிழ்ச்சிக்கு ஏற்ற வகையில் வெளிப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு



கலைஞர் மு.ச.முஹம்மத் ரிஸ்வி

அவர்களில் காணப்படும் திறமைகள் ஒழுங்கமைத்து வெளிக்கொணர்வதற்கு தொடர்புச் சாதனங்களும், கலைத்துறைசார் அமைப்புக்களும் நியாயமான வழிமுறைகளைக் கையாளுவது அவசியமாகும்.

இன்றைய நிலையில் பொழுது போக்கு எனும் அம்சத்தின் கீழ் கலைகள் கணிக்கப்பட்டாலும், அதன் யதார்த்த பூர்வமான தன்மைகள் சாதாரண மனிதனில் உறங்கிக் கிடக்கும் உள்ளுணர்வுகளைத் தட்டியெழுப்பக் கூடிய ஆக்க பூர்வமான ஒரு தொழிற்பாடென்றே கருத முடியும். எனவே, எங்கிருந்தாலும் கலைஞர்கள் ஊக்கப்படுத்தவும், பாராட்டப்படவும் ஒத்துழைப்பு நல்கப்பட வேண்டியவர்களாகவே உள்ளனர்.

இவ்வாறு பொத்துவில் 1 பிரதேச சபை வீதியைச் சேர்ந்த கலைஞர் மு.ச. முஹம்மத் ரிஸ்வி கூறினார்.

பொழுது போக்காகவே நாடகம் எழுதுதல், சுயமாகவே பாடல்களை இயற்றிப் பாடுதல், நாடகங்களில் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்தல் போன்ற துறைகளில் மிக்க ஆர்வமுடையவராக காணப்படும் இவருடன் தொடர்ந்து உரையாடிய போது அவர் கூறியதாவது:

நான் 1987 இல் 'சிதைந்த சிற்பங்கள்', 'உறங்காத உண்மைகள்' 1988, 'வறுமையின் வடிவங்கள்' 1989, 'தியாக தீபங்கள்' 1992, 'போகப் போக புரிஞ்சுக்குவீங்க' 1994 போன்ற நாடகங்களை வெற்றிகரமாக மேடையேற்றி உள்ளேன்.

பாடசாலைக் காலங்களிலும், மாணவ மன்றங்களிலும் அதிக நாடகங்களை நடித்தும், பாடல்களைப் பாடியும் பாராட்டுப் பெற்றுள்ளேன். 1992ஆம் ஆண்டு தேசிய இளைஞர் கழகத்தினால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட கலாசாரப் போட்டியில் தனி நபர் நாடகப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் தட்டிக் கொண்டேன்.

பல பிரச்சினைகளுக்கு மத்தியில் நான் வாழ்ந்து கொண்டிருந்த போதிலும் கலை ஆர்வம் இன்னும் என்னை விட்டுப் பிரியவில்லை. நாட்டின் பிரச்சினைக்குரிய பிரதேசத்தில் இருந்து கொண்டு எனது கலை வாழ்க்கையைத் தொடருவதற்கும் சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. நான் பலமுறை வானொலி, தொலைக்காட்சி போன்ற மக்கள் தொடர்பு சாதனங்களை நாடிய போதும் எனக்கு இடம் கிடைக்க

## கலைஞர் சந்திப்பு

வில்லை.

இப்படியான சூழ்நிலையில் என்னைப் போன்ற சிறிய கலைஞர்கள் மனவேதனை முழக்கங்களோடு கலையை கசப்பாக நினைப்பதைத் தவிர வேறு வழியில்லை. கலையை சமூகம் ஓர் உயர் பொக்கிஷமாகவே கருதுகின்றது. அது ரசிகர்களுக்காக அர்ப்பணிக்கப்பட வேண்டிய ஓர் சேவையாகும். கலைக்கு யாரும் தனிஉரிமை கோர முடியாது. காரணம், ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையிலும் காணப்படும் அம்சங்கள் கலையோடு இணைந்தவையாகும். அதை ஒழுங்குபடுத்தி சமூகத்துக்கு வழங்குபவனே உண்மையான கலைஞன் ஆவான்.

எம்.ஐ.சாஹுல் ஹமீட்




02.10.1994

வீரகேசரி வாரவெளியீடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைஞர் றிஸ்வியின் மேடை நாடகங்கள் சில...
(இயக்கம் - றிஸ்வி)

1. உறங்காத உண்மைகள் (1989)
2. வாழ்வு கொடுத்த வாத்தியார் (1993)
3. மனமே மயங்காதே (2000)
4. இதுதான் பதில் (2001)



கலைஞர் எம்.எஸ்.எம். றிஸ்வி அவர்களது கலைத்திறனைப் பாராட்டி 2013ஆம் ஆண்டில் கலைநிலா என்ற சிறப்புப் பட்டம் கல்முனை மாநகர மேயரினால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



1



2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலைஞர் என்.கே. அப்துல் கரீம் அவர்களுடன் கலைஞர் றிஸ்வி




கலைஞர்களான ஏ.எம். ஹிமாயூம் மற்றும் இல்யாஸ் என்போர்களுடன் கலைஞர் றிஸ்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைஞர் றிஸ்வியின் குறுந்திரைப்படங்கள் சில ...



விடிவை நோக்கி
(1996)
இயக்கம் - றிஸ்வி
கலைஞர் அப்துல் கரீமுடன்.



அண்ணா நீ எனக்காக
(2000)
இயக்கம் - றிஸ்வி
கலைஞர் அப்துல் கரீமுடன்
(வெளிவரவில்லை)



On your Mark
(2003)
இயக்கம் - முஸர்ரப்
கலைஞர்களான முகம்மட் ஹிமாயூம், முகம்மட் நௌபர் என் போருடன் கலைஞர் றிஸ்வி.
(வெளிவரவில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிஜம்
(2006)
இயக்கம் - நிஸ்வி
(இரு வேடங்களில்)



நிஜம்
(2006)
இயக்கம் - நிஸ்வி
சிரேஷ்ட கலைஞர்
முகைடீன்
அவர்களுடன்.



நிழல்
(2009)
இயக்கம் -
நிஸ்வி
சிரேஷ்ட
கலைஞர்
முகைடீன்
அவர்களுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rate Boy
(2010)
சிரேஷ்ட
கலைஞர்
முகைடீன்
அவர்களுடன்
இயக்கம் -
மஹ்றூப்
(வெளிவரவில்லை)





உண்மை கசக்கும்
(2014)
கலைஞர் முகம்மட்
ஹிமாயூம்
அவர்களுடன்
இயக்கம் - றிஸ்வி

கீறல்
(2014)
கலைஞர் முகம்மட்
ஹபீல் அவர்களுடன்
இயக்கம் - றிஸ்வி
(தயாரிப்பில்
உள்ளது.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர் றிஸ்வியின் தொலைக்காட்சி நாடகங்கள் சில ...
(நேத்ரா அலைவரிசை)



குருவிக் கனா
(2005)
இயக்கம் - ஜாபீர்



உயர்ந்தவர்கள்
(2012)
இயக்கம் - றிஸ்வி
(கலைஞர் ஷர்மில் அவர்களுடன்.)



இலட்சியங்கள் விலை போவதில்லை
(2013)
இயக்கம் - மபாஹிர் மௌலானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய கலைஞர்களுடன் கலைநிலா றிஸ்வி.




கலைஞர் ஏ.எஸ்.எம். சலீம் அவர்களுடன் - (குருவிக்கனா)



கலைஞர் எம்.ஏ. அப்துல் லத்தீப் அவர்களுடன் - (விடிவை நோக்கி)



கலைஞர் ஷர்மில் அவர்களுடன் - (உயர்ந்தவர்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர் ஏ. முகம்மட் லெவ்வை அவர்களுடன் - (அண்ணா நீ எனக்காக)





(தலாக் - 2013) இயக்கம், நடிப்பு - கலைஞர் எம்.எஸ்.எம். றிஸ்வி

கலைஞர் ஏ. முகம்மட் லெவ்வை அவர்களுடன் (அண்ணா நீ எனக்காக)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**94.** கி.பி. 1995 - பொத்துவிலின் முதல் தமிழ் இலக்கண நூல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொத்துவில் மத்திய கல்லூரி உதவி அதிபரும் தொலைக்கல்வி மத்தியநிலையச் சிரேட்ட போதனாசிரியருமான கவிவாணர் எம்.ஏ.அனீஸ் (கலைமாணி) அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

---

"எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றிற்கும் பெயர்களெலாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்"

என்கின்ற—பாரதிதாசனின் கனவு நிறைவேறுகின்ற படிக்கற்களில் ஒன்றுதான் தம்பி றிஸ்வியின் இம்முயற்சி என்றால் அது புறநடையாகாது.

இன்று இலக்கணம் என்றாலே தலைதெறிக்க ஓடுகின்ற எமது இளைய தலைமுறையினர் நலைக்கனமும் கொண்டு கற்க முற்படுகின்ற இக்காலத்தில் தேவையான பொருளை, தேடுவாரற்றுக்கிடக்கும் பொருளை தன்னை தெருவிலே கூவி விற்கப்பட்டது போன்ற ஒரு முயற்சி.

இலக்கணத்தை இலகுவாகக்கற்க எழுந்த நூல்கள் எல்லாம் முடிச்சு போட்டுச் செல்கின்றனவே தவிர முடிச்சவிழ்த்து முறைக்குப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. இதனாலேயே இலக்கணத்தை விலக்கி நடக்க முற்பட்டனர் எம்மானாக்கர்.

இதனை நடைமுறையிலே உணர்ந்து கொண்டவர்தான் தம்பி றிஸ்வி. கலையம்சம், தமிழார்வம் இவரின் கருவிலே திருவானது. அந்த உண்மையை "இலகுஇலக்கணம்" எடுத்துக்காட்டிச்செல்கின்றது.

அடுக்கு மாடி ஒன்று கட்ட முனையும் அர்த்தமுள்ள இம்முயற்சியின் அடித்தளமாய் அமையும் இந்தப்பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டியது தமிழ் அறிந்த அனைவரினதும் கடனாகும்.

ஐந்திலக்கணம் என்ற அடுக்குமாடியின் அடிப்பார்தான் இவ்வெழுத்து. இலக்கணம், அகத்தியம், தொல்காப்பியம், நன்நூல், வீரசோழியம் என்பனவெல்லாம் இதன் மூலங்கள் என்றாலும் அவை பண்டிதரை அண்டியே பணி செய்தன. இதுவோ படிக்கின்ற மாணவரை படியெடுக்க முனைகின்றது. படிக்கின்ற மாணவர் மட்டுமென்ன தமிழில் எழுத்துக்கள் பற்றி அறிய முனையும் எல்லா இதயங்களும் அள்ளிச்சுவைக்கக்கூடிய அமைப்பிலே இதனை ஆக்க முற்பட்டுள்ள தம்பி றிஸ்வி சின்னவயதிலே பென்னம்பெரிய முயற்சியொன்றைச் செய்துள்ளார்.

தபாலட்டையில் நான்கு வரிகளையும் சினிமாப்பகுதியிலே மூன்று வசனங்களையும் எழுதி விட்டுக் கவிஞர் என்றும் எழுத்தாளர் என்றும் முத்திரை போடமுனையும் ஆயிரம்-பதினையாயிரம் பேர்களுள் இல்லாத ஒருவராக நான் இவரையும் இம்முயற்சியையும் கருதுகின்றேன்.

இவ்வாறான இவரின் தமிழ் நூல் சம்பந்தப்பட்ட முயற்சிகளுக்கு என்றும் உதவ இதய சுத்தியுடன் இருக்கின்றேன். இவரின் தொடர் மாணவர் ஆசிரியர் சமூகம் என்பதை விட கற்றோர் குழாம் ஒன்றிணைந்து உற்சாகமளிக்க வேண்டும் என்று மீளவும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 95. கி.பி. 1995 - இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தர்.



பொத்துவில் முதலாம் குறிச்சிப் பகுதியில் பிரபல்யமான ஒரு குடும்பத்தில், முஹல்லிம் சக்கரிய்யா லெவ்வை முகம்மது லெவ்வை (பிரதம மரைக்காயர்) என்பவரின் கனிஷ்ட புதல்வராகப் பிறந்து இலங்கையின் கல்வியியல் துறையில், பல்கலைக்கழக வரலாற்றில் முதல் முஸ்லிம் உபவேந்தராக, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தராக, ஆழமாகத் தடம்பதித்தவரே பேராசிரியர் எம்.எல். அப்துல் காதர் அவர்களாவார்.

தனது ஆரம்பக் கல்வியினை பொத்துவில் ஆண்கள் பாடசாலையிலும் JSC வரையிலான இடைநிலைக் கல்வியினை பொத்துவில் அரசினர் கனிஷ்ட பாடசாலையிலும் சிறப்புறக் கற்று, கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சையில் முதலாம் தரத்தில் சித்தியடைந்து 09ஆம் வகுப்புத் தொடக்கம் உயர்தர வகுப்பு வரை கொழும்பு சாஹிராக் கல்லூரியில் கல்வி பயின்று 1964இல் இலங்கை பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகி, பொருளியல் - அரசியல் துறையில் சிறப்புப் பட்டம் பெற்று பொத்துவிலின் முதல் பட்டதாரி என்ற சிறப்பினைப் பெற்றவரே பேராசிரியர் அப்துல் காதர் அவர்கள்.




கொழும்பு சாஹிராக் கல்லூரியின் முதல்வர், ஆசிரியர்கள், உயர்தர வகுப்பு சக மாணவர்களுடன் எம்.எல்.ஏ. காதர் அவர்கள்.

1. செல்வன் எம்.எல்.ஏ. காதர்
   (தற்போதைய நிலையில் - ஓய்வுபெற்ற பல்கலைக்கழக உபவேந்தர்)
2. செல்வன் எம். அப்துல் மஜீத் (தற்போதைய நிலையில் - முன்னாள் பா.உ.)
3. செல்வன் கே.ஆர்.எம். சஹீட் (மர்ஹூம்) பொறியியலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1968ஆம் ஆண்டிலிருந்து இலங்கை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொருளியல் - அரசியல் துறை விரிவுரையாளராகக் கடமையாற்றி, 1975இல் அவுஸ்திரேலிய தேசியப் பல்கலைக்கழகம் சென்று முதுமாணிச் சிறப்புப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்ட பேராசிரியர் அப்துல் காதர் அவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பல உயர்மட்ட கருத்தரங்குகளில் கலந்து டிப்ளோமா பட்டங்களையும், பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டவராவார். 1995இல் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தராக பதவியேற்ற இவர் இலங்கையின் அரசியல், வரலாற்று ஆய்வாளர்களுடனும், கல்விமான்களுடனும் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளவர். தென்கிழக்கு முஸ்லிம்களின் வரலாற்றினை ஆய்வு செய்வதிலும் அதனை வெளிக்கொணர்வதிலும் மிகுந்த ஆர்வம் காட்டியவர். 1997ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேசிய மீலாதுந் நபி விழாவினையொட்டி கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களமானது வெளியீடு செய்த **'அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள்'** எனும் வரலாற்று நூலில் உபவேந்தர் அப்துல் காதர் அவர்கள் எழுதிய **'வரலாற்றுப் பாரம்பரியம்'** என்ற 65 பக்கங்கள் கொண்ட வரலாற்றுக் கட்டுரையானது இலங்கையின் தென்கிழக்கு முஸ்லிம்களுக்கான ஒரு முகவரியினையும் கௌரவ அமைச்சர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களது தென்கிழக்கு அலகுக் கோரிக்கைக்கான ஒரு வலுவான ஆதாரத்தினையும் வழங்கி நின்றது எனலாம்.

இலங்கையின் புத்தி ஜீவிகள் வரிசையில் முக்கிய இடத்தினைப் பெறுகின்ற இந்த பொத்துவில் மண்ணின் புதல்வன் 2002ஆம் ஆண்டு தொடக்கம் நோர்வேயின் ஒஸ்லோ நகரில் இடம்பெற்ற அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான ஆறு சுற்று சமாதானப் பேச்சு வார்த்தைகளில் இலங்கை முஸ்லிம் பிரதிநிதிகளில் ஒருவராகவும் பின்னர் குழுத் தலைவராகவும் பதவி வகித்து சிறப்புத் தந்தவர். அரசியல் மற்றும் வரலாற்றுத் துறைகள் மீது தீராத ஆர்வம் கொண்ட உபவேந்தர் அவர்கள் **'பத்தாவது பொதுத் தேர்தலும் முஸ்லிம்களும்'** மற்றும் **'அஷ்ரப் எனும் அரசியல் விவேகி'** போன்ற பல நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். இன்று வரையிலும் கூட இவரது ஆய்வுகளும் தேடல்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஸ்தாபக உபவேந்தர் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் அவர்களிடமிருந்து பட்டமளிப்பு (கௌரவம்) பெறுபவர் ஜனாப் எம்.எல்.எம். பிர்தௌஸ் (அதிபர்), பொத்துவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 96. கி.பி. 1998 - ஆளுமை மிக்க அரசியல் வாதி.



பொத்துவில் அரசியல் வரலாற்றில் YM, ஆஸாத் மௌலானா போன்றவர்களின் வரிசையில் மறக்க முடியாததொரு பாத்திரம் பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் கௌரவ தவிசாளர், ஓய்வு பெற்ற அதிபர் எம்.ஐ. காதர் முகையதீன் அவர்கள். சிறந்ததொரு ஆசிரியராக, அதிபராக, முதலாம் குறிச்சி கிராம அபிவிருத்திச் சங்க தலைவராக, மாவட்ட அபிவிருத்திச் சபையின் பொத்துவில் உப அலுவலக விஷேட ஆணையாளராக பதவி வகித்துள்ள அல் ஹாஜ் எம்.ஐ. காதர் முகையதீன் அவர்கள் பொத்துவில் மண்ணில் ஆளுமைமிக்கதொரு அரசியல் வாதியாகவும் முத்திரை பதித்ததோடு, அதன் மகுடமாக பொத்துவில் பிரதேச சபையின் கௌரவத் தவிசாளராகவும் பதவி வகித்துள்ளார்.

1970களின் ஆரம்பத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொத்துவில் கிளையின் முக்கிய உறுப்பினராக அரசியலில் தடம்பதித்த இவர் 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர் மர்ஹூம் ஆஸாத் மௌலானாவின் தீவிர பிரச்சாரகராக மாறியதன் மூலம் முழுநேர அரசியல் வாதியாக மாற்றம் பெற்றார். சிறந்த பேச்சு வன்மையும் துணிச்சல்மிகு நடவடிக்கைகளும் இவரது அரசியல் ஆளுமையின் விம்பங்களாக வெளிப்பட்டன.

ஆஸாத் மௌலானாவின் தேர்தல் தோல்வி இவரது அரசியல் வளர்ச்சிக்கு சிறிது தடையாக இருந்திருப்பினும் கூட இவரது ஆற்றல்களை இனங்கண்டு கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொத்துவில் தொகுதி UNP பா.உ. Dr. M.A.M. ஜலால்தீன் அவர்கள், அன்னாரை தனது முக்கிய ஆதரவாளராக வலிந்து இணைத்துக் கொண்டதன் விளைவாக ஐ.தே. கட்சியின் பொத்துவில் பிரதேச அமைப்பாளராக நியமனம் பெற்றார். அன்றிலிருந்து பொத்துவில் பிரதேசத்தினை ஐ.தே.க வின் கோட்டையாக மாற்றுவதில் காதர் முகையதீன் அவர்களது பணி மிகவும் காத்திரமாக இருந்துள்ளது. 1994இல் SLMC இன் ஆதிக்கம் கிழக்கில் ஏற்படுகின்ற வரை பொத்துவிலானது யானைச் சின்னத்தின் வாசல் தளமாகவே காணப்பட்டிருந்தது.



1980 இல் பொத்துவில் தாறுல் பலாஹ் வித்தியாலய திறப்பு விழாவின் போது Dr. MAM. ஜலால்தீன் (பா.உ) மற்றும் பிரமுகர்களுடன் காதர் முகையதீன் அவர்கள்.

1981இல் இலங்கையில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் இடம்பெற்ற வேளையில் அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே.க வின் சார்பாக போட்டியிட்ட 05 வேட்பாளர்களுள் ஒருவரான காதர் முகையதீன் அவர்கள் வெற்றிபெற முடியாவிடினும் கணிசமான வாக்குகளைப் பெற்றதோடு, அமைச்சர் P. தயாரத்ன அவர்களது கவனத்தினை ஈர்க்கக் கூடிய முக்கிய அரசியல் புள்ளியாகவும் மாறத் தொடங்கினார்.



1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பொத்துவில் உப அலுவலக விஷேட ஆணையாளராக ஜனாப் எம்.ஐ. காதர் முகையதீன் அவர்கள் பதவி வகித்த வேளையில் கௌரவ அமைச்சர் P. தயாரத்ன அவர்களை வரவேற்கும் நிகழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNP ஆட்சிக் காலத்தில் அமைச்சர்களாக இருந்த எம்.ஏ. அப்துல் மஜீத், ஏ.ஆர்.எம். மன்சூர் என பல முக்கிய முஸ்லிம் மற்றும் சிங்கள அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்ற அரசியல் வாதிகளுக்கு நெருக்கமானவராகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ. உதுமாலெவ்வை அவர்களது மிக விருப்புக்குரிய, விசுவாசத்திற்குரிய அரசியல் வாதியாகவும் காணப்பட்டார். இதன் விளைவாக பொத்துவில் சார்ந்த பல விதமான அபிவிருத்தித் திட்டங்களை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு முன்னெடுக்கக் கூடியதாகவுமிருந்தது.

1. ஜலால்தீன் சதுக்க (20) வீட்டுத்திட்டம்.
2. மின்சார வசதிகள்.
3. பல புதிய பாடசாலைகள் திறக்கப்பட்டமை.
4. பொத்துவில் மத்திய கல்லூரியின் வள அபிவிருத்திகள்.
5. பாதுகாப்பு அமைச்சின் மூலமான ஆசிரியர் நியமனங்கள்.
6. ஏனையவை

என பல விடயங்கள் இதன் மூலமாக பட்டியலாக விரிந்து செல்கின்றது.



பொத்துவில் சிங்கபுர சிங்கள பொதுமக்களுடனும் கௌரவ பா.உ எம்.ஐ. உதுமாலெவ்வை மற்றும் ஆருயிர்த் தோழர் எம்.எம். ஹனிபா ஆசிரியர் என்போர்களுடன் எம்.ஐ. காதர் முகையதீன் அவர்கள். (1984)

15 வருட காலங்கள் பொத்துவில் முதலாம் குறிச்சி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்த வேளையில் முதலாம் குறிச்சி RDS கட்டடத்தினை புனரமைப்புச் செய்து அதனை முகைதீன் மத்ரசாவாக இயக்கவும் பின்னர் தொழும் இடமாக முகைதீன் தைக்காவாக அதனை ஏற்படுத்துவதற்கும் பின்னணியாக செயற்பட்ட காதர் முகையதீன் அவர்கள், பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளராக வந்து ஏராளமான சேவைகளை புரிந்திட வேண்டும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என்ற கனவில் 1994இல் தவிசாளர் கனவு மெய்ப்பட்டுப் போனாலும் தான் கற்பனை செய்த அளப்பரிய சேவைகளை செய்வதற்கு 1994ஆம் ஆண்டுக்குப் பின்னரான இலங்கையின் அரசியல் சூழ்நிலைகள் இடம் கொடுத்திருக்கவில்லை. இருப்பினும் இருக்கின்ற வளத்தினைக் கொண்டு சிறப்பாகப் பணிபுரிந்த ஒரு தவிசாளராகவே இவர் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளார்.



1. குடிசையாக இருந்த சந்தைக் கட்டடத்தை சற்று வசதிகள் கொண்ட நிரந்தர கடைத்தொகுதிக் கட்டடமாக மாற்றியமைத்தமை.

2. வீதி விளக்குகள் மூலமாக வீதிகளுக்கு ஒளியூட்டியமை.

3. தூர்ந்து போய், செயலிழந்த நிலையில் காணப்பட்ட பொத்துவில் பொது நூலகத்தினை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்து இயக்கியமை.

என இவரது சேவை முத்திரைகள் தடம்பதித்துக் காணப்படவே செய்கின்றன. இன்று வயதான நிலையில் கூட துடிப்பான இளைஞரைப் போன்று அவர் அரசியலில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பதனை பார்க்கும் போது ஒரே ஒரு எண்ணம் தோன்றுகின்றது. ஆளுமைமிக்க அரசியல் வாதியான இவர் அரசியலை விட்டு ஒதுங்க நினைத்தாலும் அரசியல் என்ற வலைப்பின்னல் இவரை விடுவதாகவே இல்லை.

**(இக்கட்டுரை முன்னாள் தவிசாளர் எம்.ஐ. காதர் முகையதீன் அவர்கள் மரணிப்பதற்கு 2 தினங்களுக்கு முன் எழுதி முடிக்கப்பட்டதாகும்)**



அமைச்சர் P.தயாரத்ன, உப தவிசாளர் எம்.எம். ஹசன் மற்றும் வைத்திய அதிகாரிகள் ஏ.எல். அமினுத்தீன், எம்.எம்.எம். சமீம் என்போர்களுடன் தவிசாளர் எம்.ஐ. காதர் முகையதீன் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998இல் பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் மர்ஹூம் எம்.ஐ. காதர் முகையதீன் அவர்கள் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியின் பிரதி.

## கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று எமது கிராமத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்!

### அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்திற்கு மாற்றாக ஐ.தே.கட்சி வைத்துள்ள தீர்வுத் திட்டம் சிறுபான்மை மக்களுக்குப் பாதகமானதே!



எனது அரசியலில் எந்த அபிவிருத்திக்கும் நான் முட்டுக்கட்டை இல்லை. ஏனெனில் பொத்துவில் கிராமம் வளர்ச்சியை வேண்டி நிற்கின்ற ஒரு கிராமம். இக்கிராமத்தில் அரசியல் வேறுபாடு தலை தூக்குமானால் எமது கிராமத்தை முன்னேற்ற முடியாது என்கிறார் தவிசாளர் அவர்கள். பிரதேச சபைத் தேர்தலில் 5 ஆசனங்களைப் பெற்று பொத்துவில் உள்ளூராட்சியை கைப்பற்றிய இவர் தனது ஊரின் முன்னேற்றத்திற்கு தேவையான ஆரம்ப அடித்தளத்தை தனது பிரதேச ஆட்சி அதிகாரத்தின் ஊடே போட்டிருப்பதாக நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றார்.

பொத்துவில் பிரதேசத்திற்கு உடனடியாக செய்யப்பட வேண்டிய சேவைகள் என்னவென வினவிய போது,

29 முஸ்லிம் பாடசாலைகள் உள்ளது. 5 தமிழ்ப் பாடசாலைகள் உள்ளது. 1 சிங்களப் பாடசாலை உள்ளது. இப்பாடசாலைகளின் அபிவிருத்திக்கு ஏனைய அண்டிய தமிழ், சிங்கள கிராமங்களை இணைத்து பொத்துவிலுக்கான ஒரு புதிய கல்வி வலயம் உடனடியாக ஏற்படுத்தப்படல் வேண்டும்.

அடுத்தது 1989ல் செயலிழக்கப்பட்ட தொலைபேசிச் சேவையை ஏற்படுத்த வேண்டும். இதற்கு சொல்லப்படும் காரணங்கள் நியாயமற்றவை. திருக்கோவிலில் தொலைபேசி உள்ள போது ஏன் பொத்துவிலில் பாதுகாப்பு ஏற்பாடு இல்லையா என்கிறார்.

மூன்றாவதாக வைத்திய சாலைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உடனடியாக ஏற்படுத்தித்தர வேண்டும் என்கிறார்.

பிரதேச சபை ஆட்சிக்காலத்தில் உங்களால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னவென வினவிய போது புதிய வரிமுறையை அமுல் படுத்தியுள்ளோம். நாங்கள் பிரதேச சபையைப் பொறுப் பேற்கும் போது 43000 ரூபா நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தது இன்று எமது பிரதேச சபையில் 4 இலட்சம் ரூபா உள்ளது. வீதிகள் அமைக்கின்றோம். கிணறுகள் கட்டியுள்ளோம். வாசிகசாலை வசதிகளை அதிகரித்துள்ளோம் என்கிறார்.

கடந்த 4 வருடங்களாக எமது பிரதேச சபைக்கு நேரடியாக அமைச்சு மூலம் பணம் ஒதுக்கப்பட வில்லை இது அரசியல் ரீதியான புறக்கணிப்பு என குற்றம் சாட்டுகிறார். பெருமளவு மீன்பிடி மக்கள் உள்ள இக்கிராமத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இதுவரை மானியம் வழங்கப்பட வில்லை என்கிறார். தமிழ் முஸ்லிம்களிடையே சமூகமான உறவு நிலவுவதாக கூறியதுடன் பொத்துவில் பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் இரண்டு தமிழ் உறுப்பினர்களும் தனது நிருவாகத்திற்கு பக்க பலமாக உள்ளனர் என்கிறார்.

தீர்வுத் திட்டத்திற்கு ஐ.தே.கட்சி வைத்துள்ள மாற்றுத்திட்டம் பற்றி விரிவாகப் பேசிய போது அது ஆழமானதொரு திட்டமில்லை என ஏற்றுக் கொள்கிறார். தென் கிழக்கு மாகாணம் பற்றிக் கேட்ட போது சிரிப்பே பதிலாக வருகிறது.

மிகவும் முக்கியமான விடயமொன்றை அவர் வலியுறுத்துகின்றார். ஆசிரியர் போட்டிப் பரீட்சையின் போது பொத்துவிலுக்கான வெட்டுப்புள்ளி குறைக்கப்படல் வேண்டும். ஏனெனில் மற்ற பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அதிக கல்வித் தரத்தின் காரணமாக போட்டிப் பரீட்சையில் சித்தி எய்தி பொத்துவிலில் நியமனம் பெற்று விட்டு இரண்டு மூன்று மாதங்களின் பின் தங்கள் ஊர்களுக்கே சென்று விடுகிறார்கள். கடந்த நியமனத்திலும் கூட 17 பேர் இப்படித் திரும்பிப் போய் விட்டார்கள். இந்நிலை நீடிக்குமானால் பொத்துவிலில் ஆசிரியர் பற்றாக்குறை என்பது தொடர்கதைதான் என்கிறார். பொத்துவில் பிரதேச சபைத் தவிசாளர் காதர் முகைதீன் அவர்கள்.

எந்தவொரு உயர்மட்ட அரசியல் வாதியினையும் பதவி வகிப்பவர்களையும் நெருங்கி, நட்பு பாராட்டி காரியத்தினை சாதிப்பதிலும் எந்தவொரு சபையில் எவர் இருப்பினும் கூட தனது சுய கருத்தினை அழுத்தமாக முன்வைப்பதிலும் எப்பேர்ப்பட்ட சபையாக இருப்பினும் இறைவனின் துணை கொண்டு அதனை தனது பேச்சு வன்மையால் கட்டிப்போடுவதிலும் அரசியல் எதிரிகளுக்கு உறைப்பான முறையில் சாட்டையடி கொடுப்பதிலும் அபயம் கோரிவரும் மாற்றுக் கட்சிக் காரர்களை அரவணைத்து தோள் கொடுப்பதிலும் உதவி தேடி வருபவர்களுக்கு இல்லையென்ற சொல்லை உதிர்க்காது தன்னால் முடியுமானவரை உதவி செய்வதிலும் திறமை கொண்டவராக விளங்கிய அன்னாரது திடீர் மரணம் பொத்துவில் அரசியலில் ஒரு வெற்றிடத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது திண்ணமாகும். 7வது ஜனாதிபதித் தேர்தலில் அதிகார மாற்றம் ஏற்பட வேண்டும் என மேடைகளில் துணிச்சலாக முழங்கிய அவரது இறுதி வார்த்தை விடைபெறுகிறேன் என்பதாகும். இன்று அவரது எண்ணப்படி அதிகார மாற்றம் இடம்பெற்றிருக்கின்றது.எனினும் அதனைக் காண்பதற்கு அவர் இன்று உயிருடன் இல்லையே! என்ற ஆதங்கம் பலருக்கும் உண்டு. (*மரணம்: 2015.01.04*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**97. கி.பி. 1999 - சாஹித்திய விழா நிகழ்வுகள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொத்துவில் வரலாற்றில் இடம்பெற்ற ஒரே ஒரு சாஹித்திய விழா நிகழ்வாகவே இத்தினம் வரையிலும் இது வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விழாவினை நடாத்த வேண்டும் என்பதில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டவர்களாக பிரதேச செயலாளர் ஏ. மன்சூர் அவர்களும் நிருவாக உத்தியோகத்தர் எம்.ஏ. முகைடீன் பிச்சை அவர்களும் விளங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 98. கி.பி. 2001 - முத்துக் கண்டியின் முக்கியத்துவம்.

(28.06.2001 தினக்குரல்.)

# முத்துக்கண்டி குளத்து நீருக்கு கதவடைப்பு நெற்பயிர் கருகி அழியும் அவலம்

அம்பாறை மாவட்ட நிருபர்-

பொத்துவில், லகுகல பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்டுள்ள சிறுபோக நெற்பயிர்கள் நீரின்றிக் கருகி நாசமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச விவசாயிகள் கடந்த பல வருட காலமாக மொனராகலை மாவட்டத்திற்குட்பட்ட சியம்பலாண்டுவயில் அமைந்துள்ள முத்துக்கண்டி குளத்து நீரின் வடிச்சல் நீரை நம்பியே சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வது வழக்கமாகும்.

வழமைபோல் இம்முறையும் இந்த வடிச்சல் நீரை நம்பி விவசாயிகள் சுமார் 650 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டதுடன், தற்சமயம் ஐம்பது நாட்களைக் கடந்த பயிராகவும் நெற்பயிர்கள் உள்ளன.

இந்நிலையில், முத்துக்கண்டி குளத்துக்கு அடக்கமான விவசாயக் குடும்பங்கள் இம்முறை சிறுபோகச் செய்கையை மேற்கொள்ளவில்லை என்ற ஒரே காரணத்துக்காக முத்துக்கண்டிக் குளத்து நீர் திறக்கப்படாமலுள்ளது.

இதனால் பொத்துவில் லகுகல பிரதேச விவசாயிகளுக்கான ஹெட ஓயா பிரதேச விவசாயிகளுக்கான ஹெட ஓயா பிரதேசத்தை நோக்கிவர வேண்டிய இக்குளத்து நீர் தடைப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக மேற்படி 650 ஏக்கரிலும் செய்கை பண்ணப்பட்ட சிறுபோக நெற்செய்கை முற்றாகக் கருகி நாசமடையும் அவலம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் பெரும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு நெற்பயிர்கள் நாசமடையும் பட்சத்தில் விவசாயிகள் சுமார் 20 கோடி ரூபா அளவு நஷ்டத்திற்கு முகம் கொடுக்கவேண்டி வருமென பொத்துவில் பிறையின் கண்டம் நாவலாறு நீர்ப்பாசனத்திட்ட விவசாயிகள் சம்மேளனத் தலைவர் மௌலவி அல்.ஹாஜ் ஏ.எம்.எல். காஸீம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த அவலம் குறித்து மேற்படி விவசாயிகள் சம்மேளனம் திகாமடுள்ள மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.அப்துல் மஜீதின் கவனத்திற்குக் கொண்டுவந்தது.

பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் மஜீத் இது விடயத்தில் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியின் பயனாக நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், மொனராகலை மாவட்டச் செயலாளர், மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நாயகம், சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் ஆகியோர் குறிப்பிட்ட குளத்து நீரைத் திறந்து விடுவதற்கு அனுமதி வழங்கியபோதும் இதுவரை நீர்திறந்துவிடப்படாது புறக்கணிப்பே காட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயத்தில் உடன்தக்க நடவடிக்கை மேற்கொண்டு முத்துக்கண்டி குளத்து நீர் திறந்து விடப்படவும், இதன் மூலம் பொத்துவில், லகுகல பிரதேச விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள பெரும் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்துமாறும் நீர்ப்பாசன அமைச்சர், நீர்ப்பாசனத் திணைக்கள உயரதிகாரிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவசர கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 99. கி.பி. 2002 - செங்காமக் கிராமத்தின் சிற்பி.





மர்ஹூம் எம்.பி. அப்துல் அஸீஸ்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)



1977 காலப்பகுதியில் பொத்துவிலில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சாரக் கூட்டத்தில் ஐ.தே.க அரசியல் பிரமுகர்களுடன் ஜனாப் எம்.பி. அப்துல் அஸீஸ் அவர்கள் மொழிபெயர்ப்புச் செய்யும் நிகழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.பி. அப்துல் அஸீஸ் அவர்கள் காலமானதையடுத்து வீரகேசரி நாளிதழில் (2012.12.15) வெளியான கட்டுரை.

# அரசுக்காக மக்கள் அல்ல, மக்களுக்காகவே அரசு என்ற உண்மையை நாடறியச் செய்தவர் அஸீஸ்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹும் எம்.பி. ஏ. அஸீஸ் கடந்த மாதம் 05 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். உயர் குடும்பத்தில் உதித்த இப்றாஹீம் கண்டு முஹைதீன் பாவாவுக்கும் லெவ்வை மரைக்கார் லைலா உம்மாவுக்கும் மகனாக 1947.01.19 ஆம் திகதி பொத்துவில் மண்ணில் பிறந்த அவர், இன்னும் மக்கள் மனதில் இடம்பிடிக்கும் அளவுக்கு தனது பணியை மக்களுக்காக செய்துள்ளமை நாம் யாவரும் அறிந்த உண்மையாகும்.

எஹலியகொட பாடசாலையில் சிங்கள மொழி மூலம் கல்வி கற்றார். சிங்களத்தில் நன்கு தேர்ச்சி பெற்றதின் காரணமாக நாட்டிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள பெருந் தலைவர்களுடன் உறவை வளர்த்து பொத்துவில் மக்களுக்காக பல சேவைகளைச் செய்துள்ளார். குறிப்பாக 1972 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முன்னாள் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ அம்மையார் ஆட்சிக்காலத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செனட்டர் சோமரத்ன வுடன் இணைந்து பொத்துவில் மண்ணுக்கு மக்கள் வங்கியை பெற்றுக் கொடுத்தார். பொத்துவில் மண்ணில் 17வயது இளம் வாலிபராக இருக்கும்போது முதல் சமாதான நீதிவானாக அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டார்.

1979.06.10 ஆம் திகதி கலந்தர் லெவ்வை மரைக்கார் முஹம்மது மீரா சாகிபு (யூனியன் மனேஜர்) அவர்களின் புதல்வி எம்.எம்.எஸ். ஐனுல் ஆரிபாவை திருமணம் செய்து மூன்று ஆண் குழந்தைகள், இரண்டு பெண் குழந்தைகளுக்கு தந்தையாக இருந்தார். அவரது மூத்த புதல்வர் ஏ.ஏ.இர்ஸாத் தேசிய வீடமைப்பு அதிகார சபையில் கணக்காளராக வுள்ளார். இவர்களுடைய புதல்வியின்

மேற்பட்டோருக்கு புனர்வாழ்வு அமைச்சின் மூலம் பல இலட்சம் ரூபாய்கள் நட்டஈடு பெற்றுக்கொடுத்துள்ளார். அது போன்று பொத்துவில் மக்களின் 45 வீதமானோருக்கு ரூபா 25,000/ புனர்வாழ்வு நிதியைப் பெற்றுக் கொடுத்து அவர்களது குடிசைகளை நிரந்தர வீடாக அமைய வழிவகை செய்துள்ளார். இதன் மூலம் புனர்வாழ்வு அமைச்சினூடாக பல கோடி ரூபாய்கள் பொத்துவில் மக்களை வந்தடைந்தது. அவர்களின் வாழ்வு வளம் செழிக்க வழிகோரியுள்ளார். பொத்துவில் மண் மின்சாரத்தைக் காணாத காலத்தில் பள்ளிவாசல்களில் மின்சாரம் இல்லாமல் இருளடைந்து காணப்பட்ட வேளை,



பொத்துவில் 4 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் ஜும்மா பள்ளிவாசலுக்கு இனத்துவேச அரசியல்வாதிகளின் எதிர்ப்பையும்

ஜனசவிய வழங்கலாம் என முன்மொழிந்து தனது தொழிலுக்கு வரும் ஆபத்தத்தையும் பொருட்படுத்தாது தற்றுணிவுடன் வெளிநாடு சென்ற குடும்ப அங்கத்தவர்களுக்கு ஜனசவிய கொடுப்பனவுகளை வழங்கி, மக்கள் மனங்களை வென்று அரசுக்காக மக்கள் அல்ல, மக்களுக்காகவே அரசு என்ற உண்மையை நாடறியச் செய்தார்.

1994 ஆம் ஆண்டு பயங்கரவாதத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட செங்காமம் கிராமம், கொட்டுக்கல், குடாக்கல் போன்ற கிராமங்கள் முஸ்லிம்களின் சொத்தாக இருந்தபோதும் பேரினவாதிகளின் பிடியில் சிக்குண்டு இருந்தது.

அதனை மீட்டெடுக்க செங்காமம் கிராமத்தில் முஸ்லிம், தமிழ் மக்களை குடியமர்த்தி 50 குடும்பங்களுக்கு வாக்காளர் பதிவு செய்து எல்லைக் காவலனானார். அதன் காரணமாக செங்காமம் வாழ் மக்கள் அவர் உயிருடன் வாழும் போதே அஸீஸ் நகர் எனப்பெயர் சூட்டி அவரை கௌரவப்படுத்தினார்கள்.

குடாக்கல் பிரதேசத்தை பேரினவாதிகளிடமிருந்து பறித்தெடுத்து முஸ்லிம்களை குடி பெயரச் செய்து அம்மண்ணைக் காத்தார். கொட்டுக்கல் பிரதேசத்தில் முஸ்லிம்களை குடி அமர்த்தி அப்பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் உறவுக்கு பாலம் அமைத்தார்.

2002 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா

தலைவன் இல்லாமல் ஏங்கித் தவிக்கின்றார்கள். அன்னார் இந்த நாட்டில் எவ்வாறு மரியாதையுடன் நடந்து கொண்டார் என்பதையும் பொத்துவில் மக்கள் அவரை எவ்வளவு கனமாக, அன்பாக அவர்களின் மனங்களில் சுமந்து வைத்திருந்தார்கள் என்பதையும் அவர் மரணித்த செய்தி கேட்டு அன்னார் இல்லத்தில் ஒன்று கூடிய பெருந்திரளான அரச தலைவர்கள்,பொது மக்கள், ஊடகவியலாளர்களின் பிரசன்னம் சான்று பகரும் என்பதில் ஐயமில்லை.

அன்னார் 65 வருடங்களும் 9 மாதங்களும் 16 நாட்களும் நிரம்பிய வேளையில் இவ்வுலகத்திலிருந்து மறுவுலகத்திற்கு விடைபெற்றுச் சென்றார்.

மேற்படி நற்கிரியைகளை செய்தவர் என்ற வகையில் அன்னார் தனிப்பட்ட முறையில் ஏதாவது குற்றம் குறைகளைச் செய்திருந்தால் அல்லாஹ்வுக்காக அவரை மன்னிக்கும்படியும் அன்னாருடைய சேவையை அனுபவிக்கும் அனைவருக்கும் இலங்கைவாழ் முஸ்லிம்கள் அனைவரும் அன்னார் நாளை மறுமையில் ஜன்னத்துல் பிர்தௌஸ் என்ற உயர்ந்த சுவர்க்கத்தைப் பெற அல்லாஹ்விடம் பிரார்த்திக்குமாறு பொத்துவில் அஸீஸ் பொதுப்பணி மன்றத்தினரும் அஸீஸ் பவுண்டேஷன் உறுப்பினர்களும் இணைந்து கேட்கின்றனர்.

அஸ்ரப் ஏ சமத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.பி. அப்துல் அஸீஸ் அவர்கள் முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் எம்.எஸ். உதுமாலெவ்வை (மாகாண சபை அமைச்சர்) என்போர்களுடன்





ஜனாப் எம்.பி. அப்துல் அஸீஸ் JP அவர்கள் தேசியப் பட்டியல் மூலமாக பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டதையடுத்து பொத்துவிலில் இடம்பெற்ற வெற்றி ஊர்வலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PHOTOCOPY PAPER
FACSIMILE/THERMAL PAPER
COMPUTER STATIONERY
HIGH BRIGHT PRINTING PAPER
KITSUDA INTERNATIONAL LTD

நகரப்பதிப்பு
VIRAKESARI
வீரகேசரி
THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA
Registered as a Newspaper at the G.P.O

"Sinarform" / "Paperline"
KITSUDA INTERNATIONAL LTD

மலர் : 75 இதழ் : 123 கொழும்பு தாரண வருடம் மார்கழி 12 ஆம் திகதி திங்கட்கிழமை (27.12.2004) ஹிஜ்ரி - 1425 துல்கஃதா பிறை - 14 விலை ரூபா : 10.00 பக்கங்கள் : 14

# திடீர் கடல் கொந்தளிப்பு பாரிய உயிர்ச் சேதம்

## 2500ற்கும் அதிகமானோர் பலி; 20லட்சம் பேர் பாதிப்பு

## குழந்தைகள் மரணம்; கிராமங்கள் கடலில் மூழ்கின



(நமது கரையோர நிருபர்கள்)

நாட்டின் கரையோர பகுதிகளில் நேற்றுக் காலை ஏற்பட்ட திடீர் கடற் கொந்தளிப்பு காரணமாக பாரிய உயிர்ச் சேதங்களும் பொருட் சேதங்களும் ஏற்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் பல கிராமங்கள் கடலோடு அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

## கண்ணிமைக்கும் பொழுதில் 4கிராமங்கள் அழிந்தன

## முல்லைத்தீவு பகுதியில் 800க்கும் மேற்பட்டோர் பலி; ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்வு

## கல்குடா இராணுவ முகாம் முற்றாக கடலுக்குள்

## கொழும்பு, நீர்கொழும்பு கரையோரப் பகுதிகளில் பெரும் பாதிப்பு



## யாழ்.வடமராட்சி கரையோரப் பகுதியில் 100க்கும் மேற்பட்டோர் பலி

ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்வு

SOCKETS
VEMAKE
3054836-3-28
3058965-8-59
3054737-7-78
3064626-9-66
3060268-2-68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொத்துவிலில் இராட்சதக்கடல் பேரலை பாதிப்பு

(பொத்துவில் செய்தியாளர்)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் தென்கிழக்கிலே அமைந்துள்ள பொத்துவில் கிராமம் கிழக்கே கடலாலும், மேற்கே களப்பாலும் சூழப்பட்டுள்ளது. முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட இவ்வூரில் ஏனைய இனமக்களும் சேர்ந்து வாழ்கிறார்கள். ஏறத்தாள 9000 குடும்பங்களையும் 40614 மக்கள் சனத்தொகையையும் கொண்டது.

கிழக்கே கடலால் சூழப்பட்டதன் காரணமாக, ஜலால்தீன் சதுர்கம், அறுகம்பே, சின்ன உல்லை, பசறிச்சேனை, குடாக்கள்ளி, கோமாரி, கொட்டுக்கல், கொடிமரத்தடி ஆகிய சிற்றூர்களும், மேற்கே களப்பால் சூழப்பட்டதன் காரணமாக களப்புக்கட்டு, விக்டர் தோட்டம், சர்வோதயபுரம், ஆத்திமுனை ஆகியன கடந்த 26.12.2004ஆம் திகதிய கடல் கொந்தளிப்பினால் ஏறத்தாள 3397 குடும்பங்கள், அதாவது 14453 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது வீடு வாசல்களை, சொத்துக்களை 1519 பேர் முற்றாக இழந்துள்ளனர். பகுதியாக வீடுவாசல்களை சொத்துக்களை இழந்தோர் 660 பேராகும்.

இக்கடல் கொந்தளிப்பால் ஏறத்தாள 576 பேர் இறந்துள்ளனர். இதில் அதிகமானோர் சிறுபிள்ளைகளும் பெண்களுமாகும். வெளிநாட்டவர்கள் 11 பேராகும். இவர்களது உடல்கள் ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

ஆங்காங்கே பாடசாலைகளிலும் பள்ளிவாயில்களிலும் பொதுக்கட்டிடங்களிலும் கூடாரங்களிலுமாக 14 நலன்புரி முகாம்களில் ஏறத்தாள 14453 பேர் அகதிகளாகவுள்ளனர். இது தவிர நண்பர்களது வீடுகளிலும் உறவினர்களது வீடுகளிலுமாக 6956 பேர் அகதிகளாகவுள்ளனர். இதில் 5484 ஆண்களும், 5518 பெண்களும், 3451 பிள்ளைகளும் அடங்குவர்.

ஏறத்தாள 2000 ஏக்கர் நெல்வயல் இவ் உப்புநீரினால் பாதிக்கப்பட்டுள்ளது. வயல்களும், தென்னை மரங்களும் பயிர்பச்சைகளும் உப்பு நீரால் கழுவப்பட்டதன் காரணமாக எரிந்த நிலையில் காணப்படுகிறது. நெல் வயல் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக நூற்றுக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பொத்துவில் பொருளாதாரத்தில் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளது.

விவசாயத்துக்கு அடுத்தபடியாக இங்கு கடல், களப்பு மீன்பிடித் தொழில் விளங்குகிறது. கடல், கொந்தளிப்பின் காரணமாக கொட்டுக்கல், கோமாரி, சின்ன உல்லை, குடாக்கள்ளி துறைமுகங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 285 பையர் போட்டுகளும், 285 அவுட்போட் மோட்டர்களும், 200 பிளாஸ்திக் வள்ளங்களும், 164 மரத்தோணிகளும், 700 டிஸ்கோவலைகளும், 2000 கேன் நெற்வலைகளும், 2500 சாதாரண வலைகளும் கடல் நீரில் அள்ளப்பட்டுச்சென்று சின்னாபின்னப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பல நூற்றுக்கணக்கான கடல் களப்பு மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கோடிக்கணக்கான ரூபாய் பொருளாதார நஷ்டமும் ஏற்பட்டுள்ளது.

ஹிதாயாபுரம் அல்ஹிதாயா வித்தியாலயம், ஜலால்தீன் சதுக்கம், அல்பஹ்றியா பாடசாலை ஆகியன முற்றாகவும் இன்னும் 5 பாடசாலைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளன. கோமாரி விசேட அதிரடிப்படை முகாம் முற்றாகவும், அறுகம்பே விசேட அதிரடிப்படை முகாம் பகுதியாகவும் பாதிப்படைந்துள்ளது. பள்ளிவாயல்கள் 6உம், கோமாரி மத்திய மருந்தகமும் சவாளை மத்திய மருந்தகமும் கோமாரி சுகாதார நிலையமும் முற்றாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. பிரதேச செயலகம், வானிலை அவதான நிலையம், நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயம் கோமாரி வாசிகசாலை சின்ன உல்லை வாசிகசாலை உட்பட 20 அரச கட்டிடங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சகல அரச ஆவணங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

அறுகம்பே சின்ன உல்லை பகுதியில் உள்ள உல்லாசபுரி ஹோட்டல்கள் 95 முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. உடன் 98 வியாபார நிலையங்களும் பாதிப்படைந்துள்ளன.

தேசிய, சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் பல, அரச உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களும் இலங்கை, ஜப்பான், ஜேர்மன் நாடுகள், ஐக்கிய அமீரகம், முஸ்லிம் எய்ட், எம்.எஸ்.எவ்., முஸ்லிம் லீக், சேர் எயிலைன்ஸ், ஜே.வி.பி., பொத்துவில் பள்ளிவாயல்கள், பொது நிறுவனங்கள், தனவந்தர்கள் ஆகியோர் வழங்கிய உதவிகளுக்கும் பொத்துவில் சுனாமி அனர்த்த ஏற்பாட்டுக்குழு நன்றி தெரிவிக்கின்றது.

## சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நீங்கள் ....

சொத்துக்கள் சம்பந்தமான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு,

கடன்பட்டிருந்தால் அல்லது வீடு, காணி போன்றவைகளை அடமானம் வைத்து பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளீர்களாயின்,

லீசிங் முறை அல்லது வாடகை கொள்முதல் முறை உடன்படிக்கைகள் செய்து பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளீர்களாயின்,

மரணித்த உங்கள் குடும்ப அங்கத்தவர்களின் ஓய்வூதியம், சேவை இறுதி உபகாரத்தொகை பெறுவதில் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளீர்களாயின்,

இழந்த பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், இறப்பு அத்தாட்சிப்பத்திரம் மற்றும் கல்விச் சான்றிதழ் போன்றவற்றைப் பெறுவதில் பிரச்சினைகளை எதிர்நோக்கினால்,

காப்புறுதி செய்துள்ளீர்களாயின் நட்டஈட்டினை பெறுவதில் சிக்கல்களை சந்தித்தால் மற்றும் குழந்தைகளைத் தத்தெடுத்தல் தொடர்பாக இலவச சட்ட ஆலோசனைக்காக தொடர்புகொள்ளுங்கள்.

**Lawyers for**
**Human Rights & Development**
**233/1, Cotta Road, Borella,**
**Colombo 8.**
**Tel : 2686180 Fax : 2687665**

## பாதிக்கப்பட்ட 28 ஊட

## அஸ்வ

சுனாமி அனர்த்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் சொத்துக்கள், உடைமைகளை இழந்துள்ள ஊடகவியலாளருக்கு உதவுமாறு கோரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர், தகவல், ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் அவர்களது பணியை தொடர்வதற்கு உதவ வேண்டியதன் அவசியத்தையும், பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் விபரங்களையும் இணைத்துள்ளார்.

அவர்களது பெயர், விபரங்கள் வருமாறு:

1. ஈ. பாக்கியராஜா — கல்லடி
2. கே. பகீதரன் — மட்டக்களப்பு
3. வீ.ரீ. சகாதேவராஜா — காரைதீவு
4. ஏ.எல்.எம். சலீம் — நிந்தவூர்
5. எம்.எம். ஜெஸ்மின் — கல்முனை
6. ஏ.எல்.எம். முக்தார் — சாய்ந்தமருது
7. யூ. சம்சுன் — கல்முனை
8. ஏ. புகாது — நிந்தவூர்
9. ஏ.ஜே. சமீம் — மருதமுனை
10. எம். சகாப்தீன் — நிந்தவூர்
11. எம்.ஏ. பகுர்தீன் — அக்கரைப்பற்று
12. எஸ்.ரீ. ஜமால்தீன் — அக்கரைப்பற்று
13. பி.எம்.ஏ. காதர் — மருதமுனை
14. கே. குணராசா — பாண்டிருப்பு
15. எம்.எஸ்.எம். நூர்தீன் — காத்தான்குடி
16. ஏ.எல்.எம். பஹுறுல்லா — காத்தான்குடி
17. ரீ.எல்.எம். ஜஃபர்கான் — காத்தான்குடி
18. எஸ்.எம்.எம். முஸ்தபா — காத்தான்குடி
19. கே. கிருபாகரன் — மட்டக்களப்பு

நவமணி 30.01.2005
பக்கம்-03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுனாமிப் பேரலை
(இணையத்தள படம்)



சின்ன உல்லை -
அறுகம்பை வீதியில்
முதலாவது பேரலை



சின்ன உல்லை - ராளஹாமி
சந்தியில் முதலாவது
பேரலை.

முதலாவது பேரலையின் பின்
அறுகம் குடாக் கடல் வற்றிக்
கிடக்கும் காட்சி.





முதலாவது பேரலையின்
பின் அறுகம் குடாக்
கடல் வற்றிக் கிடக்கும்
காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனாமி தந்த பேரழிவுகள்.



சுனாமியினால் பேரழிவுக்குட்பட்ட அறுகம்பை, சின்ன உல்லை பிரதேசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சின்ன உல்லை - அறுகம்பை அழிவுகள்.



சின்ன உல்லை - அறுகம்பை அழிவுகள்.



சின்ன உல்லை - அறுகம்பை அழிவுகள்.



சின்ன உல்லை - அறுகம்பை அழிவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறுகம் களப்பில் கரையொதுங்கிய மனித சடலம்.



சவாளை மேட்டில் காப்பு நடவடிக்கைக்காக தரையிறங்கிய இலங்கை விமானப் படை ஹெலிகொப்டர்



ஜலால்தீன் சதுக்க - 20 வீட்டுத் திட்டம் (அழிவுகள்)



ஜலால்தீன் சதுக்க - 20 வீட்டுத் திட்டம் (அழிவுகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுனாமிப் பேரலையின் பின்னர் அறுகம்பை - சின்ன உல்லை வீதி துண்டிக்கப்பட்டதையடுத்து அறுகம் களப்பினூடாக பயணம் செய்யும் உல்லை, பொத்துவில் பிரதேச மக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுனாமிப் பேரலையின் பின்னர் அறுகம்பை - சின்ன உல்லை வீதி துண்டிக்கப்பட்டதையடுத்து அறுகம் களப்பினூடாக பயணம் செய்யும் உல்லை, பொத்துவில் பிரதேச மக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுனாமிப் பேரலையின் பின்னர் அறுகம்பை - சின்ன உல்லை வீதி துண்டிக்கப்பட்டதையடுத்து இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களினால் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக பாலங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுனாமிப் பேரலையின் பின்னர் இயல்பு வாழ்க்கை திரும்பும் வரையில் அறுகம்பை சின்ன உல்லை மக்களுக்காக தொண்டு நிறுவனங்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட தற்காலிக கூடாரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள்தேசம் 1-14 பெப்ரவரி-2005, பக்கம்-06

# பொத்துவில் இராட்சதக்கடல் பேரலை பாதிப்பு ஒரு பார்வை

கிழக்கு மாகாணத்தின் தென்கிழக்கிலே அமைந்துள்ள பொத்துவில் கிராமம் கிழக்கே கடலாலும், மேற்கே களப்பாலும் சூழப்பட்டுள்ளது. முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட இவ்வூரில் ஏனைய இனமக்களும் சேர்ந்து வாழ்கிறார்கள். ஏறத்தாழ 9000 குடும்பங்களையும் 40614 மக்கள் சனத்தொகையையும் கொண்டது.

கிழக்கே கடலால் சூழப்பட்டதன் காரணமாக நூலாம்தீன் சதுக்கம், அறுகம்பே, சின்ன உல்லை, பசறிச்சேனை, குடாக்கள்ளி, கோமாரி, கொட்டுக்கல், கொடிமரத்தடி ஆகிய சிற்றூர்களும், மேற்கே களப்பால் சூழப்பட்டதன் காரணமாக களப்புக்கட்டு, விக்டர் தோட்டம், சாவோதயபுரம், ஆத்திமுனை ஆகியனவும் 26.12.2004ஆம் திகதிய கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டன. ஏறத்தாழ 3397 குடும்பங்கள் அதாவது 14453பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது வீடுகளை, சொத்துக்களை 1519பேர் முற்றாக இழந்துள்ளனர். பகுதியாக வீடுகளை, சொத்துக்களை இழந்தோர் 660 பேராகும்.

இதுவரையான கணிப்பீட்டின்படி 576பேர் இறந்தனர். இவர்கள் அதிகமானோர் சிறுபிள்ளைகளும், பெண்களுமாகும். வெளிநாட்டவர்கள் 11 பேர். ஞாயிற்றுக்கிழமை என்பதால் காலையில் குர்ஆன் மதரசாவுக்குச் சென்ற பிள்ளைகளும், கடற்கரைக்கு மீன் கழுவுவதற்காகச் சென்ற சிறுவர்களும், காலையில் குளிப்பதற்காகவும், பிள்ளைகளைச் சுத்தப்படுத்துவதற்காகவும் கிணற்றடிக்குச் சென்ற பெண்களுமே கூடுதலாக மரணமடைந்துள்ளனர்.

பாடசாலைகளிலும், பள்ளிவாயல்களிலும், பொதுக் கட்டிடங்களிலும், டெண்டுகளாக 14 நலன்புரி முகாம்களில் ஏறத்தாழ 14453 பேர் அகதிகளாகவுள்ளனர். இது தவிர நண்பர்களது வீடுகளிலும், உறவினர்களது வீடுகளிலுமாக 6956பேர் அகதிகளாகவுள்ளனர். இதில் 5484 ஆண்களும், 5518 பெண்களும், 3451 பிள்ளைகளும் அடங்குவர். 14 நலன்புரி முகாம்களில் 04 தமிழ் முகாம்களும், 1 சிங்கள முகாமும், 09 முஸ்லிம் முகாம்களும் அடங்கும்.

1259 கிணறுகள் உப்பு நீரால் பாதிக்கப்பட்டன. இக்கிணற்று நீரை குடிப்பதற்கோ வேறு தேவைகளுக்கோ பாவிக்க முடியாத நிலையுள்ளது. இதே அளவு மலசல கூடங்கள் கடல் கொந்தளிப்பால் பிடுங்கி வீசப்பட்டுள்ளன. இதனால் குடிநீரும், மலசல கூடவசதியும் அத்தியாவசிய தேவையாகவுள்ளது.

பொத்துவில் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டோர் விபரம்

| முகாம்களின் பெயர் | குடும்பங்கள் | ஆண் | பெண் | பிள்ளைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தாறுஸ்பலாஹ் வித்தியாலயம் | 226 | 436 | 438 | 744 | 1108 |
| சின்ன உல்லை நியாஸ் கட்டிடம் | 160 | 130 | 220 | 50 | 460 |
| இன்ஸ்பெக்டர் ஏத்தம் | 101 | 142 | 152 | 103 | 397 |
| அல் அஸ்றப் சித்தி களப்புக்கட்டு | 60 | 95 | 86 | 70 | 251 |
| அல் கலம்பிர் பாக்கியவத்தை | 79 | 71 | 98 | 113 | 282 |
| அலியிலாலிர், செங்காமம் | 64 | 80 | 83 | 111 | 274 |
| பாறிச்சேனை அல் இர்பாக் வித் | 68 | 133 | 147 | 60 | 340 |
| குடாக்கள்ளி | 100 | 125 | 135 | 80 | 340 |
| கொடிமரத்தடி | 80 | 103 | 80 | 192 | 340 |
| கோமாரி | 700 | 1450 | 1375 | 600 | 3425 |
| ஹறஹணி சரஸ்வதி வித் | 160 | 125 | 140 | 135 | 400 |
| முஸ்லிம் மத்திய கல்லூரி | 222 | 448 | 394 | 240 | 1032 |
| உறவினர்-நண்பர் வீடுகள் | 1377 | 2119 | 2190 | 1433 | 5142 |
| பொத்துவில் பன்சல | 25 | 27 | 60 | 20 | 87 |
| மொத்தம் | 3422 | 5484 | 5588 | 3451 | 14453 |

[illegible] அகதிகள் தங்கியுள்ள இடம் [illegible]
இன்ஸ்பெக்டர் ஏத்தம் [illegible] பொத்துவில் பன்சல
[illegible] 10 முகாம்களிலும் உள்ளோர்
ஹறஹணி சரஸ்வதி வித்தியாலயம் [illegible] முஸ்லிம் சகோதரர்கள்.

ஏறத்தாழ 2000 ஏக்கர் நிலம் உப்பு நீரால் பாதிக்கப்பட்டுள்ளது. வயல்களும், தென்னை மரங்களும் பயிர்ச்செய்கைகளும் உப்பு நீரால் கழுவப்பட்டதன் காரணமாக கருகிய நிலையில் காணப்படுகின்றன. நெல் வயல் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக நூற்றுக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பொத்துவில் பொருளாதாரத்தில் கோடிக்கணக்கான ரூபாய்கள் நஷ்டமேற்பட்டுள்ளது.

விவசாயத்துக்கு அடுத்தபடியாக, இங்கு கடல், களப்பு மீன்பிடித் தொழில் விளங்குகிறது. கடல் கொந்தளிப்பின் காரணமாக கொட்டுக்கல், கோமாரி, சின்ன உல்லை, குடாக்கள்ளி துறை முகங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 285 பைபர் போட்டுகளும், 285 அவுட்போட் மோட்டார்களும், 200 பிளாஸ்டிக் வள்ளங்களும், 164 மரத்தோணிகளும், 700 டிஸ்கோ வலைகளும், 2000 கேன் நெற்வலைகளும், 2500 சாதாரண வலைகளும் கடல் நீரில் அள்ளுப்பட்டுச் சென்று சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளன. இதனால் பல நூற்றுக்கணக்கான கடல், களப்பு மீன்பிடியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கோடிக்கணக்கான ரூபாய்கள் பொருளாதார நஷ்டமும் ஏற்பட்டுள்ளது.

அல்ஹிதாயா வித்தியாலயம், அல் ஹுசைனியா பாடசாலை ஆகியன முற்றாகவும் இன்னும் 05 பாடசாலைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளன. கோமாரி விசேட அதிரடிப்படை முகாம் முற்றாகவும், அறுகம்பே விசேட அதிரடிப்படை முகாம் பகுதியாகவும் பாதிப்படைந்துள்ளது. பள்ளிவாயல்கள் 16உம் கோமாரி மத்திய மருந்தகமும், சவளை மத்திய மருந்தகமும், கோமாரி சுகாதார நிலையமும் முற்றாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. பிரதேச செயலகம், வாவிலை அரசாங்க நிலையம், நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயம், கோமாரி வாசிகசாலை, சின்ன உல்லை வாசிகசாலை உட்பட 20 அரச கட்டிடங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சகல அரச ஆவணங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

அறுகம்பே, சின்ன உல்லை பகுதியில் உள்ள 85 உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 28 விடுதிகள் சிறியளவிலான பாதிப்படைந்துள்ளன.

பொத்துவில் - உல்லை போக்குவரத்து அறுகம்பே பாலம் உடைந்துள்ளதன் காரணமாக துண்டிக்கப்பட்டுள்ளது. தற்போது களப்பு மூலம் வள்ளங்களினால் போக்குவரத்து நடைபெறுகிறது. பொத்துவில் அக்கரைப்பற்று போக்குவரத்து சேவை கோமாரி பாலம், சின்னமுகத்துவாரம், பெரிய முகத்துவாரம், சிறிய பாலம் உடைந்துள்ளதன் காரணமாக துண்டிக்கப்பட்டு தற்போது அரச படையினரால் சீர்செய்யப்பட்டு தற்காலிகமான போக்குவரத்து நிகழ்கின்றன.

மின்சார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பெரிய உல்லைப்பகுதியிலும், சின்ன உல்லையில் சில பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் சீர் செய்ய வேண்டிய பகுதிகள் உள்ளன.

அறுகம்பே, சின்ன உல்லை, பசறிச்சேனை, குடாக்கள்ளி பகுதிகளின் தொலைத்தொடர்பு முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது. இதுவரை இதனைச் சீர்செய்வதற்கான வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

கிழக்குப்புற கடலை அண்மித்தும், மேற்குப்புறம் களப்பை அண்மித்தும் குடிசைகளிலும், வாடிகளிலும், வீடுகளிலும் வாழ்ந்து தற்போது அகதிகளாக நலன்புரி முகாம்களில் வாழ்ந்த மக்களை மீண்டும் எங்கே, எப்படி, எப்போது குடியமர்த்துவது என்பது பற்றிய தீர்மானம் இதுவரை அரச பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த மக்களுக்கு உணவு இருப்பிடத்துக்கான நிலம், இருப்பிட வசதி, குடிநீர் கிணறு, மலசலகூட வசதி, வைத்திய வசதி, தொழில் வசதி ஆகியன அத்தியாவசியத் தேவையாக உள்ளன. சுகாதார வைத்திய அதிகாரி, மாவட்ட வைத்திய அதிகாரி, வெளிநாட்டு வைத்திய தாதுக்குழுவினர்கள் மூலம் வைத்திய வசதி சீர் செய்யப்பட்டு வருகிறது. சுகாதார சேவையாளர்கள், சுகாதார பரிசோதகர்கள் இரவு பகலாக சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அனர்த்தம் ஏற்பட்டுள்ள நாள்முதல் இன்று வரை [illegible] உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களும் இலங்கை ஜம்இய்யதுல் உலமா, ஜமாஅதுல் முஸ்லிமீன் வைபவங்கள், முஸ்லிம் சேர் வைபவங்கள், [illegible] பள்ளிவாயல்கள், பொது நிறுவனங்கள், தனவந்தர்கள் ஆகியோர் வழங்கிய உதவிகளுக்கும் பொத்துவில் சுனாமி அனர்த்த ஏற்பாட்டுக்குழு நன்றி தெரிவிக்கின்றது.

மேலதிக விளக்கங்களுக்கும், தகவல்களுக்கும் இஸ்லாமிய சமூக சேவைகள் அமைப்புடன் அல்லது 0777977388, 063-2248284 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

●—●—●

தகவல்: எம்.எஸ்.எம். அப்துல்மலிக் - பொத்துவில் "கனாசி" இஸ்லாமிய சமூக சேவைகள் நிலையம். 0777977388, 0633248284

M.S.M. ABDHUL MALIK (SPHI,
JAMA-ATHUL MUSLIMEEN AVENUE,
POTTUVIL-06 (E.P)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருகிறது சுனாமி!

சுனாமியின் துயரங்களை.... சுனாமி தந்த சுகங்களை.... வந்த நிவாரணங்களை.... அவை சென்றடைந்த வழிகளை.... வெந்த மனங்களை.... வாடி நின்ற அகதிகளை.... சுரண்டி வாழும் சுய நல வாதிகளை....

கையாலாகாத அரசியல் நடிகர்களை.... பரிதவித்த பாமர மக்களை.... பார்த்து ரசித்த உள்ளங்களை.... கிராம சேவையாளர் பட்ட பாடுகளை.... சுட்ட சூடுகளை.... கச்சிதமாய் கச்சை கட்டிக் கொண்டு நின்று ஐயாயிரமும்.... அத்தோடு கூப்பனும் பெற்ற படித்தவரை.... பணக்காரரை.... திசைமாறிச் சென்ற நிவாரண உதவிகளை....

பாதை மாற்றப் பட்ட பரிகாரப் பணிகளை....

மந்தகதியில் நகரும் அரச நிர்வாகச் சேவைகளை.... பல்வேறு நாடுகள் புரிந்த உதவிகளை.... வைத்திய சேவைகளை.... பாதைகள் புனரமைத்து பாலங்களும் போட்டுத் தந்த இந்திய இராணுவப் பணிகளை....

அகில இலங்கையின் சுனாமி அனர்த்த நிகழ்வுகளை.... ஆராய்ச்சியாளரின் முன்னெச்சரிக்கைகளை....

பொத்துவில் மக்களின் போக்குகளை....

பொறுப்புணர்வற்ற தன்மைகளை.....

சுனாமியின் பின் நமது மண்ணில் முளைத்த புத்தர் பெருமானை..... இறைவனை மறந்த இதயங்களை....

இவை அனைத்தையும் அள்ளிக் கொண்டு கவிதை பாடி வருகிறது.... சிறந்த நூலாக....

## "சுனாமியின் சோக வடிவங்கள்"

நூலாசிரியர் : **மாஸ்டர் ஏ. எல். ஏ. முகம்மத்.**
15 **பொத்துவில்**

**நூல் வெளியீட்டு விழா : 08 - 04 - 2005 வெள்ளி பி.ப 4.30 மணி**

தலைமை **பொத்துவில் கலையன்பன்**
**எஸ். எம். ஏ. அஸீஸ்**

இடம் **நா.ச. சதுக்கம்**
பிரதான வீதி, பொத்துவில்.

Printers T.P: 011-2433874



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கவிஞர் கவிவாணரின் பாசறையில் கவிதை பயின்ற ஏ.எல்.ஏ. முகம்மத் ஆசிரியர் அவர்கள், 1970 இல் கவிவாணரின் தலைமையில் வெளியிடப்பட்ட **மதுரம்** என்ற கையெழுத்துச் சஞ்சிகை உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவர். இக்பால் இளைஞர் கழகம், யங் ஸ்டார் விளையாட்டுக் கழகம் போன்ற பல்வேறு கலை, இலக்கிய விளையாட்டு கழகங்களில் முக்கிய உறுப்பினராக இணைந்து செயற்பட்டவர். 1970 களில் இருந்து சிறிய அளவில் கவிதை எழுதுவதில் நாட்டம் கொண்டிருந்த முகம்மத் அவர்களது கவிதையூற்றை பெரு வெள்ளமாக திறந்து விட்டதில் 1990 இல் பொத்துவிலில் இடம்பெற்ற வன்செயல் நிகழ்வுகளுக்கு பெருமளவு பங்குண்டு என அவரே ஒரு நூலில் எழுதியிருக்கின்றார். இக்காலப்பகுதிகளில் வெளியிடப்பட்ட இரத்தச் சுவடுகள், எண்ணக் கொதிக்குது நெஞ்சம் போன்ற கவிதைத் தொகுப்புகளில் ஆக்ரோசமாக வெளிப்பட்ட இவரது கவிதைகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சமரசங்களுக்கு இடங்கொடுக்காமல் தான் சொல்ல வந்ததை காய்தல், உவத்தல் இன்றி வெளிப்படுத்தக் கூடியவை. சமூக அநீதிகளை, அவலங்களை, இலக்கிய சுவைகளை, மண் வாசனையை அடிப்படையாகக் கொண்டிருந்த இவரது கவிதைகள் ஏனையவர்களின் கவிதை நடையிலிருந்து மாறுபட்டது. அநேகமாக இவரது கவிதைகள் சமூகமட்டத்தில பெரும் சர்ச்சைகளையும் சலசலப்புக்களையும் எப்பொழுதும் ஏற்படுத்தக் கூடியவை. 2004இல் இடம்பெற்ற சுனாமியும் அதனைத் தொடர்ந்து வந்த நிகழ்வுகளும் இவரது ஆத்மாவை அசைத்தே விட்டன. அவரது பேனா முனை உடனடியாகவே எழுதத் தொடங்கியது. அதன் வெளிப்பாடே இந்த சுனாமியின் சோக வடிவங்களாகும். அன்னாரது ஏனைய கவிதைத் தொகுப்புக்களாக,



1. என் பேனா முனை அழுகின்றதே.
2. விலாசம் இழந்த வேர்கள்.
3. நதிக்கரை நாற்றுக்கள்.
4. நடந்து வந்த பாதையிலே.
5. குருதி குடிக்கும் எதிரிகள் ஜாக்கிரதை.
6. திரும்பிப்பார்.

என்பவற்றை குறிப்பிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



VIRAKESARI
# வீரகேசரி
THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA
Registered as a Newspaper at the G.P.O

மலர் : 77 இதழ் : 41 கொழும்பு விய வருடம் புரட்டாதி மாதம் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (22.09.2006) ஹிஜ்ரி-1427 ஷஃபான் பிறை-28 விலை ரூபா: 10.00 பக்கங்கள் : 20

தாய்லாந்து இயல்புக்கு திரும்பியது — பக்கம் 03

மேற்கு வங்கத்தில் கடும் புயலில் சிக்கி 130 பேர் பலி — பக்கம் 07

வன்னியில் கற்றல் செயற்பாடுகள் பாதிப்பு — பக்கம் 05

# இரத்தல்குளம் படுகொலையினை கண்டித்து மட்டு.-அம்பாறை முஸ்லிம் பகுதிகளில் ஹர்த்தால்

## இயல்புவாழ்க்கை முற்றாக பாதிப்பு; போக்குவரத்தும் ஸ்தம்பிதம்

(சாய்ந்தமருது, ஏறாவூர், நிந்தவூர், புதிய காத்தான்குடி நிருபர்கள்)

பொத்துவில் இரத்தல்குளம் பகுதியில் பத்து முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டதனைக் கண்டித்து நேற்று அம்பாறை- மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, நிந்தவூர், கல்முனை, ஒலுவில், பாலமுனை, சம்மாந்துறை, சாய்ந்தமருது, காத்தான்குடி, வாழைச்சேனை ஆகிய பகுதி களிலேயே பூரண (10 ஆம் பக்கம் பார்க்க)

நியூயோர்க்கில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆசிய சமூகத்தினர் மத்தியில் உரையாற்றுவதை காணலாம்.

## யாழ்ப்பாணத்தில் குடும்பஸ்தர் இருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக்கொலை

(வடமராட்சி, பளை நிருபர்கள்)

யாழ்ப்பாணத்தில் இரு குடும்பஸ்தர்கள் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். சங்கானையிலும் வல்வெட்டித்துறையிலுமே இப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. சங்கானை மண்டியடிக்குளம் பகுதியில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இரு பிள்ளைகளின் தந்தையான தொல்புரம், தெற்கு சுழிபுரத்தைச் சேர்ந்த நடராசா தவராசா (வயது 39) (10 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் அழுது புலம்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Virakesari Friday 22nd September 2006

22.09.2006

# பொத்துவில் சம்பவம் குறித்தும் அதன் பின்னரான நிலைமை குறித்தும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார்

பொத்துவில் பகுதியில் அண்மையில் 10 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் சம்பவத்தின் பின்னர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி செயலகம் நேற்று முன்தினம் மாலை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- தற்போது நியூயோர்க்கில் உள்ள ஜனாதிபதி பொத்துவில் சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்ததும் உடனடி விசாரணைகளை நடத்துவதற்கு விசேட ரகசியப் பொலிஸ் குழுவொன்றை நியமிக்குமாறு ஆலோசனை வழங்கினார். விசாரணைகளை அவசரமாக நடத்துமாறு அவர் பணித்துள்ளார். பொத்துவில் பகுதியில் தற்போது நிலவுகின்ற பதற்றம் தொடர்பாகவும் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார். அந்த வகையில் பிரதேசத்தின் பதற்றம் நிலைமை தொடர்பாக ஆராய ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் பொலிஸ் மா அதிபரின் தலைமையிலான உயர் குழுவொன்று பொத்துவில் பகுதிக்கு விஜயம் செய்துள்ளது. படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். அத்துடன் பயங்கரவாதிகள் தமது நோக்கத்தை அடையாத வகையில் பிரதேசத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுமாறும் ஜனாதிபதி பாதுகாப்புத்துறைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொத்துவில் அப்பாவி முஸ்லிம்கள் படுகொலை:

# கொலை வெறியர் எவராயினும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்

## மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை

பொத்துவில் பிரதேச முஸ்லிம் மக்கள் 10 பேர் இரத்தல்குளம் காட்டுப் பகுதியில் வெட்டியும் குத்தியும் மிகக் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கும் சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் அளித்திருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பொத்துவிலில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் குறித்து கண்டனம் தெரிவித்து பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது :

யுத்தமொன்றில் பங்குபற்றாமல் சமாதானத்தைப் பெரிதும் விரும்பி வாழும் அப்பாவி முஸ்லிம் மக்கள் மீது பிரயோகிக்கப்படும் இவ்வாறான செயற்பாடு காரணமாக எதிர்காலத்தில் முஸ்லிம்களின் இருப்பு, பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாகி இருக்கின்றது. இவ்வாறான செயற்பாடுகள் அதற்கான ஆரம்பமா? என்கின்ற சந்தேகத்தையும் உருவாக்கி இருக்கின்றது.

அண்மையில் மூதூர் பிரதேச முஸ்லிம் மக்கள் எதிர்கொண்ட வடுக்கள் ஆறுவதற்கு முன்பதாக மீண்டும் பொத்துவில் இரத்தல்குளம் பகுதியில் குளக்கட்டுமான பணிகளில் ஈடுபட்டிருந்த பொத்துவில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்டுள்ள இந்த கொலை வெறிச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டோர், எத்தரப்பினராக இருந்தாலும் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இச்சம்பவம் பற்றி பூரண விசாரணை ஒன்று நடத்தப்பட்டு இதில் சம்பந்தப்பட்டோர் மக்கள் முன் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும்.



இச்சம்பவத்தின் எதிரொலியாக பொத்துவில் முஸ்லிம்கள் மத்தியில் மாத்திரமன்றி, கிழக்கு மாகாணத்தின் பல்வேறு முஸ்லிம் கிராமங்களில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வை நீக்கி அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்க வேண்டிய கடமைப்பாடு அரசுக்கு இருக்கின்றது. இவ்விடயத்தில் அசமந்தப் போக்கை கடைப்பிடிக்காது உடனடியாக செயலில் இறங்கி குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அரசு முன்வர வேண்டும்.

கொடூரமான இக்கொலைகளின் காரணமாக குடும்பத் தலைவர்களையும் தமது சகோதரர்களையும் இழந்து தவிக்கும் அனைவருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களின் துக்கத்திலும் பங்குகொள்கின்றது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இச்சம்பவம் குறித்து பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாந்து, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கொமடான் நிமால் லெவ்கே, ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ ஆகியோருடன் நாம் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் பொதுமக்கள் எந்தவித அசம்பாவிதங்களிலும் ஈடுபடாது அமைதியாக இருக்குமாறும் ரவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### அப்பாவி முஸ்லிம்கள் மீது மீண்டும் மிலேச்சத்தனம்

பொத்துவிலிருந்து இரத்தல்குளத்திற்கு ஜீவனோபாயத்திற்காக சென்ற ஏழை முஸ்லிம்கள் 10 பேர் கோரத்தனமாக கொலை செய்யப்பட்டிருப்பதை அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது.

யுத்தத்தில் எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத அப்பாவி முஸ்லிம்கள் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு உள்ளாவது தொடர அனுமதிக்க முடியாது. சர்வதேச சமூகம் இம் மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்க வேண்டுமென அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது.

ஈழப்போர் — 4 என்று சில தரப்பினரால் வர்ணிக்கப்படுகின்ற மோதல்கள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மூதூரில் முஸ்லிம்கள் பல உயிர்களை இழந்தும் அகதிகளாகியும் பலர் சொல்லொண்ணாத் துயரங்களுக்கு ஆளாக்கப்பட்ட சோகம் முடிவடையும் முன் முஸ்லிம்கள் மீது மற்றொரு மிலேச்சத்தனம் கட்டவிழ்த்தப்பட்டிருக்கிறது.

இது ஒரு தொடர் கதையாக தொடர்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே அரசு காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து முஸ்லிம்களின் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டுமென நாம் கோருகின்றோம் என அ.இ.மு.கா. செயலாளர் வை.எல்.எஸ். ஹமீட் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



ரி முஸ்லிம் மஜ்லிஸின் 26வது இஸ்லாமிய தினவிழா கல்லூரி அலஸ் மண்டபத்தில்
சேனானி ஹேவகே தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பேரியல்
திதியை அதிபர் மற்றும் முஸ்லிம் மஜ்லிஸ் உறுப்பினர்கள் மண்டபத்திற்கு அழைத்து

நவமணி - 01.10.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொத்துவில் உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் பதவியேற்பு

**பொத்துவில் நிருபர்** 2011/04/05 (தினகரன்)

பொத்துவில் பிரதேசசபைக்குத் தெரிவான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவியேற்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை பொத்துவில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் சபையின் செயலாளர் ஜே.அப்துல் அஸீஸ் தலைமையில் நடைபெற்றது.

பொத்துவில் பிரதேச செயலாளரான விசேட ஆணையாளர் அஷ்ஷெய்க் யூ.எல்.நியாஸ் முன்னிலையில் மாகாணசபை உறுப்பினர் எம். அப்துல் மஜீதின் பிரசன்னத்துடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் முகம்மது சரீப் அப்துல் வாஸித் (7567), அப்துல் மஜீத், தாஜுதீன் (2847), மீரா முகைதீன் முபாறக் (2387), முகம்மட் அனிபா அப்துல் றஹீம் (1962), மீரா சாகிபு முகம்மட் மர்சூக் (1023), முகம்மட் சரீப் முபாறக் (859), அகமட் முகைதீன் அப்துல் மஜீத் (2657), ஆதம்பாவா-பதூர்கான் (1752), முழுகுப்பிள்ளை துரைரெட்ணம் (835) ஆகியோர் பதவியேற்றுக்கொண்டனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸின் சபைகளுக்கு தவிசாளர் நியமனம்

(2011-04-16)

(இறக்காமம் நிருபர்)

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை (திகாமடுல்ல) மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நான்கு உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றியுள்ளது. அச்சபைகளுக்கான தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள் ஆகியோரின் பெயர் விபரங்கள் கடந்த 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமினால் கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் வைத்து அறிவிக்கப்பட்டுள்ளது. பெயர் விபரம் வருமாறு :

**பொத்துவில் பிரதேச சபை**

தவிசாளர் : அப்துல் வசித் மொஹம்மட் சரீப்

பிரதி தவிசாளர் : அப்துல் மஜீத் மொஹம்மட் தாஜுதீன்

**அட்டாளைச் சேனை பிரதேச சபை**

தவிசாளர் : மொஹம்மட் நசீர்

பிரதி தவிசாளர் : மொஹம்மட் அன்சில்

**நிந்தவூர் பிரதேச சபை**

தவிசாளர் : அலியார் முஹம்மட் தாஹிர்

பிரதி தவிசாளர் : மொஹம்மட் அன்சார்

**இறக்காமம் பிரதேச சபை**

தவிசாளர் : மொஹம்மட் இஸ்மாயில் நைசார்

பிரதி தவிசாளர் : உமர்கத்தா ஜெபீர்



## பொத்துவில் லகுகல எல்லைப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை அளிப்பேன்

### பதவியேற்பு வைபவத்தில் தவிசாளர் வாஸித்

(பொத்துவில் செய்தியாளர் எஸ்.எல்.எம். அப்துல் மஜீத்)

பொத்துவில் லகுகல பிரதேச சபைகளுக்கிடையே நிலவும் நீண்ட கால எல்லைப் பிரச்சினைக்கு சுமுகமான முறையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு முன்னுரிமையளிப்பேன் என பொத்துவில் பிரதேச சபையின் புதிய தவிசாளர் கே.பீ.எம். சரீப் அப்துல் வாஸித் கூறினார்.

கடந்த திங்களன்று புதிய பதவியை ஏற்று நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்டு அமோக (7567) விருப்பு வாக்குகளைப் பெற்ற கே.பீ.எம். சரீப் அப்துல் வாஸித் கடந்த திங்கட்கிழமை காலை 9.31 மணியளவில் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம். அப்துல் மஜீத் முன்னிலையில் தனது தவிசாளருக்குரிய கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.



புதிய தவிசாளர் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட இவ் வுத்தியோகபூர்வ வைபவம் பொத்துவில் பிரதேச சபை நூலக கேட்போர் கூடத்தில் பிரதேச சபை செயலாளர் ஜே. அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்றது. தாறுல் பலாஹ் வித்தியாலய மாணவன் அப்துல் ரஹ்மானின் கிராஅத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் விசேட ஆணையாளராக கடமையாற்றிய பொத்துவில் பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் யூ.எல். நியாஸ் தம்மால் மேற்கொள்ளப்பட்ட கடமைகளையும் பொறுப்புக்களையும் உத்தியோகபூர்வமாக புதிய தவிசாளர் கே.பீ.எம். சரீப் அப்துல் வாஸித்திடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் பொத்துவில் பொது மக்களும் உலமாக்களும் புத்தி ஜீவிகளும் மிகவும் சந்தோசத்துடனும் உற்சாகத்துடனும் கலந்து சிறப்பித்தனர். தவிசாளர் தனது கன்னி உரையில் தொடர்ந்து கூறியதாவது,

பொத்துவில் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக கல்விமான்கள், மார்க்க அறிஞர்கள், துறைசார்ந்த அதிகாரிகளை ஒன்று கூட்டி அவர்களது திட்டங்களையும் ஆலோசனைகளையும் நுட்பங்களையும் கேட்டறிந்து அவற்றைக் கோவைபடுத்தி ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, பொத்துவில் பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்களது ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் அபிவிருத்தித் திட்டங்களை சிறந்த முறையில் செயற்படுத்தவுள்ளேன் என்றார்.

எனது இந்த அமோக வெற்றியானது பொத்துவில் பிரதேசத்தில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆகிய மூவின மக்களின் வெற்றி எனவும், எனது மிகப்பெரிய பலம் எனதூர் மூவின மக்களே எனவும் கூறினார்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அப்துல் மஜீத், பிரதேச செயலாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரும் சிறப்புரையாற்றினர். பிரதேச சபையின் திட்ட உத்தியோகத்தர் எம்.ஏ. றபீக் நன்றியுரை வழங்கினார்.

10-4-2011 –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 103. கி.பி. 2011 - கோலாட்டக் கலையின் விற்பன்னர்.



பொத்துவிலூர்; கலை, இலக்கியங்களின் முதுசமாகத் திகழும் பூமி. சகல கலைகளும் இப்பூமியில் ஊற்றெடுத்து, மகாநதி போன்று ஓடிய சகாப்தங்கள் முடிவுக்கு வந்து விட்டது போன்ற ஒரு பிரேமை. பாரம்பரிய கலைகளும் இலக்கியங்களும் செத்து மடிந்து வரண்டு கிடக்கும் பூமியாக இன்று பொத்துவில் மண்ணின் நிலைமை இந்த நிலையில் கோலாட்டக் கலையின் விற்பன்னராக, இக்கட்டுரை எழுதும் வரையில் ஒரே ஒரு உயிராக எஞ்சியிருப்பவரே பொத்துவில் - 07 இனை வசிப்பிடமாகக் கொண்ட சுலைமாலெவ்வை முகம்மது இஸ்மாயில் அவர்கள்.

1950கள் தொடக்கம், இன்று வரையிலும் பொத்துவிலின் பாரம்பரியக் கலையான கோலாட்டக் கலையினை தனது உயிர் மூச்சாகக் கொண்டு வளர்த்து வரும், 'அண்ணாவியார்' என்று புனைப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டு வரும் முகம்மது இஸ்மாயில் அவர்கள், இலங்கை அரசினால் கலை, இலக்கியவாதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் கௌரவ விருதான 'கலா பூஷணம்' விருதினைப் பெற்ற முதல் பொத்துவில் மகன் என்பது, பலரும் அறியாத விடயமாக இன்றுவரையும் இருப்பது அல்லது கண்டுகொள்ளாமல் விடப்பட்டிருப்பது வியப்புக்குரிய விடயமே.

1935ஆம் ஆண்டு அட்டாளைச் சேனையில் பிறந்த இவர், தனது தாய் மற்றும் குடும்பத்தவர்களுடன் சிறு வயதிலேயே குடிபெயர்ந்து பொத்துவில் மண்ணையே தனது வாழ்விடமாகக் கொண்டிருப்பவர்.

5ஆம் தரம் வரை பொத்துவில் மெ.மி.த.க பாடசாலையில் கல்வி கற்ற இவர், கல்வி கற்கும் வேளையிலேயே இந்தக் கோலாட்டக் கலையின் மீது ஈர்க்கப்பட்டு, அக்கலையோடு இரண்டறக் கலந்து விட்டவர். 1940களில் மட்டக்களப்பு கணபதிப்பிள்ளை வாத்தியாரிடம் இக்கலையினை மிகச் சிறப்பாக கற்றுத் தேர்ந்த இஸ்மாயில் அவர்கள், பாடசாலை வாழ்வு நிறைவடைந்த பின்னர் இக்கலையினை தனது வாழ்வுடன் இணைத்துக் கொண்டவர். ஆவு கலந்தர் அண்ணாவியார், மீராலெவ்வை அண்ணாவியார், உதுமான் அண்ணாவியார் போன்றவர்களின் கோலாட்டக் குழுவில் (பொல்லடி) இணைந்து சிறந்த பயிற்சியினையும் பெற்று, இந்த அண்ணாவிமார்களால் பட்டை தீட்டப்பட்டு, பின்னர் 1950களில் இருந்து தன்னையும் ஒரு அண்ணாவியாக நிலைநிறுத்தி பொத்துவிலின் கலை, இலக்கிய வரலாற்றில், கோலாட்டக்கலையில் தனியிடம் பிடித்தவரே இந்த இஸ்மாயில் அவர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொத்துவில் மண் வாசனையில் 'பொல்லடி' என வழங்கப்பட்டு வரும் இந்தக் கோலாட்டக் கலையினை முஸ்லிம்களின் கலாசாரத் திற்கேற்ப வடிவமைத்து, அந்தக் கலையிலுள்ள 18 வகை நுட்பங்களையும் தன் விரல் நுனியில் வைத்து வித்தை காட்டிய இந்த மனிதருக்கோ, இன்றைய வயது (83) எண்பத்து மூன்று. வாழ்வின் அந்திம காலங்களை நோக்கிய வயதாக இருந்தாலும் கோலாட்டக் கலையின் மீதுள்ள அதீத ஆர்வம் இவருக்கு இன்னமும் குறைந்தபாடில்லை.

2011இல் கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட விருது வழங்கள் நிகழ்வில் 'கலாபூஷணம்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட அண்ணாவியார் அவர்களது தனிச் சிறப்பு என்னவெனில் புகழ்ச்சியினை அவர் பெரிதாக விரும்புவதில்லை என்பதுதான். தான் உயிர் துறப்பதற்கு முன்னால் இந்த அரிய கலையினை அடுத்த சந்ததியிடம் ஒப்படைத்து விடவேண்டும் என்ற துடிப்பு, இவரிடம் மிக, மிக அதிகமாகவே இருக்கின்றது என்றாலும், இவரது தவிப்பை இன்றைய இயந்திரமயமான சமூகம் ஏனோ கண்டுகொள்ளத் தவறியே வருகின்றது. முற்றத்து மல்லிகைகள் மணப்பதில்லை என்பது போல ஒருவர் உயிர் வாழுகின்ற போது அவரது சிறப்புக்கள், திறன்கள் பெரும்பாலானவர்களுக்கு விளங்குவதில்லை. அண்ணாவியார் அங்கலாய்ப்பது போல சில வேளை அவரது மரணத்தின் பின்னர் இந்தப் பாரம்பரியக் கலையினை பாதுகாக்கத் தவறிவிட்டோமே என பலரும் வருந்தக் கூடும்.



2007 ஆம் ஆண்டில் பொத்துவில் மத்திய கல்லூரி மாணவர்கள் கோலாட்டக் கலையினை அண்ணாவியார் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளும் நிகழ்வுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாபூஷண
அரச விருதுகள் விழா

2011

கலாசார மற்றும் கலை அலுவல்கள்
அமைச்சின் ஏற்பாட்டினால்
கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால்
ஏற்பாடு செய்யப்பட்ட
2011 டிசம்பர் மாதம் 17 ஆந் திகதி நடாத்தப்பட்ட
கலாபூஷண அரச விருதுகளின் போது
இலங்கையின்
கலைத்துறையின் வளர்ச்சிக்காக ஈடேற்றப்பட்ட
சிறந்த சேவைக்கு
புகழளிக்கும் வண்ணம்
திரு. /திருமதி / செல்வி
எஸ்.எல்.எம். இஸ்மாயில்
என்பவருக்கு கலாபூஷண விருது வழங்கப்பட்டது.




17th December 2011 at John de Silva Memoriyal Hall Colombo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொத்துவிலில் வலயக் கல்வி அலுவலகம் அமைக்கப்பட வேண்டும்

1995.01.25
தினகரன்
(Page - 3)

(பொத்துவில் தினகரன் விசேட நிருபர்)

புதிய அரசின் கல்விக் கொள்கையின் பிரகாரம் 1995 ஜனவரியுடன் பிரதேச கோட்டக் கல்வி அலுவலகங்கள் மூடப்பட்டு வலயக் கல்வி அலுவலகங்கள் உருவாக்கப்படவிருக்கின்றன. இவ்வாறு கல்வி வலயங்கள் உருவாக்கப்படும் போது பொத்துவில் பிரதேச கோட்டக் கல்வி அலுவலகத்தை நிரந்தரமாக மூடிவிடாமல் பொத்துவிலில் வலயக் கல்வி அலுவலகமொன்றை உருவாக்குமாறு கோரும் மகஜரொன்றை கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன அவர்களுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் துறைமுகங்கள் கப்பற் போக்குவரத்து புனர்வாழ்வு, புனர் நிர்மாண அமைச்சருமான அல்ஹாஜ் எம். எச். எம். அஷ்ரப் அவர்களுக்கும் அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்க பொத்துவில் கோட்ட பிரதேச செயலாளர் ஜனாப் ஏ. எம். அப்துல் ஹக்கீம் (ஜே.பி) அனுப்பிவைத்துள்ளார்.




(தற்போதைய பொத்துவில் உபவலய கல்விப் பணிப்பாளர் ஏ.ஏ.அஸீஸ் அவர்களிடமிருந்து கௌரவம் பெறுபவர் ஓய்வு பெற்ற பொத்துவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம்.ஏ. காதர் அவர்கள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொத்துவில் பிரதேசத்துக்கு தனியான கல்வி நிலையம் அமைக்க கோரிக்கை

-அம்பாறை மாவட்ட நிருபர்-

புதிய கல்வி நிர்வாக அமைப்பின் கீழ் பொத்துவில் பிரதேசத்திற்கெனத் தனியான வலயக் கல்வி அலுவலகம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமெனக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன, துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப், வடக்கு- கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் திவகலாலா ஆகியோருக்கு இது தொடர்பான கோரிக்கை மகஜர்கள் பொத்துவில் பிரதேசத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பொத்துவில், லகுகலைப்பிரதேச சபைப்பிரிவுகளைச் சேர்ந்த பொத்துவில், பாணமை, லகுகலை, குளானுக, பக்மிட்டியாவ, கோமாரி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக மேற்படி வலயக்கல்வி அலுவலகப் பிரிவு அமைய வேண்டுமென்றும் கோரிக்கைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதிய கல்வி நிர்வாக அமைப்பின் கீழ் வடக்கு கிழக்கில் 25 கல்வி வலயங்கள் செயல்படவிருக்கின்றன. இதில் கல்முனை மாவட்டக் கல்விப் பிரிவில் கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை என மூன்று கல்வி வலயங்கள் செயல்படவுள்ளன.

இதன்படி பொத்துவில் பிரதேச அக்கரைப்பற்றில் அமையவிருக்கும் கல்வி வலயத்திற்கு உட்படுவதால் பொத்துவில் பிரதேச அதிபர், ஆசிரியர்கள், அக்கரைப்பற்றுக்கு வந்தே தமது கல்வி அலுவலக கருமங்களை முடிக்க வேண்டிய நிலைமை ஏற்படுவதாகவும், இதனால் பெரும் சிரமங்களை அவர்கள் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் போக்குவரத்து மற்றும் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகள் விஸ்வரூபமெடுத்திருப்பதால் பொத்துவில் பிரதேச மக்கள் கல்வி அலுவலகத்தேவைகளுக்காக அக்கரைப்பற்று வரை வந்து செல்வதென்பது அவர்களைப் பெரும் இம்சைக்குள்ளாக்குமெனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே புதிய கல்வி நிர்வாக சீரமைப்பினால் பெரிதும் பாதிக்கப்படும் பிரதேசமாக பொத்துவில் பிரதேசம் அமையவிருப்பதால் அமைவிடத்தை மையமாக வைத்து விசேட அமைப்பில் பொத்துவில் பிரதேசத்திற்கென ஒரு கல்வி வலயம் உருவாக்கப்பட வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

*தினக்குரல் - 1998*

பொத்துவில் பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஐ.காதர் முகைதீன் இது பற்றி 'தினக்குரல்' நிருபரிடம் கருத்துத் தெரிவிக்கையில் புதிய கல்வி நிர்வாக சீரமைப்பின் கீழ் கோட்டக்கல்வி அலுவலகங்கள் ஒழிக்கப்பட்டு எமது பிரதேசத்தை உள்ளடக்கியதாக அக்கரைப்பற்றில் வலயக்கல்வி அலுவலகம் அமையவிருக்கின்றது. இன்றைய நிலையில் இது எமது பிரதேசத்திற்குப் பெரும் பாதிப்பான ஒரு விடயமாகும். போக்குவரத்து நிலைமைகள், மற்றும் பாதுகாப்பு சூழ்நிலைகாரணமாக அக்கரைப்பற்றுக்குச் சென்று எமது கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்து வருவதென்பது பெரும் சிரமமான விடயமாகும்.

எனவே விசேட அடிப்படையில் எமது பிரதேச நிலைமை கருதி பொத்துவில் பிரதேசத்திற்கென தனியான வலயக்கல்வி அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டே ஆகவேண்டும்'' என்றார்.

மேலும், இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கப் பொத்துவில் கிளைச் செயலாளர் ஏ.ஏம். அப்துல் ஹக்கீம் இது விடயமாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் திவகலாலாவுக்கும், கல்வி உயர்கல்வி அமைச்சருக்கும் அனுப்பிவைத்துள்ள மகஜரில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

''1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஏற்பட்ட நிலைமை காரணமாக நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் துண்டிக்கப்பட்ட நிலையில் பொத்துவில் பிரதேசம் இருந்தது. இதன் காரணமாக நிலமையை உணர்ந்த கல்வி அமைச்சு, அம்பாறை மாவட்ட கல்விப்பணிப்பாளரின் விசேட கட்டளையின் மூலம் பொத்துவில் பிரதேசத்திற்கென 15.11.1990 இல் பிரதேச கல்வி அலுவலகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது. இது இப்பிரதேச மக்களுக்கும், அதிபர், ஆசிரியர்களுக்கும் பெரும்பயனாக அமைந்தது.

ஆனால் இன்று புதிய கல்வி நிர்வாக அமைப்பின் கீழ் கோட்டக்கல்வி அலுவலகங்கள் மூடப்பட்டு அக்கரைப்பற்றில் அமையவிருக்கும் வலயக்கல்வி அலுவலகத்துடன் இணைக்கவுள்ள செய்தி பொத்துவில் பிரதேச மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இன்றைய சூழலில் அடிக்கடி இடம்பெற்று வரும் அசம்பாவித சம்பவங்களுக்கு மத்தியில் பொத்துவில் பிரதேச அதிபர், ஆசிரியர்கள், பொதுமக்கள் கல்வித்தேவைகளுக்காக அக்கரைப்பற்றை நாடுவதென்பது பெரும் சிரமமாகும். சில வேளைகளில் சியம்பலாண்டுவ ஊடாக எழுபத்தைந்து மைல்கள் சென்றே பொத்துவில் மக்கள் அக்கரைப்பற்றை அடைய வேண்டியுள்ளது. லகுகலை, பாணமை பிரதேச மக்களுக்கும் இதே அவலமே உள்ளது.

எனவே விசேட அமைப்பில் லகுகலை, பொத்துவில் பிரதேச பாடசாலைகளை உள்ளடக்கியதாக பொத்துவில் வலயக்கல்வி அலுவலகம் ஒன்று அமையவேண்டும்'' இவ்வாறு அவர் கோரியுள்ளார்.

பொத்துவில் தொகுதி சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களுள் ஒருவரும், அம்பாறை மாவட்ட ஸ்ரீ.ல.சு.கட்சி முஸ்லிம் பிரிவு சம்மேளனத்தலைவருமான எம்.ஏ.ஆதம் லெவ்வை, துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரின் பொத்துவில் இணைப்பாளர் எம்.பீ.ஏ.அஸீஸ், சுதந்திரக் கட்சி பொத்துவில் பிரதேச அமைப்பாளர் எம்.ஏ.அஸீஸ் உட்பட பல்வேறு அமைப்புகளும் இது தொடர்பான கோரிக்கை மகஜர்களை அனுப்பிவைத்துள்ளன.

பொத்துவில் பிரதேசத்தை உள்ளடக்கியதாக திருக்கோவிலில் ஒரு வலயக்கல்வி அலுவலகம் அமையவேண்டுமென்ற கோரிக்கை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக 'தினக்குரல்' நிருபர் பொத்துவில் பகுதி கல்வி சார்ந்த பிரமுகர்கள், மற்றும் பிரமுகர்களிடம் கருத்துக் கேட்டபோது, இதற்கும் உடன்படமுடியாதெனத் தெரிவித்தனர். அக்கரைப்பற்றிலோ, திருக்கோவிலிலோ அமைந்தாலும் எமக்கு ஒரே சிரமம்தான் ஏற்படும். எமக்கு இங்குதான் தனியான வலயக்கல்வி அலுவலகம் அமைய வேண்டும் என்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நவமணி

# பொத்துவில் பிரதேசத்தின் கல்வி மேம்பாட்டுக்கு பிரதேச சபையினால் கல்வி அபிவிருத்திக்குழு நியமனம்

**(பொத்துவில் நிருபர் எம்.எஸ்.ஏ. மலிக்)**

பொத்துவில் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக பொத்துவில் பிரதேச சபை கல்வி அபிவிருத்திக்குழு ஒன்றை நியமித்துள்ளது.

பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கல்வி அபிவிருத்திக் குழு ஒன்றை ஏற்படுத்தும் ஏற்பாட்டின் கீழ் புதிய பிரதேச சபைத் தவிசாளர் கே.பி.எம். சரிப் அப்துல் வாஸிதின் ஏற்பாட்டில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் தவிசாளரின் அழைப்பில் பிரதேசத்தின் 18 பாடசாலை அதிபர்கள் இளைப்பாறிய கல்வி அதிகாரிகள், முன்னாள் அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தின் பின்பு 13 பேர் கொண்ட கல்விக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பொத்துவில் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. நீதியாக நடைபெறும் இடமாற்றங்கள், புலமைப்பரிசில் வகுப்புக்கள், க.பொ.த. சாதாரண தர வகுப்புகள், உயர்தர விஞ்ஞானப்பிரிவு ஆகியவற்றின் அடைவு மட்டம், மேலும் முன்னேற்றுதல் தொடர்பாக சபையில் ஆராயப்பட்டது.



பொத்துவிலில் கல்வி வலய அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டு தற்பொழுது அக்கரைப்பற்று பிரதி கல்விப் பணிப்பாளராகவுள்ள அல்ஹாஜ் எம்.ஐ. முத்தலிப் பொத்துவில் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட வேண்டுமெனவும் ஞாயிற்றுக்கிழமைகளில் வேறு பிரத்தியேக வகுப்புக்களைத் தவிர்த்து அறநெறி வகுப்புக்களாக அஹதிய்யா வகுப்புக்கள் நடைபெற வேண்டுமெனவும் ஒவ்வொரு நாளும் மாலை 3.00 மணி முதல் 4.30 மணி வரை பிரத்தியேக வகுப்புக்களைத் தவிர்த்து சிறார்களுக்கான குர்ஆன் மத்ரஸா கல்விக்காக ஒதுக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. இத்தீர்மானம் சகல பாடசாலை அதிபர்களுக்கும், பிரத்தியேக கல்வி நிறுவனப் பணிப்பாளர்களுக்கும், குர்ஆன் மத்ரஸா உஸ்தாதுமார்களுக்கும் அஹதிய்யா அதிபர், ஆசிரியர்களுக்கும் மேல் நடவடிக்கைக்காக அனுப்புவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தவிசாளர் கே.பீ.எம். சரீப் அப்துல் வாஸித் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம். அப்துல் மஜீத் கலந்து கொண்டார். பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எம். தாஜுதீன், முன்னாள் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.எல்.எம்.ஏ. காதர், அக்கரைப்பற்று வலய பிரதிப் பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.ஐ.ஏ. முத்தலிப், முன்னாள் அதிபர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 | 11 | 16 தினகரன்

THI[...]AKARAN, WEDNESDAY, N

## பொத்துவிலுக்கு தனியான கல்வி வலயம்

(பொத்துவில் தினகரன் விசேட நிருபர்)

பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம். எஸ். ஏ. வாஸிதால் ஏற்படுத்தப்பட்ட கல்வி அபிவிருத்திக் குழுவினர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவை கொழும்பில் சந்தித்து பொத்துவிலுக்கான கல்வி வலயத்தின் அத்தியாவசியத் தேவை குறித்து கலந்துரையாடினர். பிரதேச சபை தவிசாளர் எம். எஸ். ஏ. வாஸித் தலைமையில் சென்ற கல்வி அபிவிருத்திக் குழுவினர் கல்வி வலயம் தொடர்பான ஆவணங்களை கல்வி அமைச்சரிடம் கையளித்து, விளக்கமளித்தனர். இதனைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்ட அமைச்சர் இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி அவர்களுடன் கலந்துரையாடி 2012 ம் ஆண்டில் பொத்துவிலில் கல்வி வலயம் ஒன்றை மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் நலன் கருதி அமைக்கவிருப்பதாக உறுதியளித்துள்ளார். அண்மையில் பொத்துவில் பிரதேச கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் பொது நூலக கேட்போர் கூடத்தில் தவிசாளர் அவர்களது தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிமின் பிரதான பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற போது பொத்துவிலுக்கு தனியான கல்வி வலயம் ஒன்றின் தேவை குறித்து ஆராயப்பட்டது.

## பொத்துவில் பிரதேசத்துக்கென தனியான கல்வி வலயம்

### கல்வியமைச்சர் இணக்கம்

(பொத்துவில் விசேட நிருபர்)

பொத்துவில் பிரதேசத்துக்கென கல்வி வலயம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன இணக்கம் தெரிவித்துள்ளதாக பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார்.

பாராளுமன்றப் பிரதிநிதி பைசால் காஸிம் வழி காட்டலின் பேரில் பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம். எஸ். ஏ. வாசித் தலைமையில் சென்ற பத்துப் பேர் கொண்ட குழு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவை கல்வி அமைச்சில் சந்தித்தது.

பொத்துவில் பிரதேச பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள குறைபாடான நிலையை விளங்கிக் கொண்ட கல்வி அமைச்சர் பொத்துவில் கல்வி வலயம் ஆரம்பிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம். எஸ். ஏ. வாசித் தெரிவித்தார். (ஐ-து)

2011.12.13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அபிவிருத்தியே நமது இலக்கு

# அழைப்பிதழ்

**பொத்துவில்**
**உப வலயக் கல்வி அலுவலக**
**திறப்பு விழா**

**காலம் :**
2014.08.12ம் திகதி செவ்வாய்க்கிழமை
**நேரம் :**
மு.ப 10.00 மணிக்கு

பொத்துவில் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்
கௌரவ A.M. அப்துல் மஜீத் அவர்களின் அழைப்பின் பேரில்

**பிரதம அதிதிகள் :**

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர்
தேசிய தலைவர் - தேசிய காங்கிரஸ்
**மாண்புமிகு அல்ஹாஜ் A.L.M. அதாஉல்லா,** (பா.உ.) அவர்கள்

கிழக்கு மாகாண கல்வி, காணி, போக்குவரத்து மற்றும் கலாச்சார விவகார அமைச்சர்.
**மாண்புமிகு விமலவீர திஸாநாயக்க,** (மா.ச.உ.) அவர்கள்

**சிறப்பு அதிதிகள் :**

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பும் நிர்மாணமும், கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்.
**கௌரவ M.S. உதுமாலெப்பை,** (மா.ச.உ.) அவர்கள்

கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்திய மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்
**கௌரவ M.I.M. மன்சூர்,** (மா.ச.உ.) அவர்கள்

**கௌரவ அதிதிகள் :**
**கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான**

**கௌரவ M.L.A. அமீர்** அவர்கள்
**கௌரவ A.M. ஜெமீல்** அவர்கள்
**கௌரவ ஆரிப் சம்சுதீன்** அவர்கள்
**கௌரவ A.L. தவம்** அவர்கள்
**கௌரவ A.L.M. நஷீர்** அவர்கள்

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்
**திரு. N.A.A. புஷ்பகுமார** அவர்கள்.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்
**ஜனாப். M.T. நிஷாம்** அவர்கள்.

பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர்
**கௌரவ M.S. அப்துல் வாஸீத்** அவர்கள்.

அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர்
**ஜனாப். A.L.M. காசிம் மௌலவி** அவர்கள்.

பொத்துவில் பிரதேச செயலாளர்
**ஜனாப். N.M.M. முஸர்ரத்** அவர்கள்.

பொத்துவில் பிரதேச சபையின் உறுப்பினரும்,
கௌரவ உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரின் இணைப்பாளருமான
**கௌரவ A. பதுர்கான்** அவர்கள்

மற்றும் பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் 2014.08.12ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பொத்துவில் உப வலயக் கல்வி அலுவலகம் திறந்து வைக்கப்படுவதோடு பொத்துவில் அல்- பஹ்ரியா வித்தியாலயத்தில் கூட்டமும் நடைபெற உள்ளது இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு

கௌரவ/ ஜனாப் : ............................................................ ஆகிய

உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- ஏற்பாட்டுக்குழு -

பொத்துவில் மக்களது கல்வித் தேவைகளுள் முதன்மையானது தனிக்கல்வி வலயம் தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் எதுவும் இருக்க முடியாது. உப வலயக் கல்வி அலுவலகம் என்பது இதற்குத் தீர்வாக அமையாது என்பதை நடைமுறை நிகழ்வுகள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. ஆதலால், பொத்துவிலுக்கு தனியான வலயக் கல்விக் காரியாலயம் விரைந்து கிடைத்திட சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் உடன் செயற்பட வேண்டும்.

- இது பொத்துவில் நலன் விரும்பிகளின் கருத்து. (2015) -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரகேசரி பொத்துவில் செய்தியாளர் ஏ.சி.அஹமட் லெப்பை காலமானார்



பொத்துவில் பிரதேசத்தின் சிரேஷ்ட ஊட கவியலாளரும் கேசரியின் பொத்துவில் பிரதேச செய்தியாளருமான ஏ.சி அஹமட் லெப்பை தனது 67 ஆவது வயதில் நேற்று முன்தினம் இரவு காலமானார்.

அகமட் லெப்பை போடி – கலந்தர் உம்மா தம்பதிகளின் புதல்வரான இவர் பொத் துவில் அரசினர் ஆண்கள் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் முஸ்லிம் மத்திய கல்லூரியில் உயர் கல்வியையும் பெற்றார்.

விளையாட்டு, நாடகம், சாரணியம், முத லுதவி என்பவற்றில் முதன்மைச் சான் றிதழ் பெற்றுள்ள இவர் 1970 – 1980 வரை வை.எம்.எம்.ஏ அமைப்பிலும் முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் தலைவராகவும் சமாதான நீதிவானாகவும் அம்பாறை, பொத் துவில் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையிலும் பணி புரிந்துள்ளார்.

அத்துடன், இல ங்கை வானொலி மற் றும் விடிவெள்ளி ஆகி யவற்றின் பிராந்திய நிருபராகவும் இவர் பல வருடங்கள் கட மையாற்றியுள்ளார்.

இலங்கை போக் குவரத்து சபையின் ஓய்வு பெற்ற டிப்போ பொறுப்பதிகாரியான இவர் கடந்த ஒரு வார காலமாக சுகவீனமுற்று அம்பாறை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று முன்தினம் காலமானார்.

அவரது ஜனாசா நல்லடக்கம் நேற்றுக் காலை 7.00 மணியளவில் பொத்துவில் முஸ்லிம் மையவாடியில் இடம்பெற்றது.

*வீரகேசரி - 24.12.2014*

# ஊடகவியலாளர் அஹமட் லெப்பையின் மறைவு பொத்துவில் மண்ணுக்கு பேரிழப்பு

## ஹரீஸ் எம்.பி. அனுதாபம்

(அட்டாளைச்சேனை நிருபர்)

பொத்துவில் பிரதேசத்தின் முன்னேற்றத் திற்கு பக்கபலமாக நின்று ஊடகப்பணி செய்த பிரதேச ஊடகவியலாளர் ஏ.சி.அஹ மட்லெப்பையின் மறைவு பொத்துவில் மண்ணுக்கு பேரிழப்பாகும் என திகாம டுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் பிரதேச ஊடகவியலாளர் அஹமட்லெப்பையின் மறைவையொட்டி பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் விடுத்துள்ள அனுதாப அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

பொத்துவில் பிரதேசத்தில் சுமார் 40 வரு ஊடகங்களுக்கு அனுப்பிய துணிச்சல் மிக்க ஊடகவியலாளர்.

எனது அரசியல் வாழ்க்கையில் பொத் துவில் மக்களுக்கும் பெரும் பங்கு உள்ளது. என்னை அவர்களது ஒரு சகோதரனாகவே எப்போதும் நேசித்து வருகின்றனர்.

அந்த வகையில் மர்ஹூம் அஹமட் லெப்பை எனது நிகழ்வுகளை செய்திகளாக் குவதில் முன்னின்று செயற்பட்டதை பல சந்தர்ப்பங்களில் கண்டிருக்கின்றேன்.

அரசாங்க தொழில் துறையிலும், ஊடகத் துறையிலும் நேரத்தோடு ஒன்றித்து இயங்கு கின்ற அஹமட்லெப்பை அதனை கடைசி வரை கடைப்பிடித்து வந்துள்ளார்.

தான் வகித்து வந்த பதவிகளில் நேர் மையானவராக கடமையாற்றிய அஹமட் லெப்பை இன்றைய ஊடகவியலாளர்க ளுக்கு முன்னு தாரணமாக திகழ்ந்துள்ளார்.

அன்னாருக்கு ஜென்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கம் கிடைக்கப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன் என அந்த அனுதாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

*வீரகேசரி - 24.12.2014*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1978ஆம் ஆண்டில் இடம்பெற்ற சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகளில் ஜனாப் ஏ.சி. அகமட் லெவ்வை அவர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல்களும் உசாத்துணையும்.

1. மர்ஹூம் எம்.எல்.எம். சம்சுதீன் (ஓய்வு பெற்ற கிராம நிலதாரி) வயது 65 பொத்துவில்.- 14.
2. அல் ஹாஜ் எம்.எல். முகைதீன் பிச்சை, வயது 91 - பொத்துவில் - 07.
3. அல் ஹாஜ் எம்.எம். இப்றாகீம் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்) வயது 88 பொத்துவில் - 13.
4. அல் ஹாஜ் ஏ.எல்.எம். காஸிம் மௌலவி, வயது 77 - பொத்துவில் - 13.
5. மர்ஹூம் எம்.ஐ. காதர் முகையதீன் (ஓய்வு பெற்ற அதிபர்) வயது 69 பொத்துவில் - 01.
6. அல் ஹாஜ் பி.எம். மஹ்மூது அலாவுதீன், வயது 79 - பொத்துவில் - 02.
7. மர்ஹூம் எம்.எம். சம்சுதீன் (ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்) வயது 70 - சாய்ந்தமருது.
8. மர்ஹூம் ஏ. நெயிந்தைக் கண்டு, வயது 70 - பொத்துவில் - 01.
9. அல் ஹாஜ் எம். அப்துல் மஜீத் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) வயது 74 - பொத்துவில் - 02.
10. ஜனாப் எம்.ஐ. ஆதம் லெப்பை (சிரேஷ்ட சட்டத்தரணி) வயது 70 பொத்துவில் - 06
11. மர்ஹூம் ஏ.சி. அகமட் லெப்பை (சிரேஷ்ட ஊடகவியலாளர்) வயது 67 பொத்துவில் - 15.
12. அல் ஹாஜ் எஸ்.எம்.ஏ. அஸீஸ் (கலையன்பன்) வயது 70 - அக்கரைப்பற்று.
13. அல் ஹாஜ் எம்.எல்.எம். ஆரிபீன் (ஓய்வு பெற்ற இலிகிதர்) வயது 65 பொத்துவில் - 13.
14. ஜனாப் எம்.எம். முகைதீன் (ஓய்வு பெற்ற ஆண் தாதி) வயது 69 பொத்துவில் - 27.
15. ஜனாப் எஸ்.எல்.எம். இஸ்மாயில் (கலாபூஷணம்) வயது 83-பொத்துவில்-07.
16. ஜனாப் ஏ.எல்.ஏ. முகம்மட் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) வயது 65 பொத்துவில் - 07.
17. ஜனாப் கே.ஆர். நசுறுல்லாஹ் (அதிபர்) வயது 50 - பொத்துவில் - 07.
18. ஜனாப் வை.எச். முகம்மது லெப்பை (போடியார்), வயது -70 - பொத்துவில் - 03.
19. பாத்பைண்டர் (எம்.ஐ. அப்துல் றஹீம்) - 2001.
20. பொத்துவிலின் பத்துமாத பொன்னான முதல் அனுபவங்களும், மாணவ மணிகளும் (ஹாஜியானி மைமூனா செயினுலாப்தீன்) 2012 - வெளியீடு: அல் ஹுதா சமூக சேவைகள் நிலையம், நிந்தவூர்.
21. அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் (எஸ்.எச்.எம். ஜெமீல்) 1997, வெளியீடு: கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு, முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

சுவடிக்கூடம் (பகுதி - I) நூலுக்குப் பயன்படத்தக்க வகையில் நிழற் படங்களையும், இதர ஆவணங்களையும் வழங்கியுதவிய அனைவருக்கும் மற்றும் பயன்தரக்கூடிய வகையில் அமைந்த இணையத்தளங்களுக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும். - நூலாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நூலாசிரியர்...

கடந்த பன்னிரண்டு வருடங்களாக பொத்துவில் மண்ணின் வரலாற்றினை எதிர்கால சந்ததியினருக்காக ஆவணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வரும் ஜனாப். எம். எல். முகம்மட் தமீம் ஆசிரியர் அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழக கலைப்பட்டதாரியாவார். கலை இலக்கியம் என பல் துறைகளிலும் சிறு பராயத்திலிருந்தே ஈடுபாடு கொண்ட அவரது ஆற்றல்களை நான் நீண்ட காலங்களாகவே நன்கறிவேன்.

பொத்துவில் மத்திய கல்லூரியில் 1995ம் ஆண்டிலிருந்து அரசியல் விஞ்ஞானப் பாடத்தினை திறம்பட போதித்து வரும் இவர் அரசியல் சார்ந்த பல நூல்களை எழுதி வெளியீடும் செய்துள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கவைகளாக யாழ் உள்ளூராட்சித் தேர்தல் (1998), நடைமுறை அரசியல் நிகழ்வுகள் (2000) போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

2011ம் வருடம் பொத்துவில் மத்திய கல்லூரியின் 'வைர விழா' மலரின் பிரதம ஆசிரியராகவும் 2014ம் ஆண்டு பொத்துவில் பிரதேச சபை வெளியீடு செய்த 'ஆசிரியர் தினம் 2014' எனும் நூலை நெறியாள்கையும் செயற்பட்ட இவர் 'சுவடுகளும்' எனும் பொத்துவில் வரலாற்றுப் பின்புலங்களுடைய நூலின் மூலமாக ஆய்வாளர்களின் முக்கிய கட்டத்துக்குள் பிரவேசித்துள்ளார் எனக் கூற முடியும்.

அல்ஹாஜ் எம்.எல்.எம்.ஏ. காதர்
(ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர்)
பொத்துவில்.

ISBN 978-955-42117-0-4









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org